வரு.75 இல. 41 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
24 பக்கங்கள் 100/-




தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
2023 ஒக்டோபர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
October 15 Sunday, 2023




/ Thinakaran.lk / ThinakaranLK


03
ஜக்சன் அந்தனி எனும் மகா கலைஞன்


05
மதப் போதனைகளை பின்பற்றினால் முரண்பாடுகளுக்கு இடமில்லை!


12
இஸ்ரேல் – அமெரிக்க கூட்டு சதிக்குள் வீழ்ந்துள்ள ஹமாஸ்?



24
தேவை ஒரு 'திருப்பம்'

# நாகபட்டினம்-KKS பயணிகள் கப்பல் சேவை நேற்று ஆரம்பம்

## பிரதமர் மோடி காணொளி மூலம் ஆரம்பித்து வைத்தார்

நாகபட்டினத்தில் இந்திய மத்திய அமைச்சர் சர்பானந்தா, அமைச்சர் ஏ.வி.வேலு கொடி அசைத்து ஆரம்பித்து வைக்க, KKS துறைமுகத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, வடக்கு ஆளுநர் சார்ள்ஸ், அங்கஜன் இராமநாதன் எம்.பி, இந்திய துணைத்தூதர் ராகேஷ் உட்பட அதிகாரிகள் வரவேற்றனர்.








**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது, யாழ் விசேட நிருபர் மயூரப்பிரியன்**

நாகபட்டினத்திலிருந்து இலங்கை காங்கேசன்துறைக்கான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை நேற்று ஆரம்பமானதுடன், இந்தச் சேவையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொளி மூலம் ஆரம்பித்து வைத்தார். நாகப்பட்டினத்தில் நடைபெற்ற 06

உத்தியோகபூர்வ விஜயமாக

## ஜனாதிபதி ரணில் நேற்று சீனா பயணம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழுவினர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று (14) சீனாவுக்கு பயணமாகினர். 'ஒரு பாதை ஒரு 06

## IGPயின் பதவிக்காலம் 03 வாரங்கள் நீடிப்பு

ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது



பொலிஸ் மாஅதிபர் சீ.டி.விக்கிரமரத்னவின் பதவிக்காலம் மேலும் மூன்று வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொலிஸ் மாஅதிபரின் 06

## மின்சார போக்குவரத்து தேசிய கண்காட்சி பிட்டிபனவில் நவம்பரில்

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவிப்பு



2024ஆம் ஆண்டை இ மொபைலிட்டி ஆண்டாக பிரகடனப்படுத்துவதற்காக அனைத்துத் துறையினரின் பங்களிப்புடனும் நாட்டில் முதல் தடவையாக மின்சார போக்குவரத்து முறைகள் தொடர்பான தேசிய கண்காட்சி மற்றும் மாநாடு எதிர்வரும் நவம்பரில் நடத்தவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத் துறை 06

## இராஜதந்திர, பொருளாதார உறவுகளில் புதிய அத்தியாயம்

கப்பல் சேவையை ஆரம்பித்துவைத்து பிரதமர் மோடி உரை

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தை தாம் தொடங்கியுள்ளதாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் கப்பல் சேவை 06

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான

## சமூக நலன்புரி கொடுப்பனவு நிதிக்காக ரூ. 200 பில். ஒதுக்கீடு

இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



இந்த ஆண்டு சமூக நலன்புரி நடவடிக்கைகளுக்காக 200 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கடந்த வருடம்வரை வருடாந்தம் 65 பில்லியன் மட்டுமே ஒதுக்கப்பட்டதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர், இந்தத் தொகை தற்போது 06

## தரம்–05 புலமைப்பரிசில் பரீட்சை இன்று

சகல ஏற்பாடுகளும் பூர்த்தி



நாடளாவிய ரீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை (15) தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இந்நிலையில், பரீட்சை வினாத்தாள்களை 06

## 'நான் ஒரு கிரிக்கெட்டர்' அதுவே எனது அடையாளம்

தமிழனா, சிங்களவனா என்பது அடுத்ததே! -முரளி



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கையை மையமாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட '800' திரைப்படம் 06

## விக்கி MP வீட்டில் திடீரென கூடிய தமிழ் அரசியல்வாதிகள்

வடக்கு ஹர்த்தாலுக்கு முன்னேற்பாடாம்



முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் ரி.சரவணராஜாவுக்கு நீதி வழங்குமாறு கோரி அடுத்த வாரம் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பான முன்னாயத்த 06

## வடக்கு பட்டதாரிகளுக்கு விரைவில் அரச நியமனம்

ஆசிரியர் பற்றாக்குறைக்காக 1,000 பட்டதாரிகள்



வடமாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 1,000 பட்டதாரிகளை விரைவில் ஆசிரியர் சேவையில் இணைக்கவுள்ளதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். 06

## உள்ளூர் முட்டை உற்பத்தி அதிகரிப்பு

இறக்குமதியை நிறுத்த அரசு தீர்மானம்



உள்நாட்டில் முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளதை அடுத்து, அடுத்த இரண்டு மாதங்களுக்கு இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதியை நிறுத்த வர்த்தக அமைச்சு முடிவு செய்துள்ளது. 06

### வாரமஞ்சரி எங்கள் கருத்து

## உலக பொருளாதாரத்தை தீர்மானிக்கும் போர்கள்!

உலக பொருளாதாரம் இயல்புநிலைமைக்கு வருவதற்கான வாய்ப்பு இல்லையென்றே நினைக்கத் தோன்றுகின்றது. உலகின் நிலைமை கடந்த நான்கு ஆண்டுகளாக இவ்வாறுதான் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. உலக நாடுகளின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் இன்னுமே மீண்டெழ முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது.

2019 டிசம்பர் மாதத்தில் கொவிட் பெருந்தொற்று உலக நாடுகளை ஆக்கிரமிக்கத் தொடங்கியதும் சர்வதேச பொருளாதாரம் அதலபாதாளத்துக்கு வீழ்ச்சியடையத் தொடங்கியது. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து எந்தவொரு நாடுமே தப்பிக் கொள்ளவில்லை. அதன் தாக்கம் இன்றுவரை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

உலகை விட்டு கொவிட் பெருந்தொற்று ஏறக்குறைய விடைபெற்றதும், உலக பொருளாதாரம் பெரும் பிரயத்தனத்துடன் மீண்டெழுந்து வரத் தொடங்கிய வேளையில், ரஷ்யா-உக்ரேன் யுத்தம் திடீரென வெடித்தது. அதன் காரணமாக உலக பொருளாதாரம் மீண்டும் ஆட்டம் காணத் தொடங்கியது. உலகில் கோதுமைத் தானியத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதில் ரஷ்யாவும் உக்ரேனும் பிரதான இரு 06

## தினகரன் அஸ்வருக்கு கலாபூஷண விருது'



தினகரன் பிராந்திய ஊடகவியலாளர் எம்.கே.எம் அஸ்வருக்கு கலாபூஷண விருது மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மண்டபத்தில் வைத்து கடந்த 11ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டது.

விபரம் 09ஆம் பக்கத்தில்...

## மாத்தளை வடிவேலனின் நூல் வெளியீடு இன்று



'கலைஒளி' முத்தையாப்பிள்ளை ஞாபகார்த்தக் குழு வெளியிட்டு, தமிழகத்தில் ஒரு இலட்சம் 06

## கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா டிசம்பரில்

BMICH இல் 100 பிரமுகர்கள் கௌரவிப்பு



விடியலுக்காக காத்துக் கிடந்த தமிழ்ச் சமூகத்தில் திராவிட சூரியனாய் உதித்து தமிழுக்காகவும் தமிழருக்காவும் காலமெல்லாம் உழைத்த கலைஞர் மு.கருணாநிதியின் நூற்றாண்டு 06

## ஐந்து நாடுகளின் சுற்றுலா பயணிகளுக்கு இலவச வீஸா

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

ஐந்து நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச வீஸாவை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில் சீனா, ரஷ்யா, இந்தியா, தாய்லாந்து, 06

அரசாங்க வர்த்தமானி
இன்று 15ஆம் திகதி முதல்
தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
பத்திரிகையுடன் வாரம்தோறும்
இலவசமாக வெளிவரும்
பிரதிகளுக்கு உங்கள் அருகாமையிலுள்ள பத்திரிகை முகவர்களை நாடுங்கள் !

# மலேசியாவின் கோபியோ தலைவருடன் ம.ம.மு உபதலைவர் சதீஷ்குமார் சந்திப்பு





மலேசியாவில் இடம்பெறவுள்ள கோபியோ சர்வதேச வர்த்தக மாநாடு தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக இலங்கைக்கு முக்கிய விஜயம் மேற்கொண்ட மலேசியா நாட்டின் கோபியோ அமைப்புத் தலைவர் எஸ். குணசேகரன் கொழும்பில் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவரும் கோபியோ அங்கத்தவருமான முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கத்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் இந்திய வம்சாவளி மக்களின் கூட்டிணைப்பான கோபியோ அமைப்பின் விஷேட சர்வதேச வர்த்தக மாநாடும் கண்காட்சியும் மலேசியாவில் நடைபெறவுள்ளன.

நிகழ்வுகள் எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து 3ஆம் திகதி வரை கோலாலம்பூர் உலக வர்த்தக மையத்தில் பிரமாண்டமாக இடம்பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

டிசம்பர் முதலாம் திகதி வர்த்தக கண்காட்சி ஆரம்பமாவதோடு அதில் உலகெங்கிலிருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளி மக்களின் வர்த்தக பிரமுகர்கள் ஒன்றிணைந்து தமது எதிர்கால வணிக, வர்த்தக நடவடிக்கைகளின் விரிவாக்கம், முதலீடுகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பாகவும் புதிய பரிமாணங்களில் அனுபவ பரிமாற்றங்களுடன் ஆராய்ந்து முக்கிய முடிவுகளை எடுக்க உள்ளனர்.

இரண்டாம் திகதி கோபியோ மலேசியக் கிளையின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவுக்கான வெள்ளி விழா நிகழ்வுகளும் நடைபெற உள்ளன. இதில் சர்வதேச வர்த்தக விருதுகள், பல்துறை சாதனையாளர் விருதுகளும் இடம்பெறும். அத்தோடு சர்வதேச தொழில்துறை பிரதிநிதிகள், அமைச்சர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் முக்கிய வர்த்தக நாமத் தூதுவர்களாக இயங்கும் பிரமுகர்களினதும் உரைகள், விஷேட நெறியாள்கையில் உருவாக்கப்படும் கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன. மலேசிய கோபியோ தலைவர் குணசேகரன் இலங்கை கோபியோ அமைப்பின் முக்கியஸ்தர்களான முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி தேவராஜ், குமார் நடேசன், எஸ் கருணாகரன், கௌஷிக் உதேசி, எஸ் விஜயலிங்கம் உள்ளிட்டோரையும் சந்தித்து இருதரப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடல்களை நிகழ்த்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு ஏற்பாட்டில் ஐம்பெரும் விழா




உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டின் பத்தாம் ஆண்டு விழா அடுத்த ஆண்டு ஐம்பெரும் விழாவாக ஜனவரி 6 மற்றும் 7ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் கலை, கலாசாரம், பாரம்பரிய உணவு, உடை போன்ற நிகழ்வுகளும் தமிழ் மொழியின் மேன்மைகளையும் பண்டைய கால தமிழரின் வரலாறுகளையும் பிரதிபலிக்கும் விதமாக இந்நிகழ்வு அமையவுள்ளது. மேலும் தமிழர்கள் பொருளாதாரத்தில் உயர வேண்டும் என்பதற்காக சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்களை ஒன்றிணைக்கும் விதமாக சந்திப்பு நிகழ்வு நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள சிறு குறுந்தொழில் அதிபர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை காட்சிப்படுத்தும் மற்றும் சந்தைப்படுத்தும் விதமாக அமையவுள்ளது. தமிழ்மொழி அயல்நாடுகளில் சென்றடைய சினிமா ஒரு பாலமாக இருப்பதாலும், இவ்வாண்டு கலைஞரின் நூற்றாண்டு விழா என்பதாலும், கலைஞரும் சினிமாவும் என்ற நிகழ்வும் நடைபெற உள்ளது.

தமிழர்கள் உழவுத் திருநாளை எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்ற நேரடி காட்சிகளை உலகத் தமிழர்கள் அறியும் வகையில் பல்வேறு கல்லூரி மாணவ மாணவிகள் பங்கு பெறும் உழவர் திருநாள் விழாவும், பண்டைய காலங்களில் மறந்து போன வீர விளையாட்டுகளையும், அறிவுசார் விளையாட்டுகளையும் காட்சிப்படுத்தும் விதமான நிகழ்வும் நடைபெற உள்ளது. தமிழர்களின் பெருமைகளை உலகறியச் செய்யவும் பறைசாற்றும் விதமாகவும் நிகழ்ச்சியை நடத்த உள்ளோம் என உலகத்தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார். இந்நிகழ்வில் பல்வேறு நாட்டு சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில மத்திய அமைச்சர்கள், மேயர்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள், தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இந்நிகழ்வில் சாதனை புரிந்த தமிழர்களுக்கு 'சாதனைத் தமிழன்' விருதும், தமிழ் மொழியை போற்றி காக்கும் வகையில் மொழியின் பெருமைகளை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நல்லாசான் விருதும், கடல் கடந்து சென்று வாழும் தமிழர்களுக்கு 'தலை நிமிர்ந்த தமிழன்' விருதும் வழங்கப்பட உள்ளது. இந்நிகழ்வானது இரண்டு நாட்கள் நடைபெற உள்ளன. இந்நிகழ்வுக்கு பல்வேறு நாடுகளிலும் உள்ள தமிழர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது என செல்வகுமார் தெரிவித்தார். மேலும் விவரங்களுக்கு +60166167708 என்ற பகிரியில் (Whatsapp) அணுகவும்.

# கண் நோய்! அச்சம்கொள்ள தேவையில்லை



தற்போது கொழும்பு உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் ஒரு வகை கண் நோய் பரவியுள்ளது. குறிப்பாக கொழும்பு வலயத்திற்கு உட்பட்ட சில பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியிலும் இந்நோய் பரவியுள்ளமை அவதானிக்கப்பட்டிருக்கிறது.

அதனால் இந்நோய்க்கு உள்ளான பாடசாலை மாணவர்கள் காணப்படுவார்களாயின் அவர்கள் தொடர்பில் பிரதேசத்திலுள்ள மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு அறிவிக்குமாறு சகல பாடசாலைகளதும் அதிபர்களுக்கும் கொழும்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு மாநாகர சபையின் பிரதம மருத்துவ அதிகாரி டொக்டர் ருவன் விஜேமுனி, கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பல பிரதேசங்களிலும் கண்நோய் பரவியுள்ளது. குறிப்பாக மேல், மத்தி மற்றும் வடக்கு பிரதேசங்களிலும் பொரளை பகுதியிலும் இந்நோய்க்கு பலர் உள்ளாகியுள்ளனர். அதனால் இந்நோய் மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன' என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கொழும்பு மாவட்டத்திலுள்ள பாடசாலையொன்றின் வகுப்பொன்றில் முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர். அந்தளவுக்கு வேகமாகப் பரவக்கூடியதாக விளங்குகிறது இந்நோய். அதனால் குறித்த பாடசாலையில் இந்நோய்க்கு அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் உள்ளாகியுள்ள வகுப்புகளுக்கு கடந்த வாரம் விடுமுறை வழங்க மாகாண கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தார்.

## தேவைப்படும் பட்சத்தில் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்

என்றாலும் தற்போது பரவும் கண் நோய் அவ்வப்போது தோற்றம் பெறக்கூடிய ஒரு தொற்று நோயான போதிலும் அது அச்சப்பட வேண்டியதொரு நோய் அல்ல. சாதாரணமாக மூன்று நான்கு நாட்களில் குணமடைந்துவிடும் என்று மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறான சூழலில் கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக், இந்நோய் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

கொழும்பு உட்பட நாட்டின் சில பிரதேசங்களில் கண் நோயொன்று பரவி வருவதை உறுதிப்படுத்திய அவர், கொழும்பு தேசிய கண் வைத்தியசாலைக்கு நாளொன்றுக்கு 40 முதல் 70 க்கும் இடைப்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற வருவதாகவும், அவர்களுக்கு வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் உரிய சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் கூறினார்.

இக்கண் நோய் ஒரு புது வகை நோய் அல்ல. இது 'வைரல் கன்ஜங்க்டிவிட்டிஸ் (viral Conjunctivitis) என்ற வைரஸ் நோயே அன்றி வேறில்லை. இந்நோய் விரைவாகத் தொற்றக்கூடிய நோயாக விளங்கிய போதிலும் சில தினங்களுக்குள் பெரும்பாலும் குணமடைந்துவிடும். அதனால் இந்நோய் குறித்து அச்சமடையத் தேவை இல்லை என்பது தான் மருத்துவர்களின் கருத்தாகும்.

ஆனாலும் இந்நோய்க்கு உள்ளானவர்களுக்கு கண்களில் கண்ணீர் வடிதல், கண்கள் சிவப்படைதல், கண்களில் வலி, கண்களில் அரிப்பு, கண்களைத் திறப்பதற்கு சிரமம், கண்களில் பூழை வெளிப்படல் போன்றவாறான அறிகுறிகள் வெளிப்படலாம். இவ்வறிகுறிகள் தீவிர நிலையில் காணப்படாவிட்டால் நோய் சில தினங்களுக்குள் குணமடைந்துவிடும். இந்நோய் நிலையுடன் கண்களில் கடும் சிவப்பு நிறத்துடன் அதிகம் அரிப்பும் காணப்படுமாயின் அருகிலுள்ள தகுதி வாய்ந்த மருத்துவரை அணுகி ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்வது நல்லது என்றும் அவ்வாறானவர்களின் ஆலோசனை மற்றும் அறிவுரையைப் பெறாமல் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளவர்கள் எவ்வித மருந்தையும் கண்களுக்குப் பாவிக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டுள்ளார் தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் தௌபீக். உண்மையில் இது காலத்திற்கு அவசியமான அறிவுரையும் ஆலோசனையும் ஆகும். எந்த நோயென்றாலும் அதிலும் கண் நோய்களுக்கு மருத்துவரின் ஆலோசனை, சிபாரிசு இன்றி எந்த மருந்தையுமே பாவிக்கக்கூடாது.



டொக்டர் ருவன் விஜேமுனி



ஏ.ஆர்.எம். தௌபீக்

இந்த கண் நோய்க்கு எல்லா வயது மட்டத்தினரும் உள்ளாகலாம். அதனால் பாடசாலை மாணவர்கள் இந்நோய்க்கு உள்ளானால் அவர்கள் பாடசாலைக்கு செல்வதையும் ஏனைய வயது மட்டத்தினர் உள்ளானால் அவர்கள் தொழில்களுக்கும் சன நெரிசல் மிக்க இடங்களுக்கும் செல்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதன் ஊடாக இந்நோயின் பரவுதலைக் குறைத்துக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

அதேநேரம் தற்போதைய சூழலில் அடிக்கடி சவர்க்காரம் இட்டு கைகளை கழுவிக் கொள்ளுதல், கண் மற்றும் முகத்தைக் கைகளால் அடிக்கடி தொடுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் என்பவற்றின் மூலம் இந்நோயின் தொற்றைப் பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ளலாம். அத்தோடு

இன்றைய நாட்களில் சனநெரிசல் மிக்க இடங்களுக்கு செல்வதையும் நோய்க்கு உள்ளாகியுள்ளவருடன் நெருக்கமான தொடர்பைப் பேணுவதும் சன நெரிசல் மிக்க இடங்களில் கண்ணாடிகளை அணிந்து கொள்வதும் இந்நோயின் தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கு பெரிதும் உதவக்கூடியதாக அமையும்.

ஆகவே கண் நோயின் தொற்றைத் தவிர்த்துக் கொள்வதிலும் தேவைப்படும் பட்சத்தில் உரிய மருத்துவ ஆலோசனையுடன் ஆரம்ப கட்டத்திலேயே சிகிச்சை பெற்றுக் கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அவை இன்றியமையாதவையாகும். ஆனால் கவனயீனமும் அசிரத்தையும் ஆரோக்கியத்துக்கு உவப்பானதல்ல என்பதையும் மறந்து விடலாகாது.



மர்லின் மரிக்கார்


# இலங்கை கடற்படை

தீவைச் சுற்றி தங்கத்திலான வேலி

கணிதம், உயிரியல், தொழில்நுட்பவியல் ஆகிய பாடத் துறைகளில் க.பொ.த (உ.த) கற்ற டிப்ளோமாதாரிகளின் பொருட்டு, இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிடம் நேரடியாக கடற்படை வீரர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் வாய்ப்பை உரித்தாக்கி கொள்ளுங்கள்

## தகைமைகள்

- இலங்கை பிரஜையாதல் வேண்டும்
- வயது 18 – 33 ஆண்டுகள்

## வெற்றிடங்கள்

- எந்திரஅறை தொழில்வினைஞர்
- மோட்டார் வாகன தொழில்வினைஞர்
- மின்னியல் தொழில்வினைஞர்
- வானலை தொழில்வினைஞர்

## மேலதிக விபரங்களுக்கு

011-7195155, 011-7195162

nhqssorec@gmail.com

www.navy.lk/joinus

SriLankaNavyOfficial

Scan Me



விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் இறுதி திகதி 2023 நவம்பர் மாதம் 13 திகதி

மேலதிக விபரங்களுக்கு QR குறியீடு அல்லது தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.


# பாரம்பரியம் நிகழ்ச்சியில் முதுபெரும் பாடகி இசைக்கோகிலம் மஸாஹிரா இல்யாஸ் நினைவுகள்



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் எதிர்வரும் செவ்வாய் (17.10.2023) இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில் முஸ்லிம் சேவையின் இசைத்துறை பாரம்பரியத்துக்கு மெருகூட்டியோர் வரிசையில் முதுபெரும் பாடகி காலஞ்சென்ற சௌத்துல் அந்தலீப் இசைக்கோகிலம், கலாபூஷணம் மஸாஹிரா இல்யாஸ் நினைவுகள் பரிமாறப்படவுள்ளன.

இவரது நினைவுகளை இவரது சிரேஷ்ட புதல்வரும் முஸ்லிம் சேவையின் கலைஞரும், கிட்டார் வாத்திய இசையில் கைத்தேர்ந்த இசைக் கலைஞருமான முபாரக் இல்யாஸ் பகிர்ந்து கொள்வதோடு, முஸ்லிம் சேவையுடனான தனது பங்களிப்புகளையும் நினைவுகூருகிறார்.

மர்ஹூமா மஸாஹிரா இல்யாஸ் 1959 களில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பான முஸ்லிம் நிகழ்ச்சிகளில் நேரடியாக பாடியுள்ளார். பின் 1960, 80 கால பாகுதிகளில் முஸ்லிம் சேவையில் முஹம்மத் சாலி, டீ.எப்.லத்தீப், ஏ.ஜே.கரீம் போன்ற பிரபல இசையமைப்பாளர்களின் இசையமைப்பில் அதிகமான பாடல்களை தனித்தும், டோனி ஹசன், எம்.எல்.எம்.அமீன், நூர்ஜஹான் மர்சூக், கைரியா இஸ்மாயில் கலைக்கமல் போன்ற பிரபல பாடகர்களோடு இணைந்தும் பாடியுள்ளார். முஸ்லிம் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட கலைஞரான முபாரக் இல்யாஸ் 2013,15 காலப்பகுதியில் முஸ்லிம் சேவையில் இஸ்லாமிய கீதங்கள் பாடியமை குறிப்பிடத்தக்கது. இவர் சில பாடல்களுக்கு இசை வடிவமும் வழங்கியுள்ளார்.

நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுக்க, முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.




# ஜக்சன் அந்தனி எனும் மகா கலைஞன்



என்றாவது ஒருநாள் 'வெலிகத்தர' திரைப்படத்தை மீண்டும் தயாரித்தால் அன்று நான் நடித்த கோரிங் முதலாளி கதாபாத்திரத்துக்கு தற்போது உள்ள திறமையான நடிகர் யார் என என்னிடம் கேட்டால் நான் உடனடியாக ஜக்சன் அந்தனி பெயரையே பரிந்துரைப்பேன். ஜக்சன் இன்றுள்ள சிறந்த நடிகர் அதைப்போன்று அனைவரையும் கவரக்கூடியவர் என பிரபல நடிகரான ஜோ அபேவிக்ரம அன்றொருநாள் கூறினார்.

ஜோ அபேவிக்ரமவின் பாராட்டைப் பெற்றவர் ஜோசப் மெல்சி ஜக்சன் அந்தனி எனப்படும் ஜக்சன் அந்தனி ஆவார். 1958 ஜூலை 18 ஆம் திகதி பண்டாரவளையில் பிறந்த அவர் வளர்ந்தது ராகம பொடி வீ கும்புற கிராமத்தில் ஆகும். தன்னுடைய மூத்த அண்ணனான சேனக டைட்டசுடன் நடிப்புத் துறைக்கு அடித்தளம் இட்டவர் ஜக்சனின் தந்தையாரான பெனடிக் அந்தனி. ராகமயில் பிரபலமான 'வாசப்பு' என்னும் நாட்டிய துறையை வளர்த்த கலைஞர் ஆவார், அவரும் ஒரு பாடகர்.

ஜக்சன் ஹபுகொட சாந்த மரியா கல்லூரியில் கல்வி கற்ற வேளையில் சித்திரம் வரைவதிலேயே பிரபலமாக திகழ்ந்தார். பாடசாலையின் சித்திர பாட ஆசிரியரான பிந்து அவரை சித்திரக் கலையில் ஈடுபடுத்தினார். சித்திரக் கதைகளுக்கு சித்திரம் வரையும் கலைஞராக அவர் முதலில் தனது திறமையை வெளிப்படுத்தினார். அது கனேமுல்ல கலஹிட்டியாவ மகாவித்தியாலத்தில் கற்கும் காலத்திலாகும். 1977ல் நெவில் டயஸ் சுபசிங்க தயாரித்த 'வாருவென் யன மினிஸ்ஸு' நாடகத்தில் நடித்ததன் மூலம் ஆரம்பித்த அவரது நாடக வாழ்க்கை சரச்சந்திர தயானந்த குணவர்தன, சுகத்த பால த சில்வா, லூசன் புளத்சிங்கள, தர்மசிரி பண்டாரநாயக்க, ஜயந்த சந்திரசிறி ஆகிய கலைஞர்களின் படைப்புகளின் மூலம் மேலும் பரிமளித்தது.

ஜக்சனின் நெருங்கிய நண்பன் அதே ஊரைச் சேர்ந்த சிறியந்த மெண்டிஸ் என்னும் கலைஞன்.

இந்த நண்பனைப் பற்றி ஜக்சன் தனது கடந்த கால கதையான 'பனா புத்திரகே மத்தக வஸ்துவ' நூலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார், ஜக்சன் மற்றும் சிறியந்த ஒரே ஊரில் வசித்தாலும் அவர்கள் இருவரும் சிறு பிள்ளைப் பிராயத்தில் ஒருவருக்கொருவர் எதிரிகள் போன்று நடந்து கொண்டுள்ளார்கள்.

1980ல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடகப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. ஜக்சன் குழுவினர் 'லோதிய' நாடகத்தையும் சிறியந்த குழுவினர் 'தேச சீமா' நாடகத்தையும் தயாரித்திருந்தார்கள். எவ்வாறாவது ராகமைக்கு வெற்றியை கொண்டு வர வேண்டும் என இரு தரப்பாரும் எண்ணினார்கள். இருகுழுவினரின் கோபத்தாபங்களும் மறைந்து போயின ஜக்சனின் நாடகத்துக்கு இசை வழங்கும் பெர (தாள வாத்தியம்) வாத்தியக்காரர் வராதபோது. சிறியந்த பெர ஒன்றைகொண்டு வந்து கொடுத்தார். முதற்தடவையாக ஜக்சனும் சிறியந்தையும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். நாடகக் குழுவின் மேக்கப் கலைஞர் வராத போது ஜாக்சன் அவர்களுக்கு மேக்கப் போட்டார். போட்டியின் முடிவில் ஜக்சனின் நாடகம் முதலிடத்தை பெற்ற வேளையில் சிறியந்த துணை நடிகராக பணப் பரிசும் பெற்றார். அன்றைய தினம் கருணாதாச சூரியாரச்சி, ஜயந்த சந்திரசிறி ஆகியோரும் விருதுகள் பெற்றார்கள். ராகம வெற்றி பெற்றுவிட்டது என அனைவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

பின்னர் மீண்டும் சிறியந்தையும் ஜக்சனும் சந்தித்தது 'பளிங்கு மெனிக்கே' என்னும் டெலி டிராமாவிலாகும். அதில் 'விஜய்'யின் பாத்திரத்தை ஜக்சனும் 'சூரசேன' பாத்திரத்தை சிறியந்தையும் நடித்தார்கள்.

கனேமுல்ல கலஹிட்டியாவ மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் சிங்கள விசேட பட்டதாரியான ஜக்சன் மோட்டார் சைக்கிளில் நாடக அரங்குகள் தோறும் சென்றார். அவரால் 'பனா புத்ர வஸ்துவ பனா புத்ர குஹும்பு பெனிய' நூல் 2000 ஆம் ஆண்டு எழுதப்பட்டது.

ஜக்சனுக்கு திறமையான நாட்டியக் கலைஞர்களுடன் சிறந்த நாடகங்களுக்கு பங்களிப்பு வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. மதுரஜவனிகா, லோம ஹன்ஸ, மராசாந், தாராவோ இகிலெத்தி, மோரா, தவளபிஷன, ஒத்துகாரியோ நாடகங்கள் அவற்றில் சிலவாகும்.

கலைமாணி பட்டம் பெற்ற ஜக்சன் பேராசிரியர் சரச்சந்திர தயாரித்த நாடகம் ஒன்றில் முதல் தடவையாக பயிற்சி பெற்ற வேளையில் ஜக்சன் பற்றி அவர் கூறியது,

"பாருங்கள் இந்த மாணவன் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழியையே கற்கிறான். இவனுக்கு புத்த மதத்தை பற்றிய பெரும் ஆர்வம் உள்ளது. இந்நாட்டின் தேசிய கலாசாரத்தை வளர்ப்பதற்கு இவன் ஆவலுடன் இருக்கின்றான்"அதனால் ஜக்சன் அந்தனி என்கிற ஆங்கில பெயர் பொருத்தமற்றது. அதனால் இந்த பெயரை மாற்றுவோம் என கூறினார். இதைக் கேட்ட ஜக்சன் அந்தனி கௌரவத்துடன் அதனை நிராகரித்தார். அவர் 'சிறிமெவன் தர்மபிரிய' என்னும் பெயரையே பரிந்துரைத்தார். இந்த விடயம் குறித்து ஜக்சன் கூறுகையில்,

எனது உலகத்தில் வீரன் எனது தந்தை. அவர் இலங்கை மின்சார சபையில் அத்தியட்சகராக இருந்தார். தந்தை கிராமத்தில் ஒரு கலைஞர். இளைஞனாக இருந்த பொழுது நத்தார் நாடகங்களில் நடித்துள்ளார். மிக நன்றாக மெண்டலினை இசைத்தபடி பாடக்கூடியவர். தந்தையின் குரல் நான் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் என் காதுகளில் ஒலிக்கும். தந்தை என்னை சைக்கிளில் அமர்த்தி பாடசாலைக்கு அழைத்துச் செல்வார். முன்னால் பாரில் உட்கார்ந்து செல்வதை விட நான் பின்புறமாக பயணிக்கத்தான் விரும்பினேன். ஜக்சன் மேடை நாடகங்களில் அரச விருதுகளை பெற்றுள்ளதோடு தொலைக்காட்சி நாடகங்களில் நடித்தும் விருதுகளை பெற்ற ஒருவராவார். கடுல்ல, பிடகம் காரயோ, எல்லலங்க வளவ்வ, அகால சந்தியா, வெத ஹாமினே, சுசீமா என்பன அவற்றுள் சிலவாகும். குருகெதர திரைப்படத்தின் மூலம் திரைப்படத்துறையிலும் இவர் நுழைந்தார். அயோமா, லொக்கு துவ, தரணைய, குசபபா, பவ துக்க, பவகர்ம, சூர்ய அரண, அக்னி தாகய, கரில்லா மாக்கட்டிங், மில்ல சொயா, வீசி தெல, குசபபா போன்ற திரைப்படங்கள் அவற்றில் முக்கியமானவை. ஜூலியட்கே பூமிகாவ அவரின் இயக்கத்தில் முதலாவதாக வெளிவந்த திரைப்படமாகும். திரைப்பட திரைக்கதை எழுத்தாளர், வசனகர்த்தா, நடிகர், பாடகர் போன்று இலத்திரனியல் ஊடக தொடர்பாளர், தொலைக்காட்சி நாடக இயக்குனர், தயாரிப்பாளர், திரைக்கதை, வசனகர்த்தா, சொற்பொழிவாளர் என பலதுறைகளையும் கையாண்டவர். நாவல் எழுத்தாளராகவும் அவர் பெயர் பெற்றிருந்தார். சிங்களே வங்ச கதாவ', 'சலங்கனே' போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தயாரித்தளித்தவர். சுமதி, OCIC, ரைகம் மற்றும் அரச விருதுகள் பலவற்றால் கௌரவிக்கப்பட்டவர். 13 சுமதி விருதுகள் பெற்று சாதனை புரிந்தவர்.

ஜக்சன் கலை உலகில் நுழையும் போது நான்கு நண்பர்களை கொண்ட குழுவை அறிமுகம் செய்து கொண்டார்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

**ஏ.டி.ரஞ்சித் குமார்**
**தமிழில் வீ.ஆர்.வயலட்**





Hassim Omar Foundation அனுசரணையில் புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தா தலைமையில் நடைபெற்ற உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று (14) சனிக்கிழமை காலையில் கொழும்பு 13. எக்லஸன்ஸ் பாடசாலையில் நடைபெற்ற போது பழம் பெரும் நடிகை ஜெயகௌரிக்கான உலர் உணவுப் பொதியை புரவலர் வழங்கி வைப்பதையும் அருகில் அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தா உட்பட நிகழ்வுக்கு வருகை தந்த ஏனைய கலைஞர்களையும் படங்களில் காணலாம்.



# எம்.பிக்களில் மேலும் ஒன்பது பேர் தமது உறுப்புரிமையை இழப்பார்களா?

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட்டின் கட்சி உறுப்புரிமைக்கு தடை விதிக்கப்பட்டமை தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பல அரசியல் கட்சிகளிலும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஸ்ரீ.ல.சு.கட்சி, ஐ.ம.மு, ரிஷாத் பதியுதீனின் கட்சி உள்ளிட்ட பல கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறியுள்ளனர். அவர்களின் பாராளுமன்ற பதவிகளையும் இவ்வாறு ஒழிக்க முடியுமா? என்பது பலராலும் எழுப்பப்படும் ஒரு கேள்விஆகும்.**



அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின்படி, ஒரு பாராளுமன்ற உறுப்பினரை நீக்குவதற்கு பல அடிப்படை நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். முதலாவதாக, சம்பந்தப்பட்ட கட்சியின் அரசியலமைப்பின் மூலம் கட்சி உறுப்பினருக்கு எதிரான நடவடிக்கைக்கு வலுவான, குறித்தொதுக்கப்பட்ட ஓர் ஏற்பாடு காணப்படல் வேண்டும். இரண்டாவதாக, கூறப்பட்ட ஏற்பாட்டின்படி முறைசார்ந்த ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளல் ஆகியன இயற்கை நீதியின் சட்டத்தின்படி (காரணவிளக்கம் கூறுவதற்கான வாய்ப்பு) அவர்களுக்கு உள்ளதா? என்பது பற்றி ஆகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை யாப்பு மூலம் உத்தியோகபூர்வமாக ஆவணப்படுத்திய ஒரு முன்னணிக் கட்சியாகும். ஐ.தே.க.யாப்



பின்படி, கட்சியினால் உறுப்புரிமையை ஒருதலைப்பட்சமாகக்கூட தடைசெய்ய முடியும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள ஏற்பாடுகள் முஸ்லிம் காங்கிரஸைப் போன்று பலமானவை அல்ல. ம.ஐ.முன்னணியின் 32 பக்கங்களைக் கொண்ட யாப்பில் கிட்டத்தட்ட அத்தகைய முறையான ஏற்பாடுகள் காணப்படவில்லை. ஜே.வி.பி. இற்கு உறுப்புரிமை தொடர்பில் கடுமையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அதன் யாப்பு அனுமதியளிக்கிறது. ஸ்ரீ.ல.சு. கட்சியின் யாப்பு தற்போது நீதிமன்றத்தில் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையில், உறுப்பினர்களை நீக்குவது இலகுவானதல்ல.

62 பக்கங்கள் கொண்ட நசீர் அஹமட் தொடர்பான தீர்ப்பில், முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டால், ஒரு பாராளுமன்ற உறுப்பினரை நீக்குவது கடினம் அல்ல என்பது வெளிப்படுகிறது. தற்போது 9 அல்லது அதற்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள், வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. நசீர் அஹமட்டைத் தொடர்ந்து இவர்கள் அனைவரையும் கட்சிகளில் இருந்து நீக்குவதற்கு, அதாவது பாராளுமன்றத்தில் இருந்து நீக்குவதற்கு முடியுமா?

அதற்கு 'ஆம்' மற்றும் 'இல்லை' என இரண்டு பதில்கள் உள்ளன. இவை, அது தொடர்பான விடயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வு இதுவாகும்.

## அகற்றுவதற்கான சட்டரீதியான ஏற்பாடு என்ன?

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரிவு 99 (13) இன்படி, "இராஜினாமா அல்லது பணிநீக்கம் அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக இடைநிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில்" மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் காட்டப்பட்டுள்ளன. இதுவேஉறுப்பினர் ஒருவரை நீக்குவதற்கான ஒரேயொரு ஏற்பாடு ஆகும்.

பிரிவு 99 (13) பொருந்தக்கூடிய சட்டத்தின் இரண்டு காலகட்டங்களைக் கொண்டுள்ளது. முதலாவது, கட்சி ஒழுக்கத்தை மீறிய உறுப்பினர்களின் ஆசனங்களைப் பறிப்பதற்கு அரசியல் கட்சிகளினால் முடிந்த 1992 இற்கு முற்பட்ட காலகட்டம்ஆகும்.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு (மாகாண சபைகள்) எதிராக வாக்களித்தமையால் ஐக்கிய தேசியக் கட்சியின் சந்திரகுமார விஜேகுணவர்தன (கம்புறுபிட்டிய), தற்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன (ஹக்மன) ஆகியோர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர். அன்று, கட்சியின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் தீர்மானத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் (SC 50/87Splமற்றும் SC 51/87 Spl) தோல்வியடைந்த அவர்கள் தமது ஆசனங்களை இழந்தனர்.

1988 மே 24இல் நிறைவேற்றப்பட்ட 14வது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் ஒற்றைத் தேர்தல் தொகுதி முறைக்கு பதிலாக மாவட்ட விருப்புவாக்கு முறைஅறிமுகம் செய்யப்பட்டது. அங்கு, வேட்பாளர் ஒருவர் மட்டுமல்ல, ஆரம்பத்தில் கட்சிஒன்றுக்கும் வாக்களித்தல் இடம்பெறும். பாராளுமன்ற உறுப்புரிமையுள்ள கட்சிக்கா அல்லது பாராளுமன்ற உறுப்பினருக்கா உறுப்பினர்கள் கட்சித் தலைமையின் கட்டளைகளுக்கு கட்டுப்படல் வேண்டும்? மனச்சாட்சிக்கு அமைவாக வாக்களிப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளுக்கு வாய்ப்புஇல்லையா? எனும் கோட்பாட்டு வாதம் 14 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பின்னர் வெளிப்படுத்தப்படுகிறது.

## சட்டம், பொது அறிவு, தலைமைத்துவம் மற்றும் குற்றப்பிரேரணை:

ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுக்கு எதிரான குற்றப் பிரேரணையில் கையொப்பமிட்ட லலித் அத்துலத்முதலி, காமினி திஸாநாயக்க, ஜீ. எம்.பிரேமசந்திர ஆகிய அமைச்சர்கள் மற்றும் லக்ஷ்மன் செனவிரத்ன, சந்திரா கங்கந்த, பிரேமரத்ன குணசேகர, சமரவீர வீரவன்னி, வின்சென்ட் பெரேரா ஆகிய 8 பாராளுமன்ற உறுப்பினர்கள் 1991.09.06 ஆம் திகதி ஐ.தே.கட்சி செயற்குழுவின் தீர்மானத்தின்படி ஐ.தே.கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர்.

நீக்கப்பட்டமைக்கு எதிராக, மாவட்ட நீதிமன்றம், உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் (Dissanayake v. Kaleel SC (Special) Nos. 4 முதல் 11/91 வரை) விசாரிக்கப்பட்டன. அந்த வழக்கு, கட்சித் தடைதொடர்பான சட்டபூர்வ நிலைமை பற்றிய ஒரு கலைக்களஞ்சியம்ஆகும். நீதிபதிகளான பெர்னாண்டோ, வடுகொடபிட்டியமற்றும், குலதுங்க ஆகியோர் வழங்கிய தீர்ப்பு 248 பக்கங்களைக் கொண்டிருந்தது.

"தாம் விரும்பியவாறு கட்சி உறுப்புரிமையை இரத்துச்செய்ய முடியாது. நீதிநிலைநாட்டப்படல் வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பக்கமுள்ள விடயங்களை முன்வைக்க அவகாசம் வழங்கப்படல் வேண்டும். என்ன குற்றம் என்பதை குற்றப்பத்திரிகை மூலம் தெரிவிக்க வேண்டும். பதில் வழங்குவதற்கு, சட்டத்தரணியின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு, விளக்கமளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்" என்பதே காமினி வழக்கின் அடிப்படை ஆகும்.

மறுபுறம், விகிதாசார பிரதிநிதித்துவத்தில் கட்சி பெறும் வாக்குகளின் எண்ணிக்கையை வைத்து கட்சி பெற்றுக்கொள்ளும் ஆசனங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவதால் கட்சி உறுப்புரிமை இழக்கப்படும்போதுபாராளுமன்ற உறுப்புரிமையை இழக்க வேண்டுமென வாதிடப்பட்டது.

ஐ.தே.க "இயற்கை நீதியின் சட்டத்தின்படி செயற்பட்டது" என்பதை ஐ.தே.க சட்டத்தரணிகள் உறுதிப்படுத்தியதால் லலித், காமினி அணியினர் வழக்கில் தோல்வியுற்றனர்.

ஐ.தே.கட்சியின் தலைவர்கள் ஒழுக்காற்று விசாரணைக்கான அழைப்புக் கடிதங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பியதற்கான பதிவுகள் இருந்த போதிலும், அவை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கவில்லை என்பதே உண்மையான கதை ஆகும்.

ஆர்.பிரேமதாசவுக்கு எதிரான குற்றப் பிரேரணையில் கையொப்பமிட்டு பின்னர் தமது கையொப்பங்களை வாபஸ்பெற்ற ஆரியரத்ன ஜயதிலக்க மற்றும் எஸ்.ஏ.முத்து பண்டா ஆகியோரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். உறுப்புரிமை நீக்கப்பட்டமையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் வாதியின் வழக்கறிஞர்களாக லலித் அத்துலத்முதலி உள்ளிட்ட குழு செயற்பட்டது. ஜயதிலக்க மற்றும் முத்துபண்டாஆகியோரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. தொடர்ந்து சவால் விட்டவர்களும், இடைநடுவில் மண்டியிட்டவர்களும் ஒரேவிதமான கதிக்கு ஆளாகினார்கள்.

## எதிர்க்கட்சி கிளர்ச்சியாளர்களின் கதி:

இதே காலஎல்லையில் (1993), ஸ்ரீ.ல.சு. கட்சியின் ஜினதாச நியத்தபால, பிரதீப் ஹபன்கம, திலக் கருணாரத்ன, மேர்வின் சில்வா, ஹேமகுமார நாணயக்கார உள்ளிட்ட உறுப்பினர்கள் குழுவும் ஏனைய சில உறுப்பினர்களும் கட்சித் தலைமையை மீறிச் செயற்பட்டனர். ஸ்ரீ.ல.சு.கட்சியின் அனுர பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து உயர்கல்வி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சராக பதவி வகித்தார். ஸ்ரீ.ல.சு.கட்சி இந்த பாராளுமன்ற உறுப்பினர்களை நீக்கியதுடன் உயர்நீதிமன்றமானது அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை உறுதிசெய்தது. அவர்களை நீக்கும் செயன்முறையின் பலவீனங்களால் அவர்கள் அடைக்கலம் பெற்றனர்.

1993 சிறிமாவோ பண்டாரநாயக்க வழக்கு, பண்டாரகம ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் உறுப்பினருமான திலக் கருணாரத்னவினால் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு ஆகும். 'தி ஐலண்ட்', 24.01.1993 'லக்திவா', பிபிசி நேர்காணல்கள் மூலம் ஸ்ரீலசு கட்சியின் ஒழுக்கத்தை பாரதூரமாக மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. 31.05.1993 ஆம் திகதி திலக் கருணாரத்ன மாவட்ட நீதிமன்றில் தடை உத்தரவைப் பெற முயற்சித்தபோதும் அது பலனளிக்கவில்லை.

ஆனால், ஒழுக்காற்று விசாரணைகளுக்கு இடைக்காலத் தடை கோரும் தற்போதைய நடைமுறையின் மையமாக திலக்கின் வழக்கு காணப்படுகிறது. ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்சபை பல வருடங்களாக நடைபெறவில்லை) உரிய நடைமுறையை பின்பற்றாத காரணத்தினால் திலக் கருணாரத்னவை வெளியேற்றியமை சட்டவிரோதமானது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதன்படி, 1994 இற்கு முந்திய காலகட்டத்திலும், இயற்கை நீதிச் சட்டத்தின் படிமுறைகளைப் பின்பற்றுவதா இல்லையா என்பதை உயர்நீதிமன்றத்தை நம்ப வைக்கும் திறன்/இயலாமையின் அடிப்படையிலேயே எம்.பி.க்களை நீக்கும் திறன்/இயலாமை உறுதி செய்யப்பட்டது என்பது தெளிவாகிறது.

கலாநிதி விமல் விக்கிரமசிங்க மற்றும் சங்கைக்குரிய எல்லே குணவன்சதேரர் உள்ளிட்ட குழுவொன்று, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் சிறிசேன குரேயின் தலையீட்டுடன் 1999 ஆம் ஆண்டு 'புரவெசி பெரமுன' என தனியாக தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டது. ஆனாலும் அக்கலந்துரையாடல்கள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் சரத் அமுனுகம, சுசில் முனசிங்க, நந்தா மெத்தியூ, விஜேபால மெண்டிஸ், சூல பண்டார, ஸ்டான்லி கல்பகே உள்ளிட்ட 35 பேர் 'தேசிய அரசாங்கத்தை அமைப்போம்' என்று கூறி சந்திரிகா அரசில் இணைந்தனர்.

'கட்சியில் இருந்து நீக்குவதற்கான காரணம் குறிப்பிடப்படாமை, குற்றப்பத்திரிகை காணப்படாமை' ஆகியவற்றைக் காரணம் காட்டி 1999 நவம்பர் மாதம் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமை சட்டவிரோதமானதென உயர்நீதிமன்றம் (SC SPL.(E) NO. 4/99) முடிவு செய்தது. சரத் அமுனுகம மற்றும் பலருக்கு எதிராக கரு ஜயசூரிய வழக்குக்குப் பின்னர், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசிய கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சிகளில் இருந்து நீக்குவதற்கு மற்றும் அதன் மூலம் அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை நீக்குவதற்கு அரசியல் கட்சிகள் மேற்கொண்ட முயற்சிகள் நசீர் அஹமட் வழக்குத் தீர்ப்பு மூலமாகவே வெற்றியளித்தது.

## நஸீர் அஹமட் மீதான வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய பரபரப்பான தீர்ப்பையடுத்து எழுந்திருக்கும் முக்கிய வினா!

## பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நீக்குவதற்கான முறையியல் என்ன?

ஓர் அரசியல் கட்சி தனதுகட்சி உறுப்பினர் ஒருவரை நீக்கும் முடிவை கட்சியின் பொதுச் செயலாளர் மூலம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்க வேண்டும். அதன் போது தேர்தல் ஆணைக்குழு சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு அதுபற்றி எழுத்து மூலம் அறிவிக்கும். ஏனெனில், கட்சி உறுப்புரிமையை இழப்பதன் காரணமாக உரிய பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கிறார். எவ்வாறாயினும், தேர்தல் ஆணைக்குழு 21 நாட்கள் செல்லும் வரை சம்பந்தப்பட்ட உறுப்பினரை நீக்காது. சட்டத்தின்படி கட்சியின் முடிவிற்கு எதிராக ஏற்புடைய கட்சித் தலைமையகத்துக்கு மாவட்ட நீதிமன்றத்திடம் உத்தரவினைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குவதே இதன் நோக்கமாகும்.எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் 21 நாட்களுக்குள் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யாவிட்டால், தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்காவிட்டால், அந்த பாராளுமன்ற உறுப்பினர் நீக்கப்படுவார்.

மாவட்ட நீதிமன்றம் ஒன்றின் மூலம் இடைக்காலத் தடை உத்தரவு பெற முடியுமாயின், அதன் போது பாராளுமன்ற உறுப்பினரால் தனது பதவியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.



பாராளுமன்ற வெற்றிடத்துக்கு புதிதாகத் தெரிவான அலிசாஹிர் மௌலானா



நஸீர் அஹமட்

## மக்கள் விடுதலை முன்னணி புலேகொட வழக்கு:

மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது கிளர்ச்சியின் பின்னர், ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி என்ற பெயரில் தேர்தலில் போட்டியிட்ட ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பத்தி கட்சியின் செயலாளர் ஆரிய புலேகொடவினால் நீக்கப்படாமல், 'கட்சி உறுப்பினர் கட்டணம் செலுத்தவில்லை' என்ற குற்றச்சாட்டின் கீழ் வெளியேற்றப்பட்டார். கலப்பத்தியின் பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்குவதற்குத் தயாராக உயர்நீதிமன்றில் தொடரப்பட்ட கலப்பத்தி எதிர் புலேகொடவழக்கிலும் (1997 1 SLR 393), இயற்கை நீதியின் கோட்பாடுகளின்படி விசாரணைமேற்கொள்ளாமை, மனுதாரருக்குரிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விடயங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்காமையினால் சட்ட விரோதமானதென தீர்ப்பளிக்கப்பட்டது.

2/3 பெரும்பான்மையுடன் ஜனாதிபதியின் கைகளில் அதிகாரத்தை வழங்கும் 18வது அரசியலமைப்புத் திருத்தத்தை வழங்குவதற்கு மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர். பதுளை லக்ஷ்மன் செனவிரத்ன, பொலனறுவை ஏர்ல் குணசேகர, காலி மனுஷ நாணாயக்கார, கம்பஹா உபேக்ஷா சுவர்ணமாலி, குருநாகல் நிமல் விஜேசிங்க மற்றும் கண்டி அப்துல் காதர் ஆகியோர் அந்த உறுப்பினர்களாவர். ஐக்கிய தேசியக் கட்சியானது இந்த உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை தடைசெய்திருந்த போதிலும், அவர்களை பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்க முடியவில்லை

ஐக்கிய தேசிய முன்னணி (உண்மையான பெயர் ஐக்கிய தேசியக் கட்சி) என்ற பெயரளவிலான கட்சியின் கீழ் போட்டியிட்ட ரவூப் ஹக்கீம் உட்பட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 8 உறுப்பினர்களும் 18வது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். அவர்கள் எவருக்கும் எதிராக ஐக்கிய தேசியகட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவில்லை.

தமிழ்த் தேசியகூட்டமைப்பின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேனவும் 18இற்கு ஆதரவாக வாக்களித்தார். 2010நவம்பர் 28ம் திகதி, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.

தன்னைக்கட்சியிலிருந்து நீக்கியமைக்குஎதிராக பியசேன யாழ் மாவட்ட நீதிமன்றத்தில்(DC Jaffna case No. 38/2010 (Misc) வழக்குத் தாக்கல் செய்தபோதும் அவரால் தடை உத்தரவினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தன்னைக்கட்சியிலிருந்துநீக்கியமைக்குஎதிராக, பியசேன உயர்நீதிமன்றத்தில் (SC Application Special [Expulsion] No. 03/2010) மனுத்தாக்கல்செய்ததுடன், 2011 பெப்ரவரி 08ஆம் திகதி தமிழ் தேசிய கூட்டமைப்பு பியசேனவின் கட்சி உறுப்புரிமைக்கு தடைவிதித்தமை சட்டத்திற்கு முரணானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தமையினால் பாராளுமன்ற உறுப்பினர் பதவி பாதுகாக்கப்பட்டது.

## ஹக்கீம் – ரிஷாட் முரண்பாடு

இயற்கை நீதிக்கான சட்டம், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கட்சித் தடையை எவ்வாறு பாதிக்கிறது என்பதற்கு சிறந்த உதாரணம், 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமீர் அலி, ரிஷாத் பதியுதீன் மற்றும் நஜீம் ஏ. மஜீத் ஆகியோர் வெளியேற்றப்பட்டமை ஆகும். மேற்குறித்த உறுப்பினர்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை விமர்சித்து கட்சிக்கு கடிதம் அனுப்பினார்கள்.

ரிஷாத் உள்ளிட்ட குழுவை கட்சி நீக்கியமையை எதிர்த்து ஷிராணி பண்டாரநாயக்க எழுதிய வழக்குத்தீர்ப்பில், ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்படுவதற்கு முன்பே, "நீங்கள் சொல்வது தவறு. முஸ்லிம் சமூகம் கூட மன்னிக்காது "எனக் கூறியதன் மூலம்" நீக்கப்படுவதற்கு முன்னர் நீங்கள் உரியபாராளுமன்ற உறுப்பினர்களைக் குற்றவாளிகளென முற்கூட்டியே முடிவு செய்துள்ளீர்கள்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

02/2005, 03/2005, 04/2005 உயர்நீதிமன்றத்தின் மூன்று வழக்குகளையும் ஒன்றாக விசாரித்து 2005 ஜூலை 01ஆம்திகதி அலி, ரிஷாத் மற்றும் மஜீத் ஆகியோரின் கட்சித் தடை சட்டபூர்வமானது அல்ல என உயர்நீதிமன்றத்தின் சரத் என் சில்வா உள்ளிட்ட ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழு தீர்ப்பளித்தது. முஸ்லிம் காங்கிரஸின் ஒழுக்காற்று நடைமுறையின் பிரகாரம் கட்சி உறுப்பினர் ஒருவரை நீக்கும் அதிகாரம் கட்சியின் உயர்பீடத்திற்கே உள்ளது.இருந்த போதிலும், கட்சித் தலைவர் குற்றம் தொடர்பாக தனது முற்கூட்டிய தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட்டார் என்பது வழக்கின் முக்கிய வாதமாக இருந்தது.

நஸீர் அஹமட் வழக்குத் தீர்ப்பில் அன்று தமக்கு தவறிய இடத்தை, சட்டத்திற்கு பாதகம் ஏற்படாதவாறு அமைத்துக் கொள்வதற்கு இம்முறை முஸ்லிம் காங்கிரஸால் முடிந்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவமானது கட்சியின் செயற்பாடுகளை கட்சியின் யாப்பின் பிரகாரம் தீர்மானித்துள்ளதாகவும், முறையான நடைமுறைகளை பின்பற்றி பாராளுமன்ற உறுப்பினரைக் கட்சியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் நஸீர் அஹமட் வழக்குத் தீர்ப்பு கூறுகிறது.

நஸீர் அஹமட் வழக்குத் தீர்ப்பின் பின்னர், ஒருசில அரசியல் கட்சிகளின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீ.ல.சு.கட்சி யாப்பின் சட்டபூர்வமான தன்மை நீதிமன்றத்தால் ஆராயப்பட்டு வருவதனாலும் ஐக்கிய மக்கள் முன்னணியின் 32 பக்கங்கள் கொண்ட யாப்பில் உறுப்பினர்களை நீக்குவதற்கான ஏற்பாடுகளில் உள்ள பலவீனம் காரணமாகவும் மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை இழப்பதற்கான அபாயம் குறைவாகவே காணப்படுகிறது.

யாப்பின் ஏற்பாடுகள் வலுவானதாக அமையாத, உரிய முறையியல்களைப் பின்பற்றாத மற்றும் இயற்கை நீதிக்கு முரணாக கட்சிகள் செயற்பட்டுள்ள எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கட்சியில் இருந்து நீக்குவதற்கு நீதிமன்றம் இதுவரை எச்சந்தர்ப்பத்திலும் இடமளிக்கவில்லை.



## ‘ இலங்கையின் அரசியல் வரலாற்றில் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பான வழக்கின் தீர்ப்புகள் கூறுவதென்ன? ’

ரஜித் கீர்த்தி தென்னக்கோன்...

**நாட்டில் தேர்தல் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எதுவும் வெளியாகாத நிலையில், தேர்தலை அடிப்படையாகக் கொண்ட காய்நகர்த்தல்களில் அரசியல் கட்சிகள் யாவும் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளன.**




# அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாக அமையுமென அரசியல் களத்தில் ஊகம்!

## உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து, இனிமேல் வேட்பாளர்களை தெரிவு செய்வதில் கட்சிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்!

இவ்வாறு சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கும் அரசியல் களத்தை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்று மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. கட்சியின் தீர்மானத்துக்கு மாறாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து சுற்றாடல் அமைச்சராகவிருந்த நஸீர் அஹமட்டை கட்சியிலிருந்து நீக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த தீர்மானம் சரியானது என்பதே அந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பாகும்.

2021 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது அதனை எதிர்ப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்திருந்த போதும், கட்சியின் முடிவை மீறி நஸீர் அஹமட் அரசுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். இதனையடுத்து முஸ்லிம் காங்கிரசின் உயர்பீடம் ஒன்றுகூடி அவரை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கத் தீர்மானித்தது.

இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணை செய்த உயர்நீதிமன்ற நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூன்று நீதியரசர்கள் குழு, கட்சி மேற்கொண்ட தீர்மானத்தில் தலையிடுவதற்கு எந்தக் காரணமும் இல்லையெனத் தீர்ப்பை வழங்கியிருந்தது.

இந்தத் தீர்ப்பையடுத்து நஸீர் அஹமட்டின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வறிதாகியிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் அரசியலமைப்புக்கு அமைய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்திருந்தார். இதனையடுத்து விருப்புவாக்கில் அடுத்த இடத்தில் இருக்கும் அலிசாஹிர் மௌலானாவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டுள்ளது.



## 2024ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் இன்னும் ஒருசில வாரங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

இதற்கு அமைய அலிசாஹிர் மௌலானா மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார். பாராளுமன்றம் கூடும்போது அவர் அதற்கான பதவிச் சத்தியத்தைச் செய்து கொள்வார்.

உயர்நீதிமன்றம் வழங்கிய இந்தத் தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. பல தசாப்தங்களுக்கு முன்னர் கட்சி ஒழுக்கத்தை மீறியதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களை அரசியல் கட்சிகள் வெளியேற்றிய காலம் இருந்தது. ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி லலித் அத்துலத்முதலி, காமினி திஸாநாயக்க, ஜி.எம். பிரேமச்சந்திர மற்றும் பலரை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து வெளியேற்றியிருந்தது.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சி அணிக்குள் தள்ளப்பட்டதன் பின்னர், அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு மாறிய சந்தர்ப்பங்கள் ஏராளமாக இருந்தன. குறிப்பாக அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பல கட்சித்தாவல்கள் இடம்பெற்றபோதும், அவ்வாறானவர்களைக் கட்சிகளிலிருந்து வெளியேற்றும் முயற்சிகள் சட்ட நடவடிக்கைகளால் முடங்கிப் போயிருந்தன.

இவ்வாறான நிலையில் முஸ்லிம் காங்கிரசுக்கு கிடைத்திருக்கும் இந்த வெற்றி இதுபோன்ற வழக்குகளின் தீர்ப்புக்கு முன்னோடியாக அமையும் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக 2020 பொதுத்தேர்தலில் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பலர் தாம் தெரிவு செய்யப்பட்ட கட்சியின் தீர்மானங்களுக்கு மாறாகச் செயற்பட்டு வருவது மாத்திரமன்றி, தம்மை சுயாதீனமானவர்கள் என அறிவித்தும் செயற்பட்டு வருகின்றனர். அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் ஜனாதிபதியை ஆதரிப்பதற்கு எடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்து அவர்களுக்கு எதிராக சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்திருந்தமையை உதாரணமாகக் கூற முடியும்.

அதேநேரம், நஸீர் அஹமட்டுக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆராய்ந்து வருவதாக பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் கூறியிருந்தார். பொதுஜன பெரமுனவின் ஊடாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பலர் குறிப்பாக டளஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், டிலான் பெரேரா உள்ளிட்டவர்கள் அக்கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாகப் பாராளுமன்றத்தில் செயற்பட்டு வருகின்றனர்.

எனினும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் என்பதால் அவர்கள் குறித்து தம்மால் தீர்மானம் எடுக்க முடியாது என சாகர காரியவசம் கூறியுள்ளார். ஆளும் கட்சியைப் போன்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலரும் இவ்வாறு கட்சிதாவியுள்ளனர்.

உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கம் இந்தத் தீர்ப்பு இது போன்றவர்கள் மீது அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

இன்னும் ஒரு சில வாரங்களில் 2024ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான விவாதம் நடைபெறவுள்ளது. உயர்நீதிமன்றம் வழங்கிய இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து வரவுசெலவுத் திட்டம் குறித்து பாராளுமன்றத்தில் இடம்பெறக் கூடிய வாக்கெடுப்பு என்பனவும் எதிர்பார்ப்பை உருவாக்கக் கூடியவையாக அமையும்.

அது மாத்திரமன்றி அடுத்த வருடம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் பொதுத்தேர்தலில் போட்டியிடத் தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் குறித்து அரசியல் கட்சிகளும், தாம் தெரிவு செய்யும் அரசியல் கட்சி குறித்து வேட்பாளர்களும் அதிக கவனம் செலுத்துவதற்கான பின்னணி உருவாகியுள்ளது.

ஒரு கட்சியில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்குத் தெரிவானதன் பின்னர் சொந்த நோக்கங்களுக்காக தமக்கு வாக்களித்த வாக்காளர்களைக் காட்டிக்கொடுக்கும் அரசியல் செயற்பாடு இதன் பின்னர் ஓரளவுக்கு முடிவுக்கு வரும் என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

சிறந்த அரசியல் கலாசாரமொன்றைக் கொண்டு வருவதற்கு சிறந்த அடித்தளமாக இதனைப் பயன்படுத்தவும் முடியும். இது விடயத்தில் வாக்காளர்களாகிய பொதுமக்களுக்கும் பொறுப்பு உள்ளது. தமக்காகத் தொடர்ந்தும் பணியாற்றக் கூடிய நபர்களைத் தெரிவுசெய்து தமது பிரதிநிதிகளாக அனுப்பி வைப்பதற்கான தார்மீகப் பொறுப்பு வாக்காளர்களுக்கு உருவாகியுள்ளது.

மறுபக்கத்தில், தேர்தல்களுக்கான செலவீனங்கள் குறித்த விடயத்திலும் அரசியல் கட்சிகள் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும். இதற்கான சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுவருவதில் சகல தரப்பினரும் ஆர்வம் காட்டுவது நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரத்தைக் கொண்டுவருவதற்குப் பெருமளவில் பங்களிக்கும் என்பதில் ஐயமில்லை.

**பி.ஹர்ஷன்...**

---




# மதங்கள் கூறும் போதனைகளை அனைவரும் பின்பற்றினால் முரண்பாடுகளுக்கு இடமில்லை!

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுடன் சந்திப்பு



**'மதங்களின் உண்மையான போதனைகளைப் பின்பற்றுவது தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு உதவும்' என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். 'அதிகரித்துள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் உள்ளிட்ட சகல தரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியம்' எனவும் அவர் சுட்டிக்காட்டினார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து எம்முடன் அவர் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய சனல்–4 தொலைக்காட்சியின் ஆவணப் படம் குறித்த உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இது பலமுறை கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் விவாதிக்கப்பட்டும் உள்ளது. எனினும் அதில் காண்பிக்கப்பட்டது போன்று உறுதியான ஆதாரங்கள் எதுவும் இதுவரை இல்லையென்பது துரதிர்ஷ்டமானது. இந்த விவகாரம் இன்னும் அதிகார வரம்புக்குள் இருப்பதால், பொறுப்புள்ள அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் நாட்டின் சிறந்த பிரஜை என்ற ரீதியில் இது குறித்து என்னால் கருத்துத் தெரிவிக்க முடியாது.

**கே: அப்பாவி நபர்களின் உயிரைப் பறிப்பது சொர்க்கத்தை அடைவதற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையே தாக்குதலுக்கான அடிப்படைக் காரணம் என்ற கருத்து நிலவுகிறது. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: இத்தகைய நம்பிக்கைகள் சில வழிபாட்டு முறைகளுக்குள் இருக்கலாம். அவ்வழிபாடுகளைப் பின்பற்றுபவர்களின் ஊடாக அவை காலப்போக்கில் உருவாகியிருக்கலாம். இவ்வாறான வழிபாட்டு முறைகளைத் தடுக்கவும், ஒழிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப் புதிய சட்டங்களை உருவாக்குவது குறித்தும் பரிசீலித்து வருகிறோம். இருப்பினும், இந்த முயற்சிகளில் எங்களின் வெற்றியை முன்கூட்டியே கூற முடியாது.

**கே: அருட்தந்தை ஜெரோம் பெர்னாண்டோ மீதான விசாரணைகள் எந்த நிலையில் உள்ளன? புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் இதற்கான உங்கள் பதில் என்ன?**

பதில்: குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடமே இந்தக் கேள்வியை முன்வைக்க வேண்டும்.

**கே: இந்தச் சம்பவங்களில் இருந்து நாம் என்ன மாதிரியான பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்பதை உங்களால் கூற முடியுமா?**

பதில்: சாதி, மதம், மொழி பேதங்கள் பேசாமல் ஒருவரையொருவர் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பரஸ்பர மரியாதை என்பது நமது தொடர்புகளின் அடித்தளமாக இருக்க வேண்டும்.

**கே: மதஒற்றுமையைப் பாதுகாக்க புதிய சட்டங்களை இயற்றுவது பற்றி நீங்கள் சமீபத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். இவற்றின் பின்னணியில் நாட்டைச் சீர்குலைக்கும் நோக்கத்தில் மறைமுக சக்திகள் இருப்பதாக நீங்கள் சந்தேகிக்கின்றீர்களா?**

பதில்: தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன, அவற்றின் செயற்பாட்டைக் குழப்பும் வகையில் எவ்வித கருத்தையும் கூற நான் விரும்பவில்லை.

**கே: இலங்கையில் நாளாந்தம் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதை நாம் காண்கிறோம். புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில், இலங்கையர்களிடையே ஒழுக்கம் மற்றும் விழுமியங்கள் வீழ்ச்சியடைந்து வருவது குறித்து அக்கறை செலுத்தியிருப்பீர்கள். குற்றச்செயல்கள் அதிகரிப்பதைத் தடுக்க நீங்கள் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் ஏதேனும் உள்ளதா?**

பதில்: சமூகத்தில் உள்ள முக்கிய பிரச்சினை மக்கள் மதக்கட்டமைப்புகளிலிருந்து விலகியிருப்பதாகும். சமூகம் மற்றும் தேசத்தின் மீது சரியான அக்கறையைக் கொண்டிருக்காத நிலையில், தனிப்பட்ட ஒழுக்கநடத்தை மிகவும் முக்கியமானது. யூடியூப், ஃபேஸ்புக் மற்றும் இணையதளங்கள் போன்ற சமூக ஊடகங்கள் இதில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றன. இவை பொறுப்பான அறிக்கையிடலில் ஈடுபட வேண்டும். தார்மீக விழுமியங்களின் சீரழிவு ஒரு தீவிர தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எத்தனை அமைச்சுக்கள், அமைச்சர்கள் அல்லது நிறுவனக் கட்டமைப்புக்கள் இருந்தாலும் அனைவருக்கும் இதில் பொறுப்பு உள்ளது.

**கே: இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் தாய்லாந்து இலங்கைக்கு பரிசாக வழங்கிய முத்துராஜா என்ற யானை தொடர்பாக தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளில் மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கை மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: தற்போது தாய்லாந்தில் இருக்கும் யானைக்கு உரிய பராமரிப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்த இறுதி அறிக்கைக்காக நாங்கள் இன்னும் காத்திருக்கிறோம். கூடுதல் தகவல்கள் கிடைக்கும் வரை அவை உண்மையா, பொய்யா என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியாது. எல்லா விலங்குகளையும் நன்றாக நடத்த வேண்டும் என்பது எங்கள் நம்பிக்கை. இரக்கம் நமது சமூகத்தில் ஒரு முக்கிய மதிப்பு மிக்கது. துரதிர்ஷ்டவசமாக, தார்மீக சீரழிவு மற்றும் மாறிவரும் அமைப்புகளால் இரக்கம், பச்சாதாபம், அனுதாபம், பிறர் மீது அக்கறை, சமத்துவம் போன்றவற்றில் சரிவு ஏற்பட்டுள்ளது. இது மனிதர்களுக்கு மட்டுமல்ல, விலங்குகளுக்கும் பொருந்தும். இது நம் நாட்டில் நாம் கடைப்பிடிக்கும் மதிப்புகளுக்கு எதிரானது.

**கே: போதைப்பொருள் பாவனை என்பது சமூகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உள்ளது. இந்த அச்சுறுத்தலை எவ்வாறு எதிர்த்துப் போராட திட்டமிட்டுள்ளீர்கள்?**

பதில்: நாட்டுக்குள் போதைப்பொருளைக் கொண்டு வருபவர்கள் யார் என்பது குறித்து சட்ட அமுலாக்க முகவர் நிறுவனங்களுக்கு நன்கு தெரியும் என நான் நம்புகிறேன். எவ்வாறாயினும், போதைப்பொருள் வர்த்தகம் ஒரு சக்திவாய்ந்த உலகளாவிய மாஃபியாவால் கட்டுப்படுத்தப்படுகிறது, இது இலங்கைக்கும் பொருந்தும். இந்தச் சிக்கலைத் தீர்க்க பல அமைப்புகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த முயற்சிகள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் எங்களுக்குத் தேவையாக உள்ளது.

**கே: புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில், இந்த நேர்காணலின் மூலம் நீங்கள் சமூகத்திற்கு ஒரு செய்தியை தெரிவிக்க விரும்புகின்றீர்களா?**

பதில்: நிச்சயமாக, ஒவ்வொருவரும் அந்தந்த மதங்களின் சரியான போதனைகளைப் பின்பற்றுமாறு ஊக்குவிக்க விரும்புகிறேன். மேலும், மற்றவர்களின் மதம் அல்லது வேறு எந்தத் தொடர்புகளையும் பொருட்படுத்தாமல், அவர்களை மதிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நான் வலியுறுத்துகிறேன். ஒரு மதம் அல்லது தேசியத்துடன் அடையாளம் காண்பதற்கு முன், நாம் அனைவரும் மனிதர்கள். நமது மத நம்பிக்கைகள் அல்லது நாம் பேசும் மொழி எதுவாக இருந்தாலும், நாம் அனைவரும் ஒரே மரண விதியைப் பகிர்ந்து கொள்கிறோம். எனவே, நமது சிறு வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, ஒன்று சேர்வதும், ஒன்றுபடுவதும் அவசியம்.

**அதிகரித்துள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் உள்ளிட்ட சகல தரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியம்**

# வவுனியா சிறைச்சாலைக்கு புதிய மேற்பார்வை குழு பிரதிநிதி

நீதி அமைச்சரின் முஸ்லிம் விவகார இணைப்பாளர் சிராஜுதீன் நிப்ராஸ் மொஹம்மத் வவுனியா சிறைச்சாலை மேற்பார்வை குழு பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவினால் அவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமான சிராஜுதீன் நிப்ராஸ் மொஹம்மத்,

மன்னாரின் பண்டாரவெளியை பிறப்பிடமாகக் கொண்ட அப்துல் றஹீம் சிராஜுதீன் அப்துல் ஹை மக்பூலாவின் சிரேஷ்ட புதல்வராவார்.



# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல் - 832

அறிவோர் ஒன்றுகூடல் 832 நிகழ்ச்சி, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் புதன்கிழமை (18) மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில், 'மலையகத் தமிழ்ச் சமூகத்தின் கட்டமைப்பு, அபிவிருத்தி ஆகியவற்றை அச்சமூகத்தின் அரசியல் அறிவும்' எனும் தலைப்பில் உரை இடம்பெறவுள்ளது. மேற்படி தலைப்பில் இலங்கை வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் உதவி ஆய்வாளர் தெய்வேந்திரன் மிதிலைமாறன் உரையாற்றவுள்ளார்.

## சமூக நலன்புரி கொடுப்பனவு நிதிக்காக...

நான்கு மடங்குகளாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். குறைந்த வருமானம் பெறுவோரை மேம்படுத்தும் வகையில் சமூக நலன்புரி பணிகளுக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெருந்தொகை நிதி ஒதுக்கப்பட்டமை சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், அரசாங்க வருமானத்தில் 95% வருமானம் வரி மூலம் பெறப்படுவதாகவும், அனைத்து வரிகளும் குறைந்த வருமானம் பெறுபவர்களை மேம்படுத்த பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். பொருளாதார நெருக்கடியின் பக்கவிளைவாக பாடசாலை மாணவர்களின் உபகரணங்கள் பெருமளவு அதிகரித்துள்ளதாக தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர், அதற்கு தீர்வாக பாடசாலை உபகரணங்கள் தொடர்பாக தனிப்பட்ட ரீதியில் கவனம் செலுத்தி ஏற்கெனவே சலுகைகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## உள்ளூர் முட்டை உற்பத்தி...

கடந்த காலத்தில் உள்நாட்டு முட்டை உற்பத்தியாளர்களுக்கு தேவையான மூலப்பொருட்கள் முறையாக கிடைக்காமல் இருந்தது. ஆனால், தற்போது மூலப்பொருட்கள் திரும்பக் கிடைப்பதன் காரணமாக உள்நாட்டு முட்டை உற்பத்தி வளர்ச்சி கண்டு வருவதாக, வர்த்தக அமைச்சு தெரிவித்தது. இதனைக் கருத்தில் கொண்டு முட்டை இறக்குமதியை நிறுத்த முடிவு செய்துள்ளதாகவும், வர்த்தக அமைச்சு தெரிவித்தது. தாய் கோழிகளை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்குதல், உற்பத்தியாளர்களுக்கு பணம் வழங்குதல், சோளத்தை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற வசதிகள் காரணமாக இலங்கையில் முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும், வர்த்தக அமைச்சு மேலும் தெரிவித்தது.

## தரம்05 புலமைப்பரிசில் பரீட்சை...

பரீட்சை நிலையங்களுக்கு கொண்டு செல்லும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக, பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது. அனர்த்த நிலைமைகள் ஏற்படும் இடங்களிலுள்ள அனைத்து பரீட்சார்த்திகளும் அருகிலுள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக, பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் லசிக சமரகோன் தெரிவித்தார். இம்முறை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையானது நாடளாவிய ரீதியில் 2,888 பரீட்சை நிலையங்களில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மின்சார போக்குவரத்து தேசிய...

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு உலக போக்குவரத்து தினத்துடன் இணைந்ததாக நவம்பர் 10ஆம், 11ஆம், 12 ஆம் திகதிகளில் ஹோமாகம, பிட்டிபன பிரதேசத்தை மையமாகக் கொண்டு மின்சாரம் மற்றும் ஸ்மார்ட் போக்குவரத்துக்கான தேசிய கண்காட்சி மற்றும் மாநாட்டை (பசுமை நகர்வு கண்காட்சி மற்றும் மாநாடு) நடத்த போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு ஏற்பாடு செய்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவுக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் இந்தக் கண்காட்சி மற்றும் மாநாடு தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் (13) போக்குவரத்து அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், நிதி அமைச்சு, கைத்தொழில் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, சுகாதார அமைச்சு, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் பல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்தக் கண்காட்சி மற்றும் மாநாட்டுக்கு பங்களிப்பு வழங்கவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## IGPயின் பதவிக்காலம்...

பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

பொலிஸ் மாஅதிபர் சீ.டி.விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டாவது பதவிக்கால நீடிப்பு, கடந்த 9ஆம் திகதியுடன் நிறைவடைந்ததை அடுத்து அவரது பதவிக் காலம் மேலும் 3 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'நான் ஒரு கிரிக்கெட்டர்'...

வெளியாகியுள்ளது. ஆயினும், இந்தத் திரைப்படம் வெளிவருவதற்கு முன்னரும் அதற்கு பின்னரும் முரளியை மையமாகக் கொண்ட சர்ச்சைகள் தொடர்கின்றன.

இதற்கு முன்னதாக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களான கபில்தேவ், மொஹமட் அசாருதீன், மஹேந்திரசிங் தோனி, பெண்கள் கிரிக்கெட் அணித் தலைவர் மிட்டாலி ராஜ், ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக்கொண்டும் திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. அந்த திரைப்படங்கள் ஏற்படுத்தாத சர்ச்சைகளை முரளியின் '800' திரைப்படம் ஏற்படுத்தி வருகின்றது.

இதற்கு பிரதான காரணமாக இருப்பது முரளியின் சர்ச்சைக்குரிய கருத்துகளாகும். ஆரம்பத்தில் இந்தத் திரைப்படத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிப்பதாக இருந்தது. எனினும், இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது, அரசாங்கத்தின் சார்பாக முரளிதரன் தெரிவித்த கருத்துகள் காரணமாக இலங்கை தமிழர்கள் அவர் மீது கடும் கோபத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதை முரளி ஒரு சந்தர்ப்பத்தில் தனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திய சம்பவமென்று கூறியிருந்தார். இலங்கையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் ஊடகங்களிலும் ஏனையோர் மத்தியிலும் தமிழில் கதைப்பதை தவிர்த்தே வந்தார். கூடுதலாக அவர் சிங்கள மக்கள் மத்தியிலேயே வலம் வந்து கொண்டிருந்தார். இதன் காரணமாக அவரது வேடத்தில் தென்னிந்திய சினிமா கலைஞர்களில் தமிழர்கள் எவரும் நடிக்கக் கூடாதென எதிர்ப்புகள் கிளம்பியதால், விஜய் சேதுபதி அதிலிருந்து விலகினார்.

பின்னர் மதூர் மிட்டல் அவரது வேடத்தை ஏற்று நடிக்க திரைப்படமானது கடந்த 6ஆம் திகதி வெளியானது. எனினும், அதற்கு முன்பதாக வெளிவந்த முன்னோட்ட காட்சியில் மலையக பெருந்தோட்ட சமூகத்தை கொச்சைப்படுத்தும் வகையில் வார்த்தை பிரயோகம் இடம்பெறுவது சுட்டிக்காட்டப்பட்டு, மீண்டும் முரளி மீது கண்டனங்கள் கிளம்பின. பின்னர் அதை மாற்றுவதாக படக்குழு அறிவித்தது.

திரைப்பட முன்னோட்ட நிகழ்வுகள் இலங்கையிலும் இந்தியாவிலும் இடம்பெற்ற போது, முரளிதரனுடன் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலரும் அவருக்கு ஆதரவாக அதில் கலந்து கொண்டிருந்தனர். எனினும், நிகழ்வுகளில் முரளிதரனிடம் ஊடகங்கள் பல கேள்விகளை முன்வைத்த போது, அதில் பலவற்றுக்கு பதில் கூற அவர் விரும்பியிருக்கவில்லை. பல கேள்விகளை அவர் தவிர்த்திருந்தார். இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அவரிடம் தமிழக ஊடகங்கள் கேள்வியெழுப்பிய போது, அதை அரசியல்வாதிகளிடம் தான் நீங்கள் கேட்க வேண்டும். நான் அரசியல் செய்யவில்லையே நான் ஒரு கிரிக்கெட்டர் என்றார்.

யுத்த காலத்தில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக கேட்ட போது, அனைத்துத் தரப்பினரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டனரென்று கூறிய அவர், எனக்கு ஒரு பிரச்சினை வந்த போது, அனைவருமே எனக்காக குரல் கொடுத்தனர். ஆகையால், நான் இலங்கையில் யாரையும் சார்ந்து இருக்கவில்லை. நான் அனைவருக்குமான கிரிக்கெட்டர் என்று சமாளித்தார்.

அடுத்தடுத்து இடம்பெற்ற நிகழ்வுகளில் அரசியல் தொடர்பாக கேள்விகள் கேட்க வேண்டாம் என்றார். நீங்கள் யாருக்கு ஆதரவாக இருக்கின்றீர்கள் என்ற கேள்விக்கு அவர், நான் தமிழனும் இல்லை சிங்களவனும் இல்லை நான் ஒரு கிரிக்கெட்டர் நான் ஒரு விளையாட்டு வீரன். என்னை அப்படியே விட்டு விடுங்கள் என்று கூறி முடித்து விட்டார்.

## இராஜதந்திர, பொருளாதார உறவுகளில்...

ஆரம்பிக்கப்பட்டமை எமது உறவுகளை வலுப்படுத்தும் ஒரு முக்கியமான மைல்கல் என்பதுடன், இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் உங்களுடன் இணைவது எனது பாக்கியம் எனவும், அவர் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் சேவையை வெற்றிகரமாக ஆரம்பித்தமைக்காக இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கம் மற்றும் இலங்கை மக்களுக்கு நன்றி தெரிவித்த இந்தியப் பிரதமர், இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னாருக்கு இடையில் பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

நாகப்பட்டினத்துக்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையேயான பயணிகள் கப்பல் சேவையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று (14) காணொளி மூலம் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

இந்தியாவும் இலங்கையும் கலாசாரம், வர்த்தகம் மற்றும் நாகரிகத்தின் ஆழமான வரலாற்றை பகிர்ந்துகொள்கின்றன.

நாகப்பட்டினம் மற்றும் அருகிலுள்ள நகரங்கள் உட்பட பல நாடுகளுடன் கடல் வணிகத்துக்கு நீண்டகாலமாக அறியப்படுகின்றது. பண்டைய தமிழ் இலக்கியங்களில் பூம்புகார் துறைமுகம் ஒரு மையமாக குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க கால இலக்கியங்களான பட்டினப்பாலை, மணிமேகலை போன்றவை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே செல்லும் படகுகள் மற்றும் கப்பல்கள் தொடர்பாக பேசுகின்றன.

மகா கவிஞர் சுப்பிரமணிய பாரதி தனது 'சிந்து நதியின் மிசை' எனும் பாடலில், எமது இரு நாடுகளையும் இணைக்கும் பாலம் தொடர்பாக பேசியுள்ளார். இந்த கப்பல் சேவையானது, அந்த வரலாறு மற்றும் கலாசார தொடர்புகளை உயிர்ப்பிக்கின்றது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சமீபத்திய விஜயத்தின் போது, எமது பொருளாதார பங்காளித்துவத்துக்கான தொலைநோக்கு ஆவணத்தை கூட்டாக ஏற்றுக்கொண்டோம். இணைப்பு என்பது இந்தக் கூட்டாண்மையின் மையக் கருப்பொருள். இணைப்பு என்பது இரு நகரங்களை நெருக்கமாகக் கொண்டு வருவது மட்டுமல்ல. இது நம் நாடுகளை நெருக்கமாகவும் நம் மக்களை நெருக்கமாகவும் நம் இதயங்களை நெருக்கமாகவும் கொண்டு வருகிறது. இணைப்பு வர்த்தகம், சுற்றுலா மற்றும் மக்கள் உறவுகளை மேம்படுத்துகின்றது. இது இரு நாட்டு இளைஞர்களுக்கும் வாய்ப்புகளை உருவாக்குகின்றது.

2015ஆம் ஆண்டில் நான் இலங்கைக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து, புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே நேரடி விமான சேவை தொடங்கப்பட்டதை நாங்கள் கண்டோம். பின்னர், இலங்கையிலிருந்து புனித யாத்திரை நகரமான குஷிநகரில் முதல் சர்வதேச விமானம் தரையிறங்கியதை கொண்டாடினோம்.

சென்னை மற்றும் யாழ்ப்பாணம் இடையே நேரடி விமான சேவை 2019ஆம் ஆண்டு தொடங்கியது. இப்போது நாகபட்டினம் மற்றும் காங்கேசன்துறைக்கு இடையே கப்பல் சேவை மற்றொரு முக்கியமான படியாகும்.

இந்தியாவும் இலங்கையும் பின்டெக் மற்றும் எரிசக்தி போன்ற பரந்த அளவிலான துறைகளில் இணைந்து செயல்படுகின்றன. யு.பி.ஐ.காரணமாக இந்தியாவில் டிஜிட்டல் பணம் செலுத்துதல் ஒரு வெகுஜன இயக்கமாகவும் வாழ்க்கை முறையாகவும் மாறியுள்ளது. யு.பி.ஐ. மற்றும் லங்கா பேஜ இணைப்பதன் மூலம் பின்டெக் துறை இணைப்பில் நாங்கள் பணியாற்றி வருகிறோம். நமது வளர்ச்சி பயணத்தை வலுப்படுத்த நமது நாடுகளுக்கு ஆற்றல் பாதுகாப்பு முக்கியமானது. எரிசக்தி பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்த எங்கள் எரிசக்தி கட்டங்களை இணைக்கிறோம்.

முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கான கூட்டு என்பது நமது இருதரப்பு உறவின் வலுவான தூண்களில் ஒன்றாகும். யாரையும் விட்டு வைக்காமல், வளர்ச்சியை அனைவருக்கும் எடுத்துச் செல்வதே எங்கள் பார்வை. இந்த தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, இலங்கையில் இந்திய உதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மக்களின் வாழ்க்கையைத் தொட்டன.

வடக்கு மாகாணத்தில் வீடுகள், நீர், சுகாதாரம் மற்றும் வாழ்வாதார ஆதரவு தொடர்பான பல திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு நாங்கள் ஆதரவை வழங்கியதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ரயில் பாதைகளை சீரமைக்க வேண்டும். யாழ். கலாசார நிலையத்தை நிர்மாணித்தல், இலங்கை முழுவதும் அவசர அம்பியுலன்ஸ் சேவையை நடைமுறைப்படுத்துதல், திக் ஓயாவிலுள்ள மல்டிஸ்பெஷாலிட்டி மருத்துவமனையை நாங்கள் சப்கா சாத், சப்கா விகாஸ், சப்கா விஸ்வாஸ் மற்றும் சப்கா பிரயாஸ் ஆகியவற்றின் பார்வையுடன் பணியாற்றி வருகிறோம். சமீபத்தில் ஜி20 மாநாட்டை இந்தியா நடத்தியது அனைவரும் அறிந்ததே. வசுதைவ குடும்பகம் (உலகம் ஒரே குடும்பம்) தொடர்பான எங்களது தொலைநோக்கு சர்வதேச சமூகத்தால் வரவேற்கப்பட்டது. இந்த பார்வையின் ஒரு பகுதி, நமது அக்கம்பக்கத்துக்கு முதலிடம் கொடுப்பது, முன்னேற்றம் மற்றும் செழுமையைப் பகிர்வது.

ஜி20 மாநாட்டின் போது இந்தியாமத்திய, கிழக்குஐரோப்பா பொருளாதார வழித்தடம் தொடங்கப்பட்டது. இது ஒரு முக்கியமான இணைப்பு வழித்தடமாகும். இது முழு பிராந்தியத்திலும் பொருளாதார தாக்கத்தை உருவாக்கும். இரு நாடுகளுக்கு இடையிலான பலதரப்பட்ட தொடர்பை நாம் வலுப்படுத்துவதால் இலங்கை மக்களும் இதன் மூலம் பயனடைவார்கள். மக்களின் பரஸ்பர நலனுக்காக எமது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இலங்கையுடன் நெருக்கமாக செயற்படுவதற்கு இந்தியா உறுதிபூண்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

## விக்கி MP வீட்டில்...

கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (13) மாலை நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் இல்லத்திலேயே இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன், தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா, செயலாளர் சிவாஜிலிங்கம், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் பங்குபற்றினர்.

## வடக்கு பட்டதாரிகளுக்கு...

மன்னாரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இதனைத் தெரிவித்தார். வடமாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க 1,000 பட்டதாரிகளை ஆசிரியர்களாக உள்வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதுடன், விரைவில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவதுடன், புதிய தொண்டர் ஆசிரியர்களை சேவையில் இணைக்கவுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்திய கடற்றொழிலாளர்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர், கடற்றொழில் அமைச்சரின் முடிவானது கடல் துறை சார்ந்த விடயங்களின் அரசாங்கத்தின் இறுதியான முடிவாக இருக்குமெனவும் தெரிவித்தார்.

## நாகபட்டினம்KKS...

ஆரம்ப விழாவில் இந்திய மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால், பொதுப்பணித்துறை அமைச்சர் ஏ.வி. வேலு ஆகியோர் கொடி அசைத்து கப்பலை வழியனுப்பினர்.

இதேவேளை, இந்திய வெளியுறத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் காணொளியினூடாக இலங்கையின் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் உரையாடியதுடன், அவரது அலுவலகத்திருந்தவாறே கொடி அசைத்தும் கப்பலை வழியனுப்பினார்.

நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து நேற்று (14) காலையில் 50 பயணிகள் மற்றும் ஊழியர்களுடன் காங்கேசன்துறை நோக்கி பயணத்தை ஆரம்பித்த கப்பல், நேற்று மதியம் 12.20 மணியளவில் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

கப்பலின் வரவேற்பு நிகழ்வில் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மீண்டும் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து மதியம் 1.20 மணியளவில் நாகபட்டினத்துக்கு 31 பயணிகளுடன் தனது பயணத்தை ஆரம்பித்த கப்பலை, இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் பச்சை கொடி அசைத்து வழியனுப்பி வைத்தார்.

நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பலில் பயணம் மேற்கொள்வதற்கு ஒருவருக்கு ஒருவழிக் கட்டணமாக இலங்கை ரூபாவில் 27,000 ரூபாவும் இருவழிக் கட்டணமாக 53,500 அறவிடப்படவுள்ளதுடன், 55 கிலோகிராம் வரை இலவசமாக பொருட்களை எடுத்துச் செல்லலாம்.

இறுதியாக 1984ஆம் ஆண்டு தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் கப்பல் சேவை இடம்பெற்றிருந்தது. நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தை தொடர்ந்து கப்பல் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. யுத்தம் முடிவடைந்து 14 வருடங்களின் பின்னர் மீண்டும் கப்பல் சேவை இப்போது ஆரம்பமாகியுள்ளது.

அதனால் 40 வருடங்களின் பின்னர் இலங்கைக்கும் தமிழகத்துக்குமிடையில் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இதேவேளை, நாகப்பட்டினத்திலிருந்து இலங்கைக்கு வருவதற்கு ஜி.எஸ்.டி வரியுடன் சேர்த்து ஒருவழிக் கட்டணமாக 7,670 ரூபா அறவிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது..

இதனை www.kpvs.in. என்ற இணையதளத்துக்குச் சென்று பயணத் திகதி, கடவுச்சீட்டு நகல், விசாவின் நகல் ஆகியவற்றை சமர்ப்பித்து பணத்தை ஒன்லைனில் செலுத்தி டிக்கெட்டை முன்பதிவு செய்யலாம்.

இலங்கையின் இணையத்தளம் அல்லது அருகிலுள்ள சுற்றுலா நிறுவனங்களை அணுகி கப்பல் பயணத்துக்கானன சுற்றுலா வீஸாவை ஒரே நாளில் பெற்றுக்கொள்ளலாம்.

முதல் நாள் பயணத்துக்கு கட்டணத்தில் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஜி.எஸ்.டி. வரி, 75 சதவீத சிறப்பு சலுகையுடன் ரூ.2,803 மட்டும் வசூலிக்கப்பட்டது.

இந்தப் பயணிகள் கப்பல் மணிக்கு 36 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது. இதில் பயணிகளுக்குத் தேவையான சிற்றுண்டி, தேநீர், குளிர் பானங்கள், நொறுக்கு தீனிகள் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏ.சி. வசதியுடன் கட்டமைக்கப்பட்டுள்ள கப்பலில் பொழுதுபோக்குக்காக 6 தொலைக்காட்சி பெட்டிகளுடன் தேவையான வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆண்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்தனியே கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆபத்துக் காலங்களில் உயிர் காக்கும் மிதவைப் படகுகள், மருத்துவ உபகரணங்கள், தீயணைப்புக் கருவிகள் அனைத்தும் உள்ளன.

இந்தப் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை 10 நாட்கள் மட்டுமே நடைபெறவுள்ளது. அதன் பின்னர், வட கிழக்கு பருவமழை காலமென்பதால் வங்கக்கடலில் புயல் உருவாக வாய்ப்புள்ளதால் சில மாதங்களுக்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, பின்னர் மீண்டும் மார்ச் மாதம் முதல் தினமும் போக்குவரத்து தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கலைஞர் கருணாநிதியின்...

கௌரவிப்பு விழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் நடைபெறவுள்ள கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு கௌரவிப்பு விழாவையிட்டு 100 பிரமுகர்களை கௌரவிக்க சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

சங்கவி பிலிம்ஸ் நிறுவனமானது தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் நாடளாவிய ரீதியில் இதுவரை 1,000 பிரமுகர்களை கௌரவித்துள்ளது.

கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் என பலதரப்பட்டவர்களும் இவ்விழாவில் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்து நாடுகளின் சுற்றுலா...

இந்தோனேசியா ஆகிய நாடுகளின் பிரஜைகளிடமிருந்து வீஸாவுக்கான கட்டணத்தை அறவிட வேண்டாமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்ணான்டோ தெரிவித்தார்.

## ஜனாதிபதி ரணில்...

மண்டலம்' முன்முயற்சி திட்டத்தின் 10 ஆண்டு நிறைவை முன்னிட்டு பீஜிங்கில் 17ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி தலைமையிலான இந்த உயர்மட்ட குழுவினர் சீனா பயணமாகினர்.

கடன் நிவாரணம் தொடர்பாக சீனாவுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் 4.3 பில்லியன் டொலரை பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டுள்ளதால், அதன் அடுத்த கட்டம் தொடர்பாக ஜனாதிபதி தனது விஜயத்தின் போது பிரதானமாக அவதானம் செலுத்தவுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் உள்ளிட்ட சீன அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடன் பீஜிங்கில் பரந்துப்பட்ட கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

குறிப்பாக கடன் மறுசீரமைப்பு, கடன் மீள் செலுத்தலுக்கான தவணைகள், இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதியை பெறல் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளுக்கு இந்தக் கலந்துரையாடல்களில் முன்னுரிமையளிக்கப்படவுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் முதற்கட்ட மீளாய்வு அதிருப்தியுடன் நிறைவடைந்துள்ள நிலையில், கடன் மறுசீரமைப்புக்கு சீனாவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல் இந்த விஜயத்தில் முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது. அதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீன அரச தலைவர்களுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக நேரடியாகவே கலந்துரையாடவுள்ளார்.

கொவிட்19 பெருந்தொற்று மற்றும் அதன் பின்னரான இலங்கையின் பொருளாதார அரசியல் கொந்தளிப்புகளை கருத்திற்கொண்டு இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கமைய கடன் தவணைகளை செலுத்துவதற்கான இரு வருட கால அவகாசத்தை சீனா ஏற்கெனவே வழங்கியுள்ளது.

எவ்வாறிருப்பினும், எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் குறித்த கால அவகாசம் நிறைவடைகின்ற நிலையில், ஜனவரி மாதத்திலிருந்து கடன் தவணைகளை சீனாவுக்கு செலுத்த வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதேவேளை, சீன விஜயத்தின் போது கடன் தவணைகளை மீள செலுத்துவதற்கான கால எல்லையை மீண்டும் நீடிக்கும் கோரிக்கையை இலங்கை முன்வைக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகள் மாத்திரமின்றி,முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பான கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கமைய புதிய முதலீடுகளை பெற்றுக்கொள்ளல், புதிய வர்த்தக ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் மற்றும் தடைப்பட்ட திட்டங்களுக்கான நிதியை பெற்று மீண்டும் திட்டங்களை ஆரம்பித்தல் தொடர்பாக அவதானம் செலுத்தப்படவுள்ளது. மேலும், எக்ஸிம் வங்கியுடன் மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டம் தொடர்பான கலந்துரையாடலும், ஹம்பாந்தோட்டை அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் முன்னெடுக்கப்படவுள்ளன. குறிப்பாக 4 பில்லியன் டொலர் முதலீட்டில்ஹம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திரகரிப்பு நிலையத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஜனாதிபதியின் சீன விஜயத்தின் போது இறுதி செய்யப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மாத்தளை வடிவேலனின்...

ரூபா இலக்கிய விருது பெற்ற மாத்தளை பெ.வடிவேலனின் 'வல்லமை தாராயோ' எனும் சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை (15) மாலை 4.00.மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வானது தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் இரா.சிவராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ், வடமேல் மாகாண முன்னாள் ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன், பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராஜா, இந்துசமய கலாசார திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சண்முகலிங்கம், நிதி இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் சாந்திநாவுக்கரசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர். பிரமுகர்களின் மங்கள விளக்கேற்றலுடனும் செல்வி பிரியங்கா ஆன் பிரான்சிஸின் தமிழ் வாழ்த்துடனும் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் வரவேற்பு உரையை கே.பொன்னுத்துரை நிகழ்த்த, தலைமை உரையைத் தொடர்ந்து வாழ்த்துரைகளை இந்துசமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன், முன்னாள் நிர்வாக செயலாளர் வீ.விக்கரமராஜா, சுகாதார அமைச்சு பணிப்பாளர், 'சாகித்தியரத்னா' ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

வெளியீட்டு உரையை பதிப்பாசிரியரும் ஆய்வாளருமான எச்.எச் விக்கிரமசிங்க நிகழ்த்துவதுடன், நூலை வெளியிட்டு வைப்பார்.

முதல் பிரதியை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுச் சிறப்பிக்கவுள்ளார்.

நூல் ஆய்வை கிழக்கு பலகலக்கழக கலாசாரபீட தமிழ் கற்கைகள் துறை விரிவுரையாளர் கலாநிதி த.மேகராசாவும், இலக்கிய செயற்பாட்டாளரும் கவிஞருமான மேமன்கவி ஆகியோர் நிகழ்த்துவர். ஏற்புரையை நூலாசிரியர் கலாபூஷணம் பெ.வடிவேலன் நிகழ்த்த, நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபன பகுதிநேர அறிவிப்பாளர் ஆர்.பி.யசோதரை தொகுத்து வழங்குவார்.



# இலங்கை அரசியல் வரலாற்றில் மு.கா.வின் முன்னுதாரண தடம்

"தலைவர் காட்டிய தலைவர் ஹக்கீமின் தலைமையில் முஸ்லிம்களின் தேசிய பேரியக்கமாகவும் அரசியல் கலாசார மக்கள் இயக்கமாகவும் நெடிய பயணம் நீளும்"

இலங்கை அரசியல் வரலாற்றில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரித்துப்பார்க்க முடியாதவொரு அரசியல் விருட்சமாகியுள்ள நிலையில், மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பின் ஊடாக அக்கட்சி நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் முன்னுதாரணமாகின்ற தடத்தினை தன்னகத்தே கொண்டுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து ஹாபிஸ் நசீர் அஹமட்டை நீக்கியமை தொடர்பில், கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், அவருக்கு அனுப்பிய கடிதத்தை சவாலுக்குட்படுத்தி, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரீதி பத்மன் சூரசேன, எஸ். துரைராஜா, மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாத்தினால் கடந்த ஆறாம் திகதி அறிவிக்கப்பட்டபடி கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நசீர் அஹமட்டை நீக்கியமை, சரியானதும் சட்டபூர்வமானதுமானதும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு 17,599 வாக்குகளை பெற்ற ஹாபிஸ் நசீர அஹமட் பாராளுமன்றத்திற்கு தெரிவானார். எனினும், அவர் உள்ளிட்ட மூவர் கட்சியின் தீர்மானத்தினை மீறி, வரவு செலவுத்திட்டத்துக்கு வாக்களித்திருந்தனர்.

இதனையடுத்து ஒன்றுகூடிய முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் குறித்த உறுப்பினர்களிடத்தில் விளக்கம் கோரியிருந்தது. இரு உறுப்பினர்களும் தமது செயற்பாடு தவறு என்று குறிப்பிட்டு மன்னிப்புக்கோரியிருந்த நிலையில் ஹாபிஸ் நசீர் அஹமட் பதிலளிப்புக்களுக்கான காலத்தினைக் கோரியபோதும் முறையான பதில்களை வழங்கத் தவறியிருந்தார்.

குறிப்பாக கட்சி எடுத்த தீர்மானத்துக்கு மாறாக 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை, சுற்றாடல் அமைச்சை பொறுப்பேற்றமை உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அவரை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக, கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

குறித்த கடிதத்தை ஆட்சேபித்து ஹாபிஸ் நசீர் அஹமட் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அவ்வழக்கில் பிரதிவாதிகளாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீட உறுப்பினர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக திஸாநாயக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களென 97 பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

இதனையடுத்து மு.காவின் செயலார் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் உட்பட பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியதுடன், அது தொடர்பிலான விசாரணைகள் முன்னெக்கப்பட்டு ஹாபிஸ் நசீர் அஹமட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமையானது முறையானது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நபரொருவர் எந்தக் கட்சியினூடாக அல்லது சுயேச்சைக் குழுவின் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானாரோ, அந்தக் கட்சியில் அல்லது சுயேச்சைக் குழுவில் அவரின் அங்கத்துவத்தை இழந்தால், அந்த தினத்திலிருந்து ஒரு மாதத்தின் பின்னர் அவரின் பாராளுமன்ற உறுப்புரிமையும் இல்லாமல் போகுமென அரசியலமைப்பின் பிரிவு 99(13)(அ) குறிப்பிடுவதற்கு அமைவாக தற்போதைய ஆளும் அரசாங்கத்தில் சுற்றாடல் துறை அமைச்சராகப் பதவி வகித்த ஹாபிஸ் நசீர் அஹமட்டின் பாராளுமன்ற உறுப்புரிமை ரத்தாகியுள்ளது.

இதேபோன்றே 1991ஆம் ஆண்டு ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த போது, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டது. அப்போது அமைச்சர்களாகவிருந்த லலித் அத்துலத் முதலி மற்றும் காமினி திஸாநாயக்க உள்ளிட்டோர் அந்த பிரேரணையில் கையொப்பமிட்டிருந்தனர். அதன் காரணமாக, ஐக்கிய தேசியக் கட்சியிருந்து அவர்கள் நீக்கப்பட்டார்கள்.

அந்தத் தீர்மானத்துக்கு எதிராக லலித் அத்துலத் முதலி மற்றும் காமினி திஸாநாயக்க ஆகியோர் உச்ச நீதிமன்றம் சென்றனர். ஆனாலும், அவர்கள் இருவரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமை சட்டப்படி சரியானதென, அந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதன் பின்னரான காலங்களில், கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அந்தத் தீர்மானத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றம் சென்ற போது, அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமை சட்ட விரோதமானது என்றே, உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து வந்தது.

குறிப்பாக, கருஜயசூரிய உள்ளிட்ட 16பேர் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து வெளியேறியமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பியசேன வெளியேறியமை உள்ளிடவற்றுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளில் மேற்படியான நிலைமைகளே நீடித்திருந்தன.

அதுமட்டுமன்றி மக்கள் விடுதலை முன்னணியானது, கட்சி தாவுகின்ற போது பாராளுமன்ற உறுப்புரிமை ரத்தாகும் சட்டமூலத்தினை இயற்றி நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தபோதும் அது வெற்றியளித்திருக்கவில்லை. இவ்வாறான நீண்ட இடைவெளிக்குப் பின்னர், கட்சி தீர்மானங்களை மீறுதல், பதவிகளுக்காக கட்சி தாவுதல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு உயர் நீதிமன்றம் உறுதியான முன்னெச்சரிக்கையை விடுத்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் என்னும் அரசியல் பேரியக்கம் உருவாக்கப்பட முன்பு முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஒற்றுமையின்றி பிரதேசவாதம் தலைதூக்கி இருந்தது. எதற்கெடுத்தாலும் பிரதேசத்தினை மையமாக கொண்ட அரசியல் கலாசாரம் இருந்தது.

இவ்வாறு பிரதேச ரீதியாக பிளவுபட்டு கிடந்த முஸ்லிம் மக்களை ஒன்றிணைப்பது சிரமமான விடயமாகக் காணப்பட்டது. அப்போதுதான் மு.கா என்ற பேரியக்கம் ஆரம்பமானது. மு.கா.வின் வரலாறையும் வந்த தடத்தையும் தடயங்களையும் முற்றாக அழிப்பதென்ற பேரினவாதிகளின் நிகழ்ச்சி நிரலைத் தகர்த்தெறிந்து மீட்பதற்கு பெரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மறைந்த பெருந்தலைவர் மர்ஹூம் அஷ்ரப் தலைமையை ஏற்றபோதே மு.காவை பிளவுபடுத்தும் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன. அப்போது அவரும் நீதித்துறை மீது நம்பிக்கை வைத்து நாடினார். ஆனால் அவரது முயற்சி பலனளிக்கவில்லை. எனினும் அவர் சவால்களுக்கு முகங்கொடுத்து கட்சியை கட்டியெழுப்பினார்.

1988 இல் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் 17 ஆசனங்களையும் தென்னிலங்கையில் 12 ஆசனங்களையும் சேர்த்து மொத்தமாக 29 மாகாணசபை உறுப்பினர்களை இக்கட்சி பெற்றது. அதைத் தொடர்ந்து 1989 பொதுத்தேர்தலில் அஷ்ரப்பின் அரசியல் வியூகத்தினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நான்கு ஆசனங்களை பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து வந்த 10ஆவது மற்றும் 11ஆவது பொத்தேர்தல்களில் இக்கட்சி முறையே 07, 11 பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றியது. அவர் விட்டுச்சென்ற அந்த சிறந்த வியூகத்தினால் 12ஆவது பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 12 ஆசனங்களை பெற்று வரலாறு படைத்தது.

1994இல் பத்தாவது பாராளுமன்றத்தில் கப்பல்துறை துறைமுகங்கள் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக பதவி வகித்த அஷ்ரப் பல அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தினார். அக்காலத்தில் ஆட்சியை தீர்மானிக்கின்ற சக்தியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் திகழ்ந்தது.பெருந்தேசிய கட்சிகளும் அச்சம் கொள்ளும் அளவுக்கு தனது பலத்தை நிரூபித்திருந்தது.

2000ஆம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் திகதி ஹெலிஹொப்டர் விபத்தில் அவர் அகால மரணமடைந்தார். அவரது மறைவை அடுத்து பல்வேறு கருத்து முரண்பாடுகளும், தலைமைத்துவப் போட்டியும் கட்சிக்குள் உருவாக்கப்பட்டன. அதன் விளைவாக முன்னாள் அமைச்சர் அதாஉல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சியும், அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் தோற்றம் பெற்றன. நுஆ கட்சியும் செயற்பட ஆரம்பித்தது.

எனினும் மு.கா.சோர்ந்துவிடவில்லை. தலைவர் காண்பித்த தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் முஸ்லிம்களுக்காக தனிப்பெரும் சக்தியாக தொடர்ந்தது. நீண்ட காலமாக நாட்டின் ஜனநாயக பாரம்பரியங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது.

தொடர்ச்சியாக கட்சியில் காணப்பட்ட வெளியேற்றங்கள், குழிபறிப்புக்கள், தீர்மானங்களை மீறிய செயற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து உள்ளக சவால்களையும் வெற்றி கொள்வதற்காக ரவூப் ஹக்கீம், நீடித்த மௌனத்தை பேணினார். கட்சியை குறைந்தளவு சேதாரத்துடன் மீட்க வேண்டும், பேரம் பேசும் தன்மையை நிலை நிறுத்த வேண்டும், மக்கள் இயக்கமாக தொடர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார், தற்போதும் இருக்கின்றார்.

இந்த நிலையில், நீடிக்கும் அரசியல் கலாசர புறழ்வுக்கு மு.கா.வும், அதன் தலைமைத்துவமும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ஒட்டுமொத்த இலங்கை அரசில் கட்சிகளுக்கும் முன்னுதாரணமாக தடம் பதித்துள்ளது. அது தொடர்ந்தும் முஸ்லிம்களின் பாதுகாப்பு அரணாகவும், தனிப்பெரும் சக்தியாகவும் மக்களின் பேராதரவுடன் பயணிக்கும் என்பதில் ஐயமில்லை. என்றும் முஸ்லிம்களை ஆளும் கட்சி "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்" என்பதை தலைவர் ஹக்கீம், மீண்டும் உறுதிப் படுத்தியுள்ளார்.



**ரஹ்மத் மன்சூர்**
**தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளர் (மு.கா) முன்னாள் பிரதி முதல்வர் கல்முனை மாநகர சபை**

---

# MICE சுற்றுலாவின் நட்சத்திரம் கொழும்பு போர்ட் சிட்டி



**AGS. சுவாமிநாதன் சர்மா**
**பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்**

ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆபிரிக்காவுக்கு இடையிலான முக்கிய கப்பல் வழித்தடங்களின் குறுக்கு வழியில் அமைந்துள்ள கொழும்புத் துறைமுக நகரம், கூட்டங்கள், ஊக்கத்தொகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (MICE Meetings, Incentives, Conferences, Exhibitions) சுற்றுலா நிலப்பரப்பில் ஒரு நம்பிக்கைக்குரிய போட்டியாளராக வளர்ந்து வருகின்றது. உலகளாவிய சுற்றுலாத் துறையின் முக்கிய பிரிவாக அங்கீகரிக்கப்பட்ட MICE சுற்றுலா, வணிகம் தொடர்பான நிகழ்வுகளுக்கான தனிநபர்களின் பயணத்தை உள்ளடக்கி, உலகெங்கிலும் உள்ள இடங்களுக்கு கணிசமான வருவாயை உருவாக்குகின்றது. வணிகச் சுற்றுலா/ வணிக நிகழ்வுகள் என்றும் குறிப்பிடப்படும் MICE சுற்றுலாவானது பாரம்பரிய சுற்றுலா நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட தனித்துவமான பொருளாதார வாய்ப்புகளை வழங்குகின்றது.

***MICE சுற்றுலா கட்டமைப்பு நான்கு முதன்மைக் கூறுகளைக் கொண்டுள்ளது:***

***கூட்டங்கள் (Meetings):*** கார்ப்பரேட் கூட்டங்கள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் பட்டறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

***ஊக்கத்தொகைகள் (Incentives):*** அதிக சாதனை படைத்த ஊழியர்களுக்கான வெகுமதிகளாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

***மாநாடுகள் (Conferences):*** பொதுவான நலன்களைப் பகிர்ந்து கொள்ளும் வல்லுநர்களின் பெரிய கூட்டங்கள்.

***கண்காட்சிகள் (Exhibitions):*** நிறுவனங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்துவதற்கான தளங்கள்.

2019ஆம் ஆண்டில் உலகளாவிய MICE சந்தையின் மதிப்பு சுமார் $1.3 டிரில்லியன் ஆகும். இந்தத் துறை ஒரு நிதி அதிகார மையமாக மாறியுள்ளது. குறிப்பிடத்தக்க வகையில் மிகப்பெரிய MICE சந்தையாக அமெரிக்கா முன்னணியில் உள்ளது. MICE சுற்றுலாவின் கவர்ச்சியானது MICE சுற்றுலாப் பயணிகளின் வலுவான செலவுத் திறன். அது தரும் நிலையான பொருளாதார நன்மைகள், மற்றும் ஒரு இலக்கை நோக்கிச் செல்லும் நேர்மறையான பிராண்ட் இமேஜ் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் ஆதரிக்கப்படுகின்றது.

MICE சுற்றுலாப் பயணிகளை கவருவதற்கு ஹோட்டல்கள், மாநாட்டு மையங்கள் மற்றும் போக்குவரத்து நெட்வெர்க்குகள் போன்ற வலுவான உட்கட்டமைப்பைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் MICE பார்வையாளர்களின் பல்வேறு நலன்களைப் பூர்த்தி செய்ய பல்வேறு வகையான இடங்கள் மற்றும் செயற்பாடுகளை வழங்குவது அவசியம்.




குறிப்பிடத்தக்க வளர்ச்சித் திறன் கொண்ட ஒரு செழிப்பான சந்தையாக MICE சுற்றுலா பொருளாதார செழுமையில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

***MICE சுற்றுலாவில் கொழும்புத் துறைமுக நகரத்தின் மூலோபாய நன்மைகள்***

கொழும்புத் துறைமுக நகரம் அதன் மூலோபாய நிலைப்படுத்தல் மற்றும் நவீன உட்கட்டமைப்புடன் MICE சுற்றுலாப் போக்கைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக உள்ளது.

***கொழும்புத் துறைமுக நகரத்தின் நன்மைகள் பின்வருமாறு:***

***மூலோபாய இடம்:*** இலங்கை உலகளாவிய கடல்வழி மற்றும் வான்வழி மார்க்கத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இதன் காரணமாக சர்வதேச பிரதிநிதிகளை எளிதாக அணுகவும், அத்துடன் பல வணிக அனுகூலங்களினை பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

***நவீன உட்கட்டமைப்பு:*** நவீன மாநாட்டு மையம், தரமான விமான நிலையம் மற்றும் அதிவசதிகொண்ட துறைமுகம் உள்ளிட்ட தேவையான அதிநவீன வசதிகளைக் கொண்டுள்ளது. இதன்காரணமாக ஆசியாவின் சிறந்த MICE சுற்றுலாத் தலமாக செயற்படுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

***பல்வேறுபட்ட வசதிகள்/ இடங்கள்:*** வரலாற்றுத் தலங்கள், கலாசார அடையாளங்கள் மற்றும் இயற்கை அழகு ஆகியவற்றின் கலவையை வழங்குகிறது. எனவே பல்வேறுபட்ட சுற்றுலா பயணிகளினை கவர்ந்திழுக்கக் கூடியதாக விளங்குகின்றது.

இலங்கை அதன் பண்பான மற்றும் வரவேற்கத்தக்க சூழ்நிலைக்கு பெயர் பெற்றது: நாடு அதன் விருந்தோம்பல், நட்பு, உள்ளூர் மக்கள் மற்றும் துடிப்பான கலாசாரம் ஆகியவற்றிற்கு பெயர் பெற்றது. இலங்கை மக்களின் நட்பு மற்றும் அரவணைப்பு குறித்து பார்வையாளர்கள் அடிக்கடி கருத்து தெரிவிக்கின்றனர். இது சுற்றுலாப் பயணிகளுக்கு நேர்மறையான மற்றும் வரவேற்பு அனுபவத்திற்கு பங்களிக்கின்றது.

MICE சுற்றுலாவில் அதன் திறனை பூரணமாக வழங்குவதற்கு கொழும்புத் துறைமுக நகரம் பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளலாம்:

***டிஜிட்டல் இருப்பு:*** கொழும்புத் துறைமுக நகரத்தின் MICE சலுகைகளை விளம்பரப்படுத்த பிரத்தியேக இணையத்தளம் மற்றும் செயலில் உள்ள சமூக ஊடக சேனல்கள் மூலம் விரிவான ஆன்லைன் இருப்பை நிறுவுதல் வேண்டும்.

***தொழில்முறைமையில் ஈடுபாடு:*** தொடர்புடைய வர்த்தக நிகழ்ச்சிகள் மற்றும் மாநாடுகளில் பங்கேற்பது, நிகழ்வு அமைப்பாளர்களை ஈடுபடுத்துதல் மற்றும் இலக்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

கூட்டாண்மைகள்: தங்கள் வாடிக்கையாளர்களுக்கு இலக்கை சந்தைப்படுத்த மற்றும் நிகழ்வு தளபாடங்களை எளிதாக்க பயண முகவர் மற்றும் சுற்றுப்பயண வழி காட்டிகளுடன் ஒத்துழைத்து செயலாற்ற முடியும்.

***ஊக்கத்தொகை:*** MICE நிகழ்வுகளை ஈர்க்க கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்குதல்.

உறவை உருவாக்குதல்: இலக்கின் நற்பெயரை அதிகரிக்க முக்கிய MICE தொழில் முடிவெடுப்பவர்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ளுவதன் மூலன் இந்த இலக்கினை அடையமுடியும்.

இலங்கைக்கான பொருளாதாரத் தாக்கங்கள் மற்றும் வாய்ப்புகள்

கொழும்பு போர்ட் சிட்டியின் MICE சுற்றுலாவின் சாத்தியமான நன்மைகள் கணிசமானவை:

மேம்படுத்தப்பட்ட வருவாய்: MICE சுற்றுலாப் பயணிகளின் அதிக செலவுகள் சுற்றுலாத் துறையின் வருவாயில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிப்பதுடன் அதிகரிப்பையும் ஏற்படுத்தும்.

***வேலை உருவாக்கம்:*** MICE நிகழ்வுகள் விருந்தோம்பல், போக்குவரத்து மற்றும் நிகழ்வு மேலாண்மை போன்ற பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்குகின்றன. இதன் வாயிலாக நடைமுறையில் காணப்படும் வேலையில்லாப் பிரச்சினைக்குச் சிறந்த தீர்வாக அமையும்.

***வெளிநாட்டு முதலீடு:*** MICE நிகழ்வுகளின் ஈர்ப்பு, இலக்கின் நற்பெயர் காரணமாக வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிக்க முடியும்.

நேர்மறை கருத்து: MICE சுற்றுலா இலக்கின் ஒட்டுமொத்த இலங்கையின் பார்வையினை நேர்முறையில் மேம்படுத்துகின்றது. இது ஒரு செழிப்பான பொருளாதாரத்தை பிரதிபலிப்பதுடன் சிறந்த எதிர்காலத்தினை உருவாக்குகின்றது.

***பொருளாதார ஊக்கம்:*** MICE செயற்பாடுகள், சேவைகள் மற்றும் தயாரிப்புகளுக்கான அதிக செலவு மூலம் உள்ளூர் பொருளாதாரங்களைத் தூண்டுகின்றன. இதன் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு பல்வேறுபட்ட நேரடி மற்றும் மறைமுக நன்மைகளினை வழங்கும்.

போர்ட் சிட்டி கொழும்பு முறையாக செயற்படும்போது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருடாந்தம் 13.7 பில்லியன் டொலர்களை பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 120,000 நேரடி மற்றும் 300,000 மறைமுக வேலைகளை உருவாக்குகின்றது. இந்தக் கணிப்பு நாட்டில் வேலையின்மை மற்றும் வறுமையை கணிசமாகக் குறைக்கும் திறனைக் கொண்டுள்ளது.

சவால்களை சமாளித்து வெற்றியை உறுதி செய்தல்

கொழும்பு போர்ட் சிட்டி MICE சுற்றுலா முயற்சி செழிக்க பல சவால்களை எதிர்கொள்ள வேண்டும். அவற்றில் சிலவற்றினை பின்வருமாறு அவதானிக்கலாம்.

***உட்கட்டமைப்பு:*** ஹோட்டல்கள், மாநாட்டு மையங்கள் மற்றும் போக்குவரத்து அமைப்புகள் உள்ளிட்ட வலுவான உட்கட்டமைப்பு முக்கியமானது.

***தளபாடங்கள்:*** பாதுகாப்பு மற்றும் கழிவு மேலாண்மையை உள்ளடக்கிய MICE நிகழ்வுகளின் கோரிக்கைகளை கையாள்வதற்கான திறமையான தளபாடங்கள் அவசியம்.

***விசாக்கள் & விதிமுறைகள்:*** MICE சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நெறிப்படுத்தப்பட்ட விசா செயன்முறைகள் & விதிமுறைகள் அவசியம்.

***சந்தைப்படுத்தல் & ஊக்குவிப்பு:*** எல்லோருக்கும் இலகுவான இணையத்தளம், சமூக ஊடக இருப்பு, வர்த்தக நிகழ்ச்சி வருகை மற்றும் கூட்டாண்மை உள்ளிட்ட மூலோபாய சந்தைப்படுத்தல் முயற்சிகள் தொடரப்பட வேண்டும்.

***பாதுகாப்பு:*** சரியான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பணியாளர்களால் ஆதரிக்கப்படும் பாதுகாப்பான சூழல் வெற்றிகரமான MICE நிகழ்வுகளை நடத்துவதற்கு இன்றியமையாதது.

தரமான ஹோட்டல்கள், திறமையான மனிதவளம், அதிக வணிகச் செலவுகள் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வது மிகவும் கட்டாயமாகும். இந்தப் பிரச்சினைகளை விரிவாகக் கையாள்வதன் மூலம் இலங்கை தன்னை ஒரு பிராந்திய MICE சுற்றுலா மையமாக உறுதியாக நிலைநிறுத்திக்கொள்ள முடியும்.

ஒட்டுமொத்த இத்திட்டத்தினையும் அதற்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் செயற்திட்டங்களினை உன்னிப்பாக அவதானிக்குமிடத்து கொழும்பு போர்ட் சிட்டி MICE சுற்றுலாத் திட்டம் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு ஒரு வெற்றிகரமான சூழ்நிலையை முன்வைக்கின்றது. அதிகரித்த வருவாய் மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம் மூலம் பொருளாதார வளர்ச்சியை உந்துவது மட்டுமல்லாமல் கலாசார பரிமாற்றம் மற்றும் புரிதலை வளர்க்கவும் முடியும். மூலோபாய திட்டமிடல் மற்றும் அர்ப்பணிப்புடன் கொழும்புத் துறைமுக நகரம் ஒரு முதன்மையான MICE சுற்றுலாத்தலமாக மாறும் திறனைக் கொண்டுள்ளது. இது உலகெங்கிலும் உள்ள பல்வேறு நிகழ்வுகள் மற்றும் பார்வையாளர்களை ஈர்க்கின்றது.

வார இறுதி
# அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

# சர்வதேச நாணய நிதியமென்பது தொண்டு நிறுவனம் அல்ல!

**இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழிகளில் ஒன்றாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவி நாடப்பட்டிருந்தது. இரு தரப்புக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதியின் கீழ் 48 மாதங்களில் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிக்கான பச்சைக்கொடி காட்டப்பட்டது.**

இதன் முதலாவது மதிப்பாய்வு கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. இரண்டாவது கட்டத்துக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முன்னர், இலங்கை தனது உறுதிமொழிகளை சரியான முறையில் நிறைவேற்றியுள்ளதா, அனைத்து விடயங்களும் சரியான பாதையில் முன்னேறி வருகின்றனவா என்பதை சர்வதேச நாணய நிதியம் மதிப்பாய்வு செய்துள்ளது.

இதற்காக இலங்கை வந்திருந்த விசேட குழுவினர் மதிப்பாய்வை நடத்திவிட்டுச் சென்றுள்ள நிலையில், சர்வதே நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு இறுதித் தீர்மானத்தை எடுக்க உள்ளது. இதற்கிடையில் சர்வதேச நாணய நிதியத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மாநாடும் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றுள்ள இராஜாங்க நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்டோர் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாள்ரகள் மற்றும் முக்கியஸ்தர்களைச் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர்.

இரண்டாவது கட்டத்துக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதில் சாதகமான நிலைமை இருப்பதாக அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதியைப் பெற்றுக் கொள்வதில் உள்நாட்டு மற்றும் சர்வதேச கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது.

உள்நாட்டு கடன் மேம்படுத்தல் குறித்த பிரேரணை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான பின்னணியில் சர்வதேச கடன்மறுசீரமைப்புக் குறித்த அடுத்த கட்டக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்கள் குறித்த இணக்கப்பாட்டுக்கு சீனாவின் எக்சிம் வங்கி முன்வந்திருப்பதாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் கூறியிருந்தார். இருந்தபோதும் சீனாவுடனான கடன் இணக்கப்பாடு குறித்து தமக்கு இன்னமும் எவ்வித அறிவிப்பும் வழங்கப்படவில்லையென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியிருக்கும் சந்தர்ப்பத்தில், இலங்கையின் சனத்தொகையில் 12.3 மில்லியன் பேர் பொருளாதார ரீதியான ஆபத்துக்களை எதிர்கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அண்மைய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்பரிமாண ஏதுநிலையை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள பத்துப் பேரில் எட்டுப் பேர் சமூக பொருளாதார ஆபத்து வலயத்தில் இருப்பதாக அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களில் பொருளாதார ஆபத்துக்கள் அதிகமாக இருப்பது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரம் ஆகிய மூன்று பிரதான விடயதானங்களில் 12 பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருக்கும் பின்னணியில் வெளியாகியிருக்கும் அந்த ஆய்வு அறிக்கை குறித்து பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டது. இந்த நிலைமைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு இதனை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் காலத்தில் நிலைமை மோசமடைந்துவிடும் என்று அக்குழு எச்சரித்திருந்தது.

நாட்டை சரியான பாதையில் கொண்டு வரும் முயற்சிகளில் இதுபோன்ற ஆய்வு அறிக்கைகளில் உள்ள விடயங்களைத் தவிர்க்க முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி உதவியை வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளில் ஒன்று பாதிக்கப்படக் கூடிய மக்களுக்கான சமூகப் பாதுகாப்பு வலைகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

இவ்வாறு உருவாக்கப்படும் சமூகப் பாதுகாப்பு வலைகளில் பயனாளிகள் தெரிவு வெளிப்படையானதாகவும், சரியானதாகவும் இருக்க வேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு. விசேடமாக சமுர்த்தி கொடுப்பனவுகளைப் பெறுபவர்களில் பலர் பொருளாதார ரீதியில் வலுவான நிலையில் இருப்பவர்கள் என்பதை உலக வங்கியின் மற்றொரு ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எனவேதான் சமுர்த்திப் பயனாளிகள், மாற்றுத் திறனாளிகள் என நான்கு பிரிவுகளைச் சேர்ந்த அனைவரையும் உள்ளடக்கியதாக 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியிருந்தது. இதன் பயனாளிகள் தெரிவிலும் ஒரு சில குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து மேன்முறையீடுகளுக்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் பிந்திய ஆய்வு அறிக்கையில் உள்ள விடயங்களைக் கவனத்தில் கொண்டு நலன்புரித் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வழிவகைகள் பற்றிய குழு அதிகாரிகளிடம் வலியுறுத்தியது.

இதுபோன்ற விடயங்களில் ஏற்படக் கூடிய முன்னேற்றங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவான காரணிகளாக அமையும். சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வின் பிரதிபலன் இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில், இலங்கையின் முன்னேற்றம் குறித்து உள்நாட்டு அரசியல்வாதிகள் பலரும் பல்வேறு விதமான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இதில் புரிந்துகொள்ள வேண்டிய விடயம் என்னவெனில், சர்வதேச நாணய நிதியம் என்பது தொண்டு நிறுவனம் அல்ல, இது பல்தரப்புக் கடன்களை வழங்கும் நிதி நிறுவனமாகும். இதற்கு சில அடிப்படைகள் காணப்படுகின்றன.

கடன் பெறும் நாட்டின் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் ஒரு முக்கியமான காரணியாகும். எனவே கடனைப் பெறும் அரசாங்கங்கள் நிதிரீதியில் ஒழுக்கம் மிக்கவையாக இருக்க வேண்டும் என்பதுடன், தேவையற்ற செலவுகளைக் குறைத்து வரி வசூலிப்புக்களை அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறது.

அதேநேரம், சர்வதே நாணய நிதியம் வழங்கும் இந்த நிதி ஒத்துழைப்பை பிணை எடுப்பு எனக் கூற முடியாது. தம்மால் வெறுக்கக் கூடிய தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளை அரசாங்கங்களே எடுக்க வைக்கும் நிதிநிர்வாகி என்ற வகிபாகமே இதன் மூலம் ஆற்றப்படுகிறது. எனினும், சர்வதேச நாணய நிதியம் வந்தவுடன் எமது அனைத்துப் பிரச்சினைகளும் மறைந்துவிடும் என்ற எண்ணப்பாடும் எம்மத்தியில் பொதுவாகக் காணப்படுகிறது.

ஆனால் அது அப்படி அல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் வருகையுடன் கடன் வரிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கு நீண்ட வரிசைகள் இல்லை. இருப்பினும், இந்த முன்னேற்றங்களால் அனைவரின் வாழ்க்கையும் மீட்கப்படவில்லை. இந்த நிலைமைகள் நாட்டில் தொடர்ந்தும் காணப்பட வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியின் அடுத்த கட்டங்களும் பெறப்பட்டாலே சாத்தியமாகும்.

இதற்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மாத்திரமன்றி சகல தரப்பினரதும் அர்ப்பணிப்பு முக்கியமானதாகும். அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வுக் குழுவினர் நாட்டின் வரி வருமானம் எதிர்பார்த்த மட்டத்தில் இல்லையென்றும், அரசாங்க நிறுவனங்களில் பதவி உயர்வு உள்ளிட்ட செயற்பாடுகளில் ஊழல் மோசடிக் காணப்படுவதுடன், திறமையைவிட சிரேஷ்டத்துவம் போன்ற விடயங்களே அதிகம் கவனத்தில் கொள்ளப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கு அரசாங்கம் புதிய சட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரிச் சட்டத்திலும் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன. அரசாங்கம் சட்ட ரீதியாக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில், அவற்றைத் துரிதப்படுத்தி செயற்படுத்துவதில் அரசாங்க அதிகாரிகளின் அர்ப்பணிப்பும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு இயங்குவதன் ஊடாகவே சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த தவணையையும் பெற்றுக்கொண்டு நாட்டை முன்னேற்றிச் செல்ல முடியும்.



## அரசாங்க அதிகாரிகளின் அர்ப்பணிப்பு, பொதுமக்களின் புரிந்துணர்வு இருந்தாலேயே அடுத்தகட்ட தவணைகளைப் பெற்றுக் கொண்டு நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து முற்றாக மீட்டெடுக்க முடியும்!



## இலங்கை வந்திருந்த IMF விசேட குழுவினர் மதிப்பாய்வை நடத்திவிட்டுச் சென்றுள்ள நிலையில், நிறைவேற்றுக் குழு விரைவில் இறுதித் தீர்மானம்!

---

# இஸ்ரேல்–பலஸ்தீன யுத்தம் உக்கிரமடைவதால் ஆட்டம் காணப் போகிறது உலக பொருளாதாரம்!

**இஸ்ரேல்– பலஸ்தீன யுத்தம் நாளுக்குநாள் உக்கிரமடைந்து வரும் நிலையில் சர்வேத பொருளாதாரம் மற்றும் இந்திய பொருளாதாரத்தின் மீதான பாதிப்பு குறித்த தகவல்கள், அறிக்கைகள் பேரதிர்ச்சிக்குரியதாக இருக்கின்றன.**

பொதுவாக யுத்த காலங்களில் சர்வதேச பொருளாதாரம் மிக மோசமான சீரழிவை எதிர்கொள்வது வழக்கம். அதுவும் கொரோனா எனும் புதிய வைரஸ் பாதிப்பு ஏற்படுத்திய பேரழிவு ஒட்டுமொத்தமாக உலக நாடுகளை முடக்கியதுடன், ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரத்தையும் நிர்மூலமாக்கியது. கொவிட் வைரஸ் மனிதர்களை மட்டும் காவு கொள்ளவில்லை. அத்தனை பொருளாதார தூண்களையும் துவம்சம் செய்துவிட்டுதான் ஓய்ந்தது.

கொரோனா காலப் பெருந்துயரத்தில் இருந்தும் பொருளாதாரப் பாதிப்புகளிலிருந்தும் உலகம் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. இந்த இயல்புநிலைக்கு உக்ரைன் மீதான ரஷ்யாவின் யுத்தம் பாதிப்பை ஏற்படுத்தியது.

மசகு எண்ணெய் விலையேற்றம் எனத் தொடங்கி உலகின் பொருளாதாரத்தில் மிகக் கொடூரமான பாதிப்புகளுடன் கோரத்தாண்டவமாடியது இந்த யுத்தம்.

உக்ரைன் மீதான யுத்தத்தின் போது மொஸ்கோ பங்கு சந்தை 9 சதவீத இழப்பை எதிர்கொண்டது. அப்படியானால் முதலீட்டாளர்களுக்கான இழப்பு எத்தகையதாக இருந்திருக்கும்? பொதுவாக யுத்த காலங்களில் உலக நாடுகளின் பங்குச் சந்தைகள் பெரும் வீழ்ச்சியை எதிர்கொள்ளத்தான் செய்கின்றன.

தற்போதைய இஸ்ரேல் பாலஸ்தீன யுத்தமும் மிகப்பெரும் கவலைகளை சர்வதேசத்தின் மீது 'ஏவுகணைகளை போல வீசிக் கொண்டிருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்னர் 1973 இல் இதேபோல இஸ்ரேல் பாலஸ்தீனம் நிலைமை இருந்தது. அப்போதுதான் உலகம் முதன் முதலாக மசகு எண்ணெய் விலை உயர்வை அனுபவித்தது.

ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் அதே போன்ற ஒரு யுத்த சூழ்நிலையில் உலகம் இப்போது அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போதைய யுத்தத்தால் மசகு எண்ணெய் உற்பத்தி நாடுகள் அதன் விலையை தாறுமாறாக உயர்த்தினால் சர்வதேச நாடுகளின் பொருளாதாரம் திக்குமுக்காடி மூச்சுவிட முடியாத நிலைமைக்குப் போகும் என்று உலக பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றார்கள்.

இது ஒருபுறம் இருக்க இந்தியா எதிர்கொள்ளப் போகும் சவால்களை நினைக்கவே பேரச்சமாக இருக்கிறது என்று இந்திய பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர். ஏனெனில் யுத்தத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் இஸ்ரேலுடன் இந்திய வர்த்தக உறவு அத்தகைய வலிமையானது.

இஸ்ரேலின் ஆசியா வர்த்தக பங்காளர்களில் இந்தியா 3 ஆவது நாடு ஆகும். உலக அளவில் இஸ்ரேலின் வர்த்தக உறவில் இந்தியாவுக்கு 10 ஆவது இடம் உள்ளது.

ரஷ்யாவுக்கு அடுத்ததாக இஸ்ரேலிடம் இருந்துதான் பெருமளவு பாதுகாப்பு தளவாடங்களை இந்திய நாடு கொள்முதல் செய்கிறது. சுமார் ரூ74,000 கோடி ரூபாவுக்கு இந்த வர்த்தக உறவு உள்ளது. இப்படியே யுத்தம் நீடித்தால் இஸ்ரேலிடம் இருந்து சற்று விலகி ரஷ்யாவிடம்தான் பாதுகாப்பு தளவாடங்களுக்கு இந்தியா போக வேண்டும். ரஷ்யாவும் இந்தியாவுக்கு வாரி வழங்கும்.. ஆனால் மிக மிக அதிகமான விலை கொடுத்தாக வேண்டும் என்கின்ற போது இந்தியாவின் பொருளாதார நிலைமை என்னவாகும் என்பது தான் முக்கிய வினா!

உலோகங்கள், இலத்திரனியல் கருவிகள், உரங்கள், இயந்திரங்கள், பம்புகள், மருத்துவ உபகரணங்கள் என இஸ்ரேல் மிக அதிகளவு பொருட்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்கிறது. அத்தியாவசிய தேவைகளுக்கான உப்பு, சீமெந்து என்றெல்லாம் இஸ்ரேல்தான் இந்தியாவுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவுக்கான இஸ்ரேலின் ஏற்றுமதி சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் எனில் வரப்போகின்ற பாதிப்பை மதிப்பீடு செய்து பார்க்க வேண்டும். இந்தியாவின் இழப்பு கவலைப்படும்படியாகவே இருக்கப் போகின்றது.

இவ்வாறே இஸ்ரேல் பாலஸ்தீன யுத்தம் தொடர்ந்தால் இந்தியாவின் வர்த்தக இழப்பு அளவு ரூபா 25,000 கோடியாக இருக்கக் கூடும் என்பது பொருளாதார நிபுணர்களின் கணிப்பாகும். இதனால் சில பொருட்களின் விலை வரலாறு காணாத உயர்வைச் சந்திக்கலாமென அஞ்சப்படுகின்றது.



நிலைமை இவ்வாறிருக்கையில், இஸ்ரேல் ஹமாஸ் இடையே போர் தீவிரமடைந்துள்ள நிலையில், முன்னணி ஐடி நிறுவனங்கள் கதிகலங்கிப் போய்க் கிடக்கின்றன. இந்நிலையில் இஸ்ரேல் போர் தீவிரம் அடைந்தால் அங்குள்ள ஐடி நிறுவனங்கள், இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளில் தங்கள் கிளைகளை திறக்க வாய்ப்பு உள்ளதாக தொழில்நுட்ப வல்லுநர்கள் சொல்கிறார்கள்

அமெரிக்கா பெரியப்பா என்றால், இங்கிலாந்து சித்தப்பா, ஜெர்மன் அத்தை, இத்தாலி மாமா என்கின்ற அளவுக்கு மேற்கத்தேய நாடுகளின் பின்னிப்பிணைந்த உறவில் இருக்கும் நாடுதான் இஸ்ரேல். மேற்கத்தேய நாடுகளில் எப்படி ஐடி நிறுவனங்கள் இயங்கி வருகின்றனவோ அதுபோல் இஸ்ரேலிலும் ஐடி நிறுவனங்கள் அதிக அளவில் இருக்கின்றன.

உலகம் முழுவதும் உள்ள ஐடி துறைகள் கணிசமாக இஸ்ரேலில் இயங்கி வருகின்றன. மென்பொருள் நிறுவனங்கள், சைபர் செக்யூரிட்டி நிறுவனங்கள் ஏராளமாக இஸ்ரேலில் இருப்பதால், இந்தியாவின் பல முன்னணி ஐடி நிறுவனங்கள் தேடிச்சென்று இஸ்ரேலில் கடைவிரித்துள்ளன.

இந்தியாவின் ஐடி நிறுவனங்களான டி.சி.எஸ்,விப்ரோ, டெக் மஹிந்திரா, இன்போசிஸ், எச்.சி.எல் உள்ளிட்டவை இஸ்ரேலில் உள்ளன.

அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகளின் பல்வேறு முன்னணி ஐடி நிறுவனங்களான கூகுள், மைக்ரோசொப்ற், இன்டெல் உட்பட 500 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இலட்சக்கணக்கான ஊழியர்களுடன் அங்கு இயங்கி வருகின்றன.

இஸ்ரேல் உளவு சொப்ட்வெயார்கள் உலக அளவில் பிரபலமானவை ஆகும். உலகின் பல்வேறு நாடுகளுமே இஸ்ரேலின் உளவு மென்பொருள்களை பயன்படுத்துகின்றன. தற்போது இஸ்ரேல் ஹமாஸ் இடையே போரின் கோரத்தாண்டவம் காரணமாக ஐடி நிறுவனங்கள் கலக்கத்தில் இருக்கின்றன. உலகம் முழுவதும் உள்ள முன்னணி ஐடி நிறுவனங்கள் இஸ்ரேலில் இயங்கி வரும் நிலையில், அவை நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

இந்நிலையில் இஸ்ரேல் ஹமாஸ் இடையே நடந்து வரும் போர், தற்போது உள்ள நிலைமையை தலைகீழாக மாற்றிவிடும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான இந்தப் போர் பொருளாதார ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் தொழில்நுட்பத் துறைக்கு நிச்சயமற்ற தன்மை ஏற்படும் என்றும் அஞ்சப்படுகின்றது.

ஏற்கனவே உக்ரைன் ரஷ்யா போரால் பல ஐடி நிறுவனங்கள் பெரும் இன்னல்களைச் சந்தித்தன. இதனால் வேலைஇழப்பு போன்ற மோசமான நிலையை ஐடி ஊழியர்கள் எதிர்கொண்டு வரும் நிலையில், இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான போர் இன்னும் நிலைமையை மோசமாக்கும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனிடையே இஸ்ரேல்ஹமாஸ் இடையே போர் தீவிரம் அடைந்தால், இஸ்ரேலில் அலுவலகங்களைக் கொண்டுள்ள உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்கள், வணிக நடவடிக்கையை இந்தியா உட்பட பிற இடங்களுக்கு மாற்றக்கூடும் என்று தொழில்துறை வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

எஸ்.சாரங்கன்...




## உலகநாடுகளில் பங்குச்சந்தைகள் திடீர் சரிவு!

## இஸ்ரேலில் இயங்கி வருகின்ற இந்திய ஐடி நிறுவனங்களின் கதி என்ன? ரஷ்யாவிடமிருந்து ஆயுதங்களை வாங்குவதே இந்தியாவுக்கு மாற்றுவழி!




ஆன்மிக பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அகில இந்திய காங்கிரஸின் தமிழ்நாட்டு மாநில செயலாளர் செந்தில் பாண்டியன் தினகரன் காரியாலயத்துக்கு வருகை தந்தபோது அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் அளிக்கப்பட்டது. அவருடன் இலங்கையின் மூத்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் எச். எச். விக்ரமசிங்கவும் வருகை தந்தார்.ஆன்மிக







தெஹிவளை நெடுமால் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு மூர்த்தி தேவஸ்தான தேர் மஹோற்சவ பிரதமகுரு சோ. சந்திரகாந்த குருக்கள் தலைமையில் நடைபெற்றது. பெருமான் புகழ்பெற்ற தவில், நாதஸ்வர கலைஞர்களின் இசையுடன் பக்தர்கள சூழ உள்வீதி வலம் வருவதைக் காணலாம்.



# கலாபூஷண விருதுக்கு சொந்தக்காரரான நமது இதழியலாளர்

நம் நாட்டில் உள்ள கலைஞர்களுள் 200 பேரை தெரிவு செய்து அவர்களுக்கு கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கும் பெரு விழா கடந்த பதினோராம் திகதி (11 .10 .2023 ) மகராகமையிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கொழும்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர் எம்.கே.எம்.அஸ்வரும் கௌரவிக்கப்பட்டார். சிரேஷ்ட பத்திரிகையாளரான இவர் தினகரன் பத்திரிகையோடு 45 ஆண்டுகளுக்கு மேல் தொடர்புடையவர். சிறிய சிறிய ஆக்கங்களை எழுதி தினகரனில் வளர்ந்த பத்திரிகையாளரான மொறட்டுவை, எகொட உயனை (மோதர) என்ற இடத்தில் வசிக்கும் எம்.கே.எம்.அஸ்வர் என்பவரைப் பற்றி நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்:

களுத்துறை மாவட்டத்தில் பாணந்துறை தொகுதியில் ஹேனமுல்லை என்ற இடத்தைச் சேர்ந்த இவர் எழுத்துத் துறையில் சிரேஷ்ட ஊடகவியலாளராக தடம் பதித்துள்ளார், இன்று ஒரு பத்திரிகையாளராக, வானொலிக் கலைஞராக, நாடக நடிகராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும், மேடை அறிவிப்பாளராகவும் பரிணாமம் பெற்றுள்ளார்.

இவரது திறமையையும், ஆற்றலையும் கண்ட முஸ்லிம் சமய கலாசார திணைக்



களமும், கலாசார அமைச்சும் இவருக்கு கலாபூஷணம் எனும் அரசவிருது வழங்கி கௌரவித்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

நம்நாட்டில் பத்திரிகைத்துறையில் இருந்த ஜாம்பவான்களில் ஒருவரான முன்னாள் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அமரர் இ. சிவகுரு நாதன், தினகரனின் முன்னாள் உதவி ஆசிரியரும், நவமணி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான என். எம். அமீன் ஆகியோரின் வழிகாட்டலில் பாடசாலையில் கற்கும் காலத்திலேயே ஊடகத்துறையில் அதிக ஆர்வம் கொண்டு செயற்பட்டார். இவர் அன்று சிறு,சிறு ஆக்கங்களை எழுதி அவற்றை பத்திரிகைகளுக்கு அனுப்பி அவை பிரசுரம் ஆனது கண்டு இத்துறையிலேயே தன்னை ஈடுபடுத்தினார்.

நம்நாட்டில் பத்திரிகைத்துறை ஜாம்பவான்களில் ஒருவரான முன்னாள் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அமரர் இ. சிவகுரு நாதன், முன்னாள் தினகரனின் உதவி ஆசிரியரும், நவமணி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான என்.எம். அமீன் ஆகியோரின் வழிகாட்டலில் பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியில் கல்விகற்று, தனது ஆர்வத்தை மேலும் வளர்க்க கொழும்பு பல்கலைக் கழகத்தில் ஊடகத்துறையை நிறைவு செய்தார். தான் கல்விகற்ற கல்லூரி தொடர்பான செய்திகள் வெகுஜனத்தொடர்பு சாதனங்களில் வெளிவராததால் கவலை கொண்ட இவர் தனது கல்லூரி தொடர்பான செய்திகளை பத்திரிகை, வானொலிக்கு எழுதி தன்னை இத்துறையில் ஈடுபடுத்தி பயிற்சி பெற்றதுடன் பயனும் கண்டார்.

பாணந்துறை ஜீலானின் மடியில் வளர்ந்த பத்திரிகையாளர் அஸ்வர் தான் படித்த கல்லூரிக்காகச் செய்த இப்பணி இவரை ஒரு செய்தியாளராகவே பிரகாசிக்கச் செய்தது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வானவில், செந்தூரம், விடிவெள்ளி, தினபதி, சுடரொளி, நவமணி, அல்ஹஸனாத், எழுச்சிக் குரல், உதயம், ஜும்மா போன்ற தமிழ் பத்திரிகைகளிலும் தினமின, ஜனதா, கிரீடா போன்ற சகோதர மொழிப் பத்திரிகைகளிலும் அதேபோல் சண்டே ஒப்ஸோவர், டெய்லி நியூஸ், போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளிலும் இவரது ஆக்கங்கள், செய்திகள் என்பன வெளிவந்துள்ளன.

பாணந்துறை ஹேனமுல்லையைச் சேர்ந்த மர்ஹூம்களான ஐ.எம்.எம். காலித், சித்தி ஆமினா ஆகியோரின் ஏக (சிரேஷ்ட) புதல்வரான அஸ்வருக்கு இரண்டு தங்கைகள், க.பொ.த. பரீட்சையை நிறைவு செய்ததின் பின் படிப்பை தொடர முடியாதநிலைக்கு இவர் ஆளானார். காரணம் இவரது தந்தை நோயால் பிடிக்கப்பட்டது தான். ஆகவே குடும்பச்சுமை இவரின் கைக்கு மாறியது.

1970 முதல் 1977ஆம் ஆண்டுகளுக்கிடையில் நமது நாட்டிலே இறக்குமதிகள் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்ட காலம். சைக்கிள் (துவிச்சக்கர) இறக்குமதிக்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. ஆகவே முழு நாட்டுக்கும் தேவையான சைக்கிள்கள் பாணந்துறையில் தான் உற்பத்திசெய்யப்பட்டன. இதனால் தொழிற்சாலைகளில் அதிக வேலை வாய்ப்புகள் காணப்பட்டன. பாடசாலை விட்டு பின்னேர வேலைக்கு சென்று குடும்பச் செலவை ஈடு செய்தார். காலம் செல்லச் செல்ல முழுநேரமும் தொழில் செய்யவேண்டிய நிலைக்கு அஸ்வர் ஆளானார். இதன் காரணமாக இவரால் படிப்பை தொடர முடியாதநிலை ஏற்பட்டது. எது எப்படி இருந்தாலும் தான் நேசித்த ஊடகத்துறையை அவர் கைவிடவில்லை.

தினகரனுக்கென்று செய்திகளை மாத்திரம் எழுதிவந்த அஸ்வர் அன்று கட்டுரை ஆசிரியராக இருந்த அருள் சத்தியநாதனின் வழிகாட்டலில் தினகரன் வாரமஞ்சரிக்கு நாட்டில் நடைபெறும் உண்மைச் சம்பவங்களை எழுத ஆரம்பித்தார அதன் மூலம் பல பரபரப்பான ஆக்கங்களை வாராந்தம் எழுதி வாசகர்களின் வரவேற்பை பெற்றார்.

தினகரனில் இன்றும் வெளிவரும் "



பாடசாலைகள் அறிமுகம்" எனும் பகுதி அஸ்வரால் தான் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதய பிரதம ஆசிரியர் தே,செந்தில்வேலவர் அன்று ஆசிரியராக இருந்த காலத்தில் அவரது வழிகாட்டலில் தான் இப்பகுதி ஆரம்பமானது.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நமது வளங்கள் மண் வாசனை நிகழ்ச்சியை அஸ்வரின் ஆசான்களில் ஒருவரான மொயின் சமீனுடன் இணைந்து தொடர்ச்சியாக 16 ஆண்டுகள் நடாத்தினார். இதில் தான் படித்த கல்லூரி தான் முதலில் வெளிவர வேண்டும் என்று பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியை அறிமுகம் செய்தார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபக (செயற்குழு) உறுப்பினரான இவர் பாணந்துறை, மொறட்டுவை, பண்டாரகமை பிராந்தியங்களில் இருந்து தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலன்கருதி கடந்த 17 ஆண்டுகளாக மாதிரிப் பரீட்சைகள், கருத்தரங்குகளை நடத்திவந்துள்ளார். அத்தோடு பாணந்துறை சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்தை ஸ்தாபித்து அதன் செயலாளராக இன்றும் சமூகப் பணி செய்து வருகிறார். அவருடைய சமூகப் பணி தொடர வாழ்த்துகின்றோம்.!

# 'அலி ஜின்னா- ஆசியாவின் கம்பீரக் குரல்' சிங்கள மொழி நூல் வெளியீடு

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் 'தினமின' தினசரியின் சிரேஷ்ட ஊடகவியலாளரான சந்தன விஜேகோன் 'அலி ஜின்னா ஆசியாவின் கம்பீரக் குரல்' என்ற பெயரில் சிங்கள மொழியில் நூலொன்றை எழுதி வெளியிட்டுள்ளார். இது நூலாசிரியரின் ஒன்பதாவது நூலாகும்.

பாகிஸ்தானின் தந்தையாக விளங்கும் அலி ஜின்னாவின் வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கியுள்ள இந்நூல், 'பாகிஸ்தானின் ஸ்தாபகர் அலி ஜின்னா' என்ற பெயரில் 2019 இல் நூலாசிரியரால் எழுதி வெளியிட்ட நூலின் விரிவாக்கமாகும். இதனை நூலாசிரியரே தம் அறிமுகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

128 பக்கங்களில் அமைந்துள்ள இந்நூல் ஜின்னாவின் படத்தை முகப்பு அட்டைப் படமாகத் தாங்கி வெளியாகியுள்ளது. இந்நூலிக்கு ஒய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கலாநிதி பிரதாப் திலக்கரத்ன முன்னுரை வழங்கியுள்ளார். முன்னுரையில் அவர் ஜின்னா குறித்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'அலி ஜின்னா பாகிஸ்தானின் ஸ்தாபகர் மாத்திரமல்லாமல் பல இனத்தவருக்கு தன்னாட்சி உரிமையையும் தனித்துவமும் எதிர்காலமும் குறித்த உணர்வைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பைப் விழங்கிய தூரநோக்கு மிக்க தலைவராவார். அதனால் அவரை பாகிஸ்தான் பிரஜைகள் குவயித் ஐ அஸாம் என (சிரேஷ்ட தலைவர்) என அழைக்கின்றனர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

கராச்சி நகரில் செல்வச்செழிப்பு மிக்க குடும்பத்தில் 7 சகோதர, சகோதரிகளுடன் பிறந்து வளர்ந்த இவர், 1893 இல் கப்பல் துறை வர்த்தகத்தின் நிமித்தம் இலண்டனுக்கு பயணமானார். அங்கு லிங்கனின் சட்ட அமைப்பில் இணைந்து சட்டத்துறையில் கற்று பரிஸ்டர் பட்டம் பெற்றார். இதனூடாக மிக இளம் வயதில் பாரிஸ்டர் பட்டம் பெற்ற இந்தியரானார்.

1896இல் தாயகம் திரும்பிய அவர் பம்பாய் சட்டத்தரணிகள் சங்கத்தில் இணைந்து சட்டத் தொழிலை ஆரம்பித்தார். அன்றைய பம்பாய் நகரில் இருந்த ஒரே முஸ்லிம் பாரிஸ்டர் சட்டத்தரணியாகவும் விளங்கினார் ஜின்னா. அத்தோடு 1906இல் இந்திய தேசிய காங்கிரஸிலும் இணைந்தார்.

அத்தோடு முஸ்லிம் மக்களின் தனித்துவ அடையாளத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஜின்னா, 1913இல் இந்திய முஸ்லிம் காங்கிரஸில் அங்கத்தவரானார்' என்றும் நூலாசிரியர் எழுதியுள்ள அறிமுகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு உட்பட்டிருந்த இந்தியாவில் இந்துக்கள் பெரும்பான்மையினராகவும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராகவும் இருந்தனர். இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஒற்றுமையையும் சமத்துவத்துவத்தையும் ஏற்படுத்திடவும் ஐக்கியப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பவும் உழைத்த ஜின்னா, அன்றைய இந்தியாவின் சுதந்திர போராட்ட முன்னோடி மகாத்மா காந்தியுடன் இணைந்து செயற்பட்டார். ஆனால் மகாத்மா காந்தியின்




சிவில் சட்ட மீறல் இயக்கத்துக்கு தமது அதிருப்தியை வெளிப்படுத்தவும் அவர் தவறவில்லை எனக் குறிப்பிட்டுள்ள நூலாசிரியர், இந்திய காங்கிரஸ் சங்கத்தில் இருந்து அவர் 1930 இல் விலகினார். அதனைத் தொடர்ந்து இந்திய முஸ்லிம் லீக்கை ஆரம்பித்த ஜின்னா, அதன் ஊடாக முஸ்லிம்களுக்கான தனி நாடொன்றை பெற்றுக்கொள்வதற்கான ஜனநாயக ரீதியிலான போராட்டத்தைத் தொடங்கினார். அதன் பிரதிபலனாக 1947இல் இந்தியாவில் உருது பேசும் மக்களுக்காக பிரித்தானியாவினால் பாகிஸ்தான் உருவாக்கப்பட்டது. அதன் முதலாவது தேசாதிபதியானார் ஜின்னா. அதன் மூலம் பாகிஸ்தானின் தந்தையாகவும் ஆசியாவின் கம்பீரக் குரலாகவும் இவர் அறியப்படுகின்றார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார் நூலாசிரியர். சுசர பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள இந்நூல் பத்து அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. ஜின்னாவின் பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கியுள்ள இந்நூல் இலகுமொழி நடையில் எழுதப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாலி வளாக வெகுஜன ஊடக பீடத்தின் விரிவுரையாளர் பிரதீபா திஸாநாயக்கா இந்நூலில் நூலாசிரியரை அறிமுகப்படுத்தும் பிற்குறிப்பை எழுதியுள்ளார். இந்நூலுக்காக பல நூல்களை நூலாசிரியர் உசாத்துணை நூல்களாகப் பயன்படுத்தியுள்ளார். அதேநேரம் நூலாசிரியரான சந்தன விஜேகோன், இலங்கை பத்திரிகை சபையின் சட்டமும் அதன் வகிபாகமும், பத்திரிகையின் கதை, வெகுஜன ஊடகமும் சமூக விஞ்ஞானமும். லாஹூர் கோட்டை (மொழி பெயர்ப்பு), எழில்மிகு கந்தாரா, ஹிரோஷிமாவின் கண்ணீர், பாகிஸ்தானின் ஸ்தாபகர் அலி ஜின்னா அடங்கலான 09 நூல்களின் சொந்தக்காரர் ஆவார்.

*மர்லின் மரிக்கார்*

# கொழும்பில் இடம்பெறவுள்ள இலங்கை அச்சக சங்கத்தின் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழா




*அஷ்ரப் ஏ சமத்*

இலங்கை அச்சக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையில் கொழும்பில் இடம்பெறவுள்ளது. இதன்போது அச்சிடும் துறையில் சிறந்த சாதனைகள் கௌரவிக்கப்பட உள்ளதுடன் தொழில்துறையில் கலைத்திறன் மற்றும் தொழில்நுட்ப திறமையை வெளிப்படுத்தியவர்களுக்கு சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளதாக இலங்கை அச்சகர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எம்.செந்தில்நாதன் தெரிவித்தார். இது தொடர்பிலான தெளிவுப்படுத்தும் ஊடகவியலாளர் மாநாடு அண்மையில் (12) கொழும்பில் இடம்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 1956ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கை அச்சக சங்கம் இலங்கையில் அச்சுத்துறையின் நலன்களை தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறது. அச்சுத் தொழில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இலங்கை அச்சக சங்கம் அரசாங்கத்துடன் இணைந்து பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இலங்கை அச்சுத்துறை சார்ந்த கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழாவும் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 26 திகதி முதல் 28 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தினமும் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரையில் அதிநவீன தொழில்நுட்பங்களின் பிரம்மாண்டமான நிகழ்வாக இது இடம்பெறவுள்ளது. இந்த கண்காட்சியின் ஆரம்ப விழாவில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த கலந்துகொள்ளவுள்ளார். இந்த வர்த்தக கண்காட்சியில் 44 உள்ளூர் தொழில் வல்லுனர்கள் மற்றும் 6 சர்வதேச வல்லுநர்களும் பங்கேற்கின்றனர்.

இதேவேளை தேசிய அச்சுத்துறை விருதுகளுக்கு நாடளாவிய ரீதியில் ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்க பெற்றிருந்தன. அதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட திறமையானவர்களுக்கு இம்மாதம் 27ஆம் திகதி மாலை கொழும்பில் அமைந்துள்ள மெரினா பீச் ஹோட்டலில் விருதுகள் வழங்கப்படவுள்ளன. மேலும் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்துகொள்ள உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும் என்றார்



கொழும்பில் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருது விழாவில் நாடறிந்த கவிஞர் ராஜகவி ராகில் கலாபூசணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


## உயர் பணவீக்க காலப்பகுதிகளில் தனிப்பட்ட கடன்களை சமாளித்தல்: யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கும் Good Cents இன் நிபுணர் கருத்துகள்

யூனியன் அஷ்யூரன்ஸின் புழுழன ஊநவெள இனால் முன்னெடுக்கப்படும் மற்றுமொரு கலந்துரையாடலில், இலங்கையர்களுக்கு தமது கனவுகளை எய்துவதற்கு உதவும் வகையில் நிதிசார் அறிவை மேம்படுத்த முன்வந்திருந்தது. இலங்கையில் மில்லியன் கணக்கான தனிநபர்கள் மற்றும் குடும்பங்களை பாதித்த சவாலுக்கு நாம் முகங்கொடுத்திருந்தோம் – உயர் பணவீக்கம் மற்றும் தனிப்பட்ட கடனில் அதன் தாக்கம் என்பது அதுவாகும். இந்தக் கலந்துரையாடலில், பொது மக்களுக்கு மூலோபாயங்கள், அறிவு மற்றும் செயற்பாட்டு படிமுறைகள் போன்றவற்றை பெற்றுக் கொடுத்து, உயர் பணவீக்கம் நிலவும் காலப்பகுதிகளில் தனிப்பட்ட கடன் சுமையை தணித்தல் மற்றும் நிர்வகிப்பதற்கு உதவ யூனியன் அஷ்யூரன்ஸ் எதிர்பார்க்கின்றது. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் கடன் முகாமைத்துவ பிரிவின் உதவி உப தலைவர் லக்மால் விஜேவர்தனவுடன் இந்த உரையாடல் முன்னெடுக்கப்பட்டது.



லக்மல் விஜேவர்தன் மற்றும் சச்சினி குலரத்ன

**Q1: தனிப்பட்ட கடனில் பணவீக்கத்தின் தாக்கம் யாது மற்றும் உயர் பணவீக்கத்தினால் பாதிப்புறக்கூடிய ஏதேனும் கடன் வகைகள் உள்ளனவா?**

**A:** பணவீக்கம், எளிமையாக குறிப்பிடுவதானால், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்து, பயன்படுத்தக்கூடிய வருமானம் குறைவடைவது என குறிப்பிடலாம். தனிப்பட்ட கடன்கள் மீது பணவீக்கத்தின் தாக்கம் என்பது பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. கடன் வகை, அறவிடப்படும் வட்டி வீதங்கள், மீளச் செலுத்தும் தவணைகள் மற்றும் கடன் நிர்வாகத்துக்கு உங்களின் அர்ப்பணிப்பு போன்றன முக்கிய பங்காற்றுகின்றன. உதாரணமாக, அதிகரிக்கும் வட்டி வீதங்களிலிருந்து, நிலையான தவணைகள் அல்லது நிலையான வட்டி வீதங்களை கொண்ட கடன்கள் சாதகமாக தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும். எவ்வாறாயினும், கடன் அட்டைகள் மற்றும் மேலதிக பற்றுகள் போன்ற வசதிகள் பாதிப்பை ஏற்படுத்தலாம். குறிப்பாக, நீங்கள் உயர்ந்த நிலுவைகளை கொண்டிருந்தால் இந்த தாக்கத்தை உணரக்கூடியதாக இருக்கும். உயர் வட்டி வீதங்களில் புதுப்பிக்கப்படக்கூடிய கடன்களும் சவால்களை தோற்றுவிக்கும். பணவீக்க காலப்பகுதியில் கட்டமைக்கப்பட்ட மீளச் செலுத்தல்களை கொண்ட வசதிகள் செலுத்தப்பட வேண்டிய சூழ்நிலை எழுவதானது, உங்களின் நிதிச் சூழலில் மேலதிக அழுத்தத்தை தோற்றுவிக்கும்.

**Q2: கடனை தணிப்பது மற்றும் நிர்வகிப்பதில் நிதி ஒதுக்கீடு மற்றும் நிதிசார் ஒழுக்கம் என்பது எவ்வாறான நிலையை கொண்டிருக்கும்?**

**A:** கடனை வினைத்திறனான முறையில் நிர்வகிப்பதில் நிதி ஒதுக்கீடு மற்றும் நிதிசார் ஒழுக்கம் ஆகியன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காரணிகளாக அமைந்திருக்கும். முதலில் நீங்கள் உங்களின் வருமான மூலங்களை, அவற்றின் கிடைப்பனவு வேண்டிய காலங்கள் மற்றும் அவை கிடைக்கும் வாய்ப்புகள் பற்றி அறிந்திருக்க வேண்டும். உங்களின் அத்தியாவசிய செலவுகளை இனங்கண்டு அவற்றை உணவு, வாடகை, மருந்துகள் மற்றும் போக்குவரத்து போன்ற முன்னுரிமை அடிப்படையில் பட்டியலிடவும். பின்னர் மாதாந்த கடன் மீளச் செலுத்தல் கடப்பாடுகளான தவணைகள் மற்றும் கடன் அட்டை கொடுப்பனவுகள் போன்றவற்றை ஒதுக்கவும். உங்கள் கடன்கள் மீதான நிலையான அல்லது மாற்றமடையும் வட்டி வீதங்களை அறிந்திருப்பதனூடாக, உங்களின் மாதாந்த நிதிசார் அரப்பணிப்புகளில் மாற்றங்களை துல்லியமாக இனங்காண்பதற்கு உதவியாக அமைந்திருக்கும். இந்த பரிபூரண புரிந்துணர்வினூடாக, உங்களுக்கு திட்டமிடுவதற்கு, இலக்குகளை நிர்ணயிப்பதற்கு மற்றும் உங்களின் வரவு செலவுகளுக்கு அர்ப்பணிப்பாக திகழ்வதற்கு புரிந்துணர்வை கொண்டிருக்கவும், உங்களின் கடனை குறைக்கவும் உதவியாக அமைந்திருக்கும்.

GOOD CENTS by Union Assurance
இலங்கையர்கள் மத்தியில் நிதிசார் நலனை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்

**Q3: கடன்களை நிர்வகிப்பதற்கும் அவற்றை நீக்குவதற்கு திட்டங்களை உருவாக்கவும் தனிநபர்கள் மேற்கொள்ளக்கூடிய நடைமுறைச் சாத்தியமான படிமுறைகள் என்ன?**

**A:** கடனை வினைத்திறனான வகையில் குறைப்பதற்கு மற்றும் நிர்வகிப்பதற்கு, பின்வரும் படிமுறைகளை கவனத்தில் கொள்ளலாம்:

- **வரவு செலவுத் திட்டமொன்றை தயாரித்தல்:** தற்காலிகமாக குறைத்துக் கொள்ளக்கூடிய அல்லது நிறுத்தி வைக்கக்கூடிய அத்தியாவசியமற்ற அல்லது மேலதிக செலவுகளை இனங்காணல்.
- **கடன் இறுக்கம்:** உங்களின் ஒட்டுமொத்த கடன் சுமையை குறைப்பதற்கு உயர் வட்டி நிறைந்த கடன்களை குறைந்த வட்டி கொண்ட கடன் அல்லது நிதிசார் சாதனமாக மாற்றிக் கொள்ளக்கூடிய வழிமுறைகளை இனங்காணுங்கள்.
- **கடன் பெறல்களை குறைத்தல்:** நீங்கள் ஒழுக்கமற்றவராக இருந்தால், அளவுக்கதிகமான செலவுகளை தவிர்ப்பதற்கு, கடன் பெறல்களை தணிப்பது அல்லது இல்லாமல் செய்வதை கவனத்தில் கொள்ளவும்.
- **பெருமளவான செலவுகள் பற்றி மீளச் சிந்திக்கவும்:** வாகனங்கள் அல்லது வாழிட ஏற்பாடுகள் போன்ற சில செலவுகள் உங்களுக்கு அநாவசியமான நிதிசார் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றனவா என மதிப்பாய்வு செய்து அவற்றில் பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்துங்கள்.
- **தந்திரோபாய ரீதியில் சேமிப்புகளை பயன்படுத்தல்:** உங்களின் கடன்களை விட குறைவான வட்டியை உங்கள் சேமிப்புகள் பெற்றுத் தருகின்றனவாயின், உயர் வட்டி கடன்களை செலுத்தித் தீர்ப்பதற்கு அவற்றை பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தவும்.

பிரயோக ரீதியான இந்த படிமுறைகளை பின்பற்றுவதனூடாக, உங்கள் கடன்களை நிர்வகிப்பதற்கும் நிதிசார் உறுதித் தன்மையை பேணுவதற்கும் உதவியாக அமைந்திருக்கும்.

**Q4: கடன்களை நிர்வகிக்கையில் தனிநபர்கள் மேற்கொள்ளும் பாரிய தவறுகள் யாவை?**

**A:** கடன்களை நிர்வகிக்கையில் தனிநபர்கள் மேற்கொள்ளும் சில பொதுவான தவறுகளில் பின்வருவன அடங்கியிருக்கும்:

- **போதியளவு விழிப்புணர்வு இன்மை:** நிதிசார் பிரச்சனையை தோற்றுவிக்கக்கூடிய நிலைக்கு தமது கடன் தம்மை கொண்டு செல்லக்கூடும் என்பது பற்றி அறிந்திராமை.
- **வரவு செலவு திட்டமிடலை புறக்கணித்தல்:** வரவு செலவு திட்டமிடலை உருவாக்கி அதனை பின்பற்ற தவறுகின்றமையால் அளவுக்கதிகமாக செலவிட வேண்டி ஏற்படலாம்.
- **அளவுக்கதிகமாக கடன் பெறல்:** அவசியத்தன்மையை மதிப்பாய்வு செய்யாமல், அத்தியாவசியமற்ற செயற்பாடுகளுக்காக புதிய கடன் பெறல் உங்களின் நிதிச் சூழ்நிலைகளை மோசமடையச் செய்யலாம்.
- **ஆகக்குறைந்த கொடுப்பனவுகள்:** ஆகக்குறைந்த கடன் மீளச் செலுத்தல்களை தாமதித்தல் அல்லது பூர்த்தி செய்யாமையால், மேலதிக கட்டணங்கள் மற்றும் கடன் சுமை அதிகரித்தல் போன்றன ஏற்படும்.

இந்த தவறுகளை தவிர்ப்பதற்கு விழிப்புணர்வு, நிதி ஒதுக்கீடு, பொறுப்பு வாய்ந்த கடன் பெறல் மற்றும் உரிய காலத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் போன்றன அத்தியாவசியமானவையாக அமைந்திருக்கும்.

**Q5: கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கான தமது பயணத்தில் தனிநபர்கள் எவ்வாறு ஊக்கத்துடன் கவனம் செலுத்த முடியும்?**

**A:** கடன் சுமையிலிருந்து விடுபடும் பயணத்தை முன்னெடுப்பதில் ஊக்கத்துடன் திகழ்வது முக்கியமானதாகும். கடன் மீளச் செலுத்தல்கள் தொடர்பான பதிவுகளை பேணல் பூர்த்தியை நோக்கி கொண்டு செல்ல உதவியாக அமைந்திருக்கும். நிதிசார் கலந்துரையாடல்களில் மற்றும் தீர்மானங்களில் உங்களின் குடும்பத்தாரை ஈடுபடுத்துவதனூடாக, அழுத்தங்களை குறைத்துக் கொள்ள உதவுவதுடன், கவனம் செலுத்தவும் உதவியாக இருக்கும். ஏன் நீங்கள் கடன் பெற்றீர்கள் மற்றும் உங்கள் இலக்குகளில் கடன் எவ்வாறு உதவியிருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.இவை உங்களை ஊக்குவிப்பதாக அமைந்திருக்கும். இறுதியாக, வரவு செலவுகளை திட்டமிடல் மற்றும் உங்கள் கடன் மீளச் செலுத்தும் கடப்பாடுகள் குறைவடைதல் போன்றன கவனம் செலுத்துவதற்கு உங்களுக்கு நிவாரணத்தையும் ஊக்குவிப்பையும் வழங்கும்.

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

# தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## வீடு விற்பனைக்கு

கல்கிஸை, இரத்மலானை border இல், Land உடன் மிகவும் அழகான வீடு. Mount Lavinia St Thomas College இல் இருந்து 2.7km தூரம். கோவில்கள் மற்றும் பள்ளிவாசல் கூப்பிடு தொலைவில். காலி வீதிக்கு மிகவும் அருகில், வங்கிகள் மற்றும் Super market நடை தூரத்தில். 11 Perch, upstairs , car park, solor connection உடன் புதிய வீடு உடன் விற்பனைக்கு. உரிமையாளர் கனடாவிற்கு குடும்பம் சகிதம் செல்வதால் விலை பேசி தீர்மானிக்க முடியும்.

தொடர்பு- 0701483348

GOODWIN

## களஞ்சியசாலைக்கான இடம் வாடகைக்கு

இல - 396 C , காலி வீதி வெள்ளவத்தை, கொழும்பு - 06 இல் 189 sqft இல்

களஞ்சியசாலைக்கான இடம் Parking வசதியுடன் (For Loding & Off Loding) வாடகைக்கு உண்டு.

மாத வாடகை 75,000/-

6 மாத முற்பணம் மற்றும்

50,000/- Refundable Deposit

Rizan -0770024173

GOODWIN

## LANDS FOR SALE KALAPALUWAWA

IDEAL FOR LUXURY HOUSES
VERY CALM IN A HIGHLY DECENT NEIGHBOURHOOD

Land: Front: 15 feet roadway to the entire land with turning circle available for vehicles
Land : Rear: 2 feet boundary wall separating the rear land
Land in extend of 26.1 perches with three blocked-out plans

0.4km to Kalapaluwawa road, 0.6km to Keells super, 1km to Ambagaha Junction and 3km to Rajagiriya Junction.

CLEAR DEED, VERY GOOD FUTURE INVESTMENT

PRICE: Rs. 2,600,000.00/ PER PERCH (PRICE NEGOTIABLE)

Contact No - 0761 796 758

GENUINE BUYERS ONLY, NO BROKERS NEEDED

GOODWIN

## கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு

FREE INSPECTION

## Solution to Get rid of Termites

Pre & Post Construction treatments For Termites

RODENT CONTROL To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean

COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES

Hotline: 074 031 5517

Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides

Leemaka Industries (Pvt)Ltd. (PV 120625)
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

## Automatic block machine



Little used but brand new condition
1800000
077 37 80 470


## APARTMENT BUILDING FOR SALE KALUBOWILA



HOSPITAL ROAD FACING
14.5 PERCH
FOR STOREY WITH SIX APARTMENTS BUILDING
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814

## Super Cleaners

5 Years Trusted Service



Sofas & Office | Furniture (Shampooing ) | Carpets (Shampooing) | Mattresses cleaning

House & office cleaning Rs. 3,500/- upwards

075 0 361 664 / 071 8 307 311 / 077 3 849 116

## MALABE Residential Land For Sale

2 Blocks of 7 Perch each side by side available for sale on Thunhadahena Road, off Kahanthota Road Malabe. The Lands are 1Km from the main Kaduwela Road and 2.5Km from the Malabe Town.

Contact: 0777550723

## POLHENGODA COLOMBO 05

23 P LAND
HOUSE FOR SALE
4BR/ 3BR/ AC/ HW/ SR CLOSE TO HOSPITAL & OTHER INTERNATIONAL SCHOOLS, SUPER MARKETS
0722 125 594

## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

## வத்தளையில் காணி விற்பனைக்கு.



40 பேர்ச்சஸ் உடன் விற்பனைக்கு

அழைக்கவும் - 0777 319 089

## LANDS FOR SALE



**KATUNAYAKE**
5 Minutes from Colombo-Negombo Road, 10 Mins. drive to KIA, Express Highway and Negombo Town. Excellent Commercial Property for a Factory/Warehouse/ Container Yard.
Rs. 500,000/- Per Perch 600P

**BOPITIYA / PAMUNUGAMA**
Near Jaela Exit point on Highway. Partly cultivated with Coconut trees
Rs. 175,000/- Per Perch 560P

**DIGANA**
Waterfront, facing Victoria Reservoir, near to the Victoria Golf Club
68.5P Bare Land , close proximity to the Victoria Golf Club
Rs. 300,000/- Per Perch 325P

PRICES ARE NEGOTIABLE
CONTACT - RATNA - 0776 260 203
LALITH - 0773 497 700

## TWO STOREY LUXURY HOUSE FOR SALE / RENT IN JA-ELA TOWN LIMIT

Two Storied, 42 Perches brand new house within 200m to the Ja-Ela town limit, 6800 sq.ft., 6 Bedrooms with Attached Bathrooms, 2 Large Living areas, 2 Pantries with a wet kitchen, 20ft Carpet Roads, Separate/ Driver's and storeroom with toilet. Land is occupied with various beautiful plants and fruit tree.



Property also has a facility of separate 38 Perches Common land for Car parking Purposes to the lane. Free from flooding. This property is suitable to use as a residence as well as for business purposes.

SUITABLE FOR FOREIGNERS TOO

85 Million

PLEASE CONTACT FOR MORE DETAILS
0777 396 960 (Anthony) 0767 868 749

## KECT



IMPORTED GLASS BOTTLES, LUG CAPS, CROWN CORKS & ALUMINIUM MILK CANS

KECT IMPEX (PVT) LTD

400ml 20L 40L

HEAVY DISCOUNT FOR BULK PURCHASE
THIS DISCOUNT IS APPLICABLE UNTILL STOCK LASTS
AGENTS/BROKERS ALSO CAN CONTACT
Hotline +94 705 993 113 / +94 704 323 558
CLEARANCE SALE

## EXCLUSIVE MODEL UNBEATABLE PRICE 40% OFF




32" SMART LED TV Rs.67,500/-UP
43" 4K SMART TV Rs.154,999/-UP
55" 4K SMART TV Rs.209,999/-UP
65" 4K SMART TV Rs.349,999/-UP
75" 4K SMART TV Rs.574,999/-
85" 4K SMART Rs.9,99,000/-UP

55" QLED SMART TV Rs.267,500/-UP
65" QLED SMART TV Rs.387,500/-UP
75" QLED SMART TV Rs.697,500/-UP
85" QLED SMART TV Rs.11,49,999/-UP

MZ TRADERS.LK (PVT) LTD

FOR MORE DETAILS:mztraders.lk

138 PHILIP GUNAWARDENA MAWATHA, COLOMBO - 4

0770 302 080
0112 584 854

## தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

## போட்டோ குறும் விளம்பரம்



2003 Nissan Premira - Automatic, Excellent luxury car, Finance 72x47, To hand Rs. 1,550,000/-, running 100%, Interior & exterior excellent condition, 175,000km 0775013550
kus-1

Toyota Land Cruiser V8 – 2007, 2008, Petrol, 190,000km, 1st owner, facelift, 298/- 0766814192
kus-2

DON'T TXT & DRIVE

Nissan Sunny FB 14 – GK-xxxx, 1998/ 2001, A/C, Power steering, Auto, Air Bag, Remote center lock, Engine, Gear boxrunning in good condition (100%), Full Option. 23/50/- 0776416349
kus-3

Bajaj Quit – 2018, GAA-xxxx, 1st owner, Company used, Rs. 950,000/- 0777771465
kus-4

DON'T TXT & DRIVE

Toyota KDH TRH 200v – 2017, Engine capacity 1990cc, Petrol, EFI, Auto, Tiptronic transmission, Silver color, 12 air bags, milage 47790km, Rs. 18,000,000/- (Negotiable) 0771979992
kus-5

## Looking for Your Life Partner..,

Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

Pay online and save your precious time
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch

E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

ஒக்டோபர் 14, 2023

# உலக கட்டளைகள் தினம்

## சிறந்த உலகுக்கான பகிரப்பட்ட பார்வை

### SDC- 3 அனைவருக்கும் அணுகக்கூடிய சிறந்த சுகாதார சேவை



## சர்வதேச கட்டளைகளுக்கு இணங்குவது முக்கியமானது

இலங்கையின் சுபீட்சமான எதிர்காலத்திற்காக அபிவிருத்தி பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் வேளையில், உலக கட்டளைகள் தினத்துடன் இணைந்துகொள்ள கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியதாகும். சர்வதேச கட்டளைகளுக்கு இணங்குவதற்கான தினமொன்று இருப்பதானது, எமது தேசிய பொருளாதாரம் மற்றும் அதன் நிலையான முன்னேற்றத்திற்கான பாதையை வடிவமைப்பதற்கான அமைப்பு முறையின் வகிபாகம் தொடர்பில் சிந்திப்பதற்கு வாய்ப்பளிக்கிறது.

உலக கட்டளைகள் தினம், எல்லைகள் மற்றும் தொழில்களை இணைப்பதற்கான உலகளாவிய அர்பணிப்பை வெளிக்காட்டுகிறது. பல்வேறுபட்ட உற்பத்திகள் மற்றும் சேவைப் பாதுகாப்பு, தரம், உள்ளக செயன்முறைகளை உறுதிப்படுத்தும் போது சர்வதேச தரப்படுத்தலின் முக்கியத்துவம் வெளிப்படும். எவ்வாறாயினும் இந்த கொண்டாட்டத்திற்கு அப்பால் சென்று, மூன்றாவது நிலையான அபிவிருத்தி இலக்கான (SDG 3)இனை அடைந்துகொள்வதற்கும், எமது தேசிய பொருளாதாரத்தின் ஊடாக நாட்டிற்கு ஆரோக்கியமான மற்றும் சுபீட்சம் நிறைந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்குமான பொறுப்பு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தை சார்ந்துள்ளது.

நாட்டுக்குள் சர்வதேச தரங்களை ஊக்குவிக்கும் விசேட அமைப்பாக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தை சுட்டிக்காட்டலாம். தரம், பாதுகாப்பு மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்தல் போன்ற இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பின்வாங்காத முயற்சிகள், உள்நாட்டு உற்பத்திகள் மற்றும் சேவைகளின் தரத்தை அதிகரிப்பதற்காக மாத்திரமின்றி, "தரத்தின் பாதுகாவலர்" என்ற வகையில் உலகச் சந்தைக்குள் இலங்கையை கேந்திர நிலையமாக அடையாளப்படுத்தியுள்ளது.

மூன்றாவது நிலையான அபிவிருத்தி இலக்கின் ஊடாக ஆரோக்கியமான வாழ்வு மற்றும் அனைவரினதும் நல்வாழ்வை உறுதிப்படுத்த எதிர்பார்க்கிறோம். அது மாத்திரமின்றி பொருளாதார முன்னேற்றத்தின் முக்கிய சாதக காரணியாகவும் அதனைக் காண்கிறோம். ஆரோக்கியமான சமூகம் என்பது எமது பொருளாதார முன்னேற்றத்தின் உயிர்நாடியாக விளங்கும் தொழிற்படையினரை குறிக்கிறது. அதற்கு மேலதிகமாக சர்வதேச வரையறைகள், வர்த்தகச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதுடன், உலக சந்தைக்குள் உற்பத்திகளுக்கு இடையிலான போட்டித்தன்மையையும் உருவாக்கும்.

உள்நாட்டு பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் அதேநேரம், சர்வதேச வர்த்தக தொடர்புகளையும் முன்னோக்கி கொண்டுச் செல்வதால், எமது உற்பத்திகள் சர்வதேச தரத்திற்கு அமைவானவை என்பதை சூட்சுமமான முறையில் வெளிக்காட்ட வேண்டிய பொறுப்பு எமது உற்பத்தி துறைகளைச் சார்ந்துள்ளது.

உலக கட்டளைகள் தினத்தை கொண்டாடும் போது, மூன்றாவது நிலையான அபிவிருத்தி இலக்கான (SDG 3) இனை அடைந்துகொள்ள சர்வதேச தரப்படுத்தல்களின் முக்கியமான பங்களிப்பு மற்றும் அதனால் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம் குறித்து நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்த தருணத்தில் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் கூட்டு முயற்சிகளை பாராட்டும் அதேநேரம், இலங்கையின் உற்பத்திகள் மற்றும் கட்டமைப்புக்களின் நிலையான தரத்தை பூர்த்தி செய்தல் மற்றும் உறுதிப்படுத்தல் அரச மற்றும் தனியார் உள்ளிட்ட இரு துறைசார் நிறுவனங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கும்போது, தொடர்ச்சியானதும் சிறந்ததுமான தரத்தை எதிர்பார்க்கின்றோம்.

**ரணில் விக்கிரமசிங்க – ஜனாதிபதி**
**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு.**



## தலைவரின் வாழ்த்துச் செய்தி

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் (SLSI) தலைவர் என்ற வகையில், 2023 ஒக்டோபர் 14ஆம் திகதி உலக கட்டளைகள் தினத்தை கொண்டாடும் சந்தர்ப்பத்தில், "ஒரு சிறந்த உலகத்துக்கான பகிரப்பட்ட பார்வை: SDG 3 - அணுகக்கூடிய மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பான சுகாதாரம்." எனும் தொனிப்பொருளில் இலங்கையில் தேசிய கட்டளைகள் அமைப்பாக இருக்கும் இலங்கை தர நிர்ணய நிறுவனம், 2023 ஒக்டோபர் 09 முதல் 15 வரையிலான தேசிய தர வாரத்தின் போது தொடர் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க ஏற்பாடு செய்துள்ளது.

சர்வதேச தரநிலைகள என்பது ஒருமித்த மற்றும் நிலையான அணுகுமுறையைப் பயன்படுத்தி ஒரு செயல்முறையின் மூலம் உகந்த விளைவை அடைவதற்கான பாதையை விபரிக்கும் அறிவைப் பகிர்வதன் மூலம் உருவாக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும். சர்வதேச தரங்களின் பரந்த பயன்பாடு, தொழில்துறை உற்பத்தி மற்றும் சுகாதார சாதனங்களின் செயல்முறைகளின் சுற்றுச்சூழல் தாக்கத்தை குறைக்க வணிக முயற்சிகளுக்கு நன்மைகள், வரையறுக்கப்பட்ட வளங்களை மறுபயன்பாடு செய்ய உதவுகிறது மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும் திறனை மேம்படுத்துகிறது.

2030ஆம் ஆண்டளவில் இலங்கை உட்பட அனைத்து கையொப்பமிட்ட நாடுகளும் அடைய வேண்டிய மூன்றாவது நிலையான அபிவிருத்தி இலக்கில் (SDG) குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப நிலையான அபிவிருத்தியை அடைவதற்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட தேசிய தரநிலைகள் உதவுகின்றன. எங்கள் குடிமக்களின் நல்வாழ்வுக்கான எங்கள் அர்ப்பணிப்பு. சுகாதார அமைப்புகளை மேம்படுத்தவும், தடுக்கக்கூடிய நோய்களைக் குறைக்கவும், உள மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்கவும் இது நம்மை அழைக்கிறது. SLSI ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரநிலைகள், நமது குடிமக்களின் நல்வாழ்வு மற்றும் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான சுகாதார சாதனங்கள் மற்றும் அமைப்புகளின் பாதுகாப்பு, தரம் மற்றும் செயல்திறனை உறுதி செய்வதன் மூலம் இந்த இலக்குகளை அடைவதற்கான வரைபடத்தை வழங்குகிறது.

உலகப் பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலையின் தற்போதைய சூழலில் முன்னெப்போதும் இல்லாத வகையில், தரநிலைகளை மேம்படுத்தி இணங்கும்போது பகிரப்பட்ட பார்வை மிகவும் முக்கியமானது. இத்தகைய பங்கேற்பு அணுகுமுறையானது, SDG களின் உறுதிமொழிகளுக்கு இணங்க ஒரு உறுதியான நிலையான அடித்தளத்தில் தேசம் கட்டமைக்கப்படுவதை உறுதி செய்யும்.

எனவே, இலங்கையில் உள்ள அனைத்து நிறுவனங்களும், இலங்கை கட்டளைகள் நிறுவனத்துடன் கைகோர்த்து, உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தையில் தங்கள் நிலையை வலுப்படுத்தவும், நமது குடிமக்களின் இருப்பு மற்றும் ஆரோக்கியம். நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் சுகாதார அமைப்பைக் கட்டியெழுப்பவும் நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கலாநிதி அசங்க ரணசிங்க**
**தலைவர்**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**



## கௌரவ இராஜாங்க அமைச்சரின் செய்தி

அக்டோபர் 14, 2023 கொண்டாடப்படும் உலக கட்டளைகள் தினத்தின் போது "ஒரு சிறந்த உலகத்திற்கான பகிரப்பட்ட பார்வை: SDG 3 - அனைவருக்கும் அணுகக்கூடிய மற்றும் பாதுகாப்பான சுகாதாரம்" என்ற கருப்பொருளின் கீழ் இந்த செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

உலக கட்டளைகள் தினத்தில், சர்வதேச தரங்களின் முக்கியத்துவத்தை மட்டுமல்ல, நமது தேசத்தின் நல்வாழ்வில் அவற்றின் ஆழமான தாக்கத்தையும் கொண்டாடுகிறோம். ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிசெய்தல் மற்றும் அனைவருக்கும் நல்வாழ்வை ஊக்குவித்தல் - மூன்றாவது நிலையான அபிவிருத்தி இலக்குடன் (SDG 3) எமது சுகாதாரத் துறையை சீரமைப்பதில் இலங்கை தர நிர்ணய நிறுவனம் (SLSI) ஆற்றிய முக்கிய பங்கை இன்று நான் வெளிச்சம் போட்டுக் காட்ட விரும்புகிறேன்.

2030ஆம் ஆண்டளவில் அடையப்படும் என எதிர்பார்க்கப்படும் 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) 2015இல் இலங்கையும் 192 நாடுகளும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளன. மூன்றாவது நிலையான அபிவிருத்தி இலக்கு உலகளாவிய அர்ப்பணிப்பு மட்டுமல்ல, ஆரோக்கியமான உலகத்திற்கான திட்டமாகும். சுகாதார அமைப்புகளை மேம்படுத்தவும், தடுக்கக்கூடிய நோய்களைக் குறைக்கவும், மன மற்றும் உடல் ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை அளிக்கவும் இது நம்மை வலியுறுத்துகிறது. இந்த இலட்சிய இலக்குகளை அடைய, நாங்கள் சர்வதேச தரங்களை நம்பியுள்ளோம், இது சுகாதார நடைமுறைகள், பாதுகாப்பு மற்றும் தரத்திற்கான பொதுவான கட்டமைப்பை வழங்குகிறது.

நமது தேசத்தில் தரத்தின் பாதுகாவலராக SLSI ஆனது, உலகளாவிய அளவுகோல்களை சந்திக்கும் வகையில் சுகாதாரத் துறையை உயர்த்துவதில் முக்கிய பங்காற்றியுள்ளது. தரம், பாதுகாப்பு மற்றும் புதுமைகளை வளர்ப்பதில் அதன் இடைவிடாத முயற்சிகள் நமது எல்லைகளுக்குள் சுகாதார சேவைகளை மேம்படுத்தியது மட்டுமல்லாமல், சர்வதேச சுகாதார அரங்கில் இலங்கையை ஒரு போட்டியாளராக நிலைநிறுத்தியுள்ளது. அனைத்து இலங்கையர்களுக்கும் தரமான சேவைகளுக்கு சமமான அணுகலை வழங்கும் ஒரு சுகாதார அமைப்பை நாங்கள் கட்டியெழுப்புவதற்கு தேசிய மற்றும் சர்வதேச தரநிலைகள் அடிப்படையாகும்.

இந்த உலக தர நிர்ணய தினத்தில், எமது சுகாதாரத் துறையில் தரத்தை உயர்த்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இலங்கை கட்டளைகள் நிறுவனத்தை நான் பாராட்டுவதுடன், 2023ஆம் ஆண்டு உலக கட்டளைகள் தினத்தை கொண்டாடுவதற்கும், தொனிப்பொருளில் பொதுமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்தும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதற்கும் SLSIயை நான் வாழ்த்துகிறேன். "தேசிய தர வாரத்தில்" ஒரு சிறந்த உலகத்துக்கான பகிரப்பட்ட பார்வைக்கான நமது அர்ப்பணிப்பு உலகளாவிய எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வது மட்டுமல்ல, நமது குடிமக்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வைப் பாதுகாப்பதாகும்.

**கௌரவ. கனக ஹேரத் (எம்.பி.)**
**தொழில்நுட்ப இராங்க அமைச்சர்**




## சிறந்த உலகம் ஒன்றுக்கான ஒன்றிணைந்த பார்வை

### SDG 3 – அனைவருக்கும் அணுக முடியுமான பாதுகாப்பான சுகாதார சேவை

தரமான சுகாதார சேவை ஒன்றுக்கான வாய்ப்பு மனித உரிமை என்பதோடு அது பேண்தகு அபிவிருத்திக்கு அவசியமான காரணியாகும். மூன்றாவது பேண்தகு அபிவிருத்தி நோக்கத்தின் மூலம் (SDG 3) எதிர்பார்க்கப்படுவது ஆரோக்கியமான வாழ்வை உறுதி செய்வது மற்றும் வயது வித்தியாசம் இன்றி அனைவருக்கும் நல்வாழ்வை வழங்குவதாகும்.

மூன்றாவது பேண்தகு அபிவிருத்தி நோக்கத்தின் இலக்கை நோக்கி நெருங்கும்போது சர்வதேச தரங்கள் மற்றும் நிலைத்தன்மை மதிப்பீடுகள் முக்கியமான பணியை மேற்கொள்கிறது. அதன்மூலம் டிஜிட்டல் சுகாதார தொழில்நுட்பங்களை பின்பற்றுதல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி, சுகாதார பாதுகாப்பு கருவிகள் மற்றும் கட்டமைப்பு உற்பத்தி மற்றும் பராமரித்தலுக்கு வசதிகளை வழங்குகின்ற பூகோள வடிவம் ஒன்றை வழங்குவதோடு அதன்மூலம் பயன்மிக்க, பாதுகாப்பான மற்றும் நம்பிக்கைக்குரிய மருத்துவ உபகரணங்கள், சுகாதார சேவைகள் மற்றும் கட்டமைப்புக்கு உலகெங்கும் பரந்திருக்கும் மக்களுக்கு வாய்ப்பு வழங்குகிறது.

பயன்மிகு கொள்கை தயாரித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் மூலம் சுகாதார பாதுகாப்பின் நன்மைகளை ஊக்குவிக்கும் கட்டமைப்பு ஒன்று சர்வதேச தரம் மற்றும் நிலைத்தன்மையை மதிப்பிடுவதன் மூலம் வழங்கப்படுகிறது.

டிஜிட்டல் சுகாதார தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்துடன் சுகாதார கட்டமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் நோயாளர்களின் தனியுரிமையை பாதுகாப்பதற்கு IEC, ISO மற்றும் ITU தரங்கள் உதவுகின்றன.

ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலை விரைவாக அடைவதற்கு பேண்தகு அபிவிருத்தி நோக்கிற்கான தரங்கள் மற்றும் சிறந்த உலகுக்கான பார்வையுடன் நாம் ஒன்றிணைந்து எழுவோம்.



## செயலாளரின் செய்தி

2023 அக்டோபர் 14ஆம் திகதி உலக கட்டளைகள் தினத்தில், "சிறந்த உலகத்திற்கான பகிரப்பட்ட பார்வை: SDG 3 - அனைவருக்கும் அணுகக்கூடிய மற்றும் பாதுகாப்பான சுகாதாரம்" மற்றும் "தேசிய தர வாரம்" என்ற தலைப்பில இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் (SLSI) அக்டோபர் 09 முதல் 15 வரை கொண்டாடப்படும் உலக கட்டளைகள் தினத்தில் இந்த செய்தியை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

SDG 3 என்பது ஆரோக்கியம் சார்ந்த இலக்கு மட்டுமல்ல, பொருளாதார செழுமைக்கான உந்து சக்தியாகும். ஒரு ஆரோக்கியமான உற்பத்தித் தொழிலாளர்களுக்கு அவசியமானது, இது பொருளாதார வளர்ச்சிக்கு எரிபொருளாகிறது. இதை அடைய, சர்வதேச தரத்துடன் இணைந்த சுகாதார அமைப்புகளில் நாம் முதலீடு செய்ய வேண்டும்.

சர்வதேச தரநிலைகள் பல்வேறு தொழில்கள் மற்றும் துறைகளில் நிலைத்த தன்மை, தரம், பாதுகாப்பு மற்றும் இயங்குநிலையை உறுதிப்படுத்த உலக அளவில் உருவாக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவப்பட்ட மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட வழிகாட்டுதல்கள், அளவுகோல்கள் அல்லது விவரக்குறிப்புகளைக் குறிக்கின்றன. அவை சர்வதேச மின்-தொழில்நுட்ப ஆணைக்குழு (IEC), தரநிலைப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பு (ISO) மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) ஆகியவற்றால் தயாரிக்கப்படுகின்றன, அதே நேரத்தில் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளிடையே அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதில் உதவுகின்றன.

தேசிய தேவைகள் மற்றும் வரம்புகளுக்கு உரிய கவனம் செலுத்தி, தரங்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் பொறுப்பான தேசிய அமைப்பாக இருப்பதால், இலங்கை தரநிலை நிறுவனம் (SLSI) பங்குதாரர் ஆலோசனை செயல்முறைகள் மூலம் சர்வதேச தரத்திற்கு ஏற்ப தேசிய தரங்களை உருவாக்குகிறது. இவ்வாறான தேசிய தரநிலைகள் வர்த்தகத்தை ஊக்குவிப்பது மட்டுமன்றி, இலங்கை மக்களுக்கு தரமான சுகாதாரப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், அத்தகைய செயல்பாட்டில் வெற்றியை அடைய, பகிரப்பட்ட பார்வை மட்டுமல்ல, அனைத்து பங்குதாரர்களின் பகிரப்பட்ட பொறுப்பும் இன்றியமையாதது.

இலங்கையில் தரங்களை உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றில் அடைந்த அனைத்து வெற்றிகளுக்கும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தை வாழ்த்த விரும்புவதுடன், இலங்கையில் தேசிய தரங்களை உருவாக்கி பரப்புவதற்கான செயல்பாட்டில் அனைத்து வசதிகளையும் உறுதியளிக்கிறேன்.

**பேராசிரியர் என்.டி.குணவர்தன**
**செயலாளர்**
**தொழில்நுட்ப அமைச்சு**



## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

உலக கட்ளைகள் தினம், சர்வதேச தரங்களின் உருமாறும் சக்தியை அடிக்கோடிட்டுக் காட்டும் ஒரு சந்தர்ப்பம். நம் வாழ்விலும், நம் தேசத்திலும், நமது பகிரப்பட்ட உலகளாவிய பார்வையிலும் அதன் செல்வாக்கை அங்கீகரிக்கும் நாள். சர்வதேச மின்-தொழில்நுட்ப ஆணைக்குழு (IEC) மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (IEC) ஆகியவற்றுடன் இணைந்து சர்வதேச கட்டளைகளுக்கான சர்வதேச அமைப்பின் (ISO) சர்வதேச தரங்களாக வெளியிடப்படும் தன்னார்வ தொழில்நுட்ப ஒப்பந்தங்களை உருவாக்க உலகம் முழுவதிலுமிருந்து பல வல்லுநர்கள் பரந்த அளவிலான வளங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். இத்தகைய கூட்டு முயற்சிகள் மூலம் தங்கள் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் அனைத்து நிபுணர்களுக்கும் அர்ப்பணிப்பதற்காக உலக கட்டளைகள் தினம் ஆண்டுதோறும் நினைவுகூரப்படுகிறது. அதற்கேற்ப, தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பில் (ISO) இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய கட்டளைகள் அமைப்பான இலங்கை கட்ளைகள் நிறுவனம் (SLSI) இலங்கை தரநிலைகளை உருவாக்குவதற்கு பொறுப்பானது, ISO உத்தரவுக்கு இணங்க அக்டோபர் 09 முதல் 15 வரை இந்த வாரத்தை அறிவித்துள்ளது. கட்ளைகள் மற்றும் தரத்தின் நிலைத்தன்மையைக் கருத்தில் கொண்டு, "ஒரு சிறந்த உலகத்திற்கான பகிரப்பட்ட பார்வை: SDG 3 - அனைவருக்கும் அணுகக்கூடிய மற்றும் பாதுகாப்பான சுகாதாரம்" என்ற கருப்பொருளை "தேசிய கட்டளைகள் வாரமாக" கொண்டாடுகிறது. SDG 3 என்பது செயலுக்கான அழைப்பாகும், இது சுகாதாரப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கவும், இறப்பைக் குறைக்கவும், உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் வலியுறுத்துகிறது. இது ஒரு உலகளாவிய அர்ப்பணிப்பு மட்டுமல்ல, ஆரோக்கியமான உலகத்துக்கான ஒரு வரைபடமாகும். இந்த லட்சிய இலக்குகளை அடைய, நாங்கள் சர்வதேச தரங்களை நம்பியுள்ளோம், இது சுகாதார நடைமுறைகள், பாதுகாப்பு மற்றும் தரத்துக்கான பொதுவான கட்டமைப்பை வழங்குகிறது. SLSI தேசத்தின் தரத்தின் பாதுகாவலராக, நமது சுகாதாரத் துறையை சர்வதேச அளவுகோல்களுடன் சீரமைப்பதில் முன்னணியில் உள்ளது. தரம், பாதுகாப்பு மற்றும் புதுமைகளை வளர்ப்பதில் சுகாதாரப் பாதுகாப்புத் துறையின் அயராத முயற்சிகள், நமது எல்லைகளுக்குள் சுகாதார சேவைகளை உயர்த்தியது மட்டுமல்லாமல், உலகளாவிய சுகாதாரத் தரத்தை கடைப்பிடிக்கும் தேசமாக இலங்கையை நிலைநிறுத்தியுள்ளது. டிஜிட்டல் சுகாதார தொழில்நுட்பங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, சுகாதார சாதனங்கள் மற்றும் அமைப்புகளை உற்பத்தி செய்தல் மற்றும் பராமரித்தல், பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் நம்பகமான மருத்துவ சாதனங்கள், சுகாதார சேவைகள் மற்றும் அமைப்புகளை பரந்த அளவில் அணுகுவதை உறுதி செய்யும் உலகளாவிய கட்டமைப்பை சர்வதேச தரநிலைகள் உறுதி செய்கின்றன. உலக மக்கள் தொகை ளுனுபு 3 உடன் இணைவதற்கு நாம் முயற்சி செய்யும்போது, ஆரோக்கியமான உலகத்தைப் பற்றிய நமது பகிரப்பட்ட பார்வையை அடைவதில் சர்வதேச தரங்களின் கொள்கைகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நியமங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம், அனைத்து இலங்கையர்களுக்கும் நல்வாழ்வும் நல்ல ஆரோக்கியமும் அணுகக்கூடிய எதிர்காலத்திற்கு நாம் வழி வகுக்க முடியும். மூன்றாவது நிலையான வளர்ச்சி இலக்கை கடைப்பிடிப்பதற்காக தேசத்திற்கு தயாரிப்பு சான்றிதழ், அமைப்புகள் சான்றிதழ், பயிற்சி, அளவுத் திருத்தம், தகவல் சேவைகள் மற்றும் ஆய்வக சேவைகள் போன்ற பல சேவைகளை வழங்கும் அதே வேளையில், தேசிய தரங்களை உருவாக்குவதில் SLSI பெருமை கொள்கிறது. SLSI உடன் கைகோர்த்த அனைத்து பங்குதாரர்களின் பங்களிப்பையும், நல்வாழ்வு என்பது மட்டும் அல்ல என்பதை உறுதிசெய்து, "ஒரு சிறந்த உலகத்துக்கான பகிரப்பட்ட பார்வை" க்கான நமது அர்ப்பணிப்புகளை நிறைவேற்ற ஒன்றிணைந்து பணியாற்றுவதன் மூலம் அவர்களின் நிபுணத்துவத்தை பங்களிப்பை நான் பாராட்டுகிறேன்.

**கலாநிதி (திருமதி) சித்திக்க ஜீ சேனாரத்ன**
**பணிப்பாளர் நாயகம்** / CEO
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**

IEC ITU ISO

தொழில்நுட்ப அமைச்சு

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

பணிப்பாளர் நாயகம்
இலங்கை கட்டளைகள் நிறுவனம்
இல: 17, விக்டோரியா பிளேஸ்
எல்வட்டிகல மாவத்தை, கொழும்பு 08
தொலைபேசி: 011-2671567, 011- 2671575
011-22697029, தொலைநகல்: 011- 2672617
மின்னஞ்சல்: ளுடுளளைஃளளைை.டம இணையம் றறற.ளுடுளுஜ.டுமு

# இஸ்ரேல் - ஹமாஸ் போர்
# இஸ்ரேல் - அமெரிக்க கூட்டு சதிக்குள் வீழ்ந்துள்ள ஹமாஸ்?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

இஸ்ரேல்_ஹமாஸ் போர் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கத் தயாராக உள்ளது. அரபுக்களுக்கும் யூதர்களுக்குமான மோதல் என்பது வரலாற்றுக் காலம் முதல் நிகழ்ந்துவருகிறது. 1947ஆம் ஆண்டு யூத தேசம் உருவான போதே அதன் பிரதிபலிப்பு மேற்காசியாவில் மட்டுமல்ல உலகம் முழுவதும் எதிரெலிக்க ஆரம்பித்துள்ளது. இஸ்ரேல் உருவான காலம் முதல் அமெரிக்காவினது ஒத்துழைப்பினால் தனது இருப்பை பாதுகாத்து வருகிறது. இருபதாம் நூற்றாண்டு முழுவதும் ஒரு தேசிய இனம் அரசமைக்கவும் அத்தகைய அரசைப் பாதுகாக்கவும் வலுவான ஒரு தேசத்தின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியமானதென்பதை இஸ்ரேல் உலகத்திற்கு உணர்த்தியுள்ளது. அதனையே தற்போது வரை இஸ்ரேல் கடைப்பிடித்து வருகிறது. இஸ்ரேலின் இருப்பானது அமெரிக்கா மட்டுமல்லாது அனைத்து நேட்டோ நாடுகளினது ஒத்துழைப்புடனும் நிகழ்கிறது. இக்கட்டுரையும் ஹமாஸ்இஸ்ரேல் போரின் அரசியலை தேட முனைகிறது.

ஹமாஸ்_ இஸ்ரேல் போர் அனைத்து ஊடகங்களும் கூறுவது போல் மொசாட்டுக்கு தெரியாததோ அமெரிக்க புலனாய்வுக்கு தெரியாததோ ஒன்றும் கிடயாது. இந்தப் போர் அமெரிக்க, இஸ்ரேல் கூட்டினால் உருவானதென்றே கருத வேண்டியுள்ளது. காரணம் மொசாட் அமைப்பின் அண்மைய பதிவுகளைப் பார்க்கும் போதே ஈரானிய அணுவாயுத தயாரிப்பு நிலையம் மீதான இஸ்ரேல் தாக்குதல் ஈரானிய இராணுவத் தளபதி சுலைமானி கொல்லப்பட்டது மற்றும் ஈரானிய அணு விஞ்ஞானி Mohsen Fakhrizadeh கொல்லப்பட்டதிற்கு பின்னால் மொசாட் செயல்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்பு தரப்பினரே ஒப்புதல் அளித்துள்ளனர். கொலையின் வடிவங்களும் அமெரிக்க, இஸ்ரேலிய கூட்டு நடவடிக்கையாகவே கருத வாய்ப்புள்ளதாக தெரிகிறது. மொத்தத்தில் இந்த போருக்கான தயாரிப்பு ஏறக்குறைய 500 ஹமாஸ் அமைப்பினர் 2021ஆம் ஆண்டு முதல் பயிற்சியில் ஈடுபட்டதாகவும் தாக்குதலை இஸ்ரேலியர்களே ஆரம்பித்ததாகவும் தகவல்கள் உண்டு. மொசாட்டின் உளவுக்குள் சிக்காமல், இரு ஆண்டுகளாக பயிற்சியில் ஹமாஸ் செயல்பட்டதென குறிப்பிடுவது வேடிக்கையான உரையாடலாகும். மேற்காசியாவில் மொசாட்டின் வலையில் சிக்காது எத்தகைய நடவடிக்கையையும் இஸ்ரேலுக்கு எதிராக திட்டமிட முடியாது. அப்படியிருக்கும் போது தாக்குதலை மேற்கொள்ளும் முயற்சியை மொசாட் கண்டுகொள்ளாமல் இருந்ததென கணிப்பிட முடியாது. ஆனால் அராபியர்களும் மொசாட்டின் வலைக்குள்ளால் தாக்குதலை வெற்றி கொள்ள திட்டமிட்டனர் என்பதே யதார்த்தமானதாகும். அப்படியாயின் யூதர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டும் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயப்பட்டும் நூற்றுக்கணக்கானவர்கள் கைதிகளாக்கப்பட்டும் எதிர்கொண்ட இழப்புகள் ஏன் என்ற கேள்வி நியாயமானதே. இத்தகைய இழப்புகள் நிகழும்வரை யூத இராணுவம் மற்றும் உளவுப்பிரிவு மௌனம் காத்துக் கொண்டிருந்ததா என்ற குழப்பம் முக்கியமானது. அதனை விரிவாக விளங்க முயல்வது அவசியமானது.

முதலாவது, இது மேற்குலக, கீழைத்தேச அதிகாரப் போட்டியின் எல்லையாகவே தெரிகிறது. இது ஒரு நீண்ட போராக விளங்க வாய்ப்புக்கள் அதிகம். ஹமாஸ்_ இஸ்ரேல் ஆகிய இரு தரப்புக்குமான சண்டை முடிவுக்கு வந்தாலும் போர் நீடிக்க வாய்ப்புள்ளது. மேற்காசியாவிலுள்ள இஸ்லாமிய நாடுகளது அண்மைய மாற்றங்களும் சவுதி அரேபிய, ஈரான் நெருக்கம் ஏனைய நாடுகளுடனான ஈரானின் உறவும் ஆபிக்க நாடுகளது நகர்வுகளும் பிறிக்ஸ் அமைப்பின் விரிவாக்கமும் மேற்குலகத்திற்கு எதிரானதாகவே அமைந்திருந்தது. அவை அனைத்துக்கும் பின்னால் ரஷ்யாவும் – சீனாவும் கைகோர்த்துக் கொண்டிருந்தன என்பது யாவரும் அறிந்ததே. இவை அனைத்துக்கும் ஹமாஸ்_இஸ்ரேல் போர் முற்றுப்புள்ளி வைக்க முனைந்துள்ளது. இது அனைத்தினது போக்கினையும் திசை திருப்பியுள்ளதாகவே தெரிகிறது.


இரண்டு, ஹமாஸ்_ இஸ்ரேல் போர் மேற்குலகத்தின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை எட்ட எத்தனிப்பதாகவே தெரிகிறது. காரணம் மேற்குலகம் அதிக பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வந்துள்ளது. இதனால் போர் பொருளாதாரம் வளர்ச்சியடைவதோடு மேற்காசியாவின் வளங்கள் அமெரிக்காவினாலும் ஏனைய மேற்கு நாடுகளாலும் இலகுவாக சுரண்டப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது ஒரு காப்பிரேட் கம்பனிகளின் போராகவே மாறுகிறது. குண்டுத் தாக்குதல் செய்த நாடே மருந்தும் பஞ்சும் பலஸ்தீனர்களுக்கு வழங்குகிறது என்பதை கண்டு கொள்ள முடிகிறது. இதற்கு அனுசரணையாக அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் காணப்படுகின்றன. குறிப்பாக இஸ்ரேல் ஹமாஸுக்கு எதிரான போரைப் பிரகடனப்படுத்திய அடுத்த மூன்று மணித்தியாலத்தில் அமெரிக்கா, இஸ்ரேலின் போர்ப் பிரகடனத்தை ஆதரித்து அறிவிப்பு செய்தது. அது மட்டுமன்றி உடனடியாக தனது வெளியுறவு செயலாளரை இஸ்ரேலுக்கும் அனுப்பியுள்ளது. தற்போது ஜோர்தானில் அரபுத் தலைவர்களை அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் பிளிங்டன் சந்தித்து உரையாடி வருகிறார். பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலுக்கு ஆதராவாக வீட்டோ பயன்படுத்த அமெரிக்கா தயாராகிறது.



மூன்றாவது, ரஷ்யா உக்ரைன் போரிலிருந்து அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் வெளியே வந்துள்ளதாக தெரிகிறது. அமெரிக்காவுக்கும் நேட்டோ நாடுகளுக்கும் உக்ரைன் போர் பெரும் சுமையாகவே காணப்பட்டது. அதிலிருந்து விடுபடுவதற்கு அமெரிக்காவுக்கு இன்னோர் போர் தேவைப்பட்டது. அத்தகைய போரை தொடக்குவது பற்றிய தேவை நீண்டகாலமாக நிலவியது. அதனை அமெரிக்க – இஸ்ரேல் கூட்டு திட்டமிட்டு தொடங்கியுள்ளது. இதில் ரஷ்யா –சீனா நேரடியாக வெற்றியை அடையா விட்டாலும் மறைமுகமாக இலாபகரமானதாகவே உள்ளது. அதேநேரம் முழுமையாக வெற்றியை மேற்குலகம் அனுபவிப்பதாகவே தெரிகிறது. ரஷ்யாவுக்காக உக்ரைன் போரை நிகழ்த்திய நேட்டோ நாடுகளை திசைதிருப்பியுள்ளது இஸ்ரேல் – ஹமாஸ் போர் என்றவகையிலும் சீனாவுக்கு தாய்வான் போரை தவிர்க்க இப் போர் உதவியுள்ளது என்ற வகையிலும் இலாபகரமானதாகவே உள்ளது.

(19 ஆம் பக்கம் பார்க்க)

# மானிட அவலங்கள் மனச்சாட்சியை தொடும்..!



இஸ்ரேல், காஸா போரில் வெற்றிக்கு வழிவகுப்பது படை பலங்களல்ல. மத நம்பிக்கைகளின் மன நிலைகளே! இந்த நம்பிக்கைகள்தான் இங்குள்ள பிரச்சினை. இதனால்தான், இப்பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்த ஆப்ரஹாம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. யூத, கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்களின் இறைதூதர் ஆப்ரஹாமின் (இப்றாஹீம்) அத்திவாரத்திலிருந்தாவது இப்பிராந்தியத்தில் சமாதானத்தை நிலைநாட்டத்தான் இந்த "ஆப்ரஹாம் உடன்படிக்கை". ஆனால், இதற்கான முயற்சிகள் முயற்கொம்பாகத்தானுள்ளன.

'தீர்க்கதரிசிகளின் தேசம்' எனப் போற்றப்படும் (பலஸ்தீன், சிரியா, ஜோர்தான், லெபனான்) பிராந்தியத்தை விவிலிய வேதங்கள் "பாரான் தேசம்" என்கின்றன. இதனை, "ஷாம் தேசம்" என்கிறது இஸ்லாம். இப்பகுதியை வேதங்கள் சகலதும் ஆசீர்வதித்துள்ளன. ஆன்மிகத்தில் இத்தனை மவுசுள்ள இப்பகுதியின் தலைவிதியை மோதல், சமாதானம், முரண்பாடு, மூர்க்கத்தனமென இறைவன் மாற்றிமாற்றி எழுதியிருக்கிறான். இங்கு இதுவரைக்கும் அமைதி ஏற்படாதமைக்கு இறைவனின் இந்நியதிதான் காரணம். இங்கு இடம்பெறும் வெற்றி மற்றும் தோல்விகளை, ஒவ்வொருவரும் தங்கள் மதப்போதனையின் உணர்வில் நிம்மதியடைவதுண்டு. இறுதி வெற்றியை எதிர்பார்த்துத்தான் ஹமாஸ் போரிடுகிறது. "ஷாம் தேசம்" வெற்றிகொள்ளப்படுமென்ற இறைதூதர் முஹம்மது நபியின் நபிமொழி, உலக முடிவில் உண்மைப்படும் என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர். இதற்கான பிரார்த்தனைகள் மஸ்ஜிதுன் நபவியில் ஆரம்பமாகிவிட்டன. இனி, ஏனைய முஸ்லிம் நாடுகளிலும் பிரார்த்தனைகள் ஆரம்பமாகலாம். இவ்வாறு நிகழின் முஸ்லிம் அரசுகளுக்கு சிக்கல்கள் ஏற்படும். காஸா மீதான தாக்குதல்களை முஸ்லிம் நாடுகள் கண்டிப்பதற்கு முன்னர், ஆன்மிகத் தலைமைகள் பிரார்த்தனைகளில் முனைப்புக் காட்டுகின்றன. முஸ்லிம் நாடுகளின் அரசியல் நிலவரத்துடன் அங்குள்ள ஆன்மிக தலைமைகள் இல்லை. இதையே, இது புலப்படுத்துகிறது.

எண்ணிக்கையில் சிறிது, பரப்பளவில் பாதி என்பதற்காக மன பலத்தை குறைத்துக் கணிப்பிட முடியாது. இதற்கு காஸாதான் உதாரணம். தங்களை முந்திக்கொண்டு காஸாவுக்கு உதவ ஈரான் வருவது, மத்திய கிழக்கில் பெரும் பேரிடியையே ஏற்படுத்தும். இதனால், கடமைக்காவது சில கண்டனங்களை வெளியிடும் நிர்ப்பந்தம் முஸ்லிம் நாடுகளுக்கு ஏற்பட்டு வருகிறது.

மத்திய கிழக்கில் முஸ்லிம் நாடுகளுக்கு மத்தியில் தனித்து நிற்பதாக ஐரோப்பாவிடம் முறையிட்டுத்தான், அந்நாடுகளின் ஆதரவைப் பெறுகிறது இஸ்ரேல். மிகப் பலசாலியான இஸ்ரேலின் அடக்குமுறைக்குள் முடங்கியுள்ளதாக காஸா அலறுகிறது. இங்குள்ள இருபக்க நியாயங்களை எடுத்துச்சொல்லத்தான் இந்த "ஆப்ரஹாம்" ஒப்பந்தம். உண்மையில் மதத்தின் அத்திவாரத்திலிருந்து எழும் இப்பிரச்சினைகளை பூதாகரமாக்குவது அரசியல்தான். இன்றைய உலக இயக்கம் அரசியல், ஆன்மிகம் என்ற இரட்டைச் சக்கர வண்டி போல ஓடுகிறது. நாஸ்திகம் பேசினாலும், நாலு ஆதாயங்கள் இல்லாதிருக்காது. அந்த ஆதாயத்துக்குள் அரசியலே இருக்கும். ஐரோப்பா இதற்கு நல்லதொரு உதாரணம். எத்தனை பெரிய வல்லமையுள்ள நாடுகள் உள்ளன இந்த ஐரோப்பாவில். ஏன், துணிந்து வந்து தீர்வு சொல்லத் தயங்குகின்றன?



மத்திய கிழக்கின் எண்ணெய் வளத்தை, தூரத்திலிருந்து சுரண்டும் சுயநலம்தான் இந்தப் போரை பெரிதாக்குகிறதா?. இஸ்ரேலின் இருப்பை நியாயப்படுத்தும் தரப்புக்கள், பலஸ்தீனத்தின் பரிதாபத்தை கண்டுகொள்ளத் தயங்குகின்றன. காரணம், இஸ்லாத்தின் பிடிக்குள் மத்திய கிழக்கு திளைத்திருக்க கூடாதென்பதே! இப்போது இடம்பெறும் போரில் ஏற்படும் அழிவுகளை அட்டவணையிடுவதில் என்ன பலன். ஆக்கமான பணிகளுக்கு அணிதிரள உலக அமைப்புக்கள் ஒன்றுபடட்டும்.

ஒவ்வொரு அலறல்களும், ஒப்பாரிகளும் ஒவ்வொருத்தரது வீடுகளிலும் கேட்பதாக உணர்ந்தாலே போதும், மனங்களும் மதங்களும் ஒன்றிணைய. இதற்கு நாஸ்திக உலகம் விதிவிலக்குத்தான். இயற்கையை வென்று, இறைசக்தியை விஞ்சிவிட்டதாக விஞ்ஞானம் மற்றும் நாஸ்திகம் ஏன், தொழிநுட்பமும் கூறலாம். குளத்தில் நீந்த, பயணிக்க இயந்திரங்களை கண்டுபிடித்திருக்கலாம். ஆனாலும், அடையும் இலக்கை ஆத்மிக அறிவே காட்ட வேண்டும். இந்த ஆன்மிக உணர்வில்தான் முஸ்லிம் உலகம் பேசுகிறதே தவிர, ஹமாஸுக்காக அல்ல. முஸ்லிம் உலகில் ஷியா, சுன்னி பிளவுகளின் போக்குகள் இவ்வாறுதானுள்ளன.

சுஐப் எம்.காசிம்

# தவறான சொற்பிரயோகங்கள் சபையில் தவிர்க்கப்படுவது எப்போது?




லோரன்ஸ் செல்வநாயகம்



## ரஞ்சித் மத்தும பண்டாரவின் தகாத வார்த்தை
## டயானா கமகேயின் 'கன்னத்தில் அறைவேன்' வார்த்தைப் பிரயோகங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் உயரிய சபையில் தவறான சொற் பிரயோகங்கள் இனியாவது தவிர்க்கப்பட வேண்டும்



பாராளுமன்றம் என்ற உயரிய சபை நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சிறந்த முன்னு தா ர ண மா கவும் படிப்பினைகளை வழங்க கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதே நம் அனைவரதும் எதிர்பார்ப்பு.

அதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பும் மிகவும் முக்கியமானதாகிறது.

அந்த வகையில் அண்மையில் இடம்பெற்று வரும் சில வார்த்தைப் பிரயோகங்கள் அதற்கு மாறானவையாக காணப்படுவதைக் குறிப்பிட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், அடிமைத்தனங்கள், பெண்களை துன்புறுத்துதல், பாராளுமன்ற தேர்தல் உட்பட தேர்தல்களில் பெண்களுக்கான விகிதாசாரத்தை சரி செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்வைத்து அவ்வப்போது குரலெழுப்பப்பட்டு வருகின்றது.

குறிப்பாக அவற்றுக்கான சர்வதேச தினங்கள் அண்மித்து வரும் நாட்களில் அந்த குரல்கள் சற்று மேலோங்கி நிற்பதையும் அது தொடர்பான ஆர்ப்பாட்டங்கள், கலந்துரையாடல்கள் கருத்தரங்குகள் துண்டுப் பிரசுர விநியோகங்கள் என முன்னெடுக்கப்படுவதும் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் பாராளுமன்றத்திலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பெண்கள் தொடர்பான விவகாரங்கள் சம்பந்தமாக பெண் பாராளுமன்ற உறுப்பினர்களால் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது.

எனினும் அண்மைக்காலமாகவே சபையில் பாராளுமன்ற உறுப்பினர்களால் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக அவதூறாக பேசுவதும் ஒரு உயரிய சபையில் பிரயோகிக்கக் கூடாத வார்த்தைப் பிரயோகங்களை முன்வைப்பதும் இடம் பெற்று வருகின்றது.அவ்வாறு பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் செயல்படுவதற்கு காரணமானவர்களும் தூண்டுபவர்களும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவர்கள்.

குறிப்பாக பாராளுமன்றத்தில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விசேட அதிதிகள் எனப் பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக பாராளுமன்ற பார்வையாளர்கள் கலரியில் அமர்ந்து பாராளுமன்ற செயற்பாடுகளை பார்வையிடுவது வழமையானது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாடசாலையில் கீழ் வகுப்பு மாணவர்கள் செயல்படுவதைப் போன்று மிக மோசமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை அமைவதை எத்தகைய காரணங்களுக்காகவும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பாராளுமன்றம் போன்ற உயரிய சபைகள் முழு நாட்டுக்கும் முன்னுதாரணமாகவும் படிப்பினைகளையூட்டுவதாகவும் அமைய வேண்டும். அவ்வாறான உயரிய சபையில் சிறுபிள்ளைத்தனமாக மிக மோசமான வகையில் செயற்படுவது கண்டிக்கத்தக்கது. அவ்வாறான செயல்கள் மாணவர்களையும் ஏனைய பார்வையாளர்களையும் தர்ம சங்கடத்திற்கு உள்ளாக்கும் என்பதும் குறிப்பிட வேண்டியது.

அத்துடன் வெளிநாட்டு ராஜதந்திரிகள், அல்லது சர்வதேச அதிதிகள் அதிதிகளுக்கான கலரியில் அமர்ந்திருக்கும் போது இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டால் அது எமது நாட்டுக்கும் எமது நாட்டின் பாராளுமன்றத்திற்கும் அபகீர்த்தியையே ஏற்படுத்த முடியும். அத்துடன் பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்காக வருபவர்கள் இத்தகைய தவறான சிந்தனைகளைக் கொண்டு செல்லக்கூடாது. அது தவிர்க்கப்பட வேண்டும்.

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் உரையாற்றும் போது "நாம் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும், வார்த்தை பிரயோகங்கள் அதில் மிக முக்கியம்" என்றும், ஏனென்றால் பாடசாலை மாணவர்களும் களரியில் அமர்ந்துள்ளார்கள் என்று குறிப்பிடுவதுண்டு.

எனினும் வெறும் வாய்ச்சொல் வார்த்தைகளாக மட்டுமே அவை அமைந்து விடுகின்றன. செயற்பாடுகளில் மாற்றங்கள் இதுவரை இடம்பெறவில்லை என்றே சொல்லலாம்.

அண்மையில் பாராளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதும் பாராளுமன்றத்திற்கு வெளியில் பெரிதாக பேசப்பட்டதுமான அவ்வாறான ஒரு செயற்பாட்டை இங்கு குறிப்பிட முடியும்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது உரையின் போது பெண் பாராளுமன்ற உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் ஒருவரை 'பெல்லி' (பெட்டை நாய்) என்ன குறிப்பிட்டு தவறான சொற்பிரயோகங்களை பயன்படுத்தியதைக் குறிப்பிட வேண்டும்.

அதே வேளை, அதற்கு பதில் வழங்கும் வகையில் முழு சபையின் கவனத்தையும் திசைதிருப்பும் வகையில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் பிரயோகித்த வார்த்தைகளும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

அவ்வாறு தன்னை தவறான வார்த்தையில் திட்டிய பாராளுமன்ற உறுப்பினருக்கு அவர் பதில் கொடுக்கையில் " பெண்களை அவமரியாதையாக எவர் பேசினாலும் அவர்களை கன்னத்தில் அறைவேன்." என பகிரங்கமான எச்சரிக்கையொன்றை அவர் சபையில் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக இப்போது இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கும் இடையில் சர்ச்சைகள் இடம்பெறுவது வழமையாகி விட்டது.

ரஞ்சித் மத்தும பண்டார உட்பட அந்த கட்சியின் உறுப்பினர்கள் பலர் எப்போதும் "தமது கட்சியிலிருந்து, தமது கட்சியின் புண்ணியத்திலேயே டயானா கமகே அரசாங்கத்தின் பக்கம் சார்ந்து இராஜாங்க அமைச்சராக வலம் வருவதாகவும் அங்கிருந்து கொண்டு தாம் பாராளுமன்றத்துக்கு வருவதற்கு காரணமான கட்சியைத் தூஷிக்கின்றார் என்றும் குறிப்பிடுவதுண்டு.

அன்றும் அவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களே இடம்பெற்றன. டயானா கமகே உரையாற்றுகையில் ஏதோ தவறாக சொல்லப் போக, அதற்குப் பதிலளித்த ரஞ்சித் மத்தும பண்டார எம்பி ஆத்திரமடைந்து டயானா கமகேயை யார் கணக்கெடுப்பது என்ற தொனியில் கடுமையாகப் பேசிவிட்டார்.

அந்த சமயம் சபையில் இருக்காத டயானா கமகே, அடுத்த நாள் அமர்வில் சபையில் ரஞ்சித் மத்தும பண்டாரவை விளாசு விளாசென விளாசி விட்டார். அது மட்டுமன்றி இந்த சபையிலேயோ அல்லது வேறு எங்கேயோ எவரும் பெண்களை அவமரியாதையாக பேசக்கூடாது. அவ்வாறு பேசினால் அவர் எவர் என்றும் பாராமல் நான் அவருக்கு கன்னத்தில் அறைவேன். அதற்கும் நான் தயங்கப் போவதில்லை. என்று கூறினார்.

பொதுவாகவே டயானா கமகே பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது அது முழு சபையையும் கவர்வதாகவும் வித்தியாசமான விடயங்களை அவர் முன்வைக்கும் போது அவற்றுக்கு கடுமையான அல்லது எதிர் மாறான விமர்சனங்கள் வருவதாகவும் அமையும்.நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் கஞ்சா பயிர்ச் செய்கைக்கு முக்கியத்துவம் வழங்கலாம் என்றும் நாட்டின் பொருளாதாரத்திற்கு அணிசேர்க்கும் வகையில் முக்கியமாக உல்லாசப் பிரயாணிகளை கருத்திற்கொண்டு இரவு வர்த்தகங்களை ஊக்குவிக்கலாம் என்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சபையிலும் வெளியிலும் அவர் யோசனைகளை முன் வைத்து வந்துள்ளார். இன்றும் கூட அது தொடர்பில் பலரும் விமர்சனங்களை முன்வைப்பது தொடர்கிறது.

சில வேளைகளில் அவரது யோசனைகளை தவறாக புரிந்து கொண்டுள்ள சிலர் அவரது யோசனைகளை கொச்சைப்படுத்தி விமர்சித்து வருவதும் இடம்பெற்று வருகிறது. இந்த தகாத சொற்பிரியோகங்கள் இப்போதைக்கு பாராளுமன்றத்தில் விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

# மலையக இலக்கியத்துக்கு வலிமை சேர்க்கும் 'வல்லமை தாராயோ'

ஈழத்து இலக்கியத்தின் தவிர்க்கப்பட முடியாத பகுதியாகிய மலையக இலக்கியத்திற்குத் தமது காத்திரமான பங்களிப்பை வழங்கியோர் பலர். மலையகத்தைச் சேர்ந்தோராலும், தம் வாழ்க்கையின் குறிப்பிட்ட காலகட்டத்தை மலையகத்தில் கடக்க நேர்ந்தவர்களாலும் இழைத்துப் பின்னப்பட்ட பின்னலென மலையக இலக்கியம் செழுமை கண்டிருக்கிறது. கே.ஆர்.டேவிட், நந்தி, தி.ஞானசேகரன் போன்ற மலையகத்தில் வாழ்ந்தறிந்த எழுத்தாளர்களின் நாவல்களூடாக மலையகம் பற்றிய தோற்றமொன்றைக் கண்டிருந்த எனக்கு மலையக மக்களின் வரலாற்றோடு இணைந்தவராக மாத்தளை வடிவேலன் முன் வைக்கும் இன்னொரு சித்திரத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் வல்லமை தாராயோ எனும் இச் சிறுகதைத் தொகுதி மூலம் கிட்டியது.


வல்லமை தாராயோ? எனும் இத் தொகுப்பின் பதிப்பு முயற்சியில் ஈடுபட்டவர்களும் மலையக மக்களின் துன்ப துயரங்களில் ஒன்றாக நின்று உழைத்தவர்கள். அண்மையில் தனது எழுபதாம் அகவையை நிறைவு செய்த மு.நித்தியானந்தன் மற்றும் மாத்தளை வடிவேலனுடன் ஒருசாலை மாணாக்கராக வளர்ந்த எச்.எச். விக்கிரமசிங்க இருவரும் இணைந்து மலையக மக்களின் வரலாறும், கண்ணீரும் நிறைந்த இந்த ஆக்க இலக்கியப் படைப்பை உலகின் முன் வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். தொகுப்பில் இணைக்கப்பட்டிருக்கும் அவர்கள் இருவரதும் முன்னுரையும் வெளியீட்டுரையும் இத் தொகுதியின் கதைகள் புரிய வைக்கும் உணர்வுகளின் வரலாற்றுப் பின்னணியை இணைக்கும் சரடுகளாகின்றன.

மாத்தளை மண் அங்கு அமைந்திருக்கும் முத்துமாரியம்மன் ஆலயத்தினால் பிரசித்தி பெற்றது. அத்தகைய மாத்தளை நகரினூடாகக் கண்டிக்கு நகர்த்தப்பட்ட பல்லாயிரம் கூலித் தொழிலாளிகளின் பயணத்தையும், அவர்கள் அடைந்த இடர்களையும் இக்கதைகள் தோறும் வடிவேலன் பதிவு செய்கிறார். பதினான்கு கதைகள் அடங்கிய இத் தொகுப்பிலுள்ள கதைகள் ஒன்றில் தானும் கதாசிரியர் மலையக மண் சார்ந்த பிரச்சினையைச் சொல்லாமல் விட்டதில்லை. அதற்கேற்றாற் போலவே இத் தொகுதியின் அட்டைப்படமும் காலாதிகாலமாய்க் கொழுந்துக் கூடையைக் கொழுவியபடி நலிந்து போன ஒரு மலையகத் தாயின் தீராத் துயரை அப்பட்டமாகப் பிரதிபலிக்கிறது. இருந்தும் இத்தனை அவலங்களிலிருந்தும் மீண்டெழும் அவாவை இறைஞ்சிய தொகுதியாய் பிரதிபலிக்கிறது. இருந்தும் இத்தனை அவலங்களிலிருந்தும் மீண்டெழும் அவாவை இறைஞ்சிய தொகுதியாய் இத் தொகுப்பு வல்லமை வேண்டி மலர்கிறது. மலையகத்தவர் துயரங்களில் பாதியேனும் உரிய தரப்புகளால் தீர்க்கும் வகையில் இந்நூல் வேண்டியவர்களை சென்றடையுமெனில் அதுவே இத் தொகுதிக்குக் கிடைக்கும் வெற்றியாகும். அத்துடன் தமிழகத்தின் 'தாய்'பதிப்பகம் இச் சிறுகதைத் தொகுதிக்கு ஒரு லட்ச ரூபாய் பரிசளித்துக் கௌரவித்ததும் குறிப்பிடத்தக்கது.

இத் தொகுதியிலமைந்துள்ள தாத்தாவின் ரெங்குப்பெட்டி எனும் முதலாவது கதை மலையகத் துயரின் ஆதி இழையைப் பிடித்து அலசுவதாக அமைந்துள்ளது. வரலாற்றுப் பாங்கான விடயங்கள் இக்கதைக்கு வலுச் சேர்க்கின்றன. சிறு மனதில் இருக்கும் தாத்தாவின் ரெங்குப் பெட்டி பற்றிய வியப்பும், காலப் போக்கில் யுத்த காலப் பாதிப்புக்கள் தாக்கத் தொடங்கும் போது அதற்கு முதல் காரணமாக தாத்தா, பாட்டி ஏன் இங்கு வந்தனர் என எழும் வெறுப்பும், தமிழகத்திலிருந்து வந்தவர்கள் மீது கண்டித் தொழிலாளருக்கு இருந்த காழ்ப்புணர்வும் சிறப்புற விபரிக்கப் படுகின்றன. மேலும், ரெங்குப் பெட்டியினுள் கிடந்த ஆவணமாக அந்தக் காலத்தில் இலங்கைக்கு கூலித் தொழிலாளர்களைக் கோரும் விளம்பரம் காணக் கிடைக்கிறது. அவ்விளம்பரத்தில் இலங்கைக்கு வர விரும்புவோர் யாரைத் தொடர்பு கொள்ள வேண்டும், இலங்கையில் அவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள், வசதிகள் தற்போதைய மலையக மக்களின் நிலையை எண்ணிக் கண்ணீர் சிந்த வைக்கின்றன. முதியோருக்கு அவர்கள் விரும்பிக் கேட்கும் சாராயத்தைப் படையலிடல், ரெங்கு பெட்டியைச் சம்பிரதாயபூர்வமாகத் திறத்தல் என்பன போன்ற விபரிப்புகளும் வாசிப்பின் சுவாரஸ்யத்தைக் கூட்டுகின்றன.

நாடு கடந்த நதிகள் இத்தொகுப்பின் இன்னொரு கதை. பபூன் வீரையா சிறுவனாகவிருந்தபோது அனாதையாக கலைதாசனின் சலூன் வாசலில் ஒதுங்கி நின்று சலூன் தொழில் பழகியவன். நாடகங்களில், தெருக் கூத்துகளில் பபூனாக நடித்ததன் மூலம் பபூன் வீரையா எனும் நிரந்தர பெயருக்குச் சொந்தக்காரன் ஆனவன். கங்காணி மகள் அவன் மேல் காதல் கொள்கிறாள். கங்காணியின் திட்டத்தினால் கடைசியில் பதிவு எதுவுமற்ற காரணத்தைச் சாட்டி பொலிஸாரால் கைது செய்யப்படுகிறான். யாருமற்ற அனாதையாயிருந்த அவன் ஒரு காதலைக் கண்டடைந்த போதிலும், கடைசியில் கங்காணியின் சூழ்ச்சியால் கடவுளாலும் கை விடப்பட்டவனாகிய நிலையைத் துயரத்தோடு விபரிக்கின்றார் கதாசிரியர். தோட்டப் பகுதிகளில் எவ்வெவ்விடங்களில் எவ்வாறு தோட்ட மக்களின் தலைமுடி சிரைக்கப்பட்டது, சலூன்கள் வந்த பிறகு நாற்காலியிலமர்ந்து கண்ணாடி பார்த்து தலை சிரைக்கும் நாகரிகம் என இன்றைய தலைமுறை அறியாத விடயங்களும் கதையினூடு வெளிப்படுகின்றது.






இத்தொகுப்பின் தலைப்புக் கதையாகிய வல்லமை தாராயோ தொழிற்சங்கத் தலைவனான கறுப்பையா எதிர்நோக்கும் சிக்கல்கள் பற்றிப் பேசுகிறது. தொழிலாளர்களின் நலன் பற்றியே எப்போதும் சிந்திக்கும் கறுப்பையா ஒவ்வொரு தொழிலாளியினதும் பிரச்சினையை தொழிற்சங்கத்திற்கு எடுத்துச் செல்கிறான். கொழுந்து மடுவத்திற்குக் கொழுந்து எடுத்துச் செல்லும் போது கர்ப்பிணிப் பெண்ணொருத்தி மயங்கி வீழ்ந்த பிறகு, கர்ப்பிணிகளினதும், வயோதிபர்களதும் கொழுந்துகளை இளையோரே கொண்டு சென்றனர். தோட்டத்திற்கு வந்து கொழுந்தினை எடுக்க வேண்டுமென்று இரு வாரங்கள் நடந்த வேலை நிறுத்தத்தில் அவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படவில்லை. இரவோடிரவாக அரிசிக் காம்பிராவை ஒரு லொறியில் கபளீகரம் செய்தபின் கறுப்பையா, மாணிக்கம் உள்ளிட்ட தொழிற்சங்கவாதிகளே அவற்றைக் கொள்ளையடித்ததாக தோட்ட நிர்வாகம் பொலிசுக்குத் தகவல் கொடுக்கிறது. இவ்வாறாக உரிமைக்கு குரல் கொடுக்குந்தோறும் தொழிற்சங்கவாதிகளான இளைஞர்கள் எவ்வாறு அதிகாரத்தினால் பழிவாங்கப் படுகிறார்கள் என்பதனை அழகாக இக் கதையில் பிரதிபலிக்கிறார் கதாசிரியர்.

அடுத்த கதை அக்கினி. தவறணையில் தேயிலைச் செடிகளுக்கு நீரூற்றி வளர்க்கும் ரெங்கையாக் கிழவன், மனைவியை இழந்தவன். அங்குள்ளோருக்குத் தாத்தாவாகவும், அப்பாவாகவும், பெரியவராகவும் உதவி செய்து கொண்டிருப்பவன். இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்குப் பிறகு தமிழகத்தில் தன் சொந்த ஊரில் உயிர் விடும் விருப்பில் பாஸ்போட் எடுத்துத் தன் உடுபுடவைகளைக் கட்டி வைத்து விட்டு ஊருக்குத் தேநீர் விருந்து வழங்குவதற்காக, பழங்கள் வாங்க சந்தைக்குச் சென்று திரும்புகிறான். திரும்பி வரும் போது, காடையரால் அவர்களது தோட்டம் கொளுத்தப்பட்டு, கிழவனின் உடுபுடவைகளும், பாஸ்போட்டும் எரிக்கப்பட்டு அவனது நெஞ்சில் அக்கினியைக் கிளப்புகின்றன. மலையகம் தோறும் இவ்வாறு எழுகின்ற பல்வேறு பிரச்சினைகளும் ஒவ்வொரு உயிரையும் எப்படி வதைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை அருகிருந்து பார்த்த சாட்சியாக விபரிக்கின்றார் மாத்தளை வடிவேலன்.

இராமு தீபாவளிக்குத் தனது தோட்டத்திற்கு வருகிறான் இன்னொரு அவலச்சுவை கொண்ட கதையாகும். இராமு கொழும்பில் ஒரு சேரிப்பகுதி அறையில் தங்கியிருக்கும் இளைஞன். தோட்டத்தில் போராடியமைக்காகத் தகப்பன் பிணையின்றி ஜெயிலில் இருக்கப் பாட்டனார் பாரிசவாதத்தில் படுத்திருக்க இரு தங்கைகளும் தோட்டத்தில் பிழைப்பு நடத்த இவனும், தம்பி ராசுவும் அவ்வருடத் தேர்தலில் போட்டியிட்டவருக்குத் தோட்ட மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தந்து வெற்றியடைய வைக்கின்றனர். அவர் மந்திரி ஆனவுடன் இவர்களைக் கணக்கெடுக்காமலே போக கொழும்புக்கு வந்து சீமெந்துப்பை ஓட்டிக் கொடுத்து சீட்டுக்காசு சேர்த்து உழைக்கிறான் இராமு. ராசுவும் அவ்வாறே, கொழும்பில் தன் உழைப்பைக் கொட்டுகிறான். தீபாவளிக்குத் தாத்தாவைப் பார்க்க வருமாறு அழைக்க, அதற்கான பொருட்களை இருவரும் வாங்கிச் சேர்க்கின்றனர். தங்கைக்காக தம்பி ஓடர் கொடுத்த நகை கிடைக்கத் தாமதமாக அதைப் பெற்று வர ராசு போன ஒரு சமயத்தில் கொலன்னாவ குண்டு வெடிப்பு நிகழ்ந்து, அதன் பின்னரான காடையரின் வெறியாட்டத்தில் இராமு தமிழன் என்ற காரணத்தினால் கொல்லப்படுகின்றான். அவனது உழைப்புச் சூறையாடப்படுகிறது.

நாட்டில் தொடர்ந்த இனவாத யுத்தம் ஒரு மலையக இளைஞனின் வாழ்வை எவ்வாறு புரட்டிப் போடுகிறது என்பதை இக்கதை துலாம்பரமாக விளக்குகிறது.

இத் தொகுதியின் இறுதிக்கதை கும்பி லாம்பு. இக் கதையில் ராக்கன் தன் மனைவி அஞ்சலையை சவுதிக்கு அனுப்பி விடத் துடிக்கிறான். கசிப்புக் குடித்தே தன் வாழ்வைக் கரி ஆக்குபவன் அவன். அஞ்சலையோ தன் பிள்ளைகளைப் படிக்க வைத்து முன்னேற்றத் துடிப்பவள். வெளிநாடு போய் வந்து நல்ல நிலையிலுள்ள குடும்பங்களையும், வெளிநாட்டு அவலங்களால் திரும்பி வந்த பெண்களையும் ராக்கன் அறிவான். பாஸ்போட் எடுப்பதற்கான காலக் கெடுவன்று அஞ்சலை தன் விதியே என்று பாஸ்போட் எடுக்கத் தயாராகிறாள். அவ்வூருக்கு வரும் குறத்தி ஒருத்தி உன் வீட்டில் ஒரு உயிர் போகப் போகிறது என ஆரூடம் சொன்னதைக் கேட்டு மனம் குழம்பிய ராக்கன் மறு நாள் மனம் மாறி இனிமேல் தான் கசிப்புக் குடிப்பதில்லை எனச் சத்தியம் செய்கிறான். நேர்மறை விளைவைத் தருவதாக அமைகின்ற இக்கதை வாசகனுக்கு நிறைவில் ஒரு ஆறுதலைத் தருவதாய் அமைந்துள்ளது

ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால் இத் தொகுதியிலுள்ள சிறுகதைகளில் பெரும்பாலானவை அவலச்சுவை தரும் கதைகளாகவே உள்ளன. அவை அவ்வாறு அமைவதை உண்மையில் தவிர்க்கவும் முடியாது.


தாட்சாயணி

## மாத்தளை பெ. வடிவேலனின் 'வல்லமை தாராயோ' நூல் வெயியீடு

'கலைஒளி' முத்தையாபிள்ளை ஞாபகார்த்தக் குழு வெளியிட்டு, தமிழகத்தில் ஒரு இலட்சம் ரூபாய் இலக்கிய விருதினைப் பெற்ற மாத்தளை பெ.வடிவேலனின் 'வல்லமை தாராயோ' என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையில் இன்று 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ் ஸ்ரீ கஜன், தமிழன் பிரதம ஆசிரியர் இரா. சிவராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ், வடமேல்மாகாண முன்னாள் ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன், பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கல்வி அமச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராஜா, இந்து சமய கலாசார திணைக்களத்தின்; முன்னாள் பணிப்பாளர் க. சண்முகலிங்கம், நிதி இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், ஆகியோரும் கௌரவ விருந்தினர்காளக கலந்து கொள்வார்கள்.

பிரமுகர்களின் மங்கல விளக்கேற்றலுடன், செல்வி பிரியங்கா ஆன் பிரான்சிஸின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் வரவேற்புரையை கே. பொன்னுத்துரை நிகழ்த்த. தலைமையுரையை தொடந்து வாழ்த்துரைகளை ய. அநிருத்தனன் பணிப்பாளர் இந்து சமய கலாசார திணைக்களம், வீ விக்கரமராஜா முன்னாள் நிர்வாக செயலாளர் சுகாதார அமைச்சுப் பணிப்பாளர், 'சாகித்திய ரத்னா' தி ஞானசேகரன் பிரதம ஆசிரியர் ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை ஆகியோர் நிகழ்த்துவார்கள்,

வெளியீட்டுரையை பதிப்பாசிரியரும், ஆய்வாளருமான எச்.எச் விக்கிரம சிங்க நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெறுவார்.

நூலாய்வினை கிழக்குப் பல்கலைக்கழக கலாசார பீட தமிழ்க் கற்கைகள் துறை விரிவுரையாளர் கலாநிதி த. மேகராசாவும், இலக்கிய செயற்பாட்டாளரும் கவிஞருமான மேமன்கவி ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

ஏற்புரையை நூலாசிரியர் கலாபூஷணம் பெ. வடிவேலன் நிகழ்த்த, நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபன பகுதி நேர அறிவிப்பாளர் ஆர்.பி. யசோதரை தொகுத்து வழங்குவார்.

# 1960களில் விழித்தெழுந்த மலையக சமூகம்

**1960களில் மலையகத்தில் ஏற்பட்ட விழிப்புணர்வு பற்றிய பூரணமான விளக்கங்கள் இன்றைய பரம்பரையினருக்கு கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்புகள் குறைவு. இதனை நிவர்த்திப்பதற்காகவும், ஆவணப்படுத்துவதற்காகவும் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.**

பீ.மரியதாஸ்

அதற்கு முன்னர் சமூகம் பற்றிய சிந்தனையும், விழிப்புணர்வும் ஏற்படவில்லையா? இல்லை என்பது வரலாறு குறித்த அறிவீனம். சமூகப் பிராணியான மனிதனால் சமூகத்தைப் பற்றி சிந்திக்காமல் இருக்க முடியாது. வாழ் நிலையும், அதனை உருவாக்கிய காரணிகளும் அவனது சிந்தனையை தீர்மானிக்கின்றது. இதற்கேற்ப ஏற்படும் விழிப்புணர்வில் வேறுபாடுகள் இருக்கக்கூடும்.

இன்றைய மலையகத்தாரின் முன்னோர் இலங்கைக்கு வந்து நூறு ஆண்டுகள் கடந்த பின்னரே (1823 முதல் 1930 வரையான காலகட்டத்தில்) விழிப்புணர்வு துளிர்விடத் தொடங்கியது. 1930 களில் ஏற்பட்ட உலக பொருளாதார பின்னடைவு மலையகத்தார் உட்பட முழு இலங்கையர்களையும் பாதித்தது. இதனால் ஏற்பட்ட விழிப்புணர்வு அரசியல்,தொழிற்சங்க முனைப்புகளை முடுக்கி விட்டன. இடதுசாரி அரசியலும், தொழிற்சங்கங்களும் தோற்றம் பெற்றன. இடதுசாரித் தன்மையான நடேசஐயரின் தொழிற்சங்கம் தோட்ட மக்களிடையே இவ்விழிப்புணர்வை கொண்டு சென்றது. இலங்கை தோட்டத்தொழிலாளர் சங்கம் போன்ற இடதுசாரி கட்சி சார்ந்த அமைப்புகள் வர்க்க விழிப்புணர்வினை தூண்டிவிட்டன. இதன் விளைவாக தொழிலாளரிடையே போராட்ட முனைப்புகள் ஏற்பட்டன. கண்டி ஹேவாஹட்ட பகுதி முல்லோயா தோட்டத்தில் ஆரம்பமான தொழிலாளர் போராட்டம் படிப்படியாக புஸ்ஸல்லாவ, புபுரச, ரம்பொட, நாவலப்பிட்டி, ஹட்டன், பொகவந்தலாவ பகுதிகளுக்குப் பரவி, தொடர்ந்து, ஊவா, சப்ரகமுவ மாகாண தோட்டங்களுக்கும் பரவின. தொழிற்சங்க எழுச்சிப் போராட்ட காலமென இக்

யது இக்கட்டத்திலே யாகும். இதனால் ஏற்பட்ட எழுச்சி 1956, 58 இனக்கலவரங்கள் வரை நீடித்தது.

சிறுபான்மையோர் சீறி எழுந்த போதிலெல்லாம் ஆட்சியாளர்கள் அரச இயந்திரத்தின் உதவியோடு குண்டர்களை வைத்து ஒடுக்குவது வழமையான நடைமுறை. பாதிக்கப்பட்டோர் மீண்டும் எழுச்சி பெறுவதனை இவ்வாறு தொடர்ந்தும் தடுக்க முடியாமல் போனது.

இவ்வாறான பின்னணியின் கலவையாக மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் உருவாகி பின்னர் மலையக இளைஞர் முன்னணியாக மாற்றம் பெற்றது. இதற்கு ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி ஆசிரியராக இருந்த இர.சிவலிங்கம் மூலவராகவும், திருச்செந்தூரன் இணையாளராவும் இருந்தார். இத்தீபச்சுடர் வியாகபத்தோடு சுடர்விடத் தொடங்கியது.

சிவலிங்கம், செந்தூரன் ஆகிய இருவரும் தமிழ் நாட்டு பட்டதாரிகள். மலையத்தில் இருந்து உயர் கல்விக்காக அங்கு சென்றோரில் இவ்விருவரும் தனித்துவ போக்கினைக் கொண்டோராக இருந்துள்ளனர். இவ் இரட்டையர்களில் மூலவரான சிவலிங்கம் தமிழ் நாட்டின் அன்றைய செல்நெறியின் செழிப்பான பகுத்தறிவு, முற்போக்கு, சமூக சீர்திருத்த முனைப்புகளை சுமந்து வந்த செயற்பாட்டாளராக மிளிர்ந்தார். இருவரும் இவ்விழுமியங்களின் பரப்புரைக்கு ஏற்ற தளமாக ஆசிரியர் பணியை தேர்ந்தெடுத்தனர். அதனூடாக மாணவர்களுக்கு சமூக உணர்வினை பிரகாசிக்கச் செய்து, அவர்களின் ஊடாக தோட்ட இளஞர்களிடேயே அதனை விரிவுபடுத்தினர். இதன் தாக்கம் பிற பாடசாலைகளிலும் ஏற்படலாயிற்று. அது மற்ற பிரதேசங்களிலும் விரிவடைந்தது.

சிறு பொறி தீப்பிழம்பாக மாணவர், இளைஞர் என பரவியது. இந்த சமூக எழுச்சியில் பல மட்டத்தினரும் சங்கமமாகினர். சமூகம் அடுத்த கட்டத்தினை நோக்கி நகரத் தொடங்கியது.

1930களில் நடேச ஐயரின் இடதுசாரிப் பாங்கான தொழிற்சங்க முனைப்பு தோட்ட முதலாளிகளாலும் அவர்களது அடியாட்களாலும் அடக்கப்பட்டதை எதிர்த்து தொழிலாளர்கள் போராடியது ஆளும் கூட்டத்தினரை கிலிகொள்ள வைக்க, அதற்கு எதிரான வியூகங்களை வகுக்கத் தொடங்கினர். கூடவே வலதுசாரி போக்கினை வலுப் படுத்தும் வேலைகளையும் மேற்கொண்டனர். நடேச ஐயரின் தனி மனித முனைப்பு நாளடைவில் வலுவிழந்தது. எனினும் இடதுசாரி தொழிற்சங்கங்கள் வளர்ச்சி அடைந்தன.

இவ்வாறான பின்னணியில்தான் இலங்கை, இந்திய காங்கிரஸ் தோற்றம் பெற்றது. அது இன, மத, ஜாதிக் கூறுகளின் கலவையாக வளர்ச்சி அடையத் தொடங்கியது. இந்தக் கூறுகள் அதன் பலமாகவும், பலவீனமாகவும் இருந்தன. இ.இ.கா. இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மற்றம் பெற்றது தொழிலாளர்களின் ஈர்ப்பினைக் கூட்டியது.

சமூக உணர்வு மேவிய இளைஞர்கள் அதனை வலுவும்,வளமும் உள்ளதாக வளர்க்க முனைந்தனர். பெரிசுந்தரம், வேலுப்பிள்ளை, நடேசன், செல்லையா, சோமசுந்தரம், ராஜலிங்கம், அஸீஸ் என பல தரப்பட்டோர் இதில் சங்கமித்தனர். H .H .விக்ரமசிங்க, மு.நித்தியானந்தன் ஆகியோர் வெளியிட்ட வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல்: தலைவர்களும், தளபதிகளும்' என்ற நூலில் இதனைப்பற்றிய விளக்கங்கள் உண்டு. பெரும் எடுப்போடு பயணிக்கத் தொடங்கிய அவ்வமைப்பு சுயநல, வலதுசாரி வல்லூறுகளின் கைகளில் சிக்கிக் கொண்டதோடு தடம் மாறி செல்லத் தொடங்கியது. தோட்ட முதலாளிகளின் ஒடுக்குமுறைகளில் இருந்து தொழிலாளர்களை காப்பதற்காக உருவாக்கப்பட்ட அவ்வமைப்பு தோட்ட முதலாளிகளின் கைகளில் சிக்கிக் கொண்டது.

பண பலத்தாலும், ஆளும் வர்க்க ஆதரவினால் அது சக்திமிக்க அமைப்பாக மாறியது. வர்க்கம் தவிர்த்து, இன, மத, ஜாதி உணர்வுகளின் மூலமாக அது வளர்ச்சி பெற்றது,இந்த அமைப்பின் வளர்ச்சிக் காலத்தில்தான் மக்களின் குடி உரிமையும், வாக்குரிமையும் பறிக்கப் பட்டு, வாழ்வாதாரம் முடமாக்கப்பட்டது.

மலையக மக்களின் போராட்ட உணர்வு மழுங்கடிக்கப் பட்ட கட்டத்தில் 1960இல் இவ்விழிப்புணர்வு தோற்றம் பெறுகின்றது. 1960களில் ஏற்பட்ட அதிர்வுகளை ஆற்றுப்படுத்தும் காரணி

கட்டத்தினைக் குறிப்பிடலாம். இதனால் அச்சமடைந்த முதலாளிமாரும், அரசாங்கமும் அதிர்ச்சியுற்று அவற்றை ஒடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டன. கொடூர அடக்கு முறைக்கு ஆளான தொழிலாளர்கள் எதிர்த்து தாக்குதல்களை செய்தபோது, அவை இன்று போலவே பயங்கரவாத செயல்கள் எனக் கூறி அரச படையினராலும், குண்டர்களாலும் ஒடுக்கப்பட்டதோடு, நீதிமன்றங்களும் அவர்களுக்கு சார்பாக நடந்து கொண்டன.

1948 இல் குடியுரிமையும், தொடர்ந்து வாக்குரிமையும் பறிக்கப்பட்டு அரசியல் அனாதையாக்கப்பட்ட பின்னர் போராட்ட உணர்வோடு திராவிட முன்னேற்ற கழகத்தின் செல்வாக்கு பரவத் தொடங்கியது. முற்போக்கு, பகுத்தறிவு, சீர்திருத்த கொள்கைகளை இவ்வியக்கம் பரப்பியது.தோட்டப் புற படித்த இளைஞர்களையும், பிறரையும் கவர்ந்த இவ்வியக்கம் போராட்ட உணர்வினையும் விதைத்தது. ஊவா மாகாண தோட்டப் பகுதிகளில் இதன் செல்வாக்கு அதிகரித்து காணப்பட்டது. தோட்டங்களில் மன்றங்கள் உருவாகத் தொடங்கி



களின் பின்னணி இதுதான். தேசிய உணர்வுப் பிரவாகத்தினை ஏற்படுத்திய 1956 அரசியல் மாற்றம் தமிழ், முஸ்லிம் மக்களிடமும் பாதிப்புகளை ஏற்படுத்தின.


மலையகத்தில் மாற்று அரசியலைத் தேடும் நிலையினை இது ஏற்படுத்தியது. சமூக மறுமலர்ச்சியாகக் கருத்தக்கூடிய கூடிய இவ்வோட்டத்தில் படித்த இளைஞர்கள் ஆர்வத்தோடு ஈடுபட்டனர். வலதுசாரி அரசியல் சார்பு மரபுக்குப் பதிலாக இடதுசாரி அரசியலை ஆதரிக்கும் மரபு உருவாகியது. அடிப்படை உரிமைகளைப் பறித்து, அடையாளங்களை நிர்மூலமாக்கிய ஐ.தே.கட்சியினை நிராகரித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும், இடதுசாரி காட்சிகளையும் ஆதரிக்கும் மனோபாவம் உருவானது. இதேகாலத்தில் இ.தொ.காவில் இருந்து பிரிந்து அஜிஸ் தலைமையில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் உருவாக்கியது. முன்னைய அமைப்பில் இருந்த முற்போக்கு சிந்தனை கொண்ட பலர் இதில் இணைந்தனர்.

(தொடர் அடுத்த வாரம்)




# சர்வ ஆளுமையின் அடையாளம் சர்தார் கான்

மௌலவி ஜே. அப்துல் மஜீட் பாக்கவி



பதுளை நகர் பெற்றெடுத்த தவப் புதல்வர்,
பாரோங்க பணி புரிந்த நவச் செல்வர்,
மதுகரமாய் மொழிகின்ற நேசகர்,
மகோன்னத மனம் கொண்ட தேசிகர்,
புதுப் புனலாய் பாய்ந்திட்ட புரவலர்,
ஸீலானிய்யா கலைகூடத்தின் காவலர்,
எது வந்த போதும் சளைக்காத வித்தகர்,
மாணவர் ஏற்றத்தை மனம் கொண்ட சித்தகர் ,
பொதுப் பணி, அறப் பணி, நம் பணி என்றவர்,
அல் குர்ஆன் நபி வழியே தம் வழி கண்டவர்,
இது தான் இறை பணி என்றே பயின்றவர்,
இதயத்தில் இசுலாத்தை இனிதாக விதைத்தவர்
சர்வ ஆளுமையின் அடையாளம் சர்தார் கான்,
சீரான அவர் வாழ்வை என்றும் அறிந்தோம் காண்,
கர்வம் குரோதம், நெருங்காத அறிவுச் சமுத்திரம்,
காலத்தால் அழியாத காவியமே அவர் சரித்திரம்,
அல் குர்ஆன் நபி வழியில் வாழ்ந்திட்ட நெஞ்சம்,
கூறக் கூற குறையாத சேவையே அவர் தஞ்சம்,
வறுமை, துன்பம் துயரை வென்ற வாழ்வு,
சோதனை சூழ்ந்த போதும் அடையாத தாழ்வு,
சர்தார் கான் நாமம் மாறாத நாமம்
சீரான நற்பணிகள் கோர்த்திட்ட தாமம்,
கற்பித்தலில் துறைபோன பல்துறை பாசறை,
மாணவர் மனந்தனிலே நிதம் வாழும் நேசர்!
அற்புதமாய் இமாம் பணியில் காட்டிட்டார் பாதை,
அடுக்கடுக்காய் நற்கருத்தை நவிலுகின்ற மேதை,
கற்பனையில் வளமிகுந்த அறிவுக் களஞ்சியம்,
மாணவரை கரையேற்றுவதே அவர் இலட்சியம்,
சொற்படியே நடக்கின்ற அவர் கொண்ட நேர்மை,
எத்துறையிலும் மின்னி நின்ற அறிவினது கூர்மை,
உற்றார் மற்றோர் மனங் கவர்ந்த ஓர்மை,
நபி வழி சுன்னாவை சறுக்காத சீர்மை!
நாவலராய் முழங்கிட்ட மிம்பர் மேடை,
சொல் மழையாய் பொழிந்து நீக்கிட்ட மனக்கோடை,
காவலராய், மாணவரை காத்திட்ட பெருமை
காலத்தால் அழியாது; என்றென்றும் அவர் அருமை
பாவலராய் பேசி விரிந்திடும் உம் சிரிப்பு,
பாரெல்லாம் உம் புகழை பரவச் செய்த விரிப்பு,
ஆவலராய் அறிவுப் பணி செய்த சர்தார் கான்
அகலாது அவர் நாமம் என்றும் மனதில் தான்!
புவனத்தில் பணி செய்த உத்தம புத்திரரே
சுவனப் பூங்காவில் மணம் வீச வாழ்த்துகிறேன்
பவனத்தில் கலந்திட்ட மணம் போன்ற உம் சேவை
கவனத்தில் கொள்வோம் உம் பணி மறவோம்!!

# வலிகளின் மடல்

பொத்துவில் அஜ்மல்கான்

மீண்டுமோர் துயரம்,
மீண்டெழா பயணம்,
தீருமோ வலிகள்
வழிகளைக் காண.
தொடரும் போரினால்
தடவும் கரங்கள்
சிதைந்து போனது
இன்று.
முடியுமென கூற
முன்பு வெடித்துப்
போன குண்டினால்.
தாகம் தீர்க்க
நினைத்த தாய்மையின்
பாலூட்டும் மார்புகள்
சிதைந்து போனது
சிதறிக் கிடக்கும்
குழந்தையினை பார்க்கும்
போது.
உறக்கம் கொள்ள
தேடிய விழிகள்
வழிகளைத் தேடிக்
கொண்டு இருக்கிறது
வலிகளோடு நகரும்
பொழுதில் கடக்க.
ஆசையோடு விளையாடிய
உறவுகள் அசையாமல்
கிடக்கிறது இரக்கம்
கொண்ட அரக்கனால்.
இன்னும்
அழுது கொண்டே
இருக்கிறேன் யாராவது
எழுந்து பேசுவார்களென்று.




# வழிகாட்டிகள்

இணுவில் வாகீசன்

வழிப்பாதை வழிகாட்டும்
வழிகாட்டிகள் திசைகாட்டிகள்
வழியில்லை என்ற போதும்
வழியமைக்க வழிகாட்டும் குரு
மனதில் ஒளிஉண்டு தெளிவுண்டு
மனதெல்லாம் மாணவர் சிந்தை
மனம் விட்டு கதைத்து மாணவர்
மனப்பாரம் நீங்க வழி சொல்வார்
வழி சொன்னவர் முகத்தை தினம்
வழிபடுவோம் மனதிருத்தி
வழிபடுவோம் இறைவனிடமும்
வழிதந்தவர் வாழ்வு சிறக்க

# ஒரு பித்தனின் பிதற்றல்!

கலவரத்தையும்
மலர் வனத்தையும்
ஒருசேர உணரும்
நிலவர நிலையெனது
புழுதி மண் உன்
புன்னகையில்
கனவும் கூட
வாழ்ந்த அனுபவமாய்
இதயம் இன்னும்
எண்ணியபடி
இருபதுக்குள்தான்
இயங்குகிறது
இடி முழக்கங்களுக்குள்
இருப்பான பின்னும்
இலையுதிர் காலமும்
வசந்தகாலமாய்
நீ வந்து போகும்
வழியெங்கும்
உன் செருக்கு நடை
என் விழி வீதியில்
மழையுடன்
கடந்து செல்லும்
மயக்கம் என்னுள்
இன்னும் நம்புவது
ஏமாற்றமாக இருந்தாலும்
அறிவற்று அலைந்தபடி
பிடித்ததை பின்தொடர்கிறது
பித்துப் பிடித்து மனம்



ரோஷான் ஏ.ஜிப்ரி

# உப்பாற்றை அரிக்கும் கடல்

மபாஸ்

மகாவலி ஆறு ஊடறுக்கும்
முனையில் கடல் கலக்கும்,
தலைமைத்துவம் பேசி
சமூகத்தை ஏமாற்றும் மந்திரம்.
மந்திரியின் வாகனங்கள்
கால்தூக்கி பறக்கும் தந்திரம்
இளைப்பாற வரும் இளமைக்கு
இழவு தெரியாது காற்று வீசட்டும்.
இயலாமை என்று பேசிட்டோம்



இறுதியில் மை பூசிட்டோம்.
மணலை விழுங்கியது
நெய்தல்,
அணைக்கட்டுமில்லாது
அரிக்கட்டும்.
குறிஞ்சாக்கேணி பாலத்தின்
ஓலத்தில் கண்டு கொள்ளும்
கோஷம் சொல்லிட்டோம்.
பல்கலைக்கழக கல்லூரி
காட்டட்டும்
அடிக்கல்லுடன் முல்லையாகட்டும்
எல்லை இடப்படாமலே...
செல்லட்டும்
ஆழியின் பழி தீர்க்கும்
வழிமுறைக்கு
வடிவமைக்க உப்பு சேர்த்து
விடட்டும்.

# அது ஒரு காலம்

வறண்டு போன
பாலைவனம் போல
வறுமை நிறம் சிவந்து நிற்க
இருண்டு போன
நிழல்ச்சோலை
அந்த வேம்புமரம்
என்னைத் தாங்கும் மரம்...
வேப்பம் பழத்தின்
விதைகளைச்
சாப்பிடுவதுபோல....
எனது ஒவ்வொரு நிமிடமும்
கலைந்து செல்லும்
நீரற்ற பயிர் போன்றது
அந்தக் காலம்
ஏழ்மையும் ஏக்கமும்
என்னை ஏளனம் செய்யும்
தூய நட்புக் கூட
உப்பாய்க் கரைந்து போகும்
சொந்தங்கள் பந்தங்கள்
சோதிக்க வரும்
வாய் மொழி மறந்தவளாய்
வார்த்தைகள்
தொலைந்தவளாய்
அந்த வேம்புமர நிழலில்
சாய்ந்திருப்பேன்
வேப்பங்குச்சிகள் என்
விரல்களுக்கிடையில்
பேனாவாய் மாறும்
அந்த மண்ணில்
கவிகள் தீட்டும்
வேப்பம் மலர்கள்
கவிவரிகளை மூடும்
இயற்கையின்
இதமான தென்றல்
வேப்பம் மரத்தில்
முட்டி என்
கன்னங்களைத்
தழுவிச் செல்லும்!
வேப்பங் கிளைகள்
சலசலக்கும்!
பறவைகள் குந்தி
கலகலக்கும்!
காகமும் குயிலும்
போரடிக்கும்
கனிவும் குரலும்
ஜோராயிருக்கும்


மாஜிதா தவ்பீக்
மருதமுனை



# ஒளிப்பாதை மருளானதே!

பூவெலிகட
விந்தை உலகம்
இன்றோ
விஞ்ஞானத்தால்
ஏற்ற இன்பம்
காண முனைகிறது
அமைதி உலகம்
அன்றோ
சாத்வீக நெறியால்
மெய்ஞானப் பேரின்பம் கண்டு
நிம்மதி நீடித்த ஆயுள்
பெற்றே மானசிக சுவனமாக
திளைத்து மகிழ்ந்தது.
எதுகை மோனை போல்
ஆணினமும் பெண்ணினமும்
ஒருவரை மற்றவர் வெறுக்காது
பெருமிதமாக கருதும் நிலையால்
பணிவன்பு மேலோங்கி
உள்ளங்கள் பூரித்திருந்தன.
குழந்தைகள் தெய்வீக அன்பால்
வியப்பாக பார்த்தனர் அன்று
ஆனால் இன்றோ
சுமைகளாகி
வயதை மீறிய அழுத்தம்
கொடுக்கும் அவலம்
எதிர்காலம் நலவாக வேண்டும்
என்ற பேராசையில்
பெண்கள் கண்ணியம்
கட்டுப்பாடு இழக்கின்றனர்
ஆண்களின் ஆளுமை
மன இச்சைகளின்
ஆளுகையானதால்
மனிதனோ,
மறுமை மரணம்
மறந்த நிலையில்
பேராசை கொந்தளிப்பால்
உலகம் அநித்தியம்
என்பதை மறந்து
உழன்றழிகிறான்...
மீண்டும் உலகம்
நல்லெழுச்சி பெறாதா
சாத்வீக நெறிமுறை
தளைத்தோங்காதா?
ஏக்கத்துடன் விடை தேடுகிறது
என் எழுத்து

முஹம்மத் ஷஃப்ரி



# உபசரிப்பு

திக்குவல்லை கமால்

சலசலவென இசைபரப்பிக்
குளிரருவி செய்திசொல்ல
அழைப்பதுவும் யாரைத்தானோ ?

கலகலவென தமிழ்மொழிந்து
வேல்விழியார்
குடமெடுத்துக் கூடுவதும்
அதற்குத்தானோ ?

வண்டுறங்கும் பூங்காவில்
புள்ளினங்கள்
வாழ்த்துப்பா மொழிவதுவும்
எதற்குத்தானோ?

கண்டதனைப் பளபளக்கும்
தளிரசைந்து
தாளமிடும் மோகமதும்
அதற்குத்தானோ?

தேன்சிந்தும் மலர்வாசம்
தனைச்சுமந்து
தென்றலது தவழ்ந்துவரல்
எதற்குத்தானோ?

வான்பூக்கள் முறுவலித்து
மங்கையென
வெட்கமுடன் விழிமூடல்
அதற்குத்தானோ?

பொன்மலரின் மென்னிதழில்
தூங்குபனி
பிரியவிடை பெறக்காத்தல்
எதற்குத்தானோ?

மண்ணுலகின்
இருட்போர்வை மெல்லமெல்ல
மாயமெனத் தான்விலகல்
அதற்குத்தானோ?

அற்புதமாய் அழகுபதி
பொற்புறவே
அடிவானில் கிளம்பியெழும்
செங்கதிரோன்
பொற்கதிர்கள் பூத்துவரும்
பவனிக்காக
புதுமைதிகழ் இயற்கையவள்
உபசரிப்போ?



# வாசிப்பு மாதம்

குருமண்வெளி ரவி.

ஒக்டோபர் மாதமதை
ஓதுக்கியே தந்தார்கள்
வாசிப்பு பழக்கத்தை
வளத்தெடுப்பதற்காய்
வாசிப்பால் உயர்ந்தவரை
வரலாறு கூற நிற்கும்
சிறையிலே வாசித்தார்
தூக்கம் இல்லாமல் வாசித்தார்
தூக்கு மேடையிலே வாசித்தார்
அறுவைச் சிகிச்சை முன் வாசித்தார்
அதனாலே உயர்ந்தார்கள்
வாழ்க்கையிலே சிறந்தார்கள்
புரட்டப் புரட்ட
புதிய செய்திகளைத் தரும்
புத்தகங்கள் படித்துத்தான்
புரட்சிகள் செய்தனர்
புரட்சிகள் ஆட்சிகளை
புரட்டியது வரலாறு
புத்தியை வளர்த்திடவும்
புதுமைகள் படைத்திடவும்
வாசிப்பை எப்போதும்
வளப்படுத்திடுவோம் வாசிப்பு மாதம்

# இறைபணியில் இணைந்த மகன்

மௌத்தை
நினைத்துக்கொண்டு
மறுமைக்காய் பணிசெய்தாய்
இறைபணியில் இணைந்து
ஈமானோடு பணிபுரிந்தாய்.
இன்னல்கள் வந்தபோதும்
இறைவனிடம் ஒப்புவித்து
இன்னல் தீர
வெற்றி கண்டாய்.
நல்லாசானாய் தினம்
நற்பணி செய்து
மாணவர் மனங்களில்
நிறைந்து நின்றார்.
கோபம் இல்லாமல்
கோடூர முகமில்லாமல்
நன்மை தீமையறிந்து
நல்ல பணிசெய்தாய்.
காணும் போதெல்லாம்
சலாம் சொல்லியென்னை
சாச்சா என்றழைப்பாய்
சாச்சியை வந்துபார்ப்பாய்.
உண்மை அன்பால்
உறவுகளை பேணி
அல்குர்ஆன் வழியில்
ஆலோசனை முன்வைப்பாய்.
உம்மாவின் அருகிலமர்ந்து
உபதேசம் செய்வாய்
உம்மி, நபிவழியில்
உணர்வுபூர்வமாய்
மறுமைபற்றி.
ஊரே ஒன்றுகூடி
உன் நல்லடக்கத்தில்
நிறைந்து நின்றகாட்சி
உன்இறைபணிக்கு சாட்சி.
மண்ணறையில் உனக்கு
மகத்துவமான வாழ்வுமலர
ஐவேளை தொழுகையிலும்
ஆண்டவனிடம்
கேட்கின்றேன்.
மகனே வலீத் முகம்மத்
மறுமையில் உனக்கு
மகத்துவமான வாழ்வு
மலர்ந்து மணம்வீச
அல்லாஹ்விடம்
பிரார்த்திக்கின்றேன்.

**(2023.07.24 ஆம் திகதி இரவு இறைவனடி சேர்ந்த ஆசிரியர் எம்.எம்.வலீத் முகம்மதின் மறை வையொட்டி)**



கலாபூஷணம்
பி.எம்.எம்.ஏ.காதர்

# தற்கொலை வேண்டாம் தங்கங்களே...

தற்கொலை வேண்டாம் தங்கங்களே
தரணியை ஆளும் செல்வங்களே
தணிவாய்ப் பழகி வாழ்ந்திடுவோம்
தக்கதாய்த் தீர்வு கண்டிடுவோம்
ஒவ்வொரு உயிரும் உயர்வானது தான்
இறைவனின் படைப்பில் தரமானது தான்
தற்கொலை என்பது தீர்வு அல்ல
தாழ்வு மனநிலை இனி வேண்டாம்
இகத்தினில் இன்னல்கள் ஏராளம்
பகுத்து நீ நடந்திட்டால் கடந்திடலாம்
பாதையில் முட்களும் தாராளம்
தவிர்த்திட இலக்கை நீ அடைந்திடலாம்
கவலைகள் சேர்த்து வைக்காதே
காதல் தோல்வியில் துவளாதே
வாட்டும் வறுமையில் அழ வேண்டாம்
விரக்தியில் தன்னிலை இழக்க வேண்டாம்
மனதினில் இருப்பதைப் பகிருங்கள்
அடக்கி வைப்பதைத் தவிருங்கள்
இணக்க சூழலை உருவாக்குங்கள்
இயைந்து வாழப் பழகுங்கள்
நம்பிக்கை இழந்து நலிய வேண்டாம்
நிராகரிப்பில் நிரந்தரமாய் உடைய வேண்டாம்
மனச்சோர்வில் மகிழ்ச்சி தொலைக்கக் கூடாது
மகத்தான வாழ்வை இழக்கக்கூடாது
மனம் விட்டுப் பேசி மகிழ்ந்திருங்கள்
மனித மாண்பை உணர்ந்திடுங்கள்
அழுத்தத்தை அழுந்தத் துடைத்திடுங்கள்
அறிவுரை கேட்டு நடந்திடுங்கள்
வாழ்க்கை பற்றிய பயம் வேண்டாம்
வாதப்பிரதிவாதங்கள் இனி வேண்டாம்
மனதின் நலனே மகா பாக்கியம்
மகிழ்ச்சியாக வாழ்வதே நம் நோக்கம்



Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

# CBL சமபோஷ மாகாண பாடசாலை விளையாட்டுப்போட்டி அநுராதபுரம் மத்திய மகாவித்தியாலாயம் சம்பியன்ஸ்

CBL சமபோஷ இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இந்நாட்டில் உள்ள எதிர்கால சந்ததியினரை போஷாக்கு மிக்கவர்களாகவும், குணம் மிக்கவர்களாகவும் உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் வர்த்தக நாமமாகும். தேசத்தில் உள்ள சிறுவர்களுக்காக முன்னெடுத்துவரும் சமபோஷ 'சிகரம்தொடும் சிறார்கள்' திட்டத்தின் கீழ் சிறுவர்களின் கல்வித் திறமை, விளையாட்டுத் திறமை, போஷாக்கு, படைப்பாற்றல் மற்றும் நற்பண்புகளை வளர்ப்பதற்கு தலைமைத்துவம் வழங்கி வருகிறது. இதில் எதிர்கால சந்ததியினர் உடல்ரீதியான மற்றும் உளரீதியான ஆரோக்கியம், விளையாட்டுத் திறமையை வளர்த்துக் கொள்வதற்கு சமபோஷவின் வலுப்படுத்தலுடன் நடத்தப்படும் '2023 சமபோஷ பாடசாலை விளையாட்டுப் போட்டி' வடமத்தி, வடமேல், கிழக்கு, ஊவா மற்றும் தெற்கு ஆகிய ஐந்து மாகாணங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.



இதில் வடமத்திய மாகாண சம்பியன்ஸ் பட்டத்தை அநுராதபுரம் மத்திய மகாவித்தியாலம் வெற்றிகொண்டதுடன், இரண்டாவது இடத்தை தம்புத்தேகம மத்திய மகாவித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

# Cool Water நிறுவனத்தின் விளம்பர முகவராக அஸ்லம் சஜா.! ஒப்பந்தமும் கைச்சாத்து

(நிந்தவூர் குறூப் நிருபர் சுலைமான் றாபி)



இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான Cool Water நிறுவனமானது, தனது வணிக நாமத்தின் விளம்பர முகவராக இலங்கை கபடி அணியின் தலைவரும், நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீரரும், நிந்தவூர் அல்மதீனா மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலையின்) விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பு ஆசிரியருமான எம்.ரி. அஸ்லம் சஜாவினை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

இந்த நிகழ்வானது அண்மையில் Cool Water நிறுவனத்தின் காரியாலயத்தில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எம். காசிம் தலைமையில் இடம்பெற்றது.

இலங்கை கபடி தேசிய அணியின் தலைவரான அஸ்லம் சஜா, இலங்கை மண்ணின் புகழை சர்வதேசமெங்கும் கொண்டு செல்கின்றமையினால், இலங்கை பெருமையடைவதுடன், இந்த ஒப்பந்தத்தின் மூலம் அஸ்லம் சஜாவின் கபடி விளையாட்டிற்கு தேவையான முழு வசதிகளையும் வழங்க Cool Water நிறுவனம் முன்வந்துள்ளது

அத்துடன் அஸ்லம் சஜாவிற்கு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இடம்பெறும் கபடி போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கு Cool Water நிறுவனம் ஒப்பந்தமும் செய்துள்ளது.

# CIOB Green விருதுகள் 2023 இல் பிளாட்டினம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட Brandix

இலங்கையின் நிர்மாணத் துறையில் நிலைபேறாண்மை தொடர்பான சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியிருந்தமையை கௌரவிக்கும் வகையில், அண்மையில் நடைபெற்ற CIOB Green விருதுகள் 2023 இல் Brandix க்கு "நிலைபேறாண்மைக்கான தலைமைத்துவம் விருது" என்பதன் கீழ் பிளாட்டினம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் 519,042 எனும் மாபெரும் பசுமையான கட்டட சதுர அடிப்பரப்பை Brandix கொண்டுள்ளது.

சூழலுக்கு நட்பான நிர்மாணத்துக்கு சிறந்த தொழிற்துறை நியமத்தை இந்த சாதனை பதிவு செய்திருந்தது. நிறுவனம் தன்வசம் ஐந்து சான்றளிக்கப்பட்ட கட்டடங்களை கொண்டுள்ளதுடன், அவற்றில் (5) பசுமையான கட்டடங்களையும், அவற்றில் இரண்டு (2) LEED பிளாட்டினம், இரண்டு (2) LEED Gold மற்றும் ஒரு (1) GreenMark பிளாட்டினம் போன்றன அடங்கியுள்ளன.




பூஜ்ஜிய காபன் நிலையை எய்திய உலகின் முதலாவது ஆடை உற்பத்தியாளராகவும் நிறுவனம் திகழ்கின்றது. அவற்றில் ஆறு தொழிற்சாலைகள் பூஜ்ஜிய காபன் வசதிகளைக் கொண்டுள்ளன.

இலங்கையில் கட்டட மற்றும் நிர்மாணத்துறை நிபுணர்களுக்கான முன்னணி நிபுணத்துவ அமைப்பாக The Ceylon Institute of Builders (CIOB) திகழ்கின்றது.

நிலைபேறான வழிமுறையை பின்பற்றுகின்றமைக்கான ஆற்றலை வெளிப்படுத்துகின்றமைக்காகவும், சூழல் பாதுகாப்பு, சமூக பொறுப்புணர்வு மற்றும் பொருளாதார மீட்சி ஆகியவற்றில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வெளிப்படுத்துகின்றமைக்காகவும் வெற்றியாளர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

# லோயல்டி வாடிக்கையாளர்களுக்கு வெகுமதி அளிக்கும் சிங்கர்

இலங்கையின் பாரிய நுகர்வோர் சில்லறை விற்பனையாளரான சிங்கர் ஸ்ரீலங்கா, அதன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சிங்கர் ரெட் ' ஹதவதே தாகி' [''உள்ளத்தின் பரிசு''] பிரத்தியேக லோயல்டி அதிர்ஷ்ட சீட்டிழுப்பினை அண்மையில் நிறைவு செய்தது. லோயல்டி வரிசையின் பலன்களை அனுபவிக்கும் அதே வேளையில், வாடிக்கையாளர்கள் அற்புதமான பரிசுகளை வெல்வதற்கான ஒரு நம்பமுடியாத வாய்ப்பை வழங்கியது.




ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 31, 2023 வரை நடைபெற்ற இந்த அதிர்ஷ்ட குலுக்கல் சீட்டிழுப்பு நாடு முழுவதும் உள்ள அனைத்து சிங்கர் லோயல்டி வாடிக்கையாளர்களுக்கும் திறந்ததாக அமைந்தது . நாடு முழுவதும் உள்ள எந்த சிங்கர் காட்சியறையிலும் தங்களுடைய ரெட் லோயல்டி புள்ளிகளை மீட்டெடுப்பதன் மூலம், வாடிக்கையாளர்கள் தாமாகவே இந்த சீட்டிழுப்பில் பங்குபற்றினர்.

ஒவ்வொரு மீட்டெடுப்பும் வாடிக்கையாளர்களுக்கு பரிசில்களை வெல்வதற்கான வாய்ப்பை வழங்கியது, Deluxeமற்றும் Premier வாடிக்கையாளர்கள் ஒருமீட்புக்கு ஒரு வெற்றி வாய்ப்பைப் பெறுகிறார்கள் மற்றும் VIP வாடிக்கையாளர்கள் ஒரு மீட்புக்கு இரண்டு வெற்றி வாய்ப்புகளைப் பெறுகிறார்கள்.

ஹதவதே தாகி' [''உள்ளத்தின் பரிசு''] குலுக்கல் சீட்டிழுப்பில் மனதை கவரும் பல பரிசில்கள் வழங்கப்பட்டன.

பாரிய பரிசில் வெற்றியாளரான பேராதனையைச் சேர்ந்த பேராசிரியர் மில்டன் ராஜரத்ன, ரூ. 1 மில்லியன் பெறுமதியான சிங்கர் மர தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற குறிப்பிடத்தக்க வெகுமதிகளை வென்றெடுத்தார்.

# ஏ பீ மயூரி நட்சத்திர விருதுகள்

## 2023 இல் சிறந்த கலைஞர்களுக்கு அங்கீகாரம்

மதுவம் மற்றும் வெதுப்பக உற்பத்திகள் துறையில் உலகளாவிய முன்னணி வர்த்தக நாமங்களில் ஒன்றான ஏ பீ மயூரி லங்கா [AB Mauri Lanka] ''ஏ பீ மயூரி நட்சத்திர உயர் விருதுகள் 2023'' ["AB Mauri Star Awards 2023 "Rising Above ]என்ற சிறப்பு நிகழ்வில் முக்கிய பணியாளர்களின் சிறப்பை அங்கீகரித்துள்ளது.

இந்நிறுவனமானது அசோசியேட்டட் பிரிட்டிஷ் /புட்ஸ் பிஎல்சி உடன் இணைந்து 30க்கும் மேற்பட்ட நாடுகளில் 52 ஆலைகளில் முன்னிலையில் உள்ளது, ஏ பீ மயூரி அனைத்து இடங்களிலும் தொழிற்துறை மற்றும் கைவினைஞர் வெதுப்பகர்களை மேம்படுத்தும் முதற்தரமான பொருட்களை வழங்குவதில் வலுவான அர்ப்பணிப்பைப் பேணுகிறது.

இவ்வாறு சிறப்பாகச் செயற்பட்ட அர்ப்பணிப்புள்ள பணியாளர் குழுவினரைப் பாராட்டுவதற்காக இந்த ஆண்டு விருதுகள் இரவு நிகழ்வினை நடத்தியது.



ஏ பீ மயூரி நட்சத்திர விருதுகள் 2023, ஏ பீ மயூரியின் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் சிறந்த பங்களிப்பைக் கொண்டாடியது. அண்மையில் பீஎம்ஐசிஎச் இல் [BMICH] நடைபெற்ற இந்த நிகழ்வானது, ஏ பீ மயூரி குழுமத்தின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரிப்பது மட்டுமன்றி, திறமைகளை வளர்ப்பதற்கும் சிறந்த கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும் நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டியது.

ஏ பீ நட்சத்திர விருதுகள் 2023 பல்வேறு பிரிவுகளில் விதிவிலக்கான திறன்களை அங்கீகரித்துள்ளதுடன் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட சாதனைப் பகுதிகளை அங்கீகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விருதுகள் குழுவின் அர்ப்பணிப்பு, மற்றும் திறன்களை எடுத்துக்காட்டும் வகைகளாகப் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

**Dialog's Innovation Challenge**

# டிஜிட்டல் எதிர்காலத்தை உருவாக்குவதற்கு புத்தாக்குனர்களுக்கும் அழைப்பு

இலங்கையின் முதன்மை தொலைத் தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி Dialog Innovation Challenge (டயலொக் புத்தாக்கசவால்) இல் இணையுமாறு அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்புவிடுத்துள்ளது.

இது டிஜிட்டல் மாற்றம் மூலம் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கும் தேசத்தின் டிஜிட்டல் எதிர்காலத்தை உருவாக்குவதற்குமான ஒரு தேசிய முன்னெடுப்பாகும்.

மேற்படி தேசிய முன்னெடுப்பானது தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகள் மூலம் இலங்கையின் தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களின் வாழ்வை வளப்படுத்துவதற்கான பொதுவான இலக்கை நோக்கி அவர்களின் புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலை வழிநடத்துவதற்கு நாட்டின் சிறந்த சிந்தனையாளர்களையும் தொலைநோக்குப் பார்வையாளர்களையும் அழைக்கின்றது.

முன்மொழியப்படும் தீர்வுகள் புதுமையின் கலங்கரை விளக்கமாக அமைவதுடன், சந்தையை மறு வடிவமைக்கின்ற அல்லது ஏற்கனவே உள்ள செயல்முறைகளை உயர்த்தும் திறன் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

பங்கேற்பாளர்கள் முடிவின் எந்த நிலையிலும் உள்ள தீர்வுகளை சமர்ப்பிக்கலாம். அது ஒரு முன்மாதிரி, குறைந்த பட்ச சாத்தியமான தயாரிப்பு அல்லது முழுமை பெற்ற தீர்வாக அமையலாம். AI, machine learning, IoT, computer vision, blockchain,




data analytics, robotics மற்றும் cloud computingஇதுபோன்ற டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் மாற்றும் சக்தியை பங்கேற்பாளர்கள் மாற்றத்திற்கான வினையூக்கிகளாகப் பயன்படுத்துவதால், இத் தீர்வுகளின் நோக்கத்தை எந்த வரம்புகளும் கட்டுப்படுத்தாது.

16 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கையர்களும் https://dialog.lk/ic பார்வையிடுவதன் மூலம் தனிநபர்களாகவோ அல்லது மாறும் ஆற்றல் சார்ந்த அணிகளாகவோ பங்கேற்கலாம்.

இந்த தேசிய முன்னெடுப்பின் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான வெகுமதிகள் காத்திருக்கின்றன.

அதற்கமைய விலை மதிப்பற்ற வழிகாட்டல் மற்றும் டயலொக்கின் விரிவான புத்தாக்க சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் வளங்களுக்கான அணுகலுடன் ரூ. 5 மில்லியன் பணப் பரிசு வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும்.

# வெற்றிகரமாக நடைபெற்ற CEO BUSINESS FORUM



ருஸைக் பாரூக்

இலங்கை மலேசியா வர்த்தக கவுன்சில் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட CEO BUSINESS FORUM ஷங்ரிலா ஹோட்டலில் கவுன்சிலின் தலைவர் எச்.எம்.கே.எம். ஹமீஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதி மலேசிய நாட்டின் வெளியுறவு அமைச்சர் Dato Seri (Dr.) Zambry Abdul Kadir மற்றும் வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஆகியோர் உரையாற்றினார்.

இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் மற்றும் பரஸ்பர வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குவதற்கும் வளர்ப்பதற்கும் சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என இரு நாட்டு அமைச்சர்களும் தமதுரையில் குறிப்பிட்டனர்.

நிகழ்வில் Dialog Axiata PLC இன் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க, எபிக் டெக்னாலஜி நிறைவேற்றுத் தலைவர் கலாநிதி நயநா தெஹிகம மற்றும் HYRAX Oil நிறுவனத்தின் நிர்வாக பணிப்பளார் Dato Hazimah Zainuddin ஆகியோர் இலங்கை மற்றும் மலேசிய வர்த்தக நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடினர்.

# CodeGen உடன் கைகோர்த்து இலங்கையில் நிலைபேறாண்மையை துரிதப்படுத்தும் CDB

பசுமையான பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் பிரகாரம், Citizens Development Business Finance PLC (CDB), e Shift Concept Center ஐ அறிமுகம் செய்துள்ளது.




CDB இன் நிலைபேறாண்மை நிகழ்ச்சிநிரலின் பிரகாரம், நிறுவனத்தின் நிலைபேறான போக்குவரத்து தீர்வுகளில் கவனம் செலுத்தும் வகையில் இந்த நிலையம் அமைந்துள்ளது. CodeGen International (Pvt) Ltd உடன் CDB ஏற்படுத்திக் கொண்ட கைகோர்ப்பு உடன்படிக்கையின் பிரகாரம் இந்தத் தீர்வை வழங்க முன்வந்துள்ளது.

இந்த உடன்படிக்கையில் CDB இன் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மஹேஷ் நானயக்கார மற்றும் CodeGen இன் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி. ஹர்ஷ சுபசிங்க ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், சர்வதேச மற்றும் உள்நாட்டு பங்காளர்களுடன் CDB இணைந்து, இலங்கையில் EVs மற்றும் சூரிய வலுத் தீர்வுகளை ஊக்குவிப்பதற்காக ஹரித கைகோர்ப்பை ஆரம்பித்துள்ளது.

இந்த கைகோர்ப்பினூடாக ஏற்படுத்தப்பட்ட முக்கிய படிமுறையாக e Shift Concept Center நிலையம் அமைந்திருப்பதுடன், CodeGen International இன் துணைப் பிரிவான chargeNET உடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றது.

இதனூடாக, நிலையத்தில் காணப்படும் Charge செய்யும் பகுதிகளுக்கு வலுவூட்டப்படுகின்றன. இந்த கைகோர்ப்பினூடாக, EVs களுக்கு பரிபூரண சூழல்கட்டமைப்பு ஊக்குவிக்கும் வகையில் CDB இன் நிலைபேறாண்மையான போக்குவரத்து தீர்வுகள் துரிதப்படுத்தப்படுவதுடன், அறிவு பகிர்வு, EV சார்ஜ் செய்தல் மற்றும் EV மாற்றம் போன்றவற்றில் கவனம் செலுத்தப்படுகின்றது.

கொழும்பு 7, Greenpath பகுதியில் அமைந்துள்ள e Shift Concept Center இனால், நிலைபேறான போக்குவரத்து தீர்வுகளில் ஆர்வமுள்ள நபர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது, பொது மக்கள் மத்தியில் EVs மீது ஆர்வத்தை தூண்டுவது போன்றன மேற்கொள்ளப்படும்.

# பெரிய மனசு

காலைப்பொழுது. இன்னும் எட்டுமணியாக வில்லை. வீட்டு முன் படிக்கட்டில் நின்று அமைதியான மனதோடு பார்த்தான் சாதாத் அலி. எதிர்ப் பக்கமாக அமைந்துள்ள வீடுகள் தெரிந்தன. வீடுகளின் கூரைக்கப்பால் தென்னை மரங்கள் ஆடியசைவது தெரிந்தது. அதற்கும் அப்பால் நீலமும் வெள்ளையுமான வானம் தெரிந்தது.

கடந்த முப்பத்தைந்து வருடங்களாக இவை எவையும் இல்லாமல் போகவில்லை. அவற்றைப் பார்த்துப் பரவசமடைய நேரம்தான் இல்லாமல் போயிருந்தது. பள்ளிவாசலில் இருந்து அதிகாலையில் அதான் ஒலி கேட்டதும் எழுந்துவிடுவான் அவன். சுறுசுறுப்பாக எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொண்டு, காரியாலயத்தில் எட்டு முப்பதுக்கு முன் கையொப்பம் போடுவதற்காக பைக்கில் ஏறிவிடுவான்.

பரீட்சைகளில் சித்தியடைந்து பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டால், இனி அரசாங்க உத்தியோகம் பார்ப்பதுதான் அக்கால கட்டத்தில் கௌரவமாகக் கருதப்பட்டது. இரண்டு வருடங்கள் கூட நகரவில்லை.

இலிகிதர் சேவைப் போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு சேவையில் இணைந்தான். மாத்தறை மாவட்டத்தில் பல இடங்களிலும் கடமையாற்றினான். முப்பத்தேழு வருட சேவையின் பின் முகாமைத்துவ உதவியாளராக ஓய்வுநிலை அடைந்து இப்போதைக்கு ஒரு மாதம்தான். ஓய்வு பெற்றுவிட்டால் சிலபேர் பள்ளிவாசல் தைக்காக் களைக் கட்டிப் பிடித்துக்கொள்வார்கள். இன்னும் சிலர் சமூக சமய இயக்கங்களில் வழிகாட்டிகளாகவும் பேச்சாளர்களாகவும் மாறிவிடுவார்கள். இன்னும் சிலர் விவாகப் பதிவாளர்களாக, ஜேபி பதவிகளுக்காக ஓடித் திரிவார்கள். இப்படி ஏதோ ஒன்றில் இயங்காதவர்கள், பென்ஷன் எடுத்த பொலிஸ்காரனின் நிலைக்குத்தான் தள்ளப்பட்டு விடுவார்கள்.

சாதாத்அலி சற்றே வித்தியாசமாக யோசித்தான். மாதக் கணக்கில் சற்று முன்பின்னாக ஓய்வெடுத்த கிராம சேவகர் ஹுஸைன் மஹ்தியையும் சமூர்த்தி முகாமையாளர் இஸ்திகாரையும் சந்தித்து உரையாடினான். வித்தியாசமான சில சமூகப் பணிகளை முன்னெடுப்பதாகப் பட்டியல் படுத்தினர். அதில் முதலிடத்தை வகித்தது பாடசாலை நூலகம். ஓ.எல் வரை மாத்திரமே உள்ள ஓர் இடைநிலைப் பாடசாலை அது.

பாடசாலை அதிபர் அதற்கு முழுமையான ஆதரவை வழங்கியதோடு, ஒரு அறையை ஒதுக்கித் தருவதாகவும் தெரிவித்தார். புத்தகங்கள், திருத்தி எடுக்கக்கூடிய தளபாடங்கள், ராக்கைகள், இப்படியாக உத்தேச நிதித்திட்டமிடலும் தயாரிக்கப்பட்டது. ஊர் மக்களிடம் வாசிப்பின் முக்கியத்துவத்தை விளக்கி நிதி வசூல் செய்வதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

"பள்ளி தக்கியாவெண்டா கண்ணப் பொத்திக்கொண்டு குடுப்பாங்க...கந்திரிகிந்திரி என்டா வாயத் தொறந்துக்கொண்டு குடுப்பாங்க...கிரிக்கட் மெச் ஃபுட்போல் மெச்செண்டாலும் கைய நீட்டி நீட்டி குடுப்பாங்க... லைப்ரரி என்டா இது தேவையாண்டு கேப்பாங்கள்" இஸ்திகார் சொன்ன யதார்த்த நிலை இது.

"கஷ்டம்தான். ஆனா பெறுமதியான விஷயம். இன்ஷா அல்லாஹ் ட்ரய் பண்ணோம்" மஹ்தி பின்வாங்கவில்லை.

மூவரது முகங்களிலும் அணுக வேண்டியவர்களின் பெயர்ப் பட்டியல் விரிந்தது.

★★★ ★★★ ★★★

தபாற்காரனின் பெல் சத்தம் கேட்டது. ஒரு பத்தடி நடந்தால் தான் கேற்றடிக்குப்போகலாம். இரண்டு பாய்ச்சலில் பாய்ந்து சென்ற காலம் என்றோ கடந்துவிட்டது.

கடிதத்தை எடுத்துக் கொண்டு திரும்பிவிட முடியவில்லை. அங்கே அஸீன் தாத்தா வந்துகொண்டிருந்தாள். அதற்காக கேற்றடியில் நின்று கதைத்துக் கொண்டிருக்க முடியுமா என்ன?

"மிச்சம் நாளக்கிப் பொறகு கண்ட. உள்ளுக்கு வாங்கொளே " ஊருலகத்துச் செய்திகளை அறியும் ஆவல் அஸாரியாவுக்கு இல்லாமல் போகுமா.

இருவரும் மெல்லமெல்ல நடந்தனர். கால் வலிக் காலத்தவர்கள் அல்லவா!

"பிலிங்க மரம் இன்னேம் ஈக்கியெனா? பளிக்கொடத்துக்குப் போறகாலத்தில இதால பிலிங்க பிச்சி உப்புக் கட்டிய ஒரச்சொரச்சி நக்கினது நெனவு வாரடி."

"நானுமொருநாள் அஸ்கியா, நுஸ்கியா எல்லாரும் வந்தீந்த டைமில பேசிப்பேசி பிலிங்க திண்டு ராவு பொகுத்து வலி புடிச்சிட்ட. பொறகு தொண்டில்லே வாட்டில கொணுபெய்த்துப் போட்ட என்ன...அதுசரி இப்பிடி இரீங்கொளே. நானிந்த காயிதத்த வெச்சிட்டு வாரன் " என்றவாறு வராந்தா கதிரையைக் காட்டிவிட்டு உள்ளே சென்றாள்.

வீட்டைச் சுற்றிக் கண்களைச் சுழற்றிய அஸீன் தாத்தாவுக்கு கறிவேப்பிலை மரம்தான் பெரிதாகத் தெரிந்தது. மருந்து மாயத்துக்குத் தேவைப்படும் குறிஞ்சா, கற்றாழை, நகச்சுற்ற இலை போன்றவையும் ஆங்காங்கே தெரிந்தன.

"இந்தாங்கொ கசட்ட கொஞ்சமும் கருப்பட்டியும். நானெண்டா வெறும் கசட்ட தான் குடிக்கிய "

"அய்சரி மாப்பிள இல்லயா ஊட்டில?"

"இப்பதான்போன. இனி ளொஹரு தொழுதிட்டுத் தான் வாறொண்டும்"

"ஓடீ மாப்பிள மாரு ஊட்டுக்குள நிண்டா கத்தக் கரச்சல்தான்"

இருவரும் எதையெதையோவெல்லாம் நினைத்து குலுங்கிக் குலுங்கிச் சிரித்தனர்.



"ஓண்ட மாப்பிளேம் பென்ஷன் எடுத்திட்டாமே. அப்ப ஒனக்கு நல்ல வாசிதான்."

"கெடச்ச சம்பளமும் கொறஞ்சிட்ட. அது வாசியா?"

"சம்பளம் கொறஞ்சத்துக்கி லச்சக் கணக்கில கெடக்கியாம். அந்தக் கெழட்டு பீபி டீச்சருக்கே முப்பத்தாறு லட்சம் கெடச்செண்டால் பாத்துக்கோ"

" என்ன சொல்றீங்க?"

"அந்த அமீர் மாஸ்டர், நல்ல பஸந்தா மகள மாப்பிளேக் குடுத்த பென்ஷன் எடுத்துத்தானே... ஓபீஸ் வேலக்கிப் போன உம்முக்குலுஸட மருமகன், வேஹல்லேல பென்ஷன் சல்லிக்கி காணி துண்டொண்டு எடுத்துப் போட்டு அஞ்சு வருஷமும் ஆகல்ல. இப்ப கோடி பொறுமதியெண்டா லேசா ? "

அஸாரியாவால் நம்ப முடியவில்லை" சல்லி கொஞ்சம் கெடக்கியாம். எப்பிடீம் ஒரு வருஷமாலும் போகுமாம்" பேச்சுவாக்கில் கணவன் சொன்னதை அவள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லைதான்.

"பேசிப்பேசீந்து சரிவாரல்ல. பகலக்காக்கோணுமேன். எறச்சி மீன்... பருப்பு கெழங்கு... பச்சகொச்சிக்கா தக்காளிக்கா... வீட்டில எதுவுமே இல்ல. சுறுசுறெண்டு இந்த மழக்கூத்தால மனிசனுக்கு ஒண்டுமே நடக்குதில்ல." என்றவாறு பிடவையைச் சரி செய்துகொண்டு அஸீன் எழுந்தாள்.

"ஏத்தியன் பொகப்போறோ.கொஞ்சம் நில்லுங்கொ பிலிங்க கொஞ்சம் பிச்சித் தாரன். "

"ஆ அப்ப கறிவேப்பிலையும் கொஞ்சம் ஒடச்சித்தா"

அஸீன் தாத்தா கேற்றைக் கடக்கும் வரை பார்த்துக் கொண்டிருந்த அஸாரியாவுக்கு, 'மாப்புள மாரு ஊட்டுக்குள நிண்டா கத்தக் கரச்சல்' என்று சொன்னது ஞாபகம் வந்தபோது சிரிப்பை அடக்க முடியவில்லை.

★★★ ★★★ ★★★

கைபேசியை ஓஃப் செய்துவிட்டு சாய் கதிரையில் அமர்ந்த சாதாத் அலிக்கு அவனது பெரியப்பாவின் பேரனின் வருகைக்கான காரணம் என்னவாக இருக்குமென்று புரியவில்லை.

அவன் படித்துக் கொண்டிருக்கிறானா அல்லது ஏதாவது தொழில் செய்கிறானா என்பதும் தெரியவில்லை. உண்மையில் அப்படி நெருக்கமான தொடர்புகூட இருக்கவில்லை. பரம்பரைச் சொத்துப் பகிர்வில் பெரியப்பா நேர்மையாக நடந்துகொள்ளவில்லை என்று வாப்பா இருக்கும் போது சொன்னது அவனுக்கு ஞாபகம்.

'சரி வரட்டே பாக்கோம்' என்று சாய்ந்துகொண்டிருந்த சாதாத்அலி தன்னையறியாமலேயே தூங்கிப் போய்விட்டான்.

"அஸ்ஸலா மலைக்கும் " என்ற குரல் வாசற்படியில் ஒலித்தபோது திடுக்கிட்டு விழித்தான் அலி.

"ஆ வாங்க வாங்க. மிச்ச நாளேப் பொறகு கண்ட. சாச்சா எப்பிடியன் சொகமா?"

" ஓ நல்ல சொகம். மகன் வெளிநாட்டுக்கு பொகவெண்டு ரெடியாகிய. யாவாரமெல்லம் மிச்சம் டல்லான காலம். எல்லமே கொழப்பம். வெளிநாட்டில ரெண்டு, மூணு வருஷம் நிண்டிட்டு வந்தா நல்ல மெண்டுதான் எனக்கும் படுகிய " சாச்சா நிதானமாகப் பேசினார்.

"ஓ இப்ப எல்லாம் தொறந்துட்டீக்க. ஏஜென்ஸிகாரனியள் ஏத்தி அனுப்புவானியள். அங்க பெய்த்து தின்னேம் வழில்லாம மனிசர் படுகிய பாட்ட டீவீயெல்ல ஒரே காட்டிய " நிலைமை இப்படித்தான் என்று எடுத்துச் சொன்னான் அலி.

" நீங்க செல்லியது மெய்தான். ஏன்ட கூட்டாளிமாரியள் அங்க வேல செய்த. அவங்க எல்லம் செட் பண்ணித் தாரென்டு செல்லீக்கி." இக்பால் ஜான் தெளிவாகப் பேசினான்.

"பெரிசா யோசின பண்ண வான. எல்லாத்தேம் நான் பொறுப்பெடுக்கியன். ஒருலெச்சம் ரெண்டு லெச்சம் கேட்ட காலத்தில போறது கஷ்டம். இப்ப போறது லேசு. ஆனா பெரிய கணக்கு கேக்கிய" சாச்சா மேலும் உறுதியளித்தார்.

"ஏன்ட கைலேம் கொஞ்சமீக்கி. ஒரு அஞ்சிலெச்சம் கொறவு. போனா ஏன்ட மொதலாவது வேல எடுத்த கடனெல்லம் குடுக்கியதுதான். நம்பித் தந்தவங்கள ஏமாத்தப்படாது. பரக்கத்தில்ல"

வாப்பாவுக்கு சற்றும் குறையாமல் மகனும் பேசினான். என்ன செய்வதென்று சாதாத் அலிக்குத் தோன்றவில்லை.

"சரி நல்லொரு விஷயம்தான். நான் கோலொன்டு தாரனே "

"அல்ஹம்துலில்லாஹ் "

இருவரும் விடைபெற்றுச் சென்றனர்.

★★★ ★★★ ★★★

சாகிர் அலியைக் கால்நடையாக வீதியில் கண்டால் அவன் பள்ளிவாசலுக்குப் போகிறான் அல்லது போய் வருகிறான் என்ற அர்த்தம்.

இவரை இடை நடுவில் பிடித்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் சத்தார் ஹாஷிம் நண்பர்களின் இலக்கு. இருவரும் முறையே சிடி டெக்ஸ், சிடி டொய்ஸ் உரிமையாளர்கள். இருவரும் ஒருவருக் கொருவர் உதவிக் கொள்பவர்கள்.

இருவருமாக சாதாத் அலிக்கு ஸலாம் சொல்லி சிரித்துக் கதைத்துக் கைக்குள் போட்டுக் கொண்டனர். இனி ஊருக்குள்ளே உலாவரவேண்டி இருந்தால் பலரோடும் சிநேகிதத்தை வளர்த்துக்கொள்ள வேண்டிய தேவையும் அவனுக்கிருந்தது.

"அப்பிடியே எங்கட கடையடிக்குப் பெய்த்து ஒரு பிளேன்றி குடிக்கோம்." சத்தாரின் அழைப்பு.

இந்த நேரத்தில் அது வெறும் பிளேன்றியாக இருக்காது, கூடவே சுடச்சுட ஒரு கடியும் இருக்குமென அவன் ஊகித்தான்.

சிடி டெக்ஸ் ஒரு சுமாரான கடை. இரண்டுபேர் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அதற்குச் சற்று முன்னெதிரே சிடி டொய்ஸ் தெரிந்தது. சிறுவர் விளையாட்டுப் பொருட்களெல்லாம் தொங்கிய வண்ணமிருந்தன. கடையின் பிற்பகுதியில் ஒரு மேசையும் நான்கு கதிரைகளும் கிடந்தன. கூடிப் பேசுவதற்கேற்ற சிறு ஒழுங்கு. சுடச்சுட இஞ்சிப் பிளேன்றியும் ரோல்ஸும் வந்து சேர்ந்தது. சொல்லமுன்பே சதாத் அலியின் கைநீண்டது.

"நீங்க பென்ஷன் எடுத்தீக்காமெண்டு கேள்விப்பட்ட" சத்தார் ஆரம்பித்தான்.

"பென்ஷனெடுக்க இன்னமொரு பத்து வருஷமாவது பொகுமெண்டுதான் நான் நெனச்சீந்த " ஹாஷிமின் வியப்புரை.

தான் இன்னும் இளமை என்ற கருத்துப்பட யாராவது ஏதாவது சொன்னால் அதைவிட ஆனந்தம் சதாத் அலிக்கு இல்லை.

"இந்தக் கடயாவாரம் அப்பிடியே இருக்கச் செல்லே ரெண்டுபேரும் சேந்து ஒன்லைன் பிஸ்னஸொண்டுக்கு ஏற்பாடு செஞ்சிக்கொண்டீக்கீய. மூணு மாஸ்தக்கி முந்தி ரெண்டு பேரும் சைனாக்கும் பெய்த்திட்டு வந்த." மிக உசத்தியான முன்னுரையை வழங்கினான் சத்தார்.

"அல்லாவெண்டு எறங்கினால் வெத்திதான். நம்பிக்கயான... விஷயம் வெளங்கின... ஒரு பாட்னர் எங்களுக்குத் தேவயாஈந்த. எல்லாம் சட்டப்படி எழுத்துமூலம் நடக்கும். கொஞ்சம் யோசிச்சிப் பத்து செல்லுங்க ஸேர்" ஹாஷிம் நறுக்கென்று முடித்துவைத்தான்.

மஃரிபு வரையில் பேச்சு வார்த்தை தொடர்ந்தது.

"இன்ஷா அல்லாஹ் பேசோம்" என்றபடி சதாத் அலி எழுந்தான்.

பச்சையொளிப் பிரகாசம் எங்கும் பரவுவது போலிருந்தது.

மூவரும் மீண்டும் பள்ளிவாசலை நோக்கி....

★★★ ★★★ ★★★

மெல்லிய குளிர்க்காற்று வீச ஆரம்பித்திருந்தது. இத்தனைக்கும் இரவு ஒன்பது மணிதான். சாப்பாட்டு நேரம். அதன்பின்பு கொஞ்சநேரம் டீவீ பார்த்துவிட்டு, பத்து மணியாகும்போது நித்திரை. இதுதான் சதாத் அலியின் ஒழுங்கு. விடிய வேலைக்குப் போகும் காலத்து ஒழுங்கை மாற்றிக்கொள்வது கஷ்டமாக இருந்தது.

" தாரோ வார போலீக்கு " வீட்டுக்குள் இருந்தபடியே கேற்றடியைப் பார்த்துக்கொண்டு சொன்னாள் அஸாரியா.

" ஆம்பிளயா பொம்பிளயா ?"

" பொம்பிளயள் போலீக்கி "

" அப்ப நீங்க ஸ்தோப்புக்குப் போங்கோ"

சற்று நேரத்தில் வந்தவர்களும் அஸாரியாவும் கலகலப்போடு உள்ளே வந்தனர். அந்தக் கலகலப்பு நெருங்கிய பழக்கக்காரர் என்பதை உணர்த்தியது.

" ஆ உம்மு தாத்தா... மிச்ச நாளேப் பொறகு?"

"ஓ விடிஞ்சா அந்திபட்டா இனி இடுமுச்சினில்லாத வேலவெட்டி. ம் மகளட புள்ளயளால தப்பேல. உம்மும்மா உம்மும்மா எண்டு என்னத் தின்னப்போற. உம்மாக் கணக்கில்ல. என்னோடேதான். இனி சொகமா ஈக்கியா? இப்ப பென்ஷன் எடுத்திட்டாமெண்டு கேள்விப்பட்ட" உறவுமுறை இல்லாவிட்டாலும் பழக்க முறை மேலானதென்பதை உம்முதாத்தா வெளிக்காட்டினார்.

"இப்ப ஒங்கட வாப்பாம் இல்ல. எங்கட வாப்பாம் இல்ல. அவங்க ரெண்டு பேரேம்போல கூட்டாளித்தனமா இந்தூரில வேற தாராலும் ஈந்தில்ல"

"அதெண்டா மெய்தான். அந்த மொஹப்பத்த நாங்க கடசிவரேம் வெச்சிக்கொளோணும்."

இடையில் குறுக்கிட்ட அஸாரியா "இவரு ஒரே நெனவூட்டியவா" என்று கொஞ்சம் பலப்படுத்தினாள்.

"பேசிப்பேசி டைம் போர. ம்..வந்த விஷயத்த சதாத்தோட செல்லோனேன். எங்கடுட்டுக்கு அடுத்தூடு. சின்னோரு ஊடுதான். அந்த மனிசன் உப்புக் கிரிந்த. ஊட்ட வித்திட்டு அங்க பொகப் போறாம். எங்களோட உசிருமாதிரி. மகளட பொம்புளப் புள்ளயள் வளரியேன். எப்பிடிச்சரி எடுத்துக் கொண்டா நல்லம்"

அஸாரியாவுக்கி இப்போதுதான் மீற்றர் பிடிபட்டது.

"ஓ நல்லந்தானே. சவுதீல நிக்கிய மகனோட செல்லி, பாத்துப் பாத்து ஈக்காம எடுத்துப் போடுங்க "விளங்கியும் விளங்காததுபோல சாதாத் அலி சொன்னார்.

"மகன் கோல் பேசீன. ஓங்களோட, மம்மது மாமோட, ஸெய்ன் சாச்சோட, எல்லாரோடேம் செல்லச்சென்ன. அந்தப் பொடியன் கூட்டம் குடும்பமெண்டு கொஞ்சமான சல்லி செலவளிக்கியா. ம் எதுக்கும் கொஞ்சம் யோசின பண்ணிப் பாத்து ஒதவி செய்ங்கொ " என்றபடி சுவர் மணிக்கூட்டைப் பார்த்துப் பார்த்து உம்மு தாத்தா எழும்பினாள்.

"எல்லாம் ஹைறாகும். நாளக்கி நான் அந்தப் பொகத்துக்கு வாரனே"

அப்படியே போய் கேற்றை மூடிவிட்டு வந்த சதாத் அலியின் கண்களில் தூக்கம் நிரம்பியிருந்தது.

★★★ ★★★ ★★★

அன்று சுபஹு தொழுதுவிட்டு வரும்போது கையோடு சுருட்டாப்பம் கொண்டு வருவதற்கும் மனைவி உள்ளேயிருந்து கோப்பிக் கோப்பையோடு வருவதற்கும் சரியாக இருந்தது.

இருவரும் பேசிப்பேசி குறைந்தது ஒரு மணித்தியாலத்தைக் கடத்தும் நேரமாக இது மாறியிருந்தது. சதாத் அலி ஓய்வுபெற்றபின் இப்படி நேரமாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

"ஒரு காலத்திலேம் வராத ஆள்களெல்லம் இப்ப ஒங்கள தேடித்தேடி வாராங்க. எனக்கெண்டா வெளங்கல்ல." இதுபற்றிய தெளிவு அவளுக்குத் தேவைப்பட்டிருந்தது.

"பென்ஷன் எடுத்தா கோடிக்கணக்கில சல்லி குடுத்தனுப்பியெண்டு எல்லாரும் நெனச்சிக் கொண்டீக்கியபோல. எனக்கும் புதினமா ஈக்கி" அவன்கூட நினைத்துப் பார்த்திராத விடயம்தான் இது.

"கோடிக் கணக்கில இல்லாட்டீம் லச்சக் கணக்கிலயாவது கெடக்கியா? ஒரு பத்துப் பதினஞ்சாயிரம் கெடக்குமெண்டுதான் நான் நெனச்சீந்த. செல்லுங்கொளே எத்தின லெச்சம் கெடக்கியன்? " அஸாரியா விட்டபாடில்லை.

" அது இப்பவே கெடக்கியல்ல. ஒரு வருஷமாலும் போகும். எப்பிடீம் ஒரு முப்பத்தெட்டு லச்சம் கெடக்கும் போல "

"என்னல்லா அவளவு கெடக்கியா? நம்பேலவேன். இது தெரிஞ்சுதான் ஒத்தரொத்தரா போலின் போட்டு வார. ஒத்தரயாலும் நம்பவாண. அவனியள் தரப்போறேமில்ல நீங்க கேக்கப் போறேமில்ல. இவனியள்ட அகப்புட வாண. எங்களுக்கு இன்னும் எத்தின வேலவெட்டி ஈக்கன். எல்லாரும் ஊடு வாசல ஒடச்சொடச்சிக் கெட்டிய. எங்கடூடு இன்னும சீ மயோட்டுக் கூர. நாளக்கே பாஸக் கூட்டிக்கொணுவாங்கொ. இதூப் பொறகு வரட்டும் பாக்க தாருசரி. கேள்வி கொஞ்சம் கேக்கியன் "

பேய்பிடித்ததுபோல் அவளது முகமே மாறியிருந்தது. அவன் பேச்சுக் கொடுக்கவில்லை.


★★★ ★★★ ★★★

அண்மையில் ஓய்வு பெற்றவர்களான சாதாத் அலி, ஹுஸைன் மஹ்தி, இஸ்திகார் ஆகியோர் ஒன்றுகூடி சமூக வேலைத் திட்டம் தொடர்பாக அலசி ஆராய்துவிட்டு கலைந்துபோக அதிக நேரமாகவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

திக்குவல்லை கமால்

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 91



திரு/திருமதி.செல்வி ........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ........................................
........................................
........................................
.................... ....................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 91
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 91

### இடமிருந்து வலம்

1. பொது மக்கள் தங்கிச் செல்லும் விடுதி
4. வித்து
6. இழிவுபடுத்தும் வகையிலான பேச்சு (திரும்பியுள்ளது)
7. ஒரு தானியம் (குழம்பியுள்ளது)
8. பயத்துடனான மனக் கலக்கம்
10. இப்போது இதன் பாவனை குறைந்து விட்டது.
11. ரௌடி திரும்பிவிட்டான்
13. உறுதியானது (குழம்பியுள்ளது)
14. சாப்பிடத் தூண்டும் உணர்வு
16. சாதுவான வனவிலங்கு
17. இடைவெளி விட்டுத் தொடுத்த மலர்மாலை
19. இதுவும் ஒரு ஆபரணம் (குழம்பியுள்ளது)
21. ஒலி எழுப்பாத சிரிப்பு
22. மன்னனானான் இவன் ஒரு கொடை வள்ளல்

### மேலிருந்து கீழ்

1. ஒரு ஆபரணம்
2. திக்கு
3. இதுவும் ஒரு தானியம் (குழம்பியுள்ளது)
4. ஒன்றைப்பற்றி அறிந்துகொள்வதற்கு உதவும் குறிப்பு
5. பெண்
7. காணிக்குரிய உரிமைச் சாசனம் (குழம்பியுள்ளது)
9. இளைஞன் குழம்பிவிட்டான்
12. இந்தியாவின் பெரும் நகரங்களில் ஒன்று
13. அடித்து ஒலி எழுப்பக்கூடிய வட்ட வடிவ வாத்தியக் கருவி
15. திருமணமாகாத பெண் (கீழிருந்து மேல்)
16. உன்னதத் தன்மை அல்லது பெருமை
17. கரும்புச் சாறு பிழிந்து எடுத்தபின் எஞ்சியிருப்பது
18. காலின் அடிப்பகுதி (தலைகீழ்)
20. குதிரை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 90

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. தீபாவளி
4. ஆவல்
7. மைதிலி
8. புதினம்
9, ஆந்தை
10. ஆம்
11. எளிது
13. சய
14. கைதி
15. ஆல்
17. மார்கழி
19. மனம்
21. தலைப்பு
22. களிறு
23. புது

**மேலிருந்து கீழ்**

1. தீமை
2. பாதி
3. வலிந்து
4. ஆதி
5. வனம்
6. ஆம்பல்
8. புதையல்
11. எதிர்மாறு
12. மாளிகை
15. ஆழி
16. வனப்பு
18. கள்ளி
19. மலை
20. தும்பு
21. தனி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 90

### பரிசு பெறுவோர் விபரம்

முதலாம் பரிசு ரூ. 500.00
**பி.நடேசன்,**
என்.எஸ். ரஜீவ்,
பிரதேச செயலகம்,
முசலி, மன்னார்

இரண்டாம் பரிசு ரூ. 350.00
**எஸ்.எச்.எம். ஜிப்ரி,**
இல, 155/32
மொஹிடீன் மஸ்ஜித் வீதி,
மருதானை, கொழும்பு

மூன்றாம் பரிசு ரூ. 150.00
**எம்.எம்.சஸாத்**
76/E/ 1 அல் ஹம்ரா வீதி,
மருதமுனை

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.எச்.சி.என். ஹம்தா** வெலிகம
2. **அயனா மஸீர்,** நாகொல்லாகொட
3. **என். டபிள்யூ.எப். ஷனாஸ்,** துல்ஹிரிய
4. **எப்.ஆர்.ஏ. ஷக்கூர்** மடவள பஸார்
5. **கோபிநாத் ஹரிஷேத்** கல்முனை
6. **கே. புண்ணியநேசன்,** காரைதீவு
7. **என்.கே, வேணி,** பலாங்கொடை
8. **செ.ஞானராசா,** திருகோணமலை
9. **ரஜினி புண்ணியமூர்த்தி** மட்டக்களப்பு
10. **எம், ஏ. பாத்திமா சமா,** கிண்ணியா 06

'நெளஸர் பெளஸி' கல்வி நிலைய ஏற்பாட்டில்

# கொழும்பு மாவட்ட மாணவ, மாணவிகளுக்கு இலவச கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள்

அஜ்வாத் பாஸி



கல்வித்துறையில் மாணவர்களை சிறந்த முறையில் வழிகாட்ட வேண்டும் என்ற தூரநோக்கில் 'நெளஸர் பெளஸி' கல்வி அபிவிருத்தி நிலையம் உருவாக்கப்பட்டு இலவசமான முறையில் மாணவ, மாணவிகளுக்கு எந்த கொடுப்பனவுமின்றி இலவச கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகளை (IT) வழங்கி வருவதாக கல்வி நிலைய ஸ்தாபகரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பிருமான நெளஸர் பெளஸி வாரமஞ்சரிக்கு தெரிவித்தார்.

கொழும்பு, மருதானையில் இயங்கி வரும் மேற்படி கல்வி நிலைய நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஆரம்பமாக, கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு எமது கல்வி நிறுவனம் மாணவர்கள் மத்தியில் கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கொழும்பு நகரைச் சூழ வாழுகின்ற தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த வறிய மாணவர்களை கல்வித்துறையில் முன்னேற்ற வேண்டும் என்ற அடிப்படையில் மேற்படி கற்கை நெறியை முன்னெடுத்து வருகிறது.

முதலில் ஆண்டு 09, 10, 11 ஆகிய வகுப்புகளில் படிக்கின்ற பாடசாலை மாணவர்களை இணைத்து அவர்களுக்கு பாடசாலை பாட விதானத்தை அடிப்படையாகக் கொண்டு, தகவல் தொழில்நுட்பத்துறையில் (IT) சிறந்த முறையில் வழிகாட்டல்களை வழங்கி வருகிறோம்.

இன்று எமது கல்வி நிறுவனத்தில் ஆண், பெண் அடங்கலாக சுமார் 200 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்துறையில் பயின்று வருகிறார்கள். மேலும் 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர விண்ணப்பித்திருக்கிறார்கள். தற்போது கற்கின்ற எமது மாவட்டத்தை சூழவுள்ள பகுதிகளைச் சேர்ந்த மூவின மாணவ, மாணவிகளும் மிகவும் சிறப்பாக முழுமையான பாதுகாப்புடன் கல்வி பயின்று வருகிறார்கள்.

ஒவ்வொரு குடும்பத்திலும் தகவல் தொழில்நுட்பத்துறையில் ஒரு மாணவனையாவது உருவாக்க வேண்டும் என்ற நீண்ட எதிர்பார்ப்புக்கு மத்தியிலேயே நான் செயற்பட்டு வருகிறேன். தொடர்ந்தும் எதிர்காலங்களில் கொழும்பின் சில பகுதிகளிலும் எமது நிறுவன கிளைகளை உருவாக்கி எதிர்கால மாணவ சமூகத்திற்கும் சிறந்த சேவைகளை வழங்கி தேவையேற்படின் வெளிநாடுகளிலும் அவர்களுக்கு தொழில்வாய்ப்பை இலவசமாக பெற்றுக்கொடுக்க எனது நிறுவனம் நடவடிக்கை எடுக்குமெனவும் ஸ்தாபக தலைவர் நெளஸர் பெளஸி வாரமஞ்சரிக்கு மேலும் தெரிவித்தார்.




**Marriage Proposals**
in the
**Sunday Observer**
Is the best way to fulfil
your Future Dreams

VEHICLE VALUATION REPORTS
ACCEPTED BY LEASING AND FINANCE COMPANIES, BANKS, GOVERNMENT & NON- GOVERNMENTAL INSTITUTIONS
AA CEYLON
CALL:-
Automobile Association of Ceylon
40, Sir M.M.M. Mawatha, Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 214)

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### வெற்றிடம்

### சமையற்காரர் பதவி

**கீழுள்ள பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

கல்வித் தகைமைகள்: (a)

i. சிங்களம்/ தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

உட்பட நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

(b) NVQ 4 அல்லது அதற்கு மேற்பட்ட செல்லுபடியான சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் பாடசாலை ஒன்றில் ஓர் ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்காக ஹோட்டல் முகாமைத்துவம், ஹோட்டல் செயற்பாடு, விருந்தோம்பல் முகாமைத்துவம் அல்லது அதற்கு இணையான வேறு கற்கையில் முழுநேர கற்கை ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

(c) அரச நிறுவனம் அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டலில் தொடர்புடைய துறையில் குறைந்தது 02 ஆண்டுகள் அனுபவம்

வயது : 35 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

சம்பளம் : **Salary code MN 1 – (2016) Garde 111**
ரூபா 36,640 - 10 x 405 - ரூபா 40,690/-
மேலுள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

விதிமுறைகள் மற்றும் பணியமர்த்தல்: நிரந்தரம் மற்றும் சேமலாப நிதி அடிப்படையில்

விண்ணப்பதாரர்கள் அரச சேவை பதவியில் இருந்தால் நேரடி பிரதி ஒன்றுடன் அவர்கள் பணியாற்றும் நிறுவனத்தின் தலைவர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்டால் அபேட்சகரை விடுவிப்பதற்கு நிறுவனத்தின் தலைவரிடம் இருந்து சான்றிதழ் ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

நியமனத்தை மேற்கொள்வது/ மேற்கொள்ளாதிருக்கும் உரிமை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக சபை வசமானதாகும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். உறவினர் அல்லாத இரு (02) நடுவர்களின் பெயர்கள் மற்றும் முழுமையான சுயவிபரக் கோவையுடன் அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை 2023 ஒக்டோபர் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் கையொப்பமிட்டு கிடைப்பதற்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**
**தலபத்பிட்டிய**
**நுகேகொடை**
**2023.10.09**

## தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவை பல்கலைக்கழகம்

### தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா

### கற்கை நெறிக்கான அனுமதி – 2023/2024

மேற்கூறிய கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக் கற்கை நெறியானது, தியகம, ஹோமாகமவில் அமைந்துள்ள தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவை பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தப்படும்.

மேலதிக விவரங்களுக்கு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2023.10.20ம் திகதியிடப்பட்ட 2355ம் இலக்க வர்த்தமானியை அல்லது தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தை பார்க்கவும்.

விண்ணப்பதாரர்கள் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள ஒன்லைன் (online) விண்ணப்பப்படிவத்தின் மூலமாக தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலானது விண்ணப்ப முடிவு திகதி அன்று அல்லது அதற்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 2023.11.20**
**இணையத்தள முகவரி: http://www.itum.mrt.ac.lk**
**பிரதி பதிவாளர்,**
**தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவை பல்கலைக்கழகம்**
**தியகம, ஹோமாகம**
**15.10.2023**

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

ராகம நகரத்திற்கு 500 மீட்டர் தூரத்தில் 58 பேர்ச் சதுர வடிவான காணி. 60 மூன்று சுற்று மின்சாரம், சுற்றாடல் அனுமதிப் பத்திரத்துடன் கைத்தொழில் கட்டிடம் 4 அறை கொண்ட விசாலமான வீட்டுடன். விமான நிலையம் மற்றும் கடவத்த அதிவேக வீதிக்கு 10 நிமிடம். சிக்கலற்ற உறுதி. தரகர்கள் வேண்டாம். 0772618484, 0712441024. 066117

**0777438169** - மாத்தளை மாவட்டத்தில் 50 ஏக்கர் சிறந்த தோட்டத்துடன் பங்களா ரம்யமான இடத்தில். தென்னை, கொக்கோ, ஏலம், கராம்பு, தேக்கு, இடை ப்பயிர் ஆ ட்டுப்பட்டி, ஊழியர்களின் குடியிருப்புக்கு சாதாரண 2 வீ டுகள். வருடாந்த வருமானம் 10 மில்லியனுக்கு மேல். 300 மில்லியனுக்கு. (கொடுக்கல் வாங்கல் பேசித் தீர்க்கலாம்.) 0777282147. 060142

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

கொள்ளுப்பிட்டி 4000 சதுர அடி வாடகைக்கு வர்த்தக சொத்து உணவகம் அல்லது அலுவலகத்திற்கு பொருத்தமானது. தொடர்பு 0759723953. தரகர்கள் தேவைப்படுகின்றனர். 066017

### 218 மருத்துவ பொருட்கள்/ சிகிச்சை

Dr. ஆப்டீன் சுஜப் நிவ் திஹாரிய மெடிக்கல் 116C, கொழும்பு கண்டி வீதி, திஹாரி சந்தி பெற்றோல் நிலையம் அருகே. 07406 5 6 333 சரியான நோய் நிர்ணயம் மூலம் அனைத்து நோய்களுக்கும் துரித நிவாரணம். 066244



### வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

புறக்கோட்டையில் உள்ள திருமண அழைப்பிதழ் மற்றும் அச்சுக்கடதாசி விற்பனை செய்யும் கடையொன்றிற்கு முன் அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனை உதவியாளர்கள் தேவை. தங்குமிட வசதி வழங்கப்பட மாட்டாது. திருமணமாகாதவர்கள் மற்றும் 35 வயதிற்கு குறைவானவர்கள் எடுக்கப்படும். 0777313478 தொடர்புகளுக்கு. 066193

வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு (வீட்டு வேலை அல்லாத) வெற்றிடங்களை தேடும் (தொழில் ஓடர்கள்) நபர்களுக்கான கமிஷன் ஏஜென்டிற்கான அழைப்பு. சகல வசதிகளுடனான மனிதவளங்களை தொழிலுக்கு அமர்த்தும் வீட்டுப்பணிப்பெண் தவிர்த்து ஓர் அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கம்பனி நாம் ஆவோம். நீங்கள் வெற்றிடங்கள்/ தொழில் ஓடர்களை தேடுபவராயின் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள். தொ.பே. 070 5363099. 065921

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கிருலப்பனையில் உள்ள சிறு குடும்பம் வசிக்கும் (அப்பார்ட்மன்ட்) ஒன்றிற்கு தங்கி வீட்டு வேலை செய்யக்கூடிய முன் அனுபவமுள்ள பெண் ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு 0777313478 (சமையல் வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது). 066200

பத்தரமுல்லையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டை சுத்தம் செய்யக்கூடிய முன் அனுபவமுள்ள பணியாள் (கோகி/ அப்பு) அல்லது பணிப்பெண் தேவை. வயது 25 40க்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது. ரூபா 35,000/= - 40,000/= சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 07 77362495. 066275

22- 55 வயதிற்கு இடையில் சமையல் வேலைக்கு பெண்கள் தேவை. சேவைக் காலம் காலை 8 மாலை 5 வரை மாத்திரம். தங்கி சேவை செய்யக்கூடியவர்களும் கவனத்தில் கொள்ளப்படுவர். நேரில் விசாரிக்கவும். இல. 55, ஸ்ரீ தர்மாராம வீதி, தெமட்டகொட, கொழும்பு 09. 0772614412. 065520

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

0705887777 கொழும்பு விறகு போரணை/ கேஸ் அடுப்புடனான பேக்கரிக்கு வேலை தெரிந்த பாஸ்மார் தேவை. பேஸ்ட்ரி செய்வதற்கு இயலுமாதல் கட்டாயம். உணவு, தங்குமிடம் இலவசம். 066281

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கம்பஹா பண்ணைக்கு மற்றும் தோட்ட வேலைக்கு ஊழியர்கள் தேவை. தனி அல்லது குடும்பம் தங்குமிட வசதிகள் உண்டு. 0774222505. 066032

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

புறக்கோட்டையில் உள்ள அச்சுக்கடதாசி விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு (க்ளீனிங்) வேலை செய்யக்கூடிய முன் அனுபவமுள்ள ஆண் ஒருவர் தேவை. தங்குமிட வசதி வழங்கப்படமாட்டாது. 0777313478 தொடர்புகளுக்கு. 066192

### 325 தொழில்துறை பொது

லக்மல் சலோன் ஸ்பா மற்றும் ஃபுட் சென்டர் கிரிபத்கொடைக்கு பயிற்சியற்ற பணிப்பெண்கள் தேவை. 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 35 வயதுக்குக் குறைவான பெண்கள் மாதம் 4 லட்சத்துக்கு மேல் சம்பாதிக்கலாம். தங்குமிட வசதிகள் வழங்கப்படுகின்றன. 45 நுவர வீதி, காலா சந்தி, கிரிபத்கொட. 07035 98239. 066015

CNC WOOD WORKING R OUTER MACHINE தெரிந்த முன் அனுபவமுள்ள ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு 077 7313478. 066197

கொழும்பு05இல் அமைந்துள்ள Pharmacy ற்கு Pharmacy வேலை அனுபவமுள்ள Pharmacy Assistant (ஆண்/பெண்) 45 வயதிற்குட்பட்டவர்கள் தேவை. தங்குமிட வசதி செய்து தரப்படும். உங்கள் CVஐ whatsapp அனுப்பவும். 0776510014. 065878




### காணி/தோட்டம்

### 615 வீடு சொத்து சேவைகள்

எமது நிறுவனம் 15 வருட நம்பிக்கையான சேவையை நடத்தி உங்களது நாடளாவிய ரீதியில் உள்ள சொத்துக்களை தகைமையுள்ள அனுபவமுள்ள, நம்பிக்கையான மதிப்பீட்டாளர்களின் கீழ் மதிப்பீடு செய்து மிகக்கூடிய விலைக்கு உடன் விற்பனை செய்வதற்கு ஏற்கப்படும். அழையுங்கள் 0767951560, 0703857617 ஈமெயில் lankaproperty.lk@gmail.com 066026

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

எத்துல்கோட்டையில் 3 படுக்கையறைகளுடன் வீட்டுடன் 20 பேர்ச் காணி விற்பனைக்கு. எதிர்பார்க்கப்படும் விலை ஒரு பேர்ச் இற்கு 4.2 மில்லியன். உடனடியாக விற்பனைக்கு. அதிகூடிய குடியிருப்பு பிரதேசம். பாராளுமன்றத்திற்கு அருகில். ஆர்வம் இருப்பின் தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள் 0741109686. 065602

கொழும்பு06, கிருலப்பனை 7.8 பேர்ச் கீழ் மாடி முடிக்கப்பட்ட இரு மாடி வீடு விற்பனைக்கு. இரண்டாம் மாடி அரைவாசி முடிக்கப்பட்டுள்ளதுடன் மூன்றாம் மாடி ஸ்லெப் மாத்திரம். தொடர்பு 0717060327. 065600

ஹோமாகம நகரில் வைத்தியசாலைக்கு அருகில் 170 பேர்ச் காணி விற்பனைக்கு. அதிவேக பிரவேசத்திற்கு 1km ஹோமாகம நகரிற்கு 1km வைத்தியசாலைக்கு 2 விநாடிகள். ரயில் நிலையத்திற்கு 2 விநாடிகள். 0713238167, 0751354653. 066273

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி, மாபனாவதுர 14.5 பேர்ச் சிறந்த காணி கீல்ஸ் சுப்பர் இல் இருந்து 400m மற்றும் K.P.H. தனியார் வைத்தியசாலையில் இருந்து 300m. ஒரு பேர்ச் ரூ. 1,600,000/=. 0716973330. 063875

**0777282147** கண்டி குண்டசாலை வீதி சொக்லட் கம்பனிக்கு முன்னால் படிவத்த பாதைக்கு 150 அடி அகலமான இடைப்பயிர், மதில் கேட்டுடன் 80 பேர்ச் தரைமட்டமான பெறுமதியான காணி வியாபாரத்திற்கு அல்லது வீடு கட்டுவதற்கு பொருத்தமானது. 85 மில்லியன். கொடுக்கல், வாங்கல் பேசித் தீர்க்கலாம். 0777438169. 060164

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

மனங்கவரும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் சுகத்தினை அனுபவிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக பெறுமதியுள்ள வியாபார மற்றும் குடியிருக்க உகந்த காணித்துண்டுகள் 100. ஒரு காணித்துண்டு 235 இலட்சம். விசேட விலைக் குறைப்புடன் வட்டியற்று இலகு பணக் கொடுப்பனவு முறைமை. அழைக்கவும். சிரிபால லாண்ட்ஸ் 0702484848. 066154

ஹட்டன் நகருக்கு அண்மையில் 10 பேர்ச் காணித்துண்டுகள் 100 விற்பனைக்கு. குழாய் நீர் மற்றும் மூன்று முதன் நிலை மின்சாரம். முழுக் காணித்துண்டும் 35 லட்சம் முதல். இலகு பணக் கொடுப்பனவு முறைமை மற்றும் விசேட விலைக் குறைப்புடன் உங்களது காணித்துண்டை இன்றே ஒதுக்கிக் கொள்ள அழைக்கவும். சிரிபால லாண்ட்ஸ் 0702484848. 066153

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

தெஹிவளையில் இரு அறைகள், பாரிய வீடு, பாரிய தோட்டம் குத்தகைக்கு. காலி வீதிக்கு 100 மீ.சிறந்த சூழல். சுப்பர் மார்க்கட்டுகளுக்கு அருகாமையில். தரகர் தேவையில்லை. 0770528876. 062657

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

Sunday Observer adz தினகரன்
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)
Any Single Newspaper ரூ. 800/- (Except Thinakaran Varamanjari) | Two Newspapers ரூ. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Three Newspapers ரூ. 1,330/-
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

# கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### லீசிங் முறையிலான செயற்பாட்டின் கீழ் வாகனங்களை வழங்கல்

ஒப்பந்த இல.: **DFAR-DPC-2023-01-12**

1. லீசிங் முறையிலான செயற்பாட்டின் கீழ் பின்வரும் வாகனங்களை வழங்குவதற்கு பொருத்தமாக மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் (இது தொடக்கம் DFAR என அழைக்கப்படும்) சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| வாகனங்களின் வகை | அளவு | எஞ்சின் திறன் |
|---|---|---|
| விளையாட்டு பயன்பாட்டு வாகனம் | 01 | 1600 CC இற்கு மேற்படாதது |
| டபிள் கெப் | 01 | 2500 CC இற்கு மேற்படாதது |

2. தேசிய போட்டிரீதியான விலைமனு மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 011-2472185 என்ற தொலைபேசி இலக்கத்தில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கணக்காளரிடம் (வழங்கல்கள்) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2023.10.16 ஆம் திகதி தொடக்கம் 2023.11.03 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 3.00 வரை கொழும்பு 10, மாளிகாவத்தை, புதிய செயலகக் கட்டிடம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
4. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஒரு தொகுதிக்கு 3,500 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழுள்ள முகவரிக்கு நிறுவன முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் தமது நிறுவனத்தின் எழுத்துமூல கோரிக்கையை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்களை 2023.11.07 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கணக்காளர் (வழங்கல்கள்), நிதிப் பிரிவு, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், 3ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு சேர்த்தல் அல்லது அதே வளவில் 3ஆவது மாடி, நிதிப் பிரிவு, கணக்காளரின் (வழங்கல்கள்) அறையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. விலைமனுக்கள் ஏற்கும் நேரம் (2023.11.07 அன்று பி.ப. 2.00) முடிவுற்ற பின் அதே வளாகத்தில் 3ஆவது மாடி, நிதிப் பிரிவு, கணக்காளரின் (வழங்கல்கள்) அறையில் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான திகதியில் இருந்து 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட 207,000.00 ரூபா தொகைக்கு கொழும்பு 10, மாளிகாவத்தை, புதிய செயலகக் கட்டிடம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள, பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். அது விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 2024.02.20 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. எந்த ஒரு விலைமனுவையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழு வசமானது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு**

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (CAA)**

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்காக (CAA) டிஜிட்டல் தகவல் முறையின் வடிவமைப்பு, மேம்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலின் பெறுகை

## IFB No: CAIS/2023/01

01. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்காக (CAA) டிஜிட்டல் தகவல் முறையின் வடிவமைப்பு, மேம்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலின் பெறுகைக்கு தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் (CAA) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வடிவமைப்பு, மேம்படுத்தல் மற்றும் செயற்படுத்தலுக்கான செயற்படுத்தல் காலம் **ஓர் (1) ஆண்டு** என்பதோடு உதவி மற்றும் பராமரிப்புக் காலம் **மூன்று (3) ஆண்டுகளாகும்.**
02. தேசிய பெறுகை வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB - இரு கடித உறை முறை: ஒற்றை கடித உறை - இரு கடித உறை விலைக்கேட்பு நடைமுறை) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும் என்பதோடு வழிகாட்டலில் வரையறுக்கப்பட்டவாறு அனைத்து தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கும் திறக்கப்பட்டுள்ளது.

    ஒப்பந்தம் விருதினை பெற்றுக்கொள்வதற்கான தகைமையினை பெற்றுக்கொள்வதற்கு, சிறந்த விலைமனுதாரர் தடை செய்யப்பட்ட நிரல் பட்டியலில் பட்டியல்படுத்தப்பட்டிருக்கக்கூடாது.

    a) **பொதுவான அனுபவம்;** விலைமனு சமர்ப்பிக்கும் இறுதித் திகதிக்கு முன்னர் குறைந்தது ஐந்து (5) ஆண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரர், உப ஒப்பந்ததார் அல்லது முகாமைத்துவ ஒப்பந்ததாரர் என்ற பணியில் தகவல் தொழில்நுட்ப ஒப்பந்ததாரர்களில் விலைமனுதாரர் பொதுவான அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்;

    b) **பிரத்தியேக அனுபவம்:** விலைமனுதாரர் கடந்த **5 ஆண்டுகளுக்குள்** குறைந்தது **40 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியுடன் ஒரு (1) மென்பொருள்/ ERP/HR application Derclopment திட்டத்தை** வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

    C) **சராசரி ஆண்டு புரள்வு:** கடந்த மூன்று ஆண்டுகளுக்குள், முன்னெடுக்கப்படும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெறப்பட்ட மொத்த உறுதி செய்யப்பட்ட கொடுப்பனவுகளாக **240 மில்லியன் இலங்கை ரூபா** கணக்கிடப்பட்ட குறைந்தபட்ச சராசரி ஆண்டு புரள்வு ஒன்றை விலைமனுதாரர் பெற்றிருத்தல் வேண்டும்.
03. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 2023 ஒக்டோபர் 16 ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் 0900 தொடக்கம் 1600 மணி வரை **ddahr@caa.gov.lk** என்ற மின்னஞ்சல் முகவரி, **+94 117755471** என்ற தொலைபேசி இலக்கம், **+94 771088924** என்ற கைபேசி இலக்கத்தில் **CAA, பிரதிப் பணிப்பாளர், நிர்மலா ரூபசிங்கவிடம்** இருந்து மேலதிக விபரங்களை பெற முடியும். பரீட்சிக்கும் நோக்கத்திற்காக மாத்திரம் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இணையதளத்தில் (https://www.caa.gov.lk) விலைமனு ஆவணங்கள் கிடைக்கப்பெறும்.
04. மீளளிக்கப்படாத கட்டணமான **30,000.00 இலங்கை ரூபாவை** செலுத்தி வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் CAA அலுவலகத்தில் இருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் செலுத்தப்பட வேண்டும்.
05. விலைமனுக்களை **2023 நவம்பர் 13ஆம் திகதி பி.ப. 3.00** அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். **2023 நவம்பர் 13ஆம் திகதி பி.ப. 3.00க்கு** பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் **இலங்கை ரூபா ஒரு மில்லியனே அறுநூறாயிரத்திற்கு (இ.ரூபா 1,600,000.00)** குறையாத வங்கி உத்தரவாத வடிவத்தில் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
06. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 02, வொக்ஷோல் வீதி, இல: 27, சி.டபிள்யு.ஈ. செயலகக் கட்டிடம், 2ஆவது மாடி, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் **2023 ஒக்டோபர் 30ஆம் திகதி மு.ப. 11.00க்கு** இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை**
**2ஆவது மாடி, C.W.E. செயலகக் கட்டிடம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02.**
**2023 ஒக்டோபர் 15**

# இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41 ஆ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழும் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக மூவரை நியமிப்பதற்காகப் பொருத்தமான தனிநபர்களை விதந்துரைப்பதைப் பரிசீலிப்பதற்காக அரசியலமைப்புப் பேரவை விண்ணப்பங்களைக் கோருகின்றது. விண்ணப்பதாரிகள், பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் நிபுணத்துவம் கொண்டவர்களாகவும் மேன்மையடைந்தவர்களாகவும் ஆகக்குறைந்தது இருபதாண்டுகள் அனுபவத்தைக் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்:-

i. சட்டம்
ii. குற்றப்புலனாய்வு மற்றும் சட்ட வலுவுறுத்தல்
iii. சட்டவிரோத நிதி நடவடிக்கைகளைக் கண்டுபிடிப்பதற்கான நிதிப் பதிவுகளின் கணக்காய்வு
iv. சட்டவிரோத நிதி நடவடிக்கைகளைக் கண்டுபிடிப்பதற்கான நிதிப் பதிவுகளின் கணக்கியல்
v. பொறியியல்
vi. சர்வதேசத் தொடர்புகளும் இராஜதந்திரச் சேவைகளும்
vii. பகிரங்க அலுவல்களின் முகாமை அல்லது
viii. பொது நிருவாகம்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும்-**

i. இலங்கையின் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்;
ii. ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட திகதியன்றுள்ளவாறாக அறுபத்திரெண்டு (62) வயதுக்கு மேற்பட்டவராக இருத்தலாகாது;
iii. உடல்ரீதியிலும் உளரீதியிலும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்;
iv. தகுதிவாய்ந்தவராகவும், நேர்மையானவராகவும், உயர் ஒழுக்க நேர்மையுடையவராகவும், நன்மதிப்புள்ளவராகவும் இருத்தல் வேண்டும்;
v. ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் முன்னர் ஊதியம்பெறும் வேறெல்லாப் பதவிகளையும் கைதுறந்தவராக இருத்தல் வேண்டும். ஆயின். எவ்வாறாயினும், ஏதேனும் ஊதியம்பெறும் பதவியை வகிக்கின்ற ஆளொருவர், அத்தகைய உறுப்பினராகப் பதவியேற்கும் முன்னர் அத்தகைய ஆள் ஊதியம் பெறும் எல்லாப் பதவிகளையும் கைதுறந்தால், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்காகக் கவனத்திற்கொள்ளப்படலாம்;
vi. ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருக்கையில் ஏதேனும் தொழிலைக்கொண்டு நடாத்துதலாகாது அல்லது ஏதேனும் உயர்தொழிலைப் பின்தொடருதலாகாது, அத்துடன்;
vii. அத்தகைய உறுப்பினராகப் பதவியேற்கும் முன்னர் நிலவுகின்ற எழுத்திலான சட்டங்களுக்கிணங்க அரசியலமைப்புப் பேரவைக்கு அவரது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் வேண்டும்; மற்றும்
viii. ஆணைக்குழுவின் உறுப்பினராகப் பதவியேற்கும் முன்னர் நியமிக்கப்படும் திகதியன்றுள்ளவாறாக அவரின் அக்கறைகளின் பகிரங்க வெளிக்கூறலை அவர் அரசியலமைப்புப் பேரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆளொருவர், பின்வருமாறிருப்பின், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து, அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும், அத்தகைய ஆள்,

i. குற்றப்பணமொன்றினால் மட்டும் தண்டிக்கப்படற்பாலதானவொரு தவறல்லாத குற்றவியல் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;
ii. தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ளவொரு நீதிமன்றத்தினால் ஒரு கடனிறுக்க வகையற்றவராகத் தீர்ப்பளிக்கப்படின்;
iii. சித்தசுவாதீனமற்றவராகவிருப்பின் அல்லது சட்டத்தின் கீழ் தனது கடமைகளை நிறைவேற்ற இயலாதவராகவிருப்பின்;
iv. அத்தகைய ஆளின் கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருப்பின்;
v. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தனது கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறின்;
vi. ஏதேனும் அரசியற் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியொருவராக இருப்பின் அல்லது இருந்திருப்பின்; அல்லது
vii. தேர்தல்களுக்கு ஏற்புடையப்பாலனவான முறையான சட்டங்களினது ஏற்பாடுகளின் கீழ் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல்களின், பாராளுமன்றத் தேர்தல்களின், மாகாண சபைத் தேர்தல்களின் அல்லது எவையேனும் உள்ளூராட்சித் தேர்தல்களின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அரசியற் கட்சியில் ஏதேனும் பதவியை அல்லது உறுப்பாண்மையை வகிப்பின் அல்லது வகித்திருப்பின் தகைமையற்றவராக கருதப்படுவர்.

பாராளுமன்ற இணையதளத்தில் (www.parliament.lk) வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2023 நவம்பர் 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்,

**அரசியலமைப்புப் பேரவைச் செயலாளர் நாயகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

கடித உறையின் இடது மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக "அரசியலமைப்புப் பேரவை- CIABOC இற்கான நியமனங்கள்" எனச் சுட்டிக்காட்டவும்.

அரசியலமைப்புப் பேரவையின் உத்தரவின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப் பேரவைச் செயலாளர் நாயகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.**
**2023 ஒக்டோபர் 15**

# பெரிய மனசு...

*(16ஆம் பக்கதொடர்)*

(16ஆம் பக்கதொடர்)

முதல் வேலையாக பாடசாலை வாசிகசாலைக்கான நிதி திரட்டலில் பாதிகூடத் தேறவில்லை. இதையொரு தேவையான விடயமாக பலரும் எடுத்துக்கொள்ளவில்லை. இன்னும் ஒரு லட்சம் ரூபாவாவது இருந்தால்தான் சமாளித்து வேலையை முடிக்கலாம் என்றநிலை. "இது நடக்காட்டி இதுக்குப் பொறகு இன்னுமொண்டு செய்ய எங்களுக்கு மனம் வராது. நாங்களும் சேர்த்துக்கிட்டு கிரிக்கட் மெச்சும்தான் நடத்தவாகும். கெட்டின பெரய எப்பிடிச்சரி அடிக்கோம்." சதாத் அலியின் உணர்ச்சிவசமான பேச்சு இருவரையும் பழைய நிலைக்குக் கொண்டு வந்தது.

அவர்கள் வீடுகளைச் சென்றடைந்திருந்தபோதிலும் சதாத் அலி முற்றத்துக் கதிரையிலிருந்து இன்னும் எழும்பவில்லை. யாரோ கேற்றைத் திறக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கே பள்ளிவாசல் மு அத்தினார் வந்தொண்டிருந்தார்.

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக வேலை செய்து வருபவர். எப்படியும் அறுபது வருடங்களுக்கு மேல்தானிருக்கும். ஆனால் சுறுசுறுப்புக் குறையவில்லை. பள்ளிவாசலை பெருக்குதல், ஒட்டடை துடைத்தல், பாய்களை விரித்தல், ஹவுழுக்கு தண்ணீர் நிறைத்தல், மலசலகூடங்களைத் துப்புரவு செய்தல், இப்படி இன்னும் எத்தனை வேலைகள். பெரிய சம்பளமும் இல்லை. முன்புபோல் மேலதிக வருமானமும் இல்லை. பாவம்தான். ஏதோ உதவி நாடித்தான் வருகிறார் போலும். கொஞ்சம் பெரிய உதவியொன்று செய்யவேண்டுமென்று காணும் போதெல்லாம் நினைப்பான். இன்று சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாதென்று எண்ணியபடியே எழுந்து சலாம் சொல்லி வரவேற்றான்.

"இரீங்கொ மோதீனப்பா. சொகமா? புள்ள குட்டியள் எப்பிடியன?"

"எனக்கு ஒரேயொரு மகள்தான். சொந்த ஊரு யக்கஸ்முல்ல. மகளப்பத்தித்தான் எனக்கு ஒரே யோசினயா ஈந்த. அத அல்லா லேசாக்கீட்டான். மாப்புள ஊட்டாரே கேட்டுவந்து பாத்து புரியப்பட்டிட்டாங்க. நாங்க நிக்காஹ் செஞ்சி குடுத்திட்ட. மருமகன் டுபாயில வேல. ரெண்டு கெழமேல கூட்டிக்கொண்டு பெய்துட்டாங்க "

"அல்ஹம்துலில்லாஹ். நல்லவங்கள அல்லா கையுடமாட்டான் மோதீனப்பா. சந்தோஷமாயீக்கி"

"மகளுக்கு குடுக்க நெனச்சீந்த ஊட்டுப் பங்க தங்கச்சீட மகளுக்கு எழுதிக் குடுத்திட்டன். நான் வாணான்டு செல்லச்செல்ல எனக்குச் சல்லி கொஞ்சமும் தந்தாங்க. "

என்ன நடக்கிறதென்று சதாத் அலிக்கு விளங்கவில்லை. சக்கரம் மறுபக்கம் சுழன்றுகொண்டிருந்தது. "வேலீக்கி பள்ளீல. அப்ப நான்போறன் தொர. ஒங்கட ஸ்கூல் லைப்ரரி வேலக்கி இதேம் சேத்திக்கோங்க.சின்னத் தொகயொண்டு." என்றவாறு ஒரு கவரை நீட்டினார். ஒன்றும் புரியாநிலை. சதாத் அலி எடுக்கவில்லை. டக்கென்று அவரது சேட் பொக்கட்டில் திணித்துவிட்டுத் திரும்பி நடந்தார். கேற்றைக் கடந்து செல்லும்வரை பார்த்துக்கொண்டே இருந்தான். ஒருவித படபடப்புடன் மெல்ல அந்தக் கவரை எடுத்து விரித்தான். அதற்குள் ஐயாயிரம் ரூபாத் தாள்கள் இருபது.

'சின்ன மசிஷன்தான். ஆனா எவளவு பெரிய மனசு ' சாதாத் அலி வியந்துபோனான்.

**மட்டுப்படுத்தக்கட்ட**
**காத்தான்குடி**
**பல நோக்கு கூட்டுறவு சங்கம்**

## காவலாளி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

மேற்படி விடயம் தொடர்பாக எமது காத்தான்குடி பல நோக்கு கூட்டறவுச் சங்கத்திற்கு காவலாளி பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றன வயதெல்லை 18-45 ஆகும். தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்

**விண்ணப்ப முடிவுத்திகதி : 30.10.2023**

தொடர்புகளுக்கு
காரியாலய தொலைபேசி இல : 065-2245629
காத்தான்குடி
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
கடற்கரை வீதி, காத்தான்குடி

LITRO GAS

# PROCUREMENT NOTICE

## NATIONAL COMPETITIVE BIDDING (NCB) TARRING WORK FOR THE PROPOSED LPG FILLING PLANT AT LITRO GAS LANKA LTD, MABIMA

## PROCUREMENT NO: LGLL/ OPS/052/NCB /2023

The Chairman, Department Procurement Committee on behalf of Litro Gas Lanka Limited now invites sealed bids from eligible and qualified bidders for "Tarring Work for The Proposed LPG Filling Plant at Litro Gas Lanka Ltd, Mabima"

A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address below during the period **17th October 2023 to 07th November 2023 from 9:30 am to 3:00 pm on working days**. The bid document may be obtained upon the payment of a non-refundable fee of **Rs.12,500.00 (Rupees of twelve thousand five hundred only)**. The method of payment will be in cash to be paid to **Litro Gas Lanka Limited, No. 267, Union Place Colombo 02**.

All bids shall be valid for a period of 90 days (Until 06th February 2024) from the deadline for submission of bids. The bids shall be accompanied by a Bid Security obtained from any commercial bank approved by the Central Bank of Sri Lanka. The amount of the **Bid Security should be Rs. 750,000.00 (Seven Hundred and Fifty Thousand Rupees)**, and should be **valid until 05th March 2024**. The bid security should be written in favour of Litro Gas Lanka Limited.

The Pre - Bid Meeting is scheduled to be held at the Litro Gas Depot, Mabima on **Tuesday, 31st October 2023 at 10.30 am**.

Bids must be delivered by hand or sent by registered post to the address below on or before **15:00 hrs on 08th November 2023**. Bids will be opened immediately after the deadline of bid submission, in the presence of the bidders / representatives who choose to attend. Late bids will be rejected.

The Chairman,
Departmental Procurement Committee,
Litro Gas Lanka Limited,
267, Union Place, Colombo 02
T.P. - 011-2327714, Fax – 011-2327698

LITRO GAS

# PROCUREMENT NOTICE

## NATIONAL COMPETITIVE BIDDING (NCB) PROVIDING SERVICES FOR LPG TANKER MOORING AND SUB SEA CBM MAINTENANCE WORKS FOR LITRO GAS TERMINAL LANKA (PVT) LTD

## PROCUREMENT NO: LGTLL/ OPS/092/NCB /2023

The Chairman, Department Procurement Committee on behalf of Litro Gas Terminal Lanka (Pvt) Ltd now invites sealed bids from eligible and qualified bidders for providing services for "LPG Tanker Mooring and Sub Sea CBM Maintenance Works For Litro Gas Terminal Lanka (Pvt) Ltd"

A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address below during the period **17th October 2023 to 07th November 2023 from 9:30 am to 3:00 pm on working days**. The bid document may be obtained upon the payment of a non-refundable fee of **Rs.12,500.00 (Rupees of twelve thousand five hundred only)**. The method of payment will be in cash to be paid to **Litro Gas Terminal Lanka (Pvt) Ltd, No. 267, Union Place Colombo 02**.

All bids shall be valid for a period of 60 days (Until 07th January 2024) from the deadline for submission of bids. The bids shall be accompanied by a Bid Security obtained from any commercial bank approved by the Central Bank of Sri Lanka. The amount of the **Bid Security should be Rs. 700,000.00 (Seven Hundred Thousand Rupees)**, and should be **valid until 04th February 2024**. The bid security should be written in favour of Litro Gas Terminal Lanka (Pvt) Ltd.

The Pre - Bid Meeting is scheduled to be held online via Zoom on **Tuesday, 30th October 2023 at 2.00 PM**.

Bids must be delivered by hand or sent by registered post to the address below on or before **15:00 hrs on 08th November 2023**. Bids will be opened immediately after the deadline of bid submission, in the presence of the bidders / representatives who choose to attend. Late bids will be rejected.

The Chairman,
Departmental Procurement Committee,
Litro Gas Terminal Lanka (Pvt) Ltd,
267, Union Place, Colombo 02
T.P. - 011-2327714, Fax – 011-2327698

# மீரிகம பிரதேச சபை

## 2024 ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2024ம் ஆண்டிற்காக பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2023.10.16 முதல் 2023.11.16 ஆம் திகதி பி.ப 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வழங்குநர்களால் பின்வரும் ஒவ்வொரு பொருட்களுக்காகவும் 1000.00 ரூபா வீதம் பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

1.1 ஒப்பந்தக்காரராக பதிவு செய்து கொள்வதற்கு,
- ரூ. 2,000,000/= வரை ரூ.1500/=
- ரூ. 2,000,000/= வரை மற்றும் அதற்கு மேல் ரூ.3000/= என செலுத்துதல் வேண்டும்.

2. தமது தகைமைகள்,சொத்துக்களை உறுதி செய்யும் ஆவணங்கள் மற்றும் வியாபார பெயர் பதிவுச் சான்றிதழின்பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. பெறுமதி சேர்வரி (VAT) இற்காக பதிவு செய்துள்ள நிறுவனங்கள் அது பற்றி உறுதி செய்வதற்காக VAT பதிவுச் சான்றிதழையும் இதுவரை VAT செலுத்துவதாக உறுதி செய்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை மேற்படி தினத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுக் கட்டணத்துடன் பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடதுமேல் மூலையில் "வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும். சகல விண்ணப்பங்களையும் "பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அதிகாரம், செயற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரி மீரிகம பிரதேச சபை, மீரிகம" என்ற பெயரில் அனுப்புதல் வேண்டும். காசுக்கட்டளைகள் ஏற்கப்படமாட்டாது. காசோலைகள் "தலைவர், மீரிகம பிரதேச சபை" என்ற யெரில் அனுப்பப்படல் வேண்டும். வார நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை பதிவு செய்தற் கட்டணத்தைச் செலுத்தலாம்.

கீழே ஒவ்வொரு வகைக்கும் வேறுவேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அதற்காக வேறுவேறாக கட்டணங்களை செலுத்துதல் வேண்டும்.

அரசின் வரிக் கொள்கை மற்றும் வரி விகிதாசாரங்கள் வித்தியாசப்படுவதன் பிரகாரம் மேற்படி பதிவுக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

**பொருட்கள்**

01. அலுவலக காகிதாதிகள் வழங்குதல்
02. சகல அலுவலக தளபாடங்கள் வழங்குதல் (உருக்கு, பலகை, செயற்கை)
03. சகல மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் வழங்குதல்
04. ரோனியோ இயந்திரம், போட்டோப்பிரதி இயந்திரம், கணனி இயந்திரம் மற்றும் துணைப்பாகங்கள், அச்சு இயந்திரம் உட்பட சகல அலுவலக இயந்திரங்கள் வழங்குதல்
05. கணனி அச்சு இயந்திரங்கள், போட்டோப்பிரதி இயந்திரம், பெக்ஸ், இயந்திரத்திற்கான டோனர், ரிப்பன் போன்றன வழங்குதல்
06. கூட்ட கலந்துரையாடல்களுக்கான உணவு பானங்கள் வழங்குதல்
07. சுகாதார உபகரணங்கள் வழங்குதல் (விளக்குமாறு, தும்புத்தடி, பிரஷ், பிரம்புக்கூரை, பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் போன்ற சகலதும்) பாதுகாப்பு ஆடைகளை வழங்குதல் (கையுறை, மழை அங்கி, கம்பூட்ஸ், முகக்கவசம் போன்ற சகலதும்)
08. கிருமி நாசினிப் பொருட்கள், சுத்திகரிப்புப் பொருட்கள், துப்புறவேற்பாட்டு பொருட்கள், கிருமிநாசினி, சவர்க்காரம், சலவைத்தூள் வழங்குதல்
09. வாகன உதிரிப் பாகங்கள் வழங்குதல் (முச்சக்கர வண்டி, டபிள் கெப் மற்றும் டிரக்டர் உட்பட சகல வாகனங்களுக்காக)
10. டயர், டியூப், பற்றரி வழங்குதல் (முச்சக்கரவண்டி, டபிள்கெப் மற்றும் டிரக்டர் உட்பட சகல வாகனங்களுக்கும்)
11. நுளம்புக் கொல்லி பொருட்களை வழங்குதல்.
12. i. சீருடைக்கு தேவையான துணி, தைத்த ஆடைகள் வழங்குதல்
    ii. பாதணிகள் வழங்குதல்
13. i. தீந்தை, நீர்க்குழாய் துணைப்பாகங்கள், இரும்பு மற்றும் கதவு ஜன்னல் துணைப்பாகங்கள் உட்பட சகல ஹாட்வெயார் உருப்படிகளை வழங்குதல்
    ii. வீச்சுக்கத்தி, ரேக்கை, மண்வெட்டி, முள்ளு, கல் துளைப்பாள் உட்பட சகல விவசாய மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல்
14. கல், மணல், சரளை மண், சகல தார்வகைகள், ஏபிசி கலப்பு, சீமெந்து, பலகை, கூரைத் தகடு வகைகள் உட்பட கட்டிடங்கள் மற்றும் வீதி நிர்மாணப் பொருட்கள் வழங்குதல்
15. முன் பள்ளி உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்
16. திரைச் சீலை வழங்குதல் மற்றும் பொருத்துதல்
17. வீதி விளக்கு மற்றும் கட்டிட மின் துணைப்பாகங்கள் மற்றும் பொருட்களை வழங்குதல்
18. காஸ் வழங்குதல்
19. 20 லீட்டர் நீர்போத்தல் வழங்குதல்
20. கட்டிடப் பொருட்கள் வழங்குதல்
21. நூலக புத்தகங்கள், சஞ்சிகைகள் வழங்குதல்
22. பைசிக்கள், வண்டித்தகடு, வரிக்கட்டண இலக்கத் தகடு வழங்குதல்
23. கொங்கிறீட் ஹுயூம் பைப் மற்றும் கொங்கிறீட் கம்பித்தூண் வழங்குதல்

**சேவைகள்**

01. அச்சு விடயங்கள் மேற்கொள்ளல் - (அச்சுப்படிவங்கள், ஆவணங்கள், டிஜிட்டல் அறிவித்தல் (விளம்பரம்) மற்றும் பதாகை அச்சிடல் உட்பட)
02. i. போட்டோப் பிரதி இயந்திரம், கணனி இயந்திரம் மற்றும் துணைப்பாகங்கள், அச்சு இயந்திரம் உட்பட சகல அலுவலக இயந்திரங்கள் சேர்விஸ் செய்தல் மற்றும் பழுதுபார்த்தல்
    ii. மென்பொருள் உற்பத்தி மற்றும் பிழைதிருத்தம்
03. i. கணனி வலையமைப்புக்கள் உருவாக்கல் மற்றும் பராமரிப்பு
    ii. சீசீடிவி அமைப்பு உருவாக்கல் மற்றும் பராமரிப்பு
    iii. தொலைபேசி அமைப்பு உருவாக்கல் மற்றும் பராமரிப்பு
04. நிறுவன அடையாள அட்டை தயாரித்தல், புகைப்படமெடுத்தல்
05. i. சுழல் நாற்காலி, குசன் கதிரை, அலுவலக மேசை போன்றவை பழுதுபார்த்தல்.
    ii. பிரம்புக் கதிரை பின்னுதல்
06. மொழி பெயர்ப்புச் சேவை வழங்குதல்
07. புல்வெட்டும் இயந்திரம், நீர் மோட்டர், மரம் வெட்டும் இயந்திரம் பழுது பார்த்தல், மின் உபகரணங்களை பழுதுபார்த்தல்
08. டிரக்டர் பழுதுபார்த்தல்
09. முச்சக்கர வண்டி பழுதுபார்த்தல்
10. கெப், கட்பெக்டர், லொறி உட்பட சகல வாகனங்களையும் பழுதுபார்த்தல்
11. டிரக்டர் சேர்விஸ் செய்தல்
12. முச்சக்கர வண்டி சேர்விஸ் செய்தல்
13. கெப், கட்பெக்டர், லொறி உட்பட சகல வாகனங்களையும் சேர்விஸ் செய்தல்
14. வாகன டயர் மற்றும் டியூப் இற்கான "பெச்" இடுதல்
15. டிரக்டர் டிரெயிலர் பழுதுபார்த்தல் உட்பட வாகன இணைப் பாகங்களை பழுதுபார்த்தல், வாகன டிங்கரிங் வேலை செய்தல்.
16. வாகன குசன் வேலை
17. வாகன வளிச்சீராக்கி பழுதுபார்த்தல் விடயங்கள்
18. வாகன மின் தொழில்நுட்ப விடயங்கள் மேற்கொள்ளல், வாகனங்களுக்கான ஒலிபெருக்கி துணைப்பாகங்களை பொருத்துதல் மற்றும் பழுதுபார்த்தல்
19. பெயர்ப்பலகை, அலுவலக பிரிவு பெயர்ப்பலகை, தனிநபர் மற்றும் பதவிகள் பெயர் பலகை தயாரித்தல்
20. அபாயகரமான மரங்கள் வெட்டுதல்
21. மின் பிறப்பாக்கி இயந்திர சேர்விஸ் செய்தல் மற்றும் பழுதுபார்த்தல்
22. உள்ளக தீயனைப்பு உபகரணங்களைப் பராமரித்தல்
23. வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பழுதுபார்த்தல
24. மேசைச் சீலை போன்றன, ஜன்னல் சீலை சுத்திகரித்தல்
25. பிரசார விடயங்களுக்கான ஒலிபெருக்கி இயந்திரம் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல், ஒலிபெருக்கி இயந்திரம் உட்பட இலத்திரனியல் உபகரணங்களை பழுதுபார்த்தல்
26. i. நீர்க்குழாய் தொழில்நுட்ப சேவை
    ii. மின் தொழில்நுட்ப சேவை
27. i. மரவேலை செய்தல் ii. மேசன் வேலை செய்தல் iii. பட்டரை வேலைகள்
28. நில அளவை சேவை வழங்குதல்
29. சட்டத்தரணி சேவை வழங்குதல்
30. தொழிலாளர்களை வழங்குதல்
31. கலி பவுசர் வாடகைக்கு வழங்குதல்
32. சுகாதார உபகரணங்கள் பழுதுபார்த்தல்
33. தகனசாலை பழுதுபார்த்தல்
34. அலுமினியம் சேவை

ஒப்பந்தக்காரர்கள்
1. ரூ. 1,000,000/= வரையான ஒப்பந்தங்கள்
2. ரூ. 1,000,000/= வரை மற்றும் அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள்

- தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர்களிடமிருந்தே விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் வெளி வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களைக் கோரும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
- விலைகள் பொதுவாக 01 வருட காலத்திற்கு மாறுபடாத வகையில் நிலையாக இருத்தல் வேண்டும்.
- சரியான முறையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறும் மற்றும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளுக்கு அமைவாக சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- பொருட்கள் மற்றும் சேவை ஒப்பந்தங்கள் வழங்குகையில் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட வரிகள், நிபந்தனைகள் மற்றும் சபையின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படல் வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்குப் புறம்பாக கைத்தொழில் மற்றும் கேள்விகள் கோரும் உரிமையை சபை கொண்டுள்ளது.

**பீ.ஜீ.எஸ்.பீ.ஜஞ்சிதா**
**பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும்**
**அதிகாரி**
**மீரிகம பிரதேச சபை**

**2023.10.10**
**மீரிகம பிரதேச சபை**

**தொ.பே.இல** - 0332273206
**பெக்ஸ்** - 0332273282
**மின்னஞ்சல்** - mirigamaps @gmail.com
**இணையதளம்** - www.mirigamaps.gov.lk

## ஜக்சன் அந்தனி... *(03 ஆம் பக்கத் தொடர்)*

அந் நால்வரும் ஜக்சன் சிறியந்த, கமல் அந்தரஆராச்சி மற்றும் ஜயந்த சந்திரசிறி. நத்தார் கொண்டாட்டங்களின் போது இவர்கள் ஒன்றாக இணைந்து கொண்டாடி மகிழ்ந்தார்கள். அனைவரையும் கவரக்கூடிய தோற்றம் கொண்ட ஜக்சனை கமல் 'பதி' என்றே அழைத்தார். ஜக்சன் எழுத்தாளராக பல நூல்களை எழுதியுள்ளார் பனாபுத்ர, எபெவின் பிஹிவிய, மனமே, மகாசிங்களே வங்ச கதாவ, அபா, கந்த உட கிந்தர அவற்றில் பிரதான இடம் வகிக்கின்றன. இவை எதையும் எழுதாமல் மகாசிங்களே வங்ச கதாவவை மாத்திரம் எழுதியிருந்தாலும் அவரது பெயர் பேசப்பட்டிருக்கும்.

ஒரு தடவை சுகத பால த சில்வா ஜக்சனைப் பற்றி குறிப்பிடும்போது ஜக்சனை. அழகானவர், அறிவுடையவர் அது மாத்திரமல்ல ஆக்கபூர்வமான நடிகராகவே அவரை நான் காண்கின்றேன் அதுக்காக நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

ஜக்சனின் மனைவி குமாரி முனசிங்கவும் சிறந்த நடிகை, பாடகி. அவரின் மகனான சஜித்த அனுத்தரவும் தொலைக்காட்சி நாடக மற்றும் சினிமா நடிகர். மற்றுமொரு புதல்வனான அமில தனுத்தரவும் நடிகர் பாடகர். தந்தையும் மகன்கள் இருவரும் மேடையில் பாடியது எவ்வளவு பெருமையான விடயம்? சஜித், அமில போன்று அவரது மூத்த சகோதரி மாதவி வத்ஸலாவும் நடிகை யாவார். நாம் வாழும் காலத்தில் வாழ்ந்த அவரது ஆத்மா சாந்தி அடையட்டும்.

# பெறுகை அறிவித்தல்

## லங்கா சதொச லிமிட்டடுக்கு சிறிய அளவு கொண்ட பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கல்

விலைமனு இலக்கம் : LSL/PRO/05/78/Shopping Bags (G)/2023
தேசிய போட்டிரீதியான விலைமனு

**லங்கா சதொச லிமிட்டடுக்கு** சிறிய அளவு கொண்ட பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கலுக்காக உள்நாட்டு விநியோகஸ்தர்கள், உள்நாட்டு பிரதிநிதிகள், அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்களிடம் இருந்து 03 மாத காலத்திற்கு **லங்கா சதொச லிமிட்ட் பெறுகைக் குழு தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்பு மற்றும் தேவை

| | பொருட்களின் விபரம் | அளவு (நீளம் x அகலம் x உயரம்) | அங்கிகரிக்கப்பட்ட உச்ச எடை | அளவு | அளவு(Gauge)/ தடிப்பு (மைக்ரோன்கள்) | உற்பத்தி பொருள் | அச்சிடப்பட்டது/ அச்சிடப்படாதது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கைப்பிடியுடன் + மடிக்கும் பை | (13"x 07"x 04") | 02 கிலோ | 10,500,000 | மைக்ரோன் 20க்கு மேல் | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் LDPE | அச்சிடப்படாதது |
| 2 | கைப்பிடியற்ற + மடிக்கும் பை | (09" x 06") | 500-750 கிராம் | 4,500,000 | மைக்ரோன் 20க்கு மேல் | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் LDPE | அச்சிடப்படாதது |

விலைமனுக்களை சமர்ப்பிக்க ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தை ரூபா 5,000.00 **(மீளளிக்கப்படாதது) கேள்விமனு கட்டணத்தை செலுத்தி 2023 ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் மாதம் 13ஆம் திகதி வரையான காலத்தில்** கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி),**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்,**
**வொக்சோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2023 ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி** மு.ப. 11.00க்கு மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள், **2023 நவம்பர் மாதம் 13ஆம் திகதி பி.ப. 12.00க்கு அல்லது அதற்கு முன்னர்,** பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/78/Shopping Bags (G)/2023"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட **211,000.00 ரூபா தொகைக்கான நிபந்தனையற்ற விலைமனு பிணை (மீளளிக்கப்படும்)** ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2023 நவம்பர் 13 ஆம் திகதி** பி.ப. 12.00க்கு **நிறைவடைவதோடு** அதன் பின் விலைமனுதாரர்களின் முன்னிலையில் அவை உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரிகளை அழையுங்கள்.
திலினி - 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்கப்படும் இறுதி முடிவு **லங்கா சதொச லிமிட்ட் பெறுகைக் குழு தலைவர்** வசமானதாகும்.

தலைவர் , லங்கா சதொச லிமிடட்,
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02, இலங்கை

# கடற்றொழில் அமைச்சு

## கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### புத்தளம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் தங்குமிடக் கட்டிடத்தின் புனரமைப்பு - கட்டம் I-(ஒப்பந்த இல.: DFAR/ DPC/2023/01/25)

1. 6.70 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட செலவு மற்றும் கீழ் விபரிக்கப்பட்டவாறு கட்டம் I - புத்தளம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் தங்குமிடக் கட்டிடத்தில் புனரமைப்புக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

   நிர்மாணக் காலம் 50 நாட்கள்

2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் மேற்கொள்ளப்படும் பணியின் மதிப்பிடப்படும் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் கீழ் இருக்கும் வரை *04/216 (iv)* ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபம் மற்றும் 03/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் கூறப்பட்டவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் *CIDA* தர முன்னுரிமை பொருந்தும்.

3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு மூடப்படும் திகதி வரை செல்லுபடியான நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) C8, C7 அல்லது C6 தரத்துக்காக கட்டிட நிர்மாணத் துறையில் பதிவு செய்திருத்தல் வேண்டும். மேலும் அந்தப் பதிவு ஒப்பந்தம் வழங்கப்படும் திகதியில் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

   "விலைமனுதாரர் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின்படி, இலங்கை பொது ஒப்பந்தங்களின் பதிவுடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவின் (*PCA 03*) அசல் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். *PCA 03* சான்றிதழை சமர்ப்பிக்காத வரை எந்த ஒரு விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்படமாட்டாது".

4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், 3ஆவது மாடி, கணக்கு பிரிவு, கணக்காளரிடம் இருந்து (வழங்கல்) மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு எந்த ஒரு வேலை நாட்களிலும் 9:00 மணி தொடக்கம் 16:00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

   தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 011-2472185 தொலைநகல்: 011-2472185

5. மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா நான்காயிரத்தை (ரூபா 4,000) செலுத்தி 9:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை 2023.10.16 ஆம் திகதி தொடக்கம் 2023.11.03 ஆம் திகதி வரை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், 3ஆவது மாடி, கணக்குப் பிரிவு, கணக்காளருக்கு (வழங்கல்) எழுத்து மூலம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களில் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

6. விலைமனுக்களை 2023.11.07 ஆம் திகதி 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கணக்குப் பிரிவு, 3ஆவது மாடி, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது சேர்த்தல் வேண்டும்.

7. விலைமனுக்களை ஏற்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி அல்லது நீடிக்கப்பட்ட எந்த ஒரு காலத்தில் இருந்தும் 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

8. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அது;
   - விலைமனு ஆவணத்தில் பிரிவு 09இல் உள்ளடக்கப்பட்ட படிவத்தில்
   - கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்
   - 100,000.00 ரூபா தொகைக்காக
   - 2024 பெப்ரவரி 20 ஆம் திகதி வரை செல்லுபடியான
   - அட்டவணையில் 16.0 உட்கூறில் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்,**
**புதிய செயலகம்,**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு 10.**

## இஸ்ரேல் ஹமாஸ் போர்...

*(12 ஆம் பக்கத் தொடர்)*

ஆனால் மேற்குலகத்துக்கு அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியில் இஸ்ரேல் _ ஹமாஸ் போர் இலாபகரமானதே. இதில் அதிக இழப்பினை உள்நாட்டிலும் பிராந்தியத்திலும் உலகளாவிய ரீதியிலும் எதிர்கொள்ளும் நாடாக இந்தியா மாறியுள்ளது. இந்தியாவின் வெளியுறவு முற்றிலும் முரணான கொள்கைத் தீர்மானத்தை எடுத்துள்ளது. இஸ்ரேலை ஆதரிப்பதான இந்தியாவின் முடிவு மேற்குலகத்துக்கு இலாபகரமானதேயன்றி இந்தியாவுக்கானதல்ல. நான்காவது, இஸ்ரேலுக்கு சேவகம் செய்யும் ஐக்கிய நாடுகள் சபையின் நகர்வுகள் காஸாவை துடைத்தொழிக்க தீர்மானித்துள்ளமை தெரிகிறது. பாலஸ்தீனியர்களை முழுமையாக வடக்கு காஸாப்பகுதியிலிருந்து வெளியேறுமாறு ஐ.நா.அறிவித்துள்ளமை கவனத்திற்குரிய விடயமாகும். உலக சமாதானத்தை முதன்மைப்படுத்தும் ஐ.நா.சபை இஸ்ரேலை கட்டுப்படுத்துவதை விடுத்து பாலஸ்தீனர்களை வெளியேற்ற முனைவது அதன் நியாயமற்ற வடிவத்தைக் காட்டுகிறது. உலகத்தின் ஒழுங்கென்பது பாதுகாப்புச் சபை நாடுகளின் ஒழுங்கே அன்றி உலக நாடுகளின் ஒழுங்குமல்ல உலகத்தின் நீதியுமல்ல. உலக வரைபில் சர்வதேச நீதிக்கு இடமில்லை என அரசியலுக்கான இலக்கணத்தை தந்த ஹரோல் லக்ஸ்கி குறிப்பிட்டதையே நினைவுபடுத்த வேண்டியுள்ளது. ஐ.நா.பாதுகாப்பு சபை நாடுகளின் பொம்மையாகவே உள்ளது. பாதுகாப்புச் சபை நாடுகளின் நலன்களைப் பேணும் ஓரமைப்பாகவே விளங்குகிறது.

ஐந்தாவது, இஸ்ரேலுக்கு ஹமாஸை முடிவுக்குக் கொண்டு வரவும் மேற்காசியாவில் நிகழும் மாற்றங்களை கட்டுப்படுத்தவும் ஒரு போர் தேவைப்பட்டது. அதற்கான தயாரிப்பினை முன்கூட்டியே ஆரம்பித்திருந்தது. காஸாவை கைப்பற்றவும் தனது மக்களை பாதுகாக்கவும் இத்தகைய போரும் இழப்பும் தவிர்க்க முடியாதது என்பதை புரிந்துள்ளது. மீளவும் இஸ்ரேல் யூத தேசியவாதத்தை பலப்படுத்தியுள்ளது. ஈரானின் அணுவாயுதத்தை மட்டுமல்ல மேற்காசிய மற்றும் இஸ்லாமிய நாடுகளின் இராணுவ பலம் ஆயுததளபாட பலம் பொருளாதார பலம் அனைத்தையும் இந்தப் போர் முடிவுக்கு கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது. இதன் எல்லை தீவிரமடையுமாயின் இஸ்ரேல் அணுகுண்டையும் பாவிக்க தயாராக உள்ளது. இஸ்ரேலிடம் 90 அணுகுண்டுகள் உள்ளதாக தகவல்கள் உண்டு. இஸ்ரேலிடம் அணுகுண்டு உள்ளதற்கோ அல்லது பரிசோதித்ததற்கான ஆதாரங்களே உலகத்திடம் இல்லை. ஆனால் அதன் இராணுவ தொழில்நுட்ப வளர்ச்சி பிரமண்டமானது. இஸ்ரேல் கண்டுபிடித்துள்ள புதிய ஆயுதங்கள் காஸா போரில் பாவனைக்கு வந்துள்ளதை கண்டு கொள்ள முடியும். ஹமாஸின் நகர்வு முழுவதையும் எதிர்கொள்ள போதிய ஆயுத தளபாடங்கள் இஸ்ரேலிடமுண்டு. இஸ்ரேலின் அயன் டோமை ஹமாஸ் இராணுவம் தகர்த்ததென்பது உண்மையே. ஆனால் அதற்கு பதிலீட்டை களத்தில் இஸ்ரேல் பயன்படுத்த தயாராகி வருகின்ற சந்தர்ப்பத்தில் அயன் டோமின் பாவனையால் அதிக பாதுகாப்பை யூத நகரங்கள் அடைந்துள்ளன. தரைவழித் தாக்குதலுக்கு தயாராகும் இஸ்ரேல் காஸாவை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எத்தனிக்கிறது. ஹமாஸையும் காஸாவையும் முழுமையாக அழித்து புதிய வடிவமாக மாற்றுவதில் இஸ்ரேல் – அமெரிக்க கூட்டு தயாராகிறது. இது மேற்குக்கு இலாபகரமான நகர்வே.

எனவே ஒட்டுமொத்த அரபுலகமும் இப்போரின் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேற்காசியாவில் நிகழும் போரை உலகப் போராக மாற்றிவிடக் கூடாது என்பதில் அனைத்து தரப்பும் கவனமாக உள்ளது. அனைத்து வல்லரசுகளும் இரு தரப்புக்கும் ஆயுதங்களை வழங்கிவருகின்றதேயன்றி நேரடியாக போரில் ஈடுபடுவதை தவிர்த்து வருகின்றன. போர் முழுமையாக பாலஸ்தீனர்களை அழித்தொழிக்கும் நகர்வாகவே அமையவுள்ளது. இதனால் இஸ்ரேல் மேற்குலகத்தின் அரசியல், பொருளாதார, இராணுவ, வல்லமை பாதுகாக்கப்படுவதுடன் ஒரு புதிய வடிவத்தை நோக்கி உலகம் நகர வாய்ப்புள்ளது. இது மேற்குலகத்தின் ஆதிக்கத்தை மீள வடிவமைக்க வாய்ப்புள்ளது. ஹமாஸ் அமைப்பில் 40 ஆயிரம் இராணுவம் உண்டானாலும் வெளிப்படையாக ஆதரவளிக்க எந்த அரசும் முன்வரவில்லை என்பதே முக்கியமானது. சுன்சூ போர்க் கலையில் குறிப்பிட்டது போல் இஸ்ரேல் வெற்றியை உறுதிப்படுத்தி விட்டு போரை ஆரம்பித்துள்ளது. ஆனால் அது இலகுவான வெற்றியாக அமையுமா என்பது கடினமானதே. இதுவரை யூத நகரங்களுக்குள் புகுந்த ஹமாஸ் இராணுவம் பற்றிய தகவல்களோ யூதர்களது இழப்புப் பற்றியோ முழுமையான தகவலும் இல்லை என்பது கவனத்திற்குரியது. ஊடகப்போரில் யூதர்கள் வெற்றியை முழுமைப்படுத்திவிட்டனர். காஸாவை யூத இராணுவத்திற்கு பொறியாக மாற்றுவதும் தோல்வியை மாற்றி அமைப்பதுவும் ஹமாஸிடமே உண்டு.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

# துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### VEHICLE MOUNTED ELEVATING AND ROTATING WORK PLATFORM (AERIAL PLATFORM VEHICLE) இன் பெறுகை

கீழ் விபரிக்கப்பட்டவாறு பொருட்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் (SLPA) சார்பில் அமைச்சு பெறுகைக் குழு (MPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| பெறுகை குறிப்பு | பெறுகையின் பெயர் | விலைமனு முறை | விலைமனு பிணை (உத்தரவாதம்) தொகை | ஆவணக் கட்டணம் (வெட் உட்பட) | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| CES/FP/03/ PT/5762(MP)-A | vehicle mounted elevating and rotating work platform (aerial platform vehicle) இன் பெறுகை | சர்வதேச போட்டிரீதியான விலைமனு (ICB ) | இலங்கை ரூபா நான்கு மில்லியனே நூறாயிரம் (இ.ரூபா 4,100,000.00) | இ.ரூபா 50,000.00 | 2023 டிசம்பர் 05 அன்று 14:00 மணி |

| | |
|---|---|
| 1 | இ. ரூபா 5.00 (ஐந்து) மில்லியனை விஞ்சும் பெறுகைகளுக்கு 1987 (PCA 3) இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்தும். அதன்படி எந்த ஒரு உள்ளூர் விலைமனுதாரர் அல்லது எந்த ஒரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் உள்ளூர் முகவர் அல்லது வழங்குநர் நிறுவனங்கள் பதிவாளர் திணைக்களத்துடன் பதிவு செய்ய கோரப்படுகின்றனர். |
| 2 | விலைமனுதாரர்கள் குறைந்தது கடந்த 05 (ஐந்து) ஆண்டு காலத்தில் வழங்கல் பொருட்களின் வர்த்தகத்தில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். |
| 3 | ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் முகவர்கள் cms@slpa.lk மின்னஞ்சல்/ 0094 11 2381652 தொலைநகல்/ 0094 11 2432866 தொலைபேசியில் கொழும்பு 01, லெய்டன் பஸ்டியன் வீதி, 45, இலங்கை துறைமுக அதிகாரசபை, வழங்கல் பிரிவு, தலைமை முகாமையாளர் (வழங்கல்கள்) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2023.10.16 ஆம் திகதி தொடக்கம் 2023.12.04 ஆம் திகதி வேலை நாட்களின் சாதாரண அலுவலக நேரங்களில் இதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம். |
| 4 | 2023.10.16 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை 2023.12.04 ஆம் திகதி வரையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை செலுத்தி மேலுள்ள முகவரியில் தலைமை பொறியியலாளருக்கு (வழங்கல்கள்) கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். ஆவணக் கட்டத்திற்கான கொடுப்பனவு முறை ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும். |
| 5 | விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 04, லெய்டன் பெஸ்டியன் மாவத்தை, இல. 45, இலங்கை துறைமுக அதிகாரசபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023.11.10 ஆம் திகதி 10.30 மணிக்கு இடம்பெறும். |
| 6 | விலைமனு பிணை மற்றும் PCA3 பதிவுடனான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023 டிசம்பர் 05 ஆம் திகதி 14.00 மணியில் விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் தாமதிக்காது கிடைப்பதற்கு இல. 19, சைத்திய வீதி, கொழும்பு 01இல் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, தலைவருக்கு (அமைச்சு பெறுகைக் குழு) இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுவுடன் மூடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் VMERWP/APV இன் பெறுகை என குறிப்பிடுதல் வேண்டும். |
| 7 | கீழுள்ள முகவரியில் விலைமனு திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் நேரடியாக பங்கேற்பதற்கு விலைமனுதாரரினால் பரிந்துரைக்கப்பட்ட விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைந்த பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். |

**தலைவர் - அமைச்சு பெறுகைக் குழு (MPC)**
**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு - 01**

DIAMOND MACHINERY

ஒரே முறையில் 4 புளொக்கற்கள் (7"X4"x14) உற்பத்தி செய்யும்.

ஒரு நாளைக்கு இரு ஊழியர்களைக் கொண்டு 800-1000 புளொக்கற்களை உற்பத்தி செய்யும் கொள்ளளவு.



மிகச்சிறந்த அமுக்க சக்தியுடன் பினிசிங் கற்கள் உற்பத்தி செய்யும் ஆற்றல் (பூச்சு பூசாமலே பொடி இடும் ஆற்றல்).

வண்டிமூலம் உற்பத்தி செய்யப்படும் கற்களை அகற்றும் ஆற்றல்.

**0766696575 / 0762616575**
**No.112, Pahala Bomiriya, Kaduwela**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

# கேள்விமனு அறிவித்தல்

**விலைமனு குறிப்பு: COL /DC/228/01/2016-Eqp**
**இந்திய உயர்ஸ்தானிகராலயம்**
**கொழும்பு, இலங்கை**

**இலங்கை, புசல்லாவையில் உள்ள சரஸ்வதி மத்திய கல்லூரிக்கு பொருட்களின் வழங்கல் மற்றும் போக்குவரத்து**

ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் https://hcicolombo.gov.in என்ற கொழும்பு, இந்திய உயர்ஸ்தானிகராலய இணையதளம், www.mea.gov.in என்ற வெளிவிவகார அமைச்சு இணையதளம் மற்றும் http://eprocure.gov.in/eprocure/app என்ற மத்திய பொது பெறுகை போர்டல் இணையத்தில் இருந்து 2023 ஒக்டோபர் 16 தொடக்கம் 2023 நவம்பர் 16 வரை கேள்விமனு ஆவணத்தை தரவிறக்கம் செய்ய முடியும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2023 ஒக்டோபர் 30 ஆம் திகதி மெய்நிகர் வடிவத்தில் இடம்பெறும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்புக்கான இணைப்பு:

https://eoibangkok.my.webex.com/eoibangkok.my/j.php?MTID=m4a4a959a054cf 6acb25a59c0470b2c2a

சந்திப்பு இலக்கம்: 2641 407 3940

கடவுச்சொல்: sMeJDeZn878

பரிந்துரைக்கப்பட்ட அனைத்து ஆவணங்களுடன் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2023 நவம்பர் 16 அன்று 1200 மணி. தொழில்நுட்ப விலைமனுக்கள் மெய்நிகர் வடிவத்தில்/ விலைமனுதாரர்கள் முன்னிலையில் 2023 நவம்பர் 16 ஆம் திகதி பி.ப. 1500க்கு திறக்கப்படும்.

மேலதிக தெளிவினை பெறுவதற்கு தொடர்பு கொள்ளவும் : + 94 77 668 3124

# மக்கள் வங்கி

## தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து பிராந்திய அலுவலகங்கள் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் - 2024

கட்டிடம், புனரமைப்பு மற்றும் கட்டிடங்களின் மாற்றங்கள், உள்ளக மற்றும் வெளிப்புற வேலைகள் முதலியவற்றின் நிர்மாணத்துடன் தொடர்புபட்ட பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கட்டிட நிர்மாணம் மற்றும் மற்ற நிபுணத்துவ வேலைகளுடன் தொடர்புபட்ட வேலைகளுக்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கான (CIDA) நிறுவனத்துடன் செல்லுபடியான பதிவை பெற்றிருப்பதன் அடிப்படையில் தமது தகைமைகள் மற்றும் கோரப்படும் விடயங்களுக்கு அமைய ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்யப்படுவர். (பெயர் பலகைகள், தரைவிரிப்பு, மறைத்தல் மற்றும் திரைச்சீலை வேலைகள் தவிர்த்து அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களுடன் சேர்த்து செல்லுபடியான CIDA பதிவின் திருப்திகரமான ஆவண அத்தாட்சியை சமர்ப்பித்தல் வேண்டும்).

கீழ் குறிப்பிடப்பட்டவாறு மக்கள் வங்கி தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து பிராந்திய தலைமை அலுவலகங்களில் இருந்தும் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பத்தில் மாத்திரம் விண்ணப்பங்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

| | அலுவலகம் | தொடர்பு இல. | முகவரி |
|---|---|---|---|
| 01 | தலைமை அலுவலக பொறியியல் சேவை திணைக்களம் | 011-2481373 011-2473206 | இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 01 |
| 02 | பிராந்திய தலைமை அலுவலகம், அம்பாறை | 063-2222516 063-2222332 | இல. 96ஏ, டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, அம்பாறை |
| 03 | பிராந்திய தலைமை அலுவலகம், அநுராதபுரம் | 025-2223035 | இல. 75, மைத்ரிபால சேனநாயக்க மாவத்தை, அம்பாறை |
| 04 | பிராந்திய தலைமை அலுவலகம், பதுளை | 055-2222165 055-2222342 | இல. 24, ஆர்.எச். குணவர்தன மாவத்தை, பதுளை |
| 05 | பிராந்திய தலைமை அலுவலகம், மட்டக்களப்பு | 065-2222652 065-2222653 | இல. 25/1, கொவிங்டன் வீதி, மட்டக்களப்பு |
| 06 | பிராந்திய தலைமை அலுவலகம், காலி | 091-2223563 091-2227697 | இல. 22, லோவர் டிக்சன் வீதி, காலி |
| 06 | பிராந்திய தலைமை அலுவலகம், கம்பஹா | 033-2231901 033-2222325 | இல. 131, கண்டி வீதி, மெலும்ஹர, முதுன்கொட |
| 07 | பிராந்திய தலைமை அலுவலகம், ஹம்பாந்தோட்டை | 047-2220902 047-2220902 | தங்கல்ல கிளை (2ஆவது மாடி) இல. 146ஏ, மாத்தறை வீதி, தங்கல்ல |
| 08 | பிராந்திய தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம் | 021-2222601 021-2228602 | இல. 82, கன்னதிடி வீதி, யாழ்ப்பாணம் |
| 09 | பிராந்திய தலைமை அலுவலகம், களுத்துறை | 038-2232438 038-2241596 | இல. 341, காலி வீதி, பாணந்துறை |
| 10 | பிராந்திய தலைமை அலுவலகம், கண்டி | 081-2234283 081-2228383 | இல. 17, தலதா வீதி, கண்டி |
| 11 | பிராந்திய தலைமை அலுவலகம், கேகாலை | 035-2222300 035-2222396 | இல. 14, வின்சன்ட் விக்ரமசிங்க மாவத்தை, கேகாலை |
| 12 | பிராந்திய தலைமை அலுவலகம், குருணாகல் | 037-2222572 037-2222453 | இல. 03, வத்ஹிமி வீதி, குருணாகல் |
| 13 | பிராந்திய தலைமை அலுவலகம், மாத்தளை | 066-2222032 066-2224841 | இல. 76, தர்மபால மாவத்தை, மாத்தளை |
| 14 | பிராந்திய தலைமை அலுவலகம், மாத்தறை | 041-2226481 041-2222822 | இல. 215, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை |
| 15 | பிராந்திய தலைமை அலுவலகம், மொனராகலை | 055-2276347 055-2277105 | இல. 99, வெல்லவாய வீதி, மொனராகலை |
| 16 | பிராந்திய தலைமை அலுவலகம், நுவரெலியா | 052-2222555 052-2234036 | இல. 40, பூங்கா வீதி, நுவரெலியா |
| 17 | பிராந்திய தலைமை அலுவலகம், பொலன்னறுவை | 027-2224404 027-2225760 | பிரதேச செயலாளர் வளாகம், இல. 325, புதிய நகர், பொலன்னறுவை |
| 18 | பிராந்திய தலைமை அலுவலகம், புத்தளம் | 032-2253301/032-2255142 | இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டி |
| 19 | பிராந்திய தலைமை அலுவலகம், இரத்தினபுரி | 045-2223084 045-2221510 | இல. 54, சரத் முத்தட்டுவேகம மாவத்தை, புதிய நகர், இரத்தினபுரி |
| 20 | பிராந்திய தலைமை அலுவலகம், திருகோணமலை | 026-2222815 026-2226815 | இல. 128, கண்டி வீதி, திருகோணமலை |
| 21 | பிராந்திய தலைமை அலுவலகம், வன்னி | 024-2222972 024-2225054 | இல. 9, 1/1, ஸ்டேசன் வீதி, வவுனியா |
| 22 | பிராந்திய தலைமை அலுவலகம், கொழும்பு வடக்கு | 011-2344982-5 | 2ஆவது மாடி, இல. 11, டியுக் வீதி, கொழும்பு 01 |
| 23 | பிராந்திய தலைமை அலுவலகம், கொழும்பு தெற்கு | 011-2387068 011-2384069 | 1ஆவது மாடி, இல. 11, டியுக் வீதி, கொழும்பு 01 |
| 24 | பிராந்திய தலைமை அலுவலகம், கொழும்பு வெளிப்புறம் | 011-2812260 011-2852898 | இல. 177/ஏ, ஹைலெவல் வீதி, நுகேகொடை |

ரொக்கப்பணத்தில் 5,000 ரூபா கட்டணத்தை செலுத்தி வங்கியின் சாதாரண வேலை வர்த்தக நேரங்களில் 2023 ஒக்டோபர் 18 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் 02 ஆம் திகதி வரை மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தில் பொறியியல் சேவைகள் திணைக்கள, கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவருக்கு அல்லது குறித்த பிராந்திய தலைமை அலுவலகத்தின் பிராந்திய முகாமையாளருக்கு எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங்களை பெற முடியும்.

2023 ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் 2024 ஆம் ஆண்டு பதிவுக்காக மீள விண்ணப்பிக்க வேண்டும்.

அனைத்து துணை ஆவணங்களுடனும் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2023 நவம்பர் 03 அல்லது அதற்கு முன்னர் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர்/ பிராந்திய முகாமையாளருக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரிகளுக்கு கைகளால் சேர்த்தல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் - 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவர்**
**மக்கள் வங்கி**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்**
**6ஆவது மாடி, தலைமை அலுவலகக் கட்டிடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02**
**தொ.: 2481373/ 2473206**

PEOPLE'S BANK
Pride of the Nation

# சுகாதார அமைச்சு

## இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

**Supply, Installation and Commissioning of 01 No. of Brand new High Shear Granulator, Working Bench and Accessories with providing Training**

**Bid Ref.: SPMC/PD/09/2023 -** 2023 நவம்பர் 06 ஆம் திகதியன்று மூடப்படும்

1. 2023 நவம்பர் 06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் இலங்கை, இரத்மலானை, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரசமருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன பெறுகைக் குழு தலைவரினால் **Supply, Installation and Commissioning of 01 No. of Brand New High Shear Granulator, Working Bench and Accessories with providing training** என்பதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

| அம்சம் | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் |
|---|---|
| 01. Supply, Installation and Commissioning of 01 No. Brand new High Shear Granulator, Working Bench and Accessories with providing Training. | Rs. 10,000 .00 |

3. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களில் நகல் பிரதிமற்றும் மூலப் பிரதியென இரு பிரதிகளில் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு பதிவுத்தபாலில் தலைவர்,பெறுகைக் குழு, அரசமருந்தாக்கல் கூட்டுத்தாபனம், இல. 11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவள தோட்டம், இரத்மலானை, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை,கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

4. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து 2023 ஒக்ரோபர் 16 ஆம் திகதியிலிருந்து 2023 நவம்பர் 03 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள முகவரியிலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
   - இலங்கை, இரத்மலானை, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரசமருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபன திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொதுமுகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல்.
   - SPMC இன் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணத்தில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்துதல்.

5. விலைமனுக்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதனால் விலைமனுதாரர் அவரது சார்பாக முகவரொருவரை, உப முகவரொருவரை, பிரதிநிதியொருவரை,பெயர் குறிப்பிடப்படுபவரொருவரை அமர்த்துவாராயின், அப்படியான பொது ஒப்பந்தத்தின் போது பொது ஒப்பந்தச்சட்ட 10 ஆம் பிரிவிற்கமைவாக பதிவு செய்தபின்னர் அவ்வாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழை இக்கேள்வி தொடர்பான எந்தவொரு கொடுக்கல் வாங்கல் வேளையிலும் அல்லது விலைமனுக்கோரலின் காலப்பகுதியின் இக்கட்டத்தின் எந்தவொரு நடவடிக்கையின் போதும் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக High Shear Granulator with Working Bench˙ தொடர்பானதொரு விழிப்புணர்ச்சியை தோற்றுவிப்பதற்காக அதே நாளில் அமைவிடத்திற்கு விஜயம் செய்து பரீட்சிப்பது அனைத்து விலைமனுதாரர்களுக்குமான கட்டாயமான பங்குபெறுதல் என்பதுடன் 2023 ஒக்ரோபர் 26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடந்தேறும்.

7. இக்கேள்விக்கான விலைமனுக்கள் அவைகளை 2023 நவம்பர் 06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடிய பின்னர் இரத்மலானை SPMC இல் உடனடியாகவே திறக்கப்படுவதுடன் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

8. விலைமனுக்கோரல் ஆவணங்களை SPMC இல் இலவசமாக பரீட்சிக்கலாம்.

9 மேலதிக தகவலை 0112637574 என்ற தொலைபேசி எண்ணினூடாக **SPMC** இன் உற்பத்திக்கான பிரதி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

www.spmclanka.lk என்ற எமது இணையதளத்தில் விலைமனுக்களின் தகவலை பார்வையிடலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரசமருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல.: 11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை:**
**கந்தவள தோட்டம்,**
**இரத்மலானை,**
**இலங்கை.**

**தொலைபேசி: (00)94-11-2635353/(00)94-11-2637574**
**மின்னஞ்சல்: chairman@spmc.gov.lk**
**இணையதளம்: www.spmc.gov.lk**




கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

# ராகு, கேது பெயர்ச்சி யாருக்கு நன்மை பயக்கும் ?

**ஒக்போபர் மாதம் 8ஆம் திகதியன்று இராகு, கேது பெயர்ச்சி நடைபெற்றது. இராகு, கேது பெயர்ச்சியானது 18 மாதங்களுக்கு ஒருமுறை நிகழும்.**

## மேஷம்

***(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)***

இராகு மீனத்திலும், கேது கன்னியிலும் சஞ்சரிக்கின்றன. அதாவது, இராகு 1 ஆம் இடத்திலும் கேது 6 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறன. எனவே, குருவின் பலன்கள் அதிகரிக்கின்றன. கடன் தொல்லைகள் அகலும். உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு, நோய்கள் அகலும். எதிரிகளும் நண்பர்களாக மாறிவிடுவார்கள். எதிரிகளின் தொல்லை இருக்காது. வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்தில் நன்மையான மாற்றம் ஏற்படும். திருமணத்தடை அகலும். செல்வச்செழிப்பு ஏற்படும். வியாபாரத்தில் நல்ல இலாபம் உண்டு. கல்வியில் முன்னேற்றம் ஏற்படும்.

## ரிஷபம்

***(கார்த்திகை 2ஆம், 3ஆம் , 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)***

இடப இராசிக்கு 11ஆம் இடத்தில் இராகுவும் 5ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றன.

5ஆம் இடத்தில் கேது ஞானத்தை கொடுக்கும். 11ஆம் இடத்தில் இராகு சுகபோகங்களை கொடுக்கும். பணவரவு அதிகரிக்கும். வரவுக்கேற்ப செலவும் இருக்கும். அசையா சொத்துக்களில் முதலீடு செய்வது நல்லது. குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் இடம்பெறும். விளையாட்டுத் துறையில் இருப்பவர்களுக்கு நன்மை உண்டு. வியாபாரத்தில் நல்ல இலாபம் உண்டு. பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

## மிதுனம்

***(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)***

உங்கள் இராசிக்கு இராகு 10ஆம் இடத்துக்குச் செல்கின்றது. கேது 4ஆம் இடத்துக்கும் வருகின்றது.

பணவரவு அதிகமாக இருக்கும். கொடுக்கல் வாங்கல்கள் சுமுகமாக நடைபெறும். வியாபாரத்தில் இலாபம் உண்டு. புகழ், செல்வாக்கு உயரும். பதவி உயர்வு உண்டு.

தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. குடியிருக்கும் இடத்தில் அயலவர்களுடன் வீண் வாக்குவாதங்கள் ஏற்படும். சொத்து பிரச்சினைகள் ஏற்படலாம். வண்டி வாகனங்களினால் செலவுகள் ஏற்படும்.

## கடகம்

***(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)***

உங்கள் இராசிக்கு இராகு 9ஆம் இடத்திலும் கேது 3 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறன.

மனபலம், தேகபலம் ஏற்படும். தோல்வியடைந்த சில காரியங்கள் இப்போது வெற்றியில் முடியும். முன்னோர்களின் சொத்து கிடைக்கும். சட்டப் பிரச்சினைகள் முடிவுக்கு வரும். வெளிநாடு சென்று நிரந்தரமாக அங்கேயே இருப்பதற்கான வாய்ப்புகள் உண்டு.

மனக்குழப்பங்கள் அகலும். எந்தவொரு விடயத்திலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும்.

## சிம்மம்

***(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)***

உங்கள் இராசிக்கு இராகு 8ஆம் இடத்திலும் கேது 2 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறன.

தன விரயம் ஏற்படும். பணத்தை முதலீடு செய்யும் விடயங்களில் அவதானமாக இருக்கவேண்டும். ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. அடிவயிறு சம்பந்தமான நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக்கொள்வது நல்லது. கடன் கொடுப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். மனதில் ஒருவித பய உணர்வு இருக்கும்.

## கன்னி

***(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)***

உங்கள் இராசிக்கு இராகு 7ஆம் இடத்திலும் கேது ஜென்ம இராசிக்கும் வருகின்றனர். தன்னம்பிக்கையுடன் இருப்பது நல்லது. குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படலாம். உறவினர்களுடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம். திருமணப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றாலும் சுலபமாக திருமணம் முடிவாகாது. சிந்தனை ஆற்றல் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் குறைபாடு ஏற்பட்டு உற்சாகத்தை குறைக்கும். எனவே, கவனம் தேவை. இடம், வீடு வாங்கும் யோகம் உண்டு. பொறுப்புகள் அதிகரிக்கும்.

## துலாம்

***(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)***

உங்கள் இராசிக்கு இராகு 6ஆம் இடத்திலும் கேது 12 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கின்றன. தொல்லைதந்த எதிரிகள் விலகுவர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கடன் சுமை குறையும். நினைத்த தொழிலை தொடங்கும் வாய்ப்பு உண்டு. ஊதிய, பதவி உயர்வு உண்டு. பயணங்கள் அதிகரிக்கும். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். பிறருக்காக எடுத்த முயற்சிகளில் உங்களுக்கும் ஆதாயம் உண்டு. வீண் விரயங்கள் ஏற்படாமல் இருக்க சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள்.

## விருச்சிகம்

***(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)***

விருச்சிக இராசிக்கு இராகு 5ஆம் இடத்துக்கும் கேது 11ஆம் இடத்துக்கும் வருகின்றன. தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து உற்சாகம் அடைவீர்கள். எதிர்பார்த்ததை விடவும் அதிக இலாபம் பெறுவீர்கள். பூர்வீக சொத்துகளால் இலாபம் உண்டு. வேலைவாய்ப்பு கிடைக்கும். திருமணம் கைக்கூடும். பல வழிகளிலும் பணவரவு உண்டு. வெளிநாட்டில் இருந்து ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். வீடு கட்டுவது, கட்டிய வீட்டை பழுது பார்ப்பது என்பனவற்றில் கவனம் செலுத்துவீர்கள்.

## தனுசு

***(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)***

உங்கள் இராசிக்கு இராகு 4ஆம் இடத்திலும் கேது 10ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறன. அதிகமான நன்மைகள் இடம்பெறும். வியாபாரத்தில் பெரிய வளர்ச்சி உண்டு. உத்தியோகத்தில் பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு ஏற்படும். வேலைவாய்ப்புகள் தேடிவரும். திருமணமாகாதாவர்களுக்கு திருமணமாகும். சொந்த வீடு வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பங்குதாரரர்கள் விலக நேரிடலாம். புதிய பங்குதாரர்களை ஆராய்ந்து சேர்த்துக்கொள்வது நல்லது. பணிபுரியும் இடத்தில் கவனம் தேவை.

## மகரம்

***(உத்தராடம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)***

மகர இராசிக்கு இராகு 3ஆம் இடத்திலும் கேது 9ஆம் இடத்திலும் சஞ்சாரம் செய்கின்றன.

எந்தவொரு முடிவையும் சரியாகவும் தைரியத்துடனும் எடுப்பீர்கள். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வியாபாரம் சிறப்பாக நடைபெறும். குடும்பத்தில் புரிந்துணர்வு ஏற்படும். ஒற்றுமையாக இருப்பீர்கள். இறைவழிபாட்டில் அதிக கவனம் செலுத்துவீர்கள். தொழிலில் வெற்றி காண்பீர்கள். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். குல தெய்வ வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள்.

## கும்பம்

***(அவிட்டம் 3ஆம் 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)***

உங்கள் இராசிக்கு இராகு 2ஆம் இடத்திலும் கேது 8ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறன. பணவரவு அதிகமாக இருக்கும். பொருளாதார ரீதியாக நல்ல முன்னேற்றம் இருக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தேவையற்ற சர்ச்சைகளை தவிர்ப்பது நல்லது. அவப்பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. அடிவயிற்றுப்பகுதியில் தொற்றுக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. குடும்பச்சுமை கூடும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது.

## மீனம்

***(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)***

மீன இராசியிலேயே இராகு சஞ்சாரம் செய்கிறார். கேது சப்த ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். புதிய தொழில் ஆரம்பிப்பதற்கான ஆர்வம் ஏற்படும். தகராறு செய்தவர்கள் தானாக விலக தெய்வ வழிபாடு சிறந்தது. குடும்பத்தில் விட்டுக்கொடுத்து போவது நல்லது. முன்கோபத்தை குறைக்கவும். பொருளாதாரம் திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் கூடும். வீண் விரயங்களை தவிர்த்து சுப விரயமாக்கிக் கொள்ளுங்கள். வாழ்க்கைதுணையுடன் அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி காணலாம்.

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 08



# கம்போடியாவில் அறிமுகமான 'குங்குமம் சுந்தரராஜன்'




'குங்குமம் சுந்தரராஜன்' கம்போடியாவில் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகத் தமிழர் மாநாட்டில் எனக்கு அறிமுகமானார். 'இலங்கையில் தமிழர் தொன்மங்கள் இராமாயணம் காட்டும் ஆதாரங்கள் குறித்த பார்வை' எனும் தலைப்பில் உரையாற்றுவதற்காக சென்றிருந்தேன். நிகழ்வை சுருதி டி.வி யூ டியூப் வழியாக ஆவணப்படுத்தும் பணிக்காகவும், ஆய்வுரை நிகழ்த்துவதற்காகவும் குங்குமம் சுந்தரராஜன் வருகை தந்திருந்தார். உலகின் பல நாடுகளில் வாழும் தமிழ் அறிஞர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

ஜேர்மனியை தலைமையகமாகக் கொண்டு தொழிற்படும் தமிழ் மரபு அறக்கட்டளை அமைப்பைச் சார்ந்த முனைவர் சுபாசினி உட்பட்ட அவ் அமைப்பை சார்ந்த பிரமுகர்களும், இயக்குனர் தங்கர் பச்சான், நடிகர் சரத்குமார், வெங்காயம் திரைப்பட இயக்குனர் இராஜ்குமார் ஆகியோரும் இம் மாநாட்டில் பங்கேற்றிருந்தார்கள்.

முதலாவது உலகத் தமிழர் மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவின் மிக முக்கிய உறுப்பினராக தொழிற்பட்ட தமிழர்களின் தொன்மங்களை ஆய்வு செய்வதிலும் குறிப்பாக கடல்சார் ஆய்வுகளில் குறிப்பிடத்தக்கவராக விளங்கியவருமான ஒரிசா பாலு கடந்த 07.10 2023 அன்று இயற்கை எய்தினார். இவரது மறைவு தமிழ் ஆர்வலர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக விளங்கியது. யாழ் பல்கலைக்கழகத்துடன் கடல்சார் ஆய்வு விடயங்களோடு தொடர்பை பேணியவர். இம் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட எனது கட்டுரை தொடர்பில் மிகுந்த ஆர்வத்தோடு கருத்துக்கூறி வாழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. அவ் விடயம் தொடர்பில் அடுத்தகட்ட நகர்வுகள் பற்றி அவர் வழங்கிய ஆலோசனை ஞாபகத்துக்கு வருகிறது.

தமிழர்களை தொடர்த்தேர்ச்சியாக ஆரியர்கள் இருட்டடிப்பு செய்யும் நிலை பற்றிய வரலாற்றோடு சமகாலத்தையும் தொடர்புபடுத்தியதாகவும் தமிழர்களை தமிழர்களுக்கு எதிராகவே பயன்படுத்தும் பாங்கு பற்றியும் விபரிப்பதாக எனது உரை அமைந்திருந்தது.

பலரது கவனத்தையும் அவ் உரை பெற்றிருந்ததோடு இணையத்திலும் யூ டியூப் வழியாகவும் பகிரப்பட்டிருந்தது. அதனை பதிவிட்டு ஆவணப்படுத்தியதன் ஊடாகவே அவருடனான நட்பு ஆரம்பமானது. தொடர்ந்து முகநூல் ஊடாக கருத்துநிலை நட்பும் மொசேஞ்சர் ஊடாக உரையாடலும் தொடர்ந்தது. சமகால பிரச்சினைகள், நலன் விசாரணை என்றவாறு 2018ம் வருடம் தொடக்கம் அவ் வப்போது உரையாற்றிக்கொள்வோம்.

எனது முகநூல் பதிவின் ஊடாக 11வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் நானும் கலந்து கொள்வது தொடர்பான பதிவை பார்த்து மகிழ்ச்சியுடன் வாழ்த்துத் தெரிவித்தார். மாநாட்டில் சந்திப்போம் என ஆர்வத்தோடு வரவேற்றார்.

பத்திரிகையாளர் ஊடகவியலாளர் ஆவணப்பட இயக்குனர் என பன்முக படைப்பாளியான "குங்குமம்" சுந்தரராஜன் தமிழ்நாட்டில் உள்ள கடலூர் மாவட்டத்தில் 1970ஆம் ஆண்டில் பிறந்தவர்.

பள்ளிப் படிப்பை கடலூர் மாவட்டத்திலும், கல்லூரிக் கல்வியை திருச்சி பெரியார் ஈ.வெ.ரா கல்லூரியிலும் கற்று இளம் அறிவியல் பட்டமும் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் பயிற்சி மற்றும் முதுநிலை அறிவியலையும் படித்தவர். 1995 வளர்தொழில் இதழின் மூலம் பத்திரிகை துறைக்குள் நுழைந்தவர்.

அடுத்து "தொழில் உலகம்" பத்திரிகையில் பணி. மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் ஆசிரியராக இருந்த "குங்குமம்" வார இதழில் செய்தியாளர் மற்றும் துணை ஆசிரியராக பணி செய்ததால் "குங்குமம்" சுந்தரராஜன் என பத்திரிகை துறையில் அறியப்படுகிறார். தமிழ் டிவி உலகின் பிதாமகன் கைலாசம் பாலசந்தர் உடன் இணைந்து தனது ஊடகப் பணியை தொடங்கியவர். விஜய் டி.வி, சன்.டிவி, Zee தமிழ், ராஜ் டிவி,வசந்த் டிவி, ஏஞ்சல் போன்ற தொலைக்காட்சிகளில் 50க்கும் அதிகமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்களிப்பு செய்தவர்.

2002ல் சுதா என்பவரை திருமணம் செய்து கொண்ட "குங்குமம்" சுந்தரராஜனுக்கு சேகுவேரா, சிவமணிராஜன் என இரண்டு மகன்கள். தற்போது சென்னையில் வசித்து வருகிறார்.

2013 ஆண்டில் கவிஞர் மகாலட்சுமி பிள்ளையுடன் இணைந்து "மொழி வரலாற்று ஆராய்ச்சி ஆவண மையத்தை" உருவாக்கி பல்துறை அறிஞர்களின் ஆலோசனையுடன் ஆவணப்படங்களை தொடர்ந்து தயாரித்தும், இயக்கியும் வருகிறார்.

இவரது முதல் முயற்சியாக வடதிராவிட மொழிகளில் ஒன்றான "குருக்" மொழிபேசும் உராவ் மக்களை பற்றி ஆய்வு செய்து "ஓ உராவ்" (தமிழர்களின் சகோதரர்கள்)

என்கிற ஆவணப் படம் ஜார்கண்ட் மாநில "குருக் லிட்ரரி சொசைட்டி"யால் அறிமுகம் செய்யப்பட்டது. இரண்டாவது முயற்சியாக, மொரீஷியஸ் நாட்டின் பெண்போராளி "அஞ்சலை" பற்றிய ஆவணப்படமான "அஞ்சலை" (The Legendary Heroin) ஐ இயக்கினார்.

இதனை மொரீசியஸ் அதிபர் வையாபுரி பிள்ளை அறிமுகம் செய்து வைத்தார். மூன்றாவது முயற்சியாக அக்டோபர் 1984 முதல் பெப்ரவரி1985 வரை தமிழகத்தில் திக், திக். நிமிடங்களாக மாறி இருந்த காலகட்டத்தில் எம்.ஜி. ஆரின் உடல்நலம் பற்றிய ரகசியங்களை சொன்ன"காலத்தை வென்றவன்" ஆவணப்படத்தை நடிகர் கமல்ஹாசன் வெளிட்டார். நான்காவது முயற்சியாக 1942 வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற தியாகிகளின் ஒப்புதல் வாக்குமூல ஆவணப் படத்தை "நம்மோடு தியாகிகள்" என்கிற பெயரில் மதுரை காந்தி மியூசியத்தில் நீதியரசர் சுவாமிநாதன் வெளியிட்டார்.

5 தாவது முயற்சியாக "விடுதலைப் போராட்டத்தில் சிவகங்கை மாவட்டத்தின் பங்கு" என்கிற ஆவணப் படத்தை தவத்திரு.குன்றக்குடி அடிகளார் வெளியிட்டு பெருமைப் படுத்தினார்.

இவற்றைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பேசப்படாத மனிதர்களின் தியாகங்களை. The UnSung Hero's. என்கிற தலைப்பில் மாவட்ட வாரியாக இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையுடன் இணைந்து ஆவணப்படுத்தி வருகிறார்.



தற்போது விஜய் தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் தமிழ் பேச்சு நிகழ்ச்சி குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருந்து வருகிறார்.

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் எம்.ஏ,மாணவராகவும் பல்கலைக்கழகத்தின்" துணை வேந்தர்" முனைவர். ஆறுமுகத்தின் வழிகாட்டுதலின் படி விடுதலைப் போராட்ட வீரர்கள் பற்றிய திட்டத்தின் ஆய்வாளராகவும் இருந்து வருகிறார்.

2015ல் நடந்த 9ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்ட இவர், தமிழர்கள் தங்களது இரண்டாவது தாய்நாடாக கருதும் மலேசியாவில் நடத்தப்பட்டு வரும் 11வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும் கலந்து கொண்டதை வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறார்.

"இந்திய விடுதலைப் போராட்டத்தில் மலேசிய தமிழர்களின் பங்கு" என்கிற ஆவணப்படத்தை தொகுக்க ஆரம்பித்திருக்கும் "குங்குமம்" சுந்தரராஜன், மலேசியாவுக்கும் தமிழர்களுக்குமான வரலாற்று கால தொடர்பை தொல்லியல் பூர்வமாக நிரூபித்த 'BUJANG VALLEY"The Wonder That Was Kedah' என்கிற நூலை எழுதிய டத்தோ. வீ. நடராஜனின் வாழ்க்கையை ஆவணப்படுத்தி வருகிறார்.

**பயணம் தொடர்கிறது...**

# படித்ததும் பகர்வதும் 162



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### தேவை புன்னகை!



புன்னகை தவழும் முகம் கொண்டோரை மக்கள் பெரிதும் விரும்புவர். அவர்களைப் பற்றிய நல்லெண்ணங்களே பிறர் உள்ளங்களில் உருவாகும். இதனால் எவரும் சிடுமூஞ்சிகளாகவோ, முகத்தை இறுக்கமாக வைத்துக் கொள்பவர்களாக இராமல் புன்னகை ததும்பும் முகங்களை கொண்டவர்களாக வாழுதல் சிறப்பு.

ஒருவரது உள்ளத்தில் தோன்றுகின்ற உவகையினதும், நல்லெண்ணங்களினதும் வெளிப்பாடாகவே முகத்தில் புன்னகை தோன்றுகிறது. இதனாலேயே புன்னகைக்கும் முகங்களை கொண்டவர்களை பலரும் விரும்புகின்றனர். விலையில்லாமல் எவரும் எவருக்கும் கொடுக்கக் கூடிய சிறந்த பொன் நகையாக இப்புன்னகை திகழ்கிறது. "ஒருவர் காட்டுகின்ற மென்மையான புன்னகையும் கூட அவர் செய்கின்ற சிறந்த தர்மமாகும்." என்று நபிகள் நாயகம் கூறியுள்ளார்கள். இதன் மூலம் 'புன்னகை' செய்வதும் 'பொன்னகையை' தருமம் செய்வதற்கு சமமாக இருப்பதைக் காண முடிகிறது.

"புன்னகை பூத்த முகத்துடன் ஒருவர் பேசும் போது அல்லது ஏதேனும் செய்திகளை சொல்லும் போது கேட்பவர்கள் அவற்றில் அதிக ஆர்வம் கொள்வார்கள். கூர்ந்து கேட்கவும் செய்வார்கள்." என்று உளவியல் கூறுகிறது. ஒருவரை ஒருவர் சந்திக்கின்ற பொழுது அவர்களிடையே இருக்கின்ற இறுக்கத்தை, ஒரு புன்னகை தளர்த்துகிறது. அத்துடன் சிக்கலான சிரமமான விடயங்களையும் புன்னகை எளிதாக்குகிறது என்றால் மிகையல்ல 'புன்னகையை தம் முகங்களில் எப்போதும் இழையோடச் செய்பவர்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் புத்துணர்வோடு இருப்பார்கள்' என்று விஞ்ஞான ஆய்வுகள் கூறுகிறன.

'புன்னகைப்பதன் மூலம் இதய நோய்கள் வருவதை தடுத்துக் கொள்ளலாம்' என்று ஓர் பல்கலைக்கழக ஆய்வு தெரிவித்துள்ளது. ஒரே வயதையும் ஒரே விதமான உடற் கூறுகளையும் கொண்ட புன்னகைப் பிரியர்களையும், கடுகடுத்த குணம் கொண்டவர்களாக இருப்பவர்களையும் இரு பிரிவினர்களாகப் பிரித்து செய்யப்பட்ட ஓர் ஆய்வில் நாற்பது வீதத்துக்கும் மேற்பட்ட புன்னகை பிரியர்களுக்கு இதய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று நிரூபணமாகியுள்ளது.

எப்போதும் கடுகடுத்த, இறுக்கமான முகத்தோடு வாழ்வதை கைவிட்டு விட்டு, முகத்தில் புன்னகை நிறைந்தவர்களாக பழகும் போது பிரிவினைகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் மிக அரிது. அத்துடன் நல்லுறவும், நல்லிணக்கமும் விருத்தியடைகிறது. சமூக உறவு வளர்கிறது.

இதனால் உறவினர்களிடையே, நண்பர்களிடையே, குடும்பங்களுக்கிடையே, காண்போர்களுக்கிடையே நல்லுறவும் நட்பும் பாசமும் மிளிரவும், வளரவும் வழியேற்படுகிறது. எனவே எப்போதும் முகத்தில் புன்னகை நிறைந்தவர்களாக வாழப் பழகிக் கொள்வோம்.

## நெஞ்சுக்கு நீதி

**புன்னகை வேண்டுமன்றோ முகமதில் எப்போதும்**
**புவியதனில் நல்லுறவுகள் அதனாலேயே ஓங்கும்**
**பொன்னகை இருந்தாலுமே புன்னகையே முந்தும்**
**பாரினில் எல்லோர்க்குமே இக்கருத்து பொருந்தும்**

## புது வரவு

### 'பேராசிரியர் எஸ். எச். ஹஸ்புல்லாஹ் வாழ்வும் பணியும்'



பிரபல ஆய்வாளரும், சிறந்த புத்திஜீவியும், தனித்துவமான ஆளுமையுமான காலஞ்சென்ற பேராசிரியர் எஸ். எச். ஹஸ்புல்லாஹ் பற்றி கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவை வெளியிட்டுள்ள காத்திரமான தொகுப்பு நூல், 'பேராசிரியர் எஸ். எச். ஹஸ்புல்லாஹ் வாழ்வும் பணியும்'.

இந்நூல் பற்றி, 'கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவை'யின் தலைவர் பேராசிரியர் எம். எஸ். எம். ஜலால்தீன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"இந்நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பொருளாதார மீள் கட்டமைப்புக்கான மூலோபாயங்களை வகுப்பதிலும், குறிப்பாக 30 வருட உள்நாட்டுப் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டு இலங்கையின் நாலாபுறங்களிலும் இடம்பெயர்ந்து சிதறியிருந்த வடமாகாண முஸ்லிம்களின் மீள் எழுச்சிக்கும், அவர்களின் வாழ்வியல் கட்டமைப்புக்கும் தனது துறையுடனான அறிவியல் ஆத்மார்த்த பங்களிப்புகளை வழங்கியவர்களில் பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வுக்கு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் தனியிடமுண்டு.

பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களின் இன ஒற்றுமை பற்றிய ஆதங்கத்துடனேயே தனது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளமை இன்று உணரப்பட்டுள்ளது. இதை நிரூபிக்கும் வகையிலேயே இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளும் அமைந்துள்ளன. பேராசிரியர் மர்ஹூம் ஹஸ்புல்லாஹ்வின் வாழ்வையும் சாதனைகளையும் சமூக செயற்பாடுகளையும் நினைவு கூரும் வகையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது."

பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆய்வு உத்தியோகத்தர், ஆசிரியர் போன்ற சிறந்த ஆளுமைமிக்கவர்களது ஆய்வு ரீதியான விளக்கங்களைக் கொண்ட கட்டுரைகள் பேராசிரியர் எஸ். எச். ஹஸ்புல்லாஹ்வை சிறப்பாக படம் பிடித்துக் கட்டுகின்றன.

பேராசிரியர்களான எம். எஸ். எம். அனஸ், எம். எஸ். எம். ஜலால்தீன், எம். பி. எம். இஸ்மாயில், எம். எம். பாஸில், எம். எச். நைறூஸ், சிரேஷ்ட விரிவுரையாளர்களான ஏ. ஜே. எல். வஸீல், எம். எப். எம். அன்ஸார் மௌலானா, இலங்கை பாராளுமன்றத்தில் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் எம். அஜ்வதீன், காதி நீதிபதி செய்னுல் ஆப்தீன் அப்துல் அஸீஸ், விஞ்ஞான ஆசிரியர் சாஹுல் ஹமீது முஹம்மது றிஸ்னி, இலங்கை தொல்பொருளியல் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹாபில், உலமா, ஏ. ஆர். ஜெஸ்மில் ஹாபில், விஞ்ஞான ஆசிரியர், உலமா, முகுசீன் றயிசுத்தீன் அக்கரைப்பற்று கல்வி வலய ஆசிரிய ஆலோசகர், எஸ். எல். மன்சூர் ஆகியோரின் கட்டுரைகள் தமிழில் உள்ளன.

பேராசிரியர் எம். ஏ. நுஃமான், பேராசிரியர் பீ. ஏ. ஹுஸைன்மியா, சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். வை. எம். சித்தீக், ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி ஏ. எல். அப்துல் அஸீஸ் ஆகியோர் தமது ஆக்கங்களை ஆங்கிலத்தில் தந்துள்ளனர்.

சமுதாய சிந்தனைக் கொண்ட, மனித நேயமிக்க, தான் பிறந்த மண்ணின் மைந்தருக்காக தன் வாழ்வின் பெரும்பகுதியை செலவிட்ட பேராசிரியர் எஸ். எச். ஹஸ்புல்லாஹ்வின் வாழ்வும் பணியும் எத்தனை சிறப்பு மிக்கது என்பதை இந்நூல் வாசிப்போருக்கு உணர்த்துகின்றது.

நூல்: பேராசிரியர் எஸ். எச். ஹஸ்புல்லாஹ் வாழ்வும் பணியும், வெளியீடு: கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவை, முதற்பதிப்பு: மே 2023, பக்கங்கள்: 272, விலை: ரூபா.1000/=.தொடர்புகளுக்கு: 0773613889

## சிந்தனை செய் மனமே

### புத்திசாலியாக இருங்கள்!



ஒரு ரயில் வண்டி நல்ல வேகத்தில் சென்றுகொண்டிருக்கிறது. அப்போது ரயிலின் ஒரு ஜன்னல் அருகே விளையாடிக் கொண்டிருந்த குழந்தையொன்று, தன் கையில் இருந்த தங்க மோதிரத்தை வண்டிக்கு வெளியே போட்டு விட்டது.

பிள்ளையின் பெற்றோர் "ஐயோ! மோதிரம் போச்சே" எனப் பதறினர். சூழ இருந்த அனைவரும் பதற்றப்பட்டு,

வண்டியை நிறுத்த முயற்சித்தனர். ஆனால் அங்கே ஒருவர் மட்டும் எந்தப் பதற்றமும் இன்றி, மிக அமைதியாக தன்பாட்டில் அமர்ந்திருந்தார்.

'என்னடா இந்த அமர்க்களத்தில் இந்த மனிதர் மட்டும் இப்படி அமைதியாக இருக்கிறாரே!' என்று பலர் ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தனர். சிலர் அவரைத் திட்டக் கூட செய்தனர்.

ரயில் சிறிது தூரம் சென்றபின் நின்றது. அப்போது அந்த மனிதர் பேசினார். "இங்கிருந்து பின்னால் 70வது மின் கம்பத்தின் அருகே சென்று பாருங்கள். உங்கள் குழந்தை வெளியே போட்ட மோதிரம் இருக்கும். சென்று எடுத்துக் கொள்ளுங்கள்".

மோதிரம் அங்கே கீழே விழுந்தவுடன், மற்றவரைப் போன்று அவர் பதற்றமடையாமல், தடுமாறாமல் அமைதியாக, கடந்து செல்லும் மின் கம்பங்களை எண்ண ஆரம்பித்திருக்கிறார். அதனால் தான் சரியாக அதனை அவரால் சொல்ல முடிந்தது.

பிரச்சினை வந்தவுடன் முதலில் பதற்றமடையாதீர்கள். நிதானமாக அதை உற்றுக் கவனியுங்கள். சரியாக சிந்தியுங்கள். அப்போதுதான் சரியான தீர்வுக்கு வர முடியும். இதைத் தான் புத்திசாலிகள் செய்கிறார்கள். நீங்களும் புத்திசாலியாக இருங்களேன்!

## பாடம் தரும் பாடல்

**வேர்வைக்கும் வெற்றிகள்**
**வேர்வைக்குமே !**

முன்னால் முன்னால் முன்னால் முன்னால் வாடா
உன்னால் முடியும் உன்னால் முடியும் தோழா

எல்லாப் புகழும் ஒருவன் ஒருவனுக்கே
நீ நதி போலே ஓடிக்கொண்டிரு எந்த
வேர்வைக்கும் வெற்றிகள் வேர்வைக்குமே
உன்னை உள்ளத்தில் ஊர் வைக்குமே

நாளை நாளை நாளை என்று
இன்றை இழக்காதே
நீ இன்றை இழக்காதே

இன்றை விதைத்தால் நாளை முளைக்கும்
அதை நீ மறக்காதே அதை நீ மறக்காதே

நேற்று நடந்த காயத்தை எண்ணி
நியாயத்தை விடலாமா
நியாயம் காயம் அவனே
அறிவான் அவனிடம் அதை
நீ விட்டுச் செல்

மாணவன் மனது வைத்தால்
முடியாது என்பது இல்லை
கடல் போல், மலை போல், காற்றைப் போல்,
பூமி போல் நீ பெருமை சேரடா
பிறந்தோம் இருந்தோம் சென்றோம் என்ற
வாழ்வை தூக்கிப் போடடா

## நோயுக்குத் தீனி

மனிதர்கள் பலருக்கு வரும் நோய்களுக்கு மூல காரணங்கள் இவைதானோவென 'அ' முதல் 'ஔ' வரை எம்மை சிந்திக்கத் தூண்டுகின்றனவே!

அ – அதிக கோபமும், ஆத்திரமும் அடிக்கடி வந்து ஆட்டுவிப்பது,

ஆ – ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்ததில் அதுவே அழியக் காரண–மானது,

இ – இருந்து வந்த சந்தோஷ சிரிப்பு இல்லாமல் மறைந்து போனது,

ஈ – ஈடில்லா எண்ணெய்க் குளியலை பலரும் மறந்து போனது,

உ – உழைப்பு இல்லாத உடம்பு தொங்கும் ஊளைச்சதையானது,

ஊ – ஊதிப் பெருத்த வயிற்றால் உட்கார்ந்து எழ முடியாது போனது,

எ – எதிர்ப்புச் சக்தி உணவுப் பொருட்கள் உணவில் சேராமல் போனது,

ஏ – ஏனென்று கேட்கவியலாத உணவுப் பொருட்களிலுள்ள தீமைகள்,

ஐ – ஐயமே சூழ்ந்து கொண்டதனால் வீரம் வீழ்ந்து போனது,

ஒ – ஒன்றுபட்டு இருந்த குடும்பம் இரண்டு மூன்றுபட்டுப் போனது,

ஓ – ஓங்கி ஒலித்த மூத்தோர்கள் குரல் அடங்கி முடங்கிப் போனது,

ஔ – ஔடதமே தினமும் ஆகாரமாகிப் போனது.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

# நகுலாத்தை

## வாசிப்பை எங்கும் தளர விடாத நாவல்

### நாவல் விமர்சனம்



யதார்த்தன் என்கின்ற புனைப் பெயரில் எழுதுகின்ற பிரதீப் குணரட்ணம் தாயகத்தில் சரசாலை எனும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இது யதார்த்தனின் முதல் நாவலாக இருந்த போதும் இவர் 2017இல் வெளிவந்த 'மெடூஸாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம்' என்கின்ற சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர். அத்தோடு தொடர்ச்சியாக மரபுரிமைகள் தொடர்பாக வெளிவருகின்ற 'தொன்ம யாத்திரை' இதழின் ஆசிரியர்களில் ஒருவராகவும் விளங்குகிறார்.

இந்நாவல் இந்தியாவில் வடலி வெளியீடாக ஆவணி 2022இல் வெளியிடப்பட்டிருக்கிறது. மிக அழகான, தடிமனான அட்டையுடன் (Hard back cover) 479 பக்கங்களுடன் படைக்கப்பட்டிருக்கும் இந்நாவல் குறித்துப் பேசப்பட வேண்டிய விடயங்கள் ஏராளம் உண்டு. இவ்விமர்சனம் ஒரு சிறு அறிமுக உரையாடலை மட்டுமே ஆரம்பித்து வைக்கக் கூடிய சிறு தீப்பொறியாக இருந்தாலே போதுமானது.நாவல்களும் சிறுகதைகள் போல ஒரு புனைவு இலக்கியம் தான் என்றாலும் சிறுகதைகள் போல் அல்லாது, நாவல்கள், அதன் எழுதப்படும் காலம், அதற்கான தளம், அதில் வாழும் மாந்தர்கள் என மூன்று விடயங்களிலும் சிறுகதைகளை விட ஆழமாகவும் விரிவாகவும் கவனத்தோடு, செதுக்கப்பட வேண்டும். அவ்வகையில் நகுலாத்தை தன் பங்கைக் கவனமாகக் கையாண்டிருக்கிறாள் என்றே தோன்றுகிறது.

உள்நாட்டு யுத்தம் நடை பெற்றதுக்கு அடையாளமாக இருந்த பல சான்றுகள் இல்லாமற் போயிருக்கும் தற்காலப்பகுதியில் எமது போர்க்காலத்தை அடையாளப்படுத்தும் வகையில் படைக்கப்படும் புனைவுகளில் நாவல்கள் குறிப்பிடத்தக்க இடம் வகிப்பவை. இவ்வகையில் இவை வரலாற்று ஆவணங்களாகப் பதிவு செய்யப்படலாமா என்கின்ற ஒரு கேள்வியும் இங்கே எழுகிறது. இதை பிறிதொரு தளத்தில் உரையாடலுக்கான ஒரு விடயமாக எடுத்துக் கொள்ளலாம். பேராசிரியர் அ. இராமசாமியின் கூற்றிலிருந்து ஈழத்து இலக்கியங்களில், நாவல்களை ஏனைய புனைவு இலக்கியங்கள் போலவே நான்கு பெரும் பிரிவாக்கலாம் என்பது இங்கு சரியானதென்றே கருதக்கூடியதாய் இருக்கிறது. அதன் படி, முதலாவது வகை போர்க்களத்தில் பங்கேற்று அதன் அனுபவங்களைத் தம் சாட்சியங்களாக எழுதுபவையாகவும் , இரண்டாவது வகை, போர்க்காலத்தில் பங்கேற்காமல், ஆனால் அவற்றை நேரில் பார்த்தோ அல்லது தம் அனுபவங்களின் மூலமாகவோ எழுதப்படுபவகை ஆகவும், மூன்றாவது வகையைச் சேர்ந்தவை, புலம் பெயர்ந்து வந்து தம் தாயக அனுபவங்களை, தாம் கேள்விப்படுபவற்றை தொகுப்பவையாகவும், இறுதியாக நான்காவது வகையைச் சேர்ந்தவை ஆயுதப் போர் சார்ந்து முழுவதுமாக விடுதலைப் புலிகளின் பக்கம் இருந்து எழுதப்படுபவையாகவும் இருக்கின்றன. இவ்வகையில் யதார்த்தனின் நகுலாத்தை இரண்டாவது வகையைச் சேர்ந்த நாவலாக இருக்கிறது. இக்கதையின் களம், அங்கு வாழும் மாந்தர்கள், அவர்களுடைய பண்பாடுகள், விழுமியங்கள் எனப் பலதும் கிளிநொச்சி, இயக்கச்சி என வன்னி நிலப் பரப்பின் பாடுகளை மிக ஆழமாகப் பேசிப் போகின்றன. மிகத் தொன்மையான மரபு வழி நம்பிக்கைகளை, குறிப்பாக பெண்களை முதன்மைப் படுத்தும் தாய் வழிபாடு குறித்து ஒரு வித ஓர்மத்தோடு பேசிப் போகிறது நகுலாத்தை. நகுலம் என்றால் கீரி, கீரியை கீரிப்பிள்ளை என்பார்கள். நகுலாத்தை, கீரிப்பிள்ளை என்கின்ற அம்மன், அந்தக் கிராமத்தை காப்பவள். நகுலாத்தை ஒரு கிராம தேவதை. கீரிப்பிள்ளையை ஒரு தாய் வடிவில் வழிபட்ட மரபையும் அம்மரபைப் பின்பற்றிய கிராமத்தையும் இந்நாவல் கோடிட்டுக் காட்டுகி




றது.

ஆத்தை என்ற சொற்பதமும், குளுவன் பிடிப்பது, அதை அடக்குவது. உக்குழுவான் பிடிப்பது, கீரிப்பிள்ளை பாம்பை மயக்கி அடக்குவதற்கு போடப் படும் நாண வட்டம், அதன் பிறகு தோன்றுகின்ற ராஜமாதா போன்ற கீரி, அதன் அமைதியான தாக்குதல் போன்று இன்ன பிற சொற்பதங்களும் சம்பவங்களும் வன்னி மண்ணின் தொன்மையை, அதன் வட்டார மொழியை ஆங்காங்கே சுட்டிக்காட்டத் தவறவில்லை. நகுலாத்தையின் கோவிலை மையமாக வைத்தே அந்த ஊர் கீரிப்பிள்ளை மேடு என அழைக்கப்படுகிறது. அங்கிருக்கும் கீரிக்குளம், அதற்கான சடங்குகள், சொத்தி முனி என்கின்ற குளத்தின் காவல் தெய்வம் எனப் பலதும் இங்கே பேசப்படுகிறது.

கீரிப்பிள்ளை மேட்டின் காடுகள், வயல், வாவி, குளம், கோவில்கள். கட்டடங்கள் என அனைத்திலும் அம் மக்களின் ஊடாட்டங்களை யதார்த்தன் யதார்த்தம் சிதையாமல் மிக இயல்பாக விபரமாகத் தருகிறார். கிராமிய மணம் தவழும் கீரிப்பிள்ளை மேட்டின் இயற்கை அழகு, அதன் பண்பாட்டு அம்சங்கள், அதோடு தொடர்பான விழுமியங்கள், கலாசாரக் கூறுகள், மனித உணர்வுகள், மனித நேயம், அக் கிராம மக்களின் அன்றாட வாழ்வியல், அடிப்படைப் பொருளாதாரம், அவர்கள் சார்ந்த அரசியல் எனப் பலதும் இணைந்து இந்நாவலை செதுக்கியிருக்கின்றன.

நகுலாத்தை ஆத்தை வளவில் வீற்றிருக்கிறாள். ஆத்தை வளவு கீரிப்பிள்ளை மேட்டில் அமைந்திருக்கிறது. அங்கு பெண்கள் ஆண்களுக்கு இணையாக கிராமத்தை இயக்குகிறார்கள். அங்கு ஆண்களின் பெயரில் சொத்துக்கள் வாங்கப்படுவதில்லை. முக்கியமாக நிலங்கள் ஆண்களின் பெயரில் வாங்குவதோ அல்லது பெயர் இடப்படுவதோ இல்லை. விளையும் பெருநிலமும் காடும் பெண்களுக்காகவே இருந்தன. இதன் பிரதானமான தளம் வன்னியை மையம் கொள்கிறது. கீரிப்பிள்ளை மேடும் அங்கு குடியிருந்த மாந்தர்களும் ஒருவருக்கொருவர் தமக்கேற்றவாறு தம்மை தகவமைத்துக் கொண்டிருந்தனர் என்பதோடு, நகுலாத்தையின் வளவை மையப்படுத்தி எழுதியிருக்கும் காடு குறித்த வர்ணனைகள் அபாரமாக அமைந்திருக்கின்றன.

எழுத்தாளர் நொயல் நடேசன் 'நிமித்தம்' என்கின்ற எஸ். இராமச்சந்திரனின் நாவல் குறித்த விமர்சனத்தில் குறிப்பிட்டது போல சம்பவங்களால் மட்டும் கட்டமைக்கப்பட்டது ஒரு நாவல் ஆகாது. இங்கும் அங்குமாக சம்பவங்களைக் கோர்த்து விட்டால் அது நாவல் எனப்படாது. அங்கு கட்டமைக்கப்படும் காத்திரமான பாத்திரங்களே ஒரு நாவலை அல்லது ஒரு இலக்கியத்தை வாழ வைக்கும் தன்மையைக் கொண்டன. ஒரு நாவலில் அல்லது சிறுகதைகளில் வருகின்ற கதாபாத்திரங்கள் வாசகர் மனங்களில் நிலைத்து நிற்க வேண்டும். அந்த வகையில் நகுலாத்தையில் ஏராளமான கதாபாத்திரங்கள் இருந்தாலும், ஆச்சியும், தாமரையும், வெரோனிக்காவும் மனதில் ஆழமாகப் பதியக் கூடியவர்கள். தாமரை, வெரோனிகா என்ற இரு இளம் பெண்களுக்கிடையே இயல்பாக ஏற்படுகின்ற நெருக்கமான, இறுக்கமான உணர்வுகளை யதார்த்தன் மிக நுட்பமாகக் கையாண்டிருப்பதும் அவரது மொழிவளத்தை அடையாளப்படுத்துகிறது.

கீரிப்பிள்ளை மேட்டை மையமாக வைத்தே இங்கு கதை மாந்தர்கள் உருவாகுகிறார்கள். நகுலாந்தைக்கு மடை வைப்பது, சாந்தி செய்வது, அவளுக்கு முன்னாள் ஊர் மக்களுக்கு குறி சொல்வது, கிராமத்தை அன்பால் கட்டி ஆள்வது எல்லாம் ஆச்சி என்று அழைக்கப்படும் தாமரை என்கின்ற ஒரு இளம் பெண்ணின் பாட்டி தான். ஆச்சியைக் கேட்காமல் அல்லது அவளுக்குத் தெரியாமல் எதுவும் நடப்பதில்லை என்பதோடு ஆச்சியுடைய ஆழமான குல தெய்வ நம்பிக்கையை அந்த ஊர் மக்களும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆச்சி பாத்திரம் இறுதி வரை தன் தனித்தன்மையை இழக்காமல் இருப்பதற்குக் காரணம் ஆச்சி எப்போதும் தான் எப்படியான சூழலில் வாழ்ந்தாலும் அங்கு வாழ்வதற்கான ஒரு அர்த்தத்தை நகுலாத்தை என்கின்ற குல தெய்வதினூடு கண்டுகொள்வதுதான். வெவ்வேறு பின்புலங்களைக் கொண்ட ஏராளமான கதாபாத்திரங்கள் ஒரே வெளியில் தோன்றி மறைகிறார்கள். சிலர் திரும்பவும் வருகிறார்கள். சின்னான், சின்ராசு, காங்கேயன், துரிதம், விந்தன், ஆச்சி, மகன் சண்முகம், மனைவி யோகம், பிள்ளைகள் தாமரை, அனு, அட்சயன், அதன் பின் மாவீரனான மரியதாஸ், அவருடைய மனைவி நிர்மலா, மகள் வெரோனிகா, மதர் ஏவா, வைகாசிக் கிழவர், கிளி அன்றி, தமயந்தி, குழந்தை கோதை, சக்கடத்தான் எனப்படும் வேட்டை நாய் என எண்ணற்ற கதாபாத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் தாமரை, வெரோனிகா, ஆச்சி போன்ற கதாபாத்திரங்கள் மிகக் காத்திரமாக சித்தரிக்கப்படுகின்றன. சின்ராசுவும் அவன் நாய் சக்கடமும் கூட மனதை விட்டு அகலாமல் படைக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும், யதார்த்தன் கதாபாத்திரங்களின் எண்ணிக்கையை குறைத்திருந்தால் பிரதான பாத்திரங்களின் காத்திரத்தன்மையை இன்னும் அதிகரித்திருக்கலாம் என்பதை எண்ணாமல் இருக்க முடியவில்லை.

ஆத்தை வளவும், கீரிப்பிள்ளை மேடும், உள்நாட்டு யுத்தத்தின் உக்கிரத்தினால் குலைக்கப்பட்டு, நகர்ந்து சுதந்திரபுரம் அடைகிறது. கட்டாய ஆட்சேர்ப்பு என்பது எவ்வாறு இக்கிராமத்தில் ஊடுருவுகிறது, உருவாகிறது என்பதும், மக்கள் அனைவரும், முக்கியமாகப் பெற்றவர்கள் கையறு நிலையில் தம் குழந்தைகளுக்காய் கண்ணீர் விடுவதும், சுய சிந்தனை அற்ற மக்களாய் அனைவரும் அல்லாடுவதும் நிகழ்கின்றது. கட்டாய ஆட் சேர்ப்பில் இணைந்தவர்கள் கூட, அதன் பின்னர் ஒரு இயக்க ரீதியாக அமைப்பு ரீதியாக இயங்க வேண்டிய கட்டாய சூழ்நிலை குறித்து அறிய நேர்கிறது. மனித மனங்களின் உணர்வுகளை, ரசனைகளை, அகக் குமுறல்களைத் தட்டி எழுப்பி அவ்வழியே விரிந்து செல்கிறது நகுலாத்தை. பல்வேறுபட்ட கோட்பாட்டு சிந்தனைகளும், தர்க்க முரண்பாடுகளும் நாவல் எங்கும் உரையாடல்கள் மூலமாக நகர்ந்து செல்கின்றது. மக்கள் அரச ஒடுக்குமுறைக்கு மட்டுமல்ல எமக்கிடையே நிகழ்ந்த ஜனநாயக ஒடுக்கு முறைக்கெதிராகவும் போராட வேண்டிய சூழலில் எவ்வாறு அல்லற் பட்டனர் என்பது துல்லியமாகப் பேசப்படுகிறது.

நாவலாசிரியருக்கு அழகை மட்டுமல்ல அரசியலையும் தன் மையத்திலிருந்து ஆழமாக, துல்லியமாகப் பார்க்கத் தெரிந்திருக்கிறது. தன்னைச் சுற்றி நடந்தவற்றை தன் படைப்பினூடாகத் தருவது சரியாகவே கைகூடியிருக்கிறது. இந்த வகையில் ஒரு மக்கள் குழுமத்துடைய, சமூகத்தினுடைய வரலாறு என்பது இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் நகுலாத்தை ஒரு வகையில் எமது சமூக வரலாறை எழுதிப் போகிறது.



பூங்கோதை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 84

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| | | 06 | 07 | 08 | 09 |
| 10 | 11 | 12 | | | |
| 13 | | | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | | |
| 22 | | 23 | | 24 | 25 |

பெயர் ....................................................
வகுப்பு ....................................................
தொலைபேசி இல ....................................................
பாடசாலை பெயர் ....................................................
வதிவிட முகவரி ....................................................
....................................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) உலகமொழிகளில் இனிய மொழியாகப் போற்றப்படுவது. உலகின் செம்மொழிகளில் ஒன்றென்ற பெருமை கொண்ட மொழி.
(4) ஏதேனுமொரு பொருள், விடயம் அல்லது பிறர் மீது கொள்கின்ற பெருவிருப்பத்தைக் குறிக்கும் சொல். இது அளவு மீறினால் விளைவது துன்பம். (தலைகீழான சொல்)
(6) அனைத்து யானைகளிலும் இந்த உறுப்பைக் காண முடியாது. சில யானைகளில் மாத்திரமே காணலாம். இந்த உறுப்பு பெறுமதிமிக்கது, வெண்ணிறமானது.
(10) தேநீருக்கு மாத்திரமன்றி மற்றைய உணவுகள் பலவற்றுக்கும் சுவையும், வாசனையும் தருவது. தாவரமொன்றின் நிலக்கீழ்த்தண்டுப் பகுதி இது. (தலைகீழான சொல்)
(14) நீர்நிலைகளில் வசிக்கின்ற நகருயிரி வகை பிராணி. நீருக்குள் மறைந்திருந்தவாறு, கரையோரத்துக்கு வருகின்ற ஆடு, மாடு போன்ற மிருகங்களை இரையாகப் பிடித்துக் கொள்ளும். மனிதனுக்கும் உயிராபத்தைத் தருகின்ற பிராணி இது. (தலைகீழான சொல்)
(17) நாம் அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்துகின்ற தாவர விளைபொருட்கள் இவை. கறி சமைக்கப் பயன்படுத்துகின்றோம். (தலைகீழான சொல்)
(24) தாவரங்களின் அங்குரத் தொகுதியின் மிகவும் முக்கியமான அங்கம் இது. தாவரத்தின் உணவுத் தயாரிப்புக்கான ஒளித்தொகுப்பு மற்றும் சுவாசம் போன்ற தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் உறுப்பு.

**மேலிருந்து கீழ்**

(3) பூவின் அல்லியைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(4) எமது உடலில் எலும்புத் தொகுதியைச் சுற்றியுள்ள பகுதி இது. உடலுக்கு குறித்த உருவமொன்றைக் கொடுப்பது இதுதான். (தலைகீழான சொல்)
(5) வினாவொன்று உங்களிடம் கேட்கப்படும் போது 'இல்லை' என்று பதிலளித்தால் அது எதிர்மறையான பதில். ஆனால் 'இல்லை' என்பதற்கு எதிரான பதில் இது.
(10) மலையும் மலைசார்ந்ததுமான நிலப்பிரதேசம் இது. ஐவகை நிலங்களில் ஒன்று. (தலைகீழான சொல்)
(14) நாம் எமது அன்றாட கருமங்களை ஆரம்பிக்கும் விடியல் பொழுது. (தலைகீழான சொல்)
(16) காடும் காடு சார்ந்த இடமுமான பிரதேசம். இப்பெயரில் அழகிய மலரொன்றும் உள்ளது.
(19) மனிதனை அண்டி வாழ்கின்ற மிருகம். நன்றியுள்ள பிராணி. (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 83

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. விஞ்ஞானம் 08. கறை 11. சிங்கம்
15. நாம் 17. தலை 22. நாம்பன்

**மேலிருந்து கீழ்**

01. விமானம் 03. ஞாலம் 05. தங்கம் 09. சிறை
12. கலை 16. நாகம் 21. தோழி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 82

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.ஏ.எப். அஸ்மா,**
தரம் 08B, க/பதியுதீன் மகளிர் வித்தியாலயம்,
இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

2. **தி. சயந்தவி,**
தரம் 05, மட்/ வின்சன் ம.உ.பாடசாலை,
இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

3. **தி. மனுஜன்**
தரம் 06, கமு/விபுலானந்தா மத்திய கல்லூரி,
திருமால் முக வீதி, காரைதீவு 07.

4. **எஸ்.எப். சிம்லா**
தரம் 04, ப/கெ, முஸ்லிம் மகா வித்தியாலயம்,
இல. 326/1, பலகொல்ல, கெள்கல்ல.

5. **ஏ.என். உல்பா மர்யம்,**
தரம் 04, மாறை/வெலிகம மு. ஆரம்பப் பாடசாலை,
இல. 35/1, சமகி மாவத்தை, வெலிகம.

6. **தமீம் எஸ். அப்துல்லா**
தரம் 11, அக்/ அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,
அக்கரைப்பற்று 04.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 84
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**அறன் வலியுறுத்தல்:** சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும்
அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு.

**தெளிவுரை :**
*அறம் சிறப்பையும் அளிக்கும் செல்வத்தையும் அளிக்கும். ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தை விட நன்மையானது வேறு யாது?*

# இவ்வார மழலைகள்




ஹரிஹரன் / சனீனா

# கடல் அலைகள் எதனால் தோன்றுகிறது?



கடல் அலைகள், சாதாரணமானது இல்லை. மேலோட்டமாக பார்ப்பதற்கு வேண்டுமானால் அலைகள், சாதாரணமாக தெரியலாம்.

கடல் அலைகள் தோன்றுவது, பூமி, நிலவு மற்றும் சூரியனுக்கு இடையிலான ஈர்ப்பு சக்தியினால்தான். அலைகள் உருவாவதில் இம்மூன்று கிரகங்களுக்கும் பங்குண்டு என்றாலும், அலைகள் உருவாவதில் அதிக பங்கு நிலவுக்குத்தான். பூமி மீதான நிலவின் ஈர்ப்பு சக்தியானது, கடலைப் பொங்கச் செய்யும் அளவுக்கு சக்தி வாய்ந்தவை.

நகர்ந்து கொண்டே, இடம்மாறிக் கொண்டே இருக்கும் எந்தவொரு பொருளும், தொடர்ந்து நகர்ந்து கொண்டிருக்கும் ‘இனர்ஷியா’ என்னும் உலகின் மாறா நிலைப்பு தன்மையினால், உலகச் சமுத்திரங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன. எனவே, ஒரு முறை தோற்றுவிக்கப்படும் அலையானது தொடர்ந்துகொண்டே இருக்கும் என்கிறது அறிவியல்.

இந்த இனர்ஷியா (Inertia) என்னும் இயல்பானது, சமுத்திரத்தை நிலவின் ஈர்ப்பு விசையின் திசையில் தொடர்ந்து நகரச் செய்யும் என்று கூறப்படுகிறது. பூமி சுற்றிக்கொண்டிருக்கும்போதே, கடல் இருமுறை எழும்புகின்றனவாம். முதல்முறை, நிலவை பூமி நெருங்கி வரும்போது, அடுத்து, பூமி, நிலவுக்கு மிகத்தொலைவில் இருக்கும்போது என இருமுறை கடல் எழும்புகின்றன. இதனை அமெரிக்காவின் மசாச்சு செட்ஸ் நகர கடல் ஆய்வு நிறுவனமான, வுட்ஸ் ஹோல் ஆய்வுக்கூட (Wood’s Hole Oceanographic Institution) ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

உலகின் புவியியல் அமைப்பு, அலைகளை பல வகையில் பாதித்தாலும், பூமியின் பல இடங்களில் 24 மணி நேரம் 50 நிமிடங்களில், இரண்டு இராட்சத உயர்ந்த அலைகளும் (high tides) இரண்டு தாழ்ந்த அலைகளும் மட்டுமே தோன்றுகின்றனவாம். 50 நிமிடம் ஏன் என்று கேட்டால், பூமியை தினமும் நிலவு சுற்றிவரும்போது, நிலவு எடுத்துக்கொள்ளும் நேரமே, அந்த 50 நிமிடங்கள்.

**வி. சங்கரி...**

# உலகின் மிகப்பெரிய பூசணிக்காய்



அமெரிக்காவில் விவவாயிகளுக்கிடையில் நடந்த போட்டி யொன்றில் உலகின் மிகம் பெரிய பூசணிக்காய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தங்கள் விவசாய நிலங்களில் மிக பெரிய பூசணிக்காய் வளர்ப்பதில் விவசாயிகளுக்கிடையில் இந்த போட்டி இடம்பெறுகின்றது.

நீண்ட காலமாக நடைபெற்று வரும் இப்போட்டியில் இது 50ஆவது போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டியில் கலந்துகொண்ட டிராவிஸ் என்பவர் மிகப் பெரிய பூசணிக்காய் வளர்த்தமைக்காக வெற்றி பெற்றுள்ளார். இதன்படி அந் நபருக்கு 30,000 அமெரிக்க டொலர்கள் பரிசாக கிடைக்கப்பெற்றுள்ளது. டிராவிஸ் 1,247 கிலோகிராம் எடையுள்ள பூசணிக்காயை போட்டியில் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இது உலகின் மிகப்பெரிய பூசணிக்காய் என்ற பெருமையையும் பெற்றுள்ளது.

**எம். சஹானா...**



# கின்னஸ் சாதனை படைத்த நாய்
## Guinness Record Dog

போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த பாபி என்ற நாய் அதிக காலம் வாழ்ந்து கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்திருக்கிறது.

இந்த நாய் முப்பது ஆண்டுகள் வாழ்ந்து சாதனை படைத்துள்ளது. அத்துடன் வயது முதிர்வு காரணமாக பார்வை குறைபாடு மற்றும் நடப்பதற்கு சிரமப்பட்டாலும், ஆரோக்கியமாக இருப்பதாக கால்நடை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்பு அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஒரு நாய் 29 ஆண்டுகள் மற்றும் 150 நாட்கள் வாழ்ந்து உலகின் மிக அதிக வயது கொண்ட நாய் என்ற சாதனையை படைத்திருந்தது.

பொதுவாகவே நாய்களின் ஆயுட்காலம் 10 முதல் 15 வயது வரை தான் என தெரிவிக்கப்படுகிறது.

### ஐவகை நிலங்கள்

1. குறிஞ்சி – மலையும் மலைசார்ந்த இடமும்
2. முல்லை – காடும் காடு சார்ந்த இடமும்
3. மருதம் – வயலும் வயல்சார்ந்த இடமும்
4. நெய்தல் – கடலும் கடல்சார்ந்த இடமும்
5. பாலை – மணலும் மணல்சார்ந்த இடமும்

### பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)

1. கார்காலம் – ஆவணி, புரட்டாசி
2. குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை
3. முன்பனிக்காலம் – மார்கழி, தை
4. பின்பனிக்காலம் – மாசி, பங்குனி
5. இளவேனிற்காலம் – சித்திரை, வைகாசி
6. முதுவேனிற்காலம் – ஆனி, ஆடி

# ஆந்தை



ஆந்தை, ஸ்ட்றைஜிபோர்மெஸ் இனத்தைச் சார்ந்த பறவை. இது பெரும்பாலும் தனித்தே காணப்படும். ஆந்தை இனத்தில் மொத்தம் 133 வகைகள் உள்ளன. அவற்றுள் மிகவும் அதிகமாக காணப்படும் வகை பார்ன் (Barn Owls) ஆந்தைகள். ஆந்தைகள் முன்நோக்கும் பெரிய கண்களையும், காதுகளையும், அலகையும் கொண்டவை.

இதனால் பார்க்கும் திசையை மாற்றுவதற்கு முழுத்தலையையும் திருப்பவேண்டியுள்ளது. இது தனது தலையை இரு திசைகளிலும் 270 பாகைகள் வரை திருப்பவல்லது. ஆந்தைகள் தூரப்பார்வை கொண்டவை. அவற்றின் கண்களுக்கு சில தூரத்திலுள்ளவற்றைக் கூட தெளிவாகப் பார்க்க முடியாது.

எனினும், அவற்றின் பார்வை, மங்கலான வெளிச்சத்தில் மிகவும் சிறப்பானது. பல ஆந்தைகள் முழு இருட்டிலும் கூட ஒலியைப் பின்தொடர்ந்து வேட்டையாடக் கூடியவை. இவை காடுகள், பாலைவனங்கள், புல்வெளிகள், வயல்வெளிகள் மற்றும் மரங்கள் நிறைந்த இடங்களில் மரங்களின்மேல் அல்லது நிலத்தின்கீழ் உள்ள வளைகள், குகைகள், பாழடைந்த கட்டடங்கள், பாறை இடுக்குகள் போன்றவற்றில் வாழ்கின்றன.

ஆந்தைகள் அவற்றின் இனத்தைப் பொறுத்து 1 கிலோ முதல் 4 கிலோ எடை வரையும் உள்ளன. பெண் ஆந்தைகள் ஆண் ஆந்தைகளை விடப் பெரியதாக இருக்கும். இவற்றின் இறகுகள் மிக மென்மையானவை.

எனவே, இவை பறக்கும்போது சத்தம் கேட்பது இல்லை. ஆந்தை முட்டைகள் கிட்டத்தட்ட கோளவடிவம் கொண்டவை.

ஆந்தைகள் அவற்றின் வகையைப் பொறுத்து பன்னிரெண்டு வரையிலான முட்டைகளை இடுகின்றன. பாறைகளின் விளிம்பிலோ, மரங்களில் வெறும் உதிர்ந்த இலைகள், இறக்கைகளின் மேலேயோ முட்டையிடும். இவை அடைகாக்கும். 15 முதல் 35 நாட்களில் குஞ்சுகள் பொரிக்க ஆரம்பிக்கிறது.

**அ. அஹமட்...**

# உலகின் தவிர்க்க முடியாத பொருளாகியுள்ள இரப்பர்

இரப்பர் பொருள் இல்லாத உலகை இன்று கற்பனை செய்ய முடியாது. மனித நாகரிகத்தில் குறுகிய காலத்தில் இரப்பர் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தங்கம், வெள்ளி போன்ற மதிப்புமிக்க உலோகங்களைத் தேடி அலைந்த ஐரோப்பிய மாலுமிகள், தென் அமெரிக்கா கண்ட பகுதியில் இரப்பர் உருண்டைகளைக் கண்டனர்.

அங்கு, ஒரு வகை மரத்தில் வழிந்த பாலை சேகரித்து, உருட்டி சிறுவர், சிறுமியர் விளையாடினர். அது, தரையில் மோதிய போது, மீண்டும் எழும்பி குதித்து ஆட்டம் காட்டியது.

அமெரிக்காவை கண்டுபிடித்த கொலம்பஸ், 1490இல், இந்த உருண்டைகளை கண்டார். ஐரோப்பிய நாடான ஸ்பெயினுக்கு, அதன் மாதிரிகளை எடுத்து வந்தனர். உடனடியாக, ஐரோப்பியர் கவனத்தை அது ஈர்க்கவில்லை. கிட்டத்தட்ட, 200 ஆண்டுகள் கிணற்றில் போட்ட கல்லாக கிடந்தது. ஐரோப்பாவில், பிரான்ஸ் அறிவியல் கழகம், அந்த உருண்டைகளை ஆராய ஆரம்பித்தது. அதன் வினோத தன்மையால் வியந்த அறிஞர் சார்லஸ் மேரோ, அது பற்றிய அறிவியல் உண்மைகளை, 1751இல் வெளியிட்டார். பல வகையிலும், அதை பயன்படுத்த முடியும் என உலகறியச் செய்தார்.

உடனே, தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் காட்டில், ஒரு குழு ஆய்வு செய்தது. பிரான்ஸ் தலைநகர் பாரிசில், இரப்பர் பொருட்களை உற்பத்தி செய்யும் ஆலை ஆரம்பிக்கப்பட்டது. இரப்பர் பொருட்கள் புழக்கத்துக்கு வந்தன.

பென்சிலால் எழுதியதை, இரப்பர் துண்டால் தேய்த்தால், அழியும் என்பதை 1770இல் கண்டறிந்தார், வேதியியல் அறிஞர் ஜோசப் ப்ரீஸ்ட்லி. ஆங்கில சொல்லான 'ராப்' என்பதற்கு 'தேய்த்தல்' என்று பொருள். இதில் இருந்து தான், 'இரப்பர்' என்ற பெயர் நிலைத்தது.

இரப்பர் பாலை உறையவைத்து, அழகிய காலணியாக உருவாக்கி, 1755இல், போர்த்துக்கள் மன்னருக்கு பரிசளித்தனர். போர் வீரர்கள் பயன்படுத்த, பைகளும் தயாரிக்கப்பட்டன.

வாகனங்களுக்கு டியூப், கண்டறியப்பட்ட பின், இரப்பர் முக்கியத்துவம் பெற்றது. அதன் தேவை அதிகரித்தது. மனித நாகரிகத்தை விரைவு படுத்தியது. ஐரோப்பிய நாடான இங்கிலாந்தை சேர்ந்தவர் ஹென்றி விக்ஹாம். தென் அமெரிக்க நாடான பிரேசிலில் இருந்து 70 ஆயிரம் இரப்பர் மர விதைகளை 1870இல் எடுத்து வந்தார்.

இங்கிலாந்தில் 2000 விதைகள் முளைத்தன. தொடர்ந்து இங்கிலாந்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த ஆசிய நாடுகளில் பயிரிட திட்டம் தீட்டப்பட்டது. ஆசிய நாடுகளான இலங்கை, மலேசியாவில் 1905இல் சோதனை முறையில் மிகவும் இரகசியமாக பயிரிடப்பட்டது. திட்டம் வெற்றி பெற்றதால், சாகுபடி பரப்பு விரிவானது. அது பணப்பயிராக உயர்ந்தது. சமூக, பொருளாதாரத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இயற்கையாக கிடைக்கும் இரப்பர் பாலுடன் வேதிப்பொருளான கந்தகத்தைச் சேர்த்தால் வலிமை மிக்க பொருட்கள் தயாரிக்க முடியும் என அமெரிக்க அறிஞர் குட் இயர் 1839இல் கண்டறிந்தார். ஆரம்பத்தில் வாகன டயர்கள், வெண்மை நிறத்தில் தான் இருந்தன. 'கார்பன் பிளாக்' என்ற பெற்றோலிய கச்சாபொருளை இரப்பர் பாலுடன் சேர்த்த போது உறுதி அதிகரித்தது.



தொடர்ந்து 1912 முதல் வாகனங்களின் டயர், கரிய நிறத்திற்கு மாறியது. இரப்பர் உலகம் முழுவதும் அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத இடத்தை பிடித்துள்ளது.

இரப்பர் மரத்தை தென் அமெரிக்கர்கள், 'கூச்சீ' என்பர். கண்ணீர் வடிக்கும் மரம் என்று பொருள். தாவரவியல் பெயர் கிவியா பிரேசிலியன்சிஸ்.

இது 30 மீற்றர் வரை வளரும். மூன்று மீற்றர் சுற்றளவு வரை பெருக்கும். நடவு செய்த ஏழாம் ஆண்டு முதல் 50 ஆண்டுகள் வரை பால் தரும். பின், பலகையாக பயன்படும்.

கூர்முனை கத்தியால் மரத் தண்டில் வெட்டுவாய் உருவாக்கி கிண்ணத்தில் பால் சேகரிப்பர். முதல், ஆறு ஆண்டுகள் மரத்தின் ஒரு புறமும் அடுத்த, ஆறு ஆண்டுகள் மறுபுறமும் வெட்டுவாய் உருவாக்குவர். மர பாலை, 'லாடெக்ஸ்' என்பர்.

இதில், 60 சதவீதம் ஹைட்ரோ கார்பனும், பிசினும் உள்ளன. இதில் எண்ணெய், புரோட்டீன், அமிலங்கள், உப்புகள், சர்க்கரை சத்துக்களும் உள்ளன. பால், வெண்மை நிறமானது. பருவத்துக்கு ஏற்ப, மஞ்சள், வெளிர் ஆரஞ்சு மற்றும் சாம்பல் நிறங்களிலும் இருக்கும். 1830இல் உலக அளவில் இரப்பரின் தேவை, 150 டன் ஆகும். அது 1856இல் 7,000 டன்னாக உயர்ந்தது. கடந்த ஆண்டு, 23 ஆயிரம் டன்னாக, அதாவது, 23 ஆயிரம் கோடி கிலோவாக உயர்ந்தது. இதில், 60 சதவீதம் தேவையை செயற்கை இரப்பர் தான் நிறைவேற்றுகிறது.

இரப்பர் உற்பத்தியில், ஆசியா கண்டம் முதலிடம் வகிக்கிறது. இங்குள்ள தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, இந்தியா ஆகிய நாடுகள் முறையே முதல் நான்கு இடங்களை பிடித்துள்ளன.

# விளையாட்டு



# தேவை ஒரு 'திருப்பம்'

எதிர்பார்த்தது போல் உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் பந்துவீச்சு பலவீனம் வெளிப்படையாகத் தெரிகிறது. "எப்படிப் போட்டலும் அடிக்கிறார்களே!" என்ற பரிதாபக் கதையே முதல் இரண்டு போட்டிகளிலும் நிகழ்ந்தன.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இலங்கை சந்தித்த முதல் போட்டியில் எதிராணிக்கு 428 ஓட்டங்களை விட்டுக் கொடுத்ததோடு பாகிஸ்தானுக்கு எதிரான அடுத்த போட்டியில் எதிரணிக்கு 345 என்ற சவாலான வெற்றி இலக்கை நிர்ணித்தபோதும் அதனை காத்துக் கொள்ள முடியாமல் போனது.

அதாவது தென்னாபிரிக்கா விளாசிய 428 ஓட்டங்களும் உலகக் கிண்ணத்தில் அணி ஒன்று பெற்ற அதிகூடிய ஓட்டங்களாக இருந்ததோடு பாகிஸ்தான் துரத்திய 345 ஓட்டங்களும் உலகக் கிண்ண வரலாற்றில் பெறப்பட்ட அதிகூடிய வெற்றி இலக்காக பதிவானது.

வனிந்து ஹசரங்க, துஷ்மந்த சமீர இருவரும் இன்றி இலங்கை அணி இந்தியா புறப்பட்டபோது பந்துவீச்சு பற்றிய கவலை பெரிதாகவே இருந்தது. என்றலும் சமாளித்துவிடலாம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

போதாக்குறைக்கு இலங்கை ஆடிய இரண்டு போட்டிகளிலும் இந்திய ஆடுகளங்கள் பந்துவீச்சாளர்களுக்கு சுத்தமாகக் கைகொடுக்கவில்லை.

அனுபவம் பெற்ற பந்துவீச்சாளராக இருந்தாலும் வேகப்பந்து வீச்சாளர் கசுன் ராஜித்த இன்னும் நம்பிக்கை தருபவராக இல்லை. இடது கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க இரண்டு போட்டிகளிலும் ஆரம்பத்தில் விக்கெட்டுகளை சாய்த்தபோதும் எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு சவால்கொடுக்கத் தவறிவிட்டார்.

விசேட திறமையுடையவர் என்று இலங்கை பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் அழைத்த போது மதீஷ பதிரணவின் பந்துவீச்சு இன்னும் அவரது கட்டுபாட்டிலேயே இல்லை என்று முதல் இரண்டு போட்டிகளையும் பார்த்தால் தெரிகிறது.



இதற்கிடையே காயத்தில் இருந்து மீண்டு அணிக்குத் திரும்பிய மஹீஷ் தீக்ஷன எதிர்முனைகளில் ஒத்துழைப்பு இல்லாத நிலையில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஆதிக்கம் செலுத்தத் தவறிவிட்டார். இரண்டாவது சுழற்பந்து விச்சாளராக பயன்படுத்தப்பட்ட துனித் வெல்லாளகேவின் கதையும் இதுதான்.

இந்த சூழலில் மேலதிக பந்துவீச்சாளர்களான அணித்தலைவர் தசுன் ஷானக்க மற்றும் தனஞ்சய டி சில்வா, சரித் அசலங்க போன்ற வீரர்களால் பெரிதாக சாதிக்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

குறிப்பாக 20 வயதான மதீஷ பதிரண மீதான எதிர்பார்ப்பு என்பது அவர் மீதான மேலதிக சுமையாகவே தெரிகிறது. இரண்டு போட்டிகளிலும் அவர் 90 அல்லது அதற்கு மேல் ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். பந்துவீச்சு கட்டுப்பாடாக இல்லை. விக்கெட் காப்பாளருக்குக் கூட பிடிக்க முடியாத வைட் பந்துகளை அடிக்கடி வீசி வருகிறார்.

மதீஷ பதிரண இதுவரை 12 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலேயே ஆடி இருக்கிறார். ஆனால் அவர் வைட் பந்துகளில் விட்டுக் கொடுத்த மொத்த ஓட்டங்கள் 91. ஹைதராபாத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் மாத்திரம் இப்படி வைட் பந்துகளால் 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார்.

அதாவது கடந்த ஜூன் மாதம் தொடக்கம் ஒருநாள் சர்வதேச அறிமுகம் பெற்ற வீரர்களை ஒப்பிட்டுப் பார்த்தால் மதீஷ பதிரண தான் அதிக வைட் பந்துகளை வீசி இருக்கிறார்.

பதிரண மொத்தமாக 57 வைட்களை வீசி 91 ஓட்டங்களை விட்டுக்கொடுத்த நிலையில் அதிக ஓட்டங்கள் விட்டுக்கொடுத்தவர் வரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் ஆப்கானிஸ்தானின் முஜீபுர் ரஹ்மான் 34 ஓட்டங்களைத் தான் விட்டுக் கொடுத்திருக்கிறார்.

மதீஷ பதிரணவின் திறமை, அனுபவத்துக்கு அப்பால் அவரிடம் இருந்து எதிர்பார்ப்பதும் தவறானது. இதே பதிரணதான் கடந்த ஐ.பி.எல் போட்டியில் அபாரமாக பந்துவீசி அனைவரின் அவதானத்தையும் பெற்றிருந்தார். அப்போது அவர் ஆடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மஹேந்திர சிங் தோனி, பத்திரணவை ஒருநாள் போட்டிகளில் ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது என்று குறிப்பிட்டிருந்தார்.

எல்லாவற்றுக்கும் மேலே உலகக் கிண்ணத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பெரும்பாலான ஆடுகளங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிகம் கைகொடுக்கிறது. பந்துவீச்சாளர்கள் செய்யும் சிறு தவறு கூட அந்தப் பந்து பௌண்டரி செல்ல போதுமானது. 300க்கும் மேல் ஓட்டங்கள் பெற்றால் கூட வெற்றி பெற போதுமானதாக இல்லை.

இந்த சூழலில் இலங்கையின் அனுபவமற்ற பந்துவீச்சும் சேர்ந்து நிலைமையை மோசமாக்கிவிட்டது.

என்றாலும் அணி ஒன்றின் தோல்வி என்பது முழுமையாக அனைத்து துறையிலும் உள்ள குறையாலேயே நிகழக் கூடியது. குறிப்பாக பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி குசல் மெண்டிஸ் மற்றும் சதீர சமரவிக்ரம சதம் பெற்ற பின்னர் கடைசி ஓவர்களில் இலங்கைக்கு குறைந்தது இன்னும் 20, 30 ஓட்டங்களை பெற முடியுமாக இருந்திருக்கும். அது நிகழாதது அந்த ஆடுகளத்தில் பந்துவீச்சாளர்களுக்கு மேலதிக சுமையை ஏற்படுத்துவதாக இருந்தது.

எப்படி இருந்தபோதும் இந்த பந்துவீச்சாளர்கள் மற்றும் அணியுடனேயே இலங்கை அணி உலகக் கிண்ணத்தில் முன்னேறிச் செல்ல வேண்டி இருக்கிறது. முதல் இரண்டு போட்டிகளிலும் தோற்றபோதும் இன்னும் ஏழு போட்டிகள் இருக்கின்றன.

அடுத்து இலங்கை அணி நாளை (ஒக்டோபர் 16) அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்ளப்போகிறது. அவுஸ்திரேலிய அணியும் முதல் இரண்டு போட்டிகளிலும் தோல்வியை சந்தித்திருக்கும் நிலையில் இரு அணிகளும் தமது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கான போராட்டமாக இந்தப் போட்டி மாறி இருக்கிறது.

இந்தப் போட்டியில் இலங்கை அணியில் சில மாற்றங்கள் நிகழும் என்பது நிச்சயம். அதுவும் பந்துவீச்சில் ஏற்பட வாய்ப்பு அதிகம். மதீஷ பதிரணவுக்கு கையில் அசௌகரியம் இருப்பதாகத் தெரிகிறது. எப்படி இருந்தபோதும் அவர் இந்தப் போட்டியில் இடம்பெறுவார் என்பது சந்தேகமே. வேகப் பந்து வீச்சாளர் லஹிரு குமார அழைக்கப்பட வாய்ப்பு அதிகம்.

அதேபோன்று முதல் இரு போட்டிகளிலும் சோபிக்கத் தவறி இருக்கும் ஆரம்ப அதிரடி வீரர் குசல் ஜனித் பெரேராவின் இடமும் சந்தேகத்திற்கு உரியது. அவருக்கு பதில் டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன அழைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.



இந்திய ஆடுகளத்திற்கு ஏற்ப இலங்கை அணியின் துடுப்பாட்டம் பலம்பெற்றிருப்பது நல்ல செய்தி. குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்ரம, பத்தும் நிசங்க, சரித் அசலங்க ஓட்டங்களை பெற்று நம்பிக்கை தருகிறார்கள். பந்து வீச்சில் டில்ஷான் மதுசங்க, மஹீஷ் தீக்ஷன, துனித் வெல்லாளகே போன்றவர்கள் நம்பிக்கை தருகிறார்கள். எனவே, உலகக் கிண்ணத்தில் முன்னேறிச் செல்வதற்கு இலங்கை அணிக்கு ஒரே ஒரு திருப்பம் மாத்திரமே தேவையாக இருக்கிறது.

**எஸ்.பிர்தௌஸ்...**

# உலகக் கிண்ணத்தில் அதிக பயணச் சுமை யாருக்கு?




இந்தியாவில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணப் போட்டியில் ஒவ்வொரு அணியும் மைதானத்தில் ஆடுபவதற்கு அப்பால் அந்த மைதானங்களுக்கு பயணிப்பதற்கே தனியாக காலம் ஒதுக்க வேண்டும்.

உலகக் கிண்ணப் போட்டிகள் இந்தியாவின் வெவ்வேறு நகரங்களில் இருக்கும் மொத்தம் 10 மைதானங்களில் நடைபெறுகின்றன. ஆனால் ஒவ்வொரு மைதானத்திற்கான தூரம் பல நூறுகள் தொடக்கம் ஆயிரம் கிலோமீற்றர்களை தாண்டக் கூடும். இந்த பத்து நகரங்களுக்கும் இடையிலான தூரத்தை சேர்த்தால் 72,543 கிலோமீற்றர்கள் வரும்.

இதன்படி பார்த்தால் போட்டியை நடத்தும் நாடு என்பதால் இந்திய அணிக்கே சிரமம் அதிகம். இந்திய அணி அனைத்து மைதானங்களையும் உள்ளடக்கும் வகையில் தனது லீக் போட்டிகளில் ஆட வேண்டி இருக்கிறது. இதனால் இம்முறை உலகக் கிண்ணத்தில் இந்திய அணியே வான் வழியாக அதிக தூரம் பயணிக்கிறது.

அதாவது மற்ற எந்த அணியை விடவும் இந்திய அணி உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆடுவதற்கு மேலதிகமாக 3,000 கிலோமீற்றர்கள் பயணிக்க வேண்டி இருக்கிறது. உலகக் கிண்ணத் தொடர் முடியும்போது கிட்டத்தட்ட 13,000 கிலோமீற்றர் தூரம் வான் வழியாக பறக்க வேண்டி இருக்கும்.

லீக் போட்டிகளுக்காக இந்தியா மொத்தமாக பயணிக்கும் தூரம் 12,897 கிலோமீற்றர்கள். இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் கூட 10,000 கிலோமீற்றருக்கு மேல் பறக்க வேண்டி இருக்கும்.

ஆனால் இந்த விடயத்தில் பாகிஸ்தானுக்கு வசதி தான். அந்த அணி மொத்தம் ஐந்து மைதானங்களில் தான் ஆடப்போகிறது. இதனால் அந்த அணி 6,892 கிலோமீற்றர்கள் பயணித்தால் போதுமானது. இலங்கைக்கு சற்று சிரமம் தான் மொத்தம் ஏழு மைதானங்களில் ஆடும் இலங்கை அணி அதற்காக 9,132 கிலோமீற்றர் தூரம் பறக்க வேண்டும்.

உலகக் கிண்ணம் ஒன்றில் பங்கேற்பது என்று வரும்போது இப்படி பயணிக்க வேண்டியது எதிர்பார்த்தது என்றாலும் இது போட்டிகளில் சிறிய அளவேனும் தாக்கம் செலுத்த வாய்ப்பு இல்லாமல் இல்லை.

# ஒலிம்பிக்கும் கிரிக்கெட்டும்




கிரிக்கெட்டுக்கும் ஒலிம்பிக்கிற்கும் நீண்ட வரலாறு உண்டு. 1896 ஆம் ஆண்டு முதலாவது ஒலிம்பிக் போட்டி ஏதென்சில் நடைபெற்றபோது அதில் கிரிக்கெட்டும் இடம்பெற்றிருந்தது. என்றாலும் போதுமான நாடுகள் பங்கேற்காததால் அதனை கைவிட வேண்டி ஏற்பட்டது.

பின்னர் 1900ஆம் ஆண்டு பாரிஸில் நடந்த ஒலிம்பிக்கில் கிரிக்கெட் உள்ளடக்கப்பட்டது. நான்கு அணிகள் பங்கேற்பதாக இருந்தபோதும் பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து விலகிக் கொண்டதால் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் அணிகளுக்கு இடையே ஒரே ஒரு போட்டி மட்டும் நடந்தது.

டெஸ்ட் போட்டியாக நடைபெற்ற அந்த ஆட்டத்தில் அணிக்கு 12 பேர் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இரண்டு நாட்கள் நடந்த போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை வென்றது.

அமெக்காவின் செயின்ட் லுவிசில் நடைபெற்ற 1904 ஒலிம்பிக் போட்டியிலும் கிரிக்கெட் சேர்க்கப்பட்டபோதும் பின்னர் அது ரத்துச் செய்யப்பட்டது. அதற்குப் பின் கிரிக்கெட் என்ற பேச்சே ஒலிம்பிக்கில் இடம்பெறவில்லை.

ஆனால் 2028இல் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறப்போகும் ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் இடம்பெறப்போவது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் கிரிக்கெட்டை சேர்த்துக்கொள்ள பரிந்துரைத்திருக்கிறார்கள்.

மும்மையில் நடைபெறும் சர்வதேச ஒலிம்பிக் குழு மாநாட்டில் இதற்காக வாக்கெடுப்பு நடைபெறும். பெரும்பாலும் ஆதரவாகவே வாக்குகள் விழும் என்று எதிர்பார்க்கலாம்.

உண்மையில் 123 ஆண்டுகளுக்கு முன்னர் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம்பெற்றபோதும் அப்போது ஒலிம்பிக்கிற்கு பொருத்தமான விளையாட்டாக கிரிக்கெட் இருக்கவில்லை. டெஸ்ட் கிரிக்கெட்டை தவிர்த்து கிரிக்கெட் ஆட்டத்தை நினைத்துக் கூட பார்க்க முடியாத காலம் அது.

பின்னர் ஒருநாள் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டு அணிக்கு 60 ஓவர்கள் என்பது 50 ஓவர்களாக பரிணாமம் பெற்று காலத்திற்கு ஏற்ப டி20 கிரிக்கெட்டும் அறிமுகமான நிலையிலேயே கிரிக்கெட்டின் வீச்சு பெரிதாகி இருக்கிறது.

ரசிகர்களின் எண்ணிக்கை மற்றும் ஒளிபரப்பு உரிமைக் கட்டணங்கள் அடிப்படையில் பார்க்கப்போனால் உலகின் இரண்டாவது மிகப்பெரிய விளையாட்டாக கிரிக்கெட் வளர்ந்துவிட்டது. குறிப்பாக அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் கிரிக்கெட் பிரபலமாக இருப்பதே இதற்குக் காரணம்.

சர்வதேச கிரிக்கெட்டுக்கு அப்பால் டி20 லீக் கிரிக்கெட்டின் பிரபலம் வளர்ந்துவிட்டது. இந்திய பிரிமியர் லீக்கின் போட்டிக்கான ஒளிபரப்பு உரிமைக் கட்டணம் இங்கிலாந்தின் பிரீமியர் லீக் கால்பந்து தொடரை விஞ்சி இருப்பதோடு அமெரிக்காவின் என்.எப்.எல் இற்கு மாத்திரமே இரண்டாவதாக உள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் கிரிக்கெட் வளர்ச்சிக்கான ஆதரவை அதிகரித்த நிலையில் சம்பிரதாயமான கிரிக்கெட் ஆடும் நாடுகளுக்கு அப்பால் இந்த விளையாட்டு வேகமாக பிரபலமடைந்து வருகிறது. குறிப்பாக டி20 கிரிக்கெட் புதியவர்கள் இந்த விளையாட்டை தழுவுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரித்திருக்கிறது.

ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டு டி20 வடிவத்தில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் தரவரிசையில் முதல் ஆறு இடங்களை பிடிக்கும் அணிகள் ஒலிம்பிக்கிற்கு நேரடி தகுதியை வழங்க ஐ.சி.சி திட்டமிடுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலே ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம்பெறுவது என்பது இலங்கைக்கு ஒலிம்பிக் பதக்கம் வெல்வதற்கான வாய்ப்பு முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகரிக்கும் என்று அர்த்தம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2023 ஒக்டோபர் 15 ஞாயிற்றுக்கிழமை
வைரவிழா
கலைஞன்
G.J. ராஜ்

# அமெரிக்காவின் முதல் கறுப்பின செல்வந்தர்



அமெரிக்காவின் முதல் கறுப்பினத்தைச் சேர்ந்த செல்வந்தரின் பெயர் சாரா ரெக்டர். ஆனால் அவர் பெரும் செல்வந்தரான கதை தற்செயலானது. அரசாங்கம் கறுப்பினத்தவர்களுக்காக ஒதுக்கும் காணியில் 159.11 ஏக்கர்கள் சாராவுக்கு கிடைத்தது. வெள்ளையினத்தவர்ளுக்கு வளமான நிலம் கொடுக்கப்பட்ட நிலையில் சாராவுக்கு வழங்கப்பட்ட காணி தாழ்வான வளமற்ற பூமி, அங்கே பயிர் செய்வது ஒரு பக்கம் இருக்க குடியிருக்கக் கூட முடியாது.

ஆனால் அரசு அந்த நிலத்திற்கு வருடத்திற்கு 30 டொலர் வரி அறவிட்டது. அந்த காணியை விற்க சாராவின் தந்தை முயன்றாலும் அதுவும் மறுக்கப்பட்டது. வேறு வழியில்லாமல் அந்த நிலத்தை எண்ணெய் நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு விட்டார். அங்கே தோண்டினால் எண்ணெய் கொட்டியது.

அமெரிக்காவின் ஒக்லோஹாமா பிராந்தியத்தில் பெரும் செல்வந்தராக மாறினார் சாரா. 1902 ஆம் ஆண்டு பிறந்த சாரா 11 வயதிலேயே பெரும் செல்வந்தரானார். நிறப் பாகுபாடு காட்டி அந்தக் காலத்தில் சாராவை ஓர் வெள்ளை இனத்தவராக ஒக்லோஹாமா சட்டமன்றம் அறிவித்தது.



## அமெரிக்க சுதந்திர தேவியான பிரெஞ்சுப் பெண்

அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலையில் இருக்கும் பெண் உண்மையில் அமெரிக்க பெண் அல்ல. அவர் ஒரு பிரான்ஸ் பெண். இசபெல்லா போயர் என்ற அந்தப் பெண்ணைத்தான் சுதந்திர தேவி சிலையை வடிவமைத்த பெரடரிக் அகஸ்டே பார்ட்ஹோடில் வடிவமாக பயன்படுத்தினார். ஆனால் அந்தப் பெண் முதலில் திருமணம் முடித்தது அமெரிக்க தொழிலதிபர் ஐசாக் மரிட் சிங்கரை. உண்மையில் அமெரிக்கா சுதந்திரம் பெற்றதன் நூற்றாண்டை ஒட்டி பிரான்ஸ் கொடுத்த பரிசுதான் இந்த சுதந்திர தேவி சிலை. அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் ஹட்சன் ஆற்றின் துறைமுகத்தில் இருக்கிறது இந்த சிலை. இந்தத் தீவில்தான் 10 ஏக்கர் நிலப்பரப்பில் பிரம்மாண்டமான சுதந்திர தேவி சிலை நிறுவப்பட்டிருக்கிறது.

1875ஆம் ஆண்டு சிலை கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்டது. 1884ஆம் ஆண்டு சிலை முழுமை அடைந்தது. பிரான்சில் இருந்து அது கப்பல் மூலம் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1886ஆம் ஆண்டு ஒக்டோபர் 28ஆம் திகதி அமெரிக்க மக்களுக்குச் சுதந்திர தேவி சிலை அர்ப்பணிக்கப்பட்டது.

# காட்டுக்கு ராஜாவான மனிதன்

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



சிங்கத்தின் குரலை விடவும் மனிதக் குரலை கேட்டே காட்டு விலங்குகள் அதிகம் பயப்படுகிறதாம். தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வில் இது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

க்ருங்கா தேசிய பூங்காவில் துளை ஒன்றில் ஒலிபெருக்கியை மறைத்து வைத்து சாதாரணமாக மனிதர்கள் பேசுவதை ஒலிக்கச் செய்து விஞ்ஞானிகள் இந்த ஆய்வை நடத்தி இருக்கிறார்கள்.


அப்போது சுமார் 95 வீதமான விலங்குகள் மனிதக் குரலைக் கேட்டு மிகவும் பயந்ததோடு அங்கிருந்து ஓடிவிட்டன. அதாவது மனிதர்களின் குரலைக் கேட்டபோது விலங்குகள் ஓடிவிடும் சாத்தியம் சிங்கத்தை விட ஒரு மடங்கு அதிகமாக இருந்தது. தண்ணீர் குடிப்பதை நிறுத்திவிடும் சாத்தியம் 40 வீதம் அதிகமாக இருந்தது

ஆனால் சிங்கத்தின் கர்ஜனையை ஒலிக்கச் செய்தபோது விலங்குகள் அதிகம் பயப்படவில்லை. அவைகளிடம் முன்னெச்சரிக்கை செயற்பாடுகளும் குறைவாகவே இருந்தன. இதன்போது மனித குரலில் உள்ளூர் மக்கள் பேசும் பாசைகளே அந்த ஒலிபெருக்கியில் ஒலிக்கச் செய்யப்பட்டது.

இந்த சோதனையின் போது சிங்கத்தின் குரலைக் கேட்ட சில யானைகள் அதற்கு பதிலளிக்க முயற்சித்ததோடு, அந்த சத்தம் எங்கிருந்து வருகிறது என்று தேட ஆரம்பித்தன. இதன்போது மான்கள்,







யானைகள், ஒட்டகச்சிவிங்கிகள், சிறுத்தைகள் மற்றும் காட்டுப் பன்றிகள் உட்பட விலங்குகள் போன்றவை மனிதக் குரலுக்கு அதிகம் பயப்படுகின்றன. இந்த விலங்குகளை மனிதர்கள் துப்பாக்கிகளை பயன்படுத்தி வேட்டையாடுகின்றனர். இது க்ருங்கா தேசிய பூங்காவுக்கு மாத்திரமல்ல உலகெங்கும் ஒரு பொதுவான போக்காக இது மாறிவிட்டதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அதாவது வனவிலங்குகள் வேறு எந்த வேட்டை விலங்குகளை விடவும் மனிதனுக்குத்தான் அதிகம் பயப்படுகின்றன என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

# 3 ஆண்டுகள் உறங்கும் நத்தை



நத்தையால் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியாக உறங்க முடியும். இது எல்லா நேரங்களிலும் பொருந்தாது. அதிக வெப்பமான காலநிலையில் அதனால் உயிர்வாழ முடியாது. எனவே அது நீள் உறக்கத்திற்குச் சென்றுவிடும். மீண்டும் குளிர் காலம் வந்ததும் உயிர்ப்பித்துவிடும்.

இப்படித்தான் 1846 இல் எகிப்தில் நத்தை ஓடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. வழக்கத்துக்கு மாறான இந்த நத்தையோடு பிரிட்டன் அருங்காட்சியகத்திற்கு கொண்டுவந்து கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டது. பண்டைய நத்தையோடு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எல்லோரும் வந்து பார்த்தார்கள். காலமும் சென்றது.

சரியாக நான்கு ஆண்டுகள் கழித்து 1850 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அருங்காட்சியகத்தின் காப்பாளருக்கு அந்த நத்தை வித்தியாசமாகத் தெரிந்தது. கூர்ந்து அவதானித்தபோது அது உயிருடன்தான் இருக்கிறது என்று நம்பினார். எனவே, அந்த நத்தையோட்டை கண்ணாடிப் பெட்டியில் இருந்து எடுத்து தண்ணீருக்குள் போட்டார். சிறிது நேரத்தில் அந்த நத்தை உறக்க நிலையில் இருந்து விழித்து ஓட்டுக்கு வெளியில் தலையை காட்டியது. பொதுவாக சில உயிரினங்கள் நீண்ட உறக்கத்திற்கு செல்வது இயற்கையானதுதான். குறிப்பாக துருவப் பிரதேசங்களில் இருக்கும் பிராணிகள் இப்படி உறங்கச் செல்வதுண்டு. மரத் தவளைகள், தரை அணில்கள், வௌவால், சில வகை எலிகள், ஒருவகைப் பாம்பு முதலியவை இந்த நீள் உறக்கத்தில் ஈடுபடுகின்றன. காமன் பூர்வில் என்ற பறவை சுமார் ஐந்து மாத காலம் இப்படி உறங்குகிறது.

குளிர் பிரதேச விலங்குகளுக்கு மட்டுமன்றி, பாலைவனப் பகுதியில் வாழும் சில வகைப் பிராணிகளுக்கும் இதுபோன்ற திறன் உள்ளது. சில வகை நத்தைகளுடன் பாலைவன ஆமை, சில வகைத் தவளைகள் முதலியவை பாலைவன மணலுக்குள் புதைந்துகொண்டு உறங்க ஆரம்பித்துவிடுகின்றன. நிபுணர்கள் இதை வேனில் உறக்கம் என்று குறிப்பிடுகின்றனர்.

எப்படி இருந்தபோதும் மூன்று ஆண்டுகள் உறங்குவது என்பது சற்று அதிகம்தான்.

# பெண் ஆளுமையாக கலைத்தென்றல் திருமதி செல்வராணி தெரிவு












தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் மாதாந்தம் நடத்தும் மாதம் ஒரு ஆளுமையை கௌரவிக்கும் நிகழ்வு இன்று 15ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு வத்தளை நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் கௌரவிக்கப்படவுள்ள ஒரு பெண் ஆளுமை கலைத்தென்றல் திருமதி செல்வராணி.

இவர், தன்னுடைய 3 வயதில் சிங்கப்பூரில் திரு. திருமதி பாஸ்கரிடம் பரதநாட்டியக் கலையை பயிலத் தொடங்கினார். பின்பு தவிர்க்க முடியாத காரணத்தால் இலங்கை, யாழ்ப்பாணத்தில் குடியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் விளைவாக பண்டத்தரிப்பு மகளிர் மகா வித்தியாலயத்தில் தனது கல்வியை தொடர்ந்தார். அங்கு செல்வி பத்மினி சின்னத்துரையுடன் கல்வி கற்ற அவர், அவரிடமே தனது பரதநாட்டியக் கலையையும் தொடர்ந்தார். இதனைத் தொடர்ந்து இவரது பெற்றோர்கள் இவரை பட்டப்படிப்பு படிப்பதற்காக இந்தியாவுக்கு அனுப்பி விட்டார்கள். இதனால் அவர் தனது பட்டப்படிப்பை இந்தியாவில் தொடர்ந்தார். இவ்வாறு தொடர்ந்த இவர், இரசாயன விஞ்ஞான பட்டதாரியானார்.

இவர் பாடசாலையில் கல்வி கற்கின்ற காலப் பகுதியிலே பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளையும் பெற்றார்.

இங்கு வந்ததும் இவருக்கு ஆசிரியர் பதவி கிடைத்தது. யாழ்ப்பாணத்தில் மூளாய் மெய்கண்டான் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகப் பணி புரிந்தார். அதன் பின் இவருக்கு பட்டதாரி பயிலுநராக யாழ்ப்பாணக் கச்சேரியில் சேவை செய்ய சந்தர்ப்பம் கிடைத்தது. அசாதாரண சூழ்நிலை காரணத்தால் அதை உதறித் தள்ளி விட்டு கொழும்புக்கு வந்து சேர்ந்தார். கிட்டத்தட்ட ஐந்து வருடகாலமாக வேலையில்லாமல் இருந்த இவர், தனக்கு கிடைத்த வேலைளை செய்து வந்தார். இவருக்கு 1992 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அன்றிலிருந்து 1993ம் ஆண்டு வரை ஓர் அரசாங்க ஆசிரியராகப் பணி புரிந்தார். இவர் ஆசிரியராக 32 ஆண்டுகளாக பணிபுரிந்து அண்மையில் ஓய்வு பெற்றார். ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டு இருக்கும் காலத்திலும் ஓய்வு பெற்ற பின் மாணவிகளுக்கு பரதநாட்டிய கலையை கற்றுக் கொடுத்து வருகிறார். வத்தளை பிரதேச சபை, கனக துர்க்கை அம்மன் அறநெறி பாடசாலை ஆகியவற்றிலும் நாட்டியம் கற்றுக் கொடுத்து வருகின்றார்.

**கே.ஈஸ்வரலிங்கம்**



பாபு ஆனந்த ராஜா பதுளை



சகா.டிவானுஜாவின் கீ பேர்த்டே வைபவத்தில்..

# ஜனரஞ்சக எழுத்தாளர் கலாபூஷணம் மொழிவாணனுக்கு பொன்விழா

நவீன எண் சொல்லிட நிபுணரும் வாஸ்து ஆலோசகரும் ஜனரஞ்சக எழுத்தாளருமான கலாபூஷணம் மொழிவாணனுக்கு எதிர்வரும் 22/10/2023ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.31க்கு டவர் மண்டபத்தில் பொன்விழா நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசனின் ஏற்பாட்டில் டவர் மண்டபத்தில் இப்பொன்விழா நிகழ்வு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பிரபா கணேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். சிவாஜி சாஹிட் மௌலானா முன்னிலை வகிக்கின்றார்.

இவ்விழாவில்,பொன்விழா நாயகன் மொழிவாணன் தடம் பதித்த பல்வேறு துறைகளைப்பற்றி பல பேச்சாளர்களும் பேச உள்ளார்கள்.



'நவீன எண்சோதிடமும் மொழிவாணனும்' என்ற தொனிப்பொருளில் உடுவை தில்லை நடராஜாவும், 'கடி ஜோக்ஸ்சும் 'மொழிவாணனும் என்ற தொனிப்பொருளில் சமூகஜோதி ரபீக்கும், 'கிரைம் சிறுகதைகளும் மொழிவாணனும்'என்ற தொனிப்பொருளில் திருமதி வாசுகி P வாசும், 'கவிதையும் மொழிவாணனும்' என்ற தொனிப் பொருளில்கிண்ணியா அமிர் அலியும், 'சிறுகதைகளும் மொழிவாணனும்' என்ற தொனிப்பொருளில் வைத்யமாநிதியும் , 'நடன பாடல்கள் ஒளிப்பதிவும் மொழிவாணனும் என்ற தொனிப்பொருளில் செல்வி நிவேதா ஜெகநாதனும், வாஸ்துவும் மொழிவாணணனும் என்ற தொனிப்பொருளில் திருமதி தாமரைச்செல்வியும் தொலைக்காட்சி நாடகங்களும் மொழிவாணனும் என்ற தொனிப்பொருளில் தம்பி ஐயா தேவதாஸும் உரையாற்ற உள்ளார்கள்.

பல பிரபலங்கள் கௌரவ, சிறப்பு விருந்தினர்களாக கலந்து நிகழ்ச்சியை சிறப்பிக்க உள்ளார்கள். அத்தோடு நந்தகுமார், டிஸ்கோ ராஜா ,பேராசிரியை பாலிகா சமந்தி குழுவினரின் நடன நிகழ்ச்சிகளும் முனிவர், காளி, நந்தகுமார்மாகிரட் குழுவினரின் நகைச்சுவை நாடகங்களும் இடம்பெறும்.

# இன்னிசையுடன் பாராட்டுக் கௌரவ முக்கனி பெருவிழா










சென்னையைச் சேர்ந்த சிவாச்சார்ய குலபூஷணம், இறை இசைத்திலகம் டாக்டர் சாம்பசிவமணிக் குருக்களின் ஏற்பாட்டில் அகில இலங்கை குருசாமிகள் ஒன்றியத்தின் அனுசரணையுடன் இன்னிசையும் பாராட்டுக் கௌரவ முக்கனி பெருவிழாவும் கொழும்பு13, கொட்டாஞ்சேனை விவேகானந்தா மேட்டுத்தெருவில் அமைந்துள்ள விவேகானந்தா சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

படங்கள் : எம். நசார்

# சத்குரு ஸ்ரீ சரவண பாபாவின் ஆசியுடன் கருத்தரங்கு








சத்குரு ஸ்ரீ சரவண பாபாவின் ஆசியுடன் களுத்துறை மாவட்ட தரம் ஐந்து மாணவர்களுக்கான மாபெரும் இலவச இறுதி கருத்தரங்கு மில்லகந்த தமிழ் மகா வித்தியாலத்திலும் மத்துகம கலைமகள் தேசிய பாடசாலையிலும் அண்மையில் நடைபெற்றது.

# பன்முக ஆளுமை அஷ்ரப் ஷிஹாப்தீன் மொழிபெயர்த்த 'வெய்யில் மனிதர்கள்'













இலங்கை நெய்னார் காப்பகத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் பன்முக ஆளுமை அஷ்ரப் ஷிஹாப்தீன் மொழிபெயர்த்த 'வெய்யில் மனிதர்கள்' என்ற நூலின் அறிமுக விழா கொழும்பு தெமட்டகொடை வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்றது. மூத்த எழுத்தாளர் அல் அஸுமத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட பலஸ்தீன தூதுவராலயத்தின் முதல் செயலாளரும் பதில் தூதுவருமான ஹிஷாம் அபு தாஹாவிடம் இருந்து பத்திரிகையாளரும் தொழிலதிபருமான பஷீர் அலி முதற்பிரதியை பெற்றுக் கொண்டார். இம்ரான் நெய்னார் சிறப்பு பிரதியை பெற்றுக் கொண்டார். படங்கள் அஷ்ரப் ஏ ஸமத்



இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவை இணைந்து வெளியிட்ட ரொட்ணி விதானபத்திரனவின் சு.முரளிதரன் தமிழில் மொழிபெயரத்த '' லண்டன் வெம்மை'' சிங்கள நாவல் வெளியிட்டு விழா கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலையின் விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற பொழுது நாவலின் முதற்பிரதியை இலக்கியப் புரவலர் ஹாஸிம் ஒமர் கல்வி அமைச்சின் வெளியீட்டு திணைக் களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகமும் நூலின் மொழிபெயர்ப்பாளருமான சு.முரளி தரனிடமும் நூலாசியர் ரொட்ணி விதான பத்திரனிடமும் பெற்று கொள்வதையும் அருகே இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகத் தின் இலங்கை இணைப்பாளர் தம்பு சிவா கே.பொன்னுத்துரை ஶ்ரீதரசிங் பூபாலசிங்கம் மேமன்கவி லண்டன் ஈசன் ஆகியோர் இருப்ப தையும் காணலாம்.




கவிஞர் இரா.ஜெயக்குமாரின் 'இன்னும் எத்தனை காலமோ?' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் உரும்பிராய் அருள் மிகு கற்பக விநாயகர் மண்டபத்தில் நடைபெற்றபோது , விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், பிரதம விருந்தினர் முத்து. ராதா கிருஷ்ணன் நூலாசிரியரிடமிருந்து நூலின் பிரதி ஒன்றினை பெற்றுக் கொள்வதையும் படத்தில் காணலாம்.




மிருதங்க வித்துவான் பிரம்ம ஶ்ரீ AGS சுவாமிநாதன் சர்மாவின் 'இசை அர்ச்சனை' குழுவினர் வழங்கிய "தெஹிவளை நெடிமால் விஷ்ணு கோவில் உற்சவகால சிறப்பு இசை நிகழ்ச்சி 2023" கோவில் மண்டபத்தில் சிறப்பாக நடாத்தப்பட்டது. பங்குபற்றிய கலைஞர்கள் வாய்ப்பாட்டு "கலை இளவரசன்" S. அனந்த நாராயணன் சர்மா, வயலின் வாசுகி சுவாமிநாதன் சர்மா, மிருதங்கம் – "மிருதங்க கலாவித்தகர்" S. அரவிந்தன் சுப்பிரமணியம் சர்மா.





# ஆசிரியர்களை உருவாக்கப் பயிற்சி அளிக்கும் Intelligent Abacus Education நிலையம்

## Director, Master Trainer & Chief Examiner
## திருமதி வீரப்பா அரசிளங்குமாரி கிருஷ்ணதாஸன்





பெண்களை பொருத்தவரையில் இன்று நிறைய பெண்கள் பட்டம் பெற்று விட்டு, கல்விப் பொதுத் தராதர உயர்தரம், மற்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் படித்துவிட்டு எந்தவிதமான வேலையும் செய்யாமல் வெறுமனே வீட்டில் இருக்கிறார்கள். இவர்கள் படித்த படிப் பினாலும் எந்த விதமான நன்மை பெறமுடியாது இருக் கிறார்கள். இவர்கள் படித்த படிப்பை பயனுள்ளதாக மாற்ற வத்தளையிலுள்ள *Intelligent Abacus Education* நிலையம் பல்வேறு விதமாக வழிகாட்டி வரு கிறது. இவ்வாறு படித்து விட்டு வீட்டில் இருக்கும் பெண்களுக்கு *Abacus* கல்வியைக் கற்றுக் கொடுப்பதற்கு *Intelligent Abacus Education* நிலையம் வழிகாட்டுகிறது. அது இந்த *Abacus* கல்வியைக் கற்று, கல்வியைக் கற்றுக் கொடுப்பதற்கான வழி வகையை ஏற் படுத்திக் கொடுக்கிறது.

*Abacus* கல்வியின் பாடத்திட்டமானது 10 நிலைகளைக் (*Level*) கொண்டது. இந்த 10 நிலைகளின் அடிப்படை நிலையான முதலாம் நிலையை கற்றுக் கொண்டாலே அதனை கற்றுக் கொடுப்பதற்கான தகுதியை ஒருவர் பெறலாம். அதாவது *Abacus* ஆசிரி யராகலாம். முதலாம் நிலை 21 மணித்தியா லயங்களைக் கொண்டது. இதனை படிக்க நிறைய பணம் தேவையில்லை. மிகவும் குறைந்த செலவில் இதனைக் கற்றுக் கொள்ளலாம். முதலாம் நிலையை கற்றுக் கொண்டவர்கள் நான்கைந்து பிள்ளைகளை வீட்டில் வைத்து சுயவேலைவாய்ப்பாக கற்றுக் கொடுக்கின்ற அதேவேளை தாமும் தொடர்ந்து மற்றைய நிலைகளைக் கற்றுக் கொள்ளலாம்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், சீனா உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் இந்த *Abacus* பாடத்திட்டமானது நடைமுறையி லுள்ளது.

இதனை கற்றுத் தேர்ந்த *Intelligent Abacus Education* நிலையத்தின் பணிப்பாளரும் ஆசிரியர்களை உருவாக்க பயிற்சி வழங்கும் பயிற்சி வழங்குனரும் (*Master Trainer*) பிரதம பரீட்சகருமான (*Chief Examiner*) திருமதி வீரப்பா அரசிளங்குமாரி கிருஷ்ணதாஸன் இதனை இலங்கையிலுள்ள அனைவருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும், இதனை கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இயங்கி வருகின்றார்.

இதனை மாணவர்கள் சிறுவயது முதலே கற்றுக் கொண்டால் கணித பாடத்தில் இல குவாக சித்தியடைந்து விடலாம். இப்பாடத் திட்டத்தை மும்மொழிகளிலும் கற்றுக்கொள் ளாம். இதனை கற்கும் போது ஆங்கில அறிவு மாணவர்களிடையே விருத்தியாக்கப்படு கின்றது. இது விளையாட்டு மூலம் கற்பிக் கப்படுவதால் பிள்ளைகள் மிகவும் மகிழ்ச்சி யுடன் இதனை கற்று வருகின்றார்கள். இந்த பாடத்திட்டமானது மனதை ஒருமுகப்படுத்த மிகவும் உதவியாக இருப்பதால் ஏனைய பாடங்களையும் எளிதாக கற்றுக் கொள்ள வாய்ப்பாக அமைகிறது.

7ஆம் பக்கம் பார்க்க...











கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543






Intelligent Abacus Education இலங்கையில் முன்னிலையிலுள்ள அபகஸ் மற்றும் மனக்கணித கல்வி நிலையமாகும். இது 2004 இல் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை சிறந்த முறையில் இயங்கிவருகின்றது. இக் கல்வி நிலையத்தில் இதுவரை பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கற்று தேர்ச்சிப் பெற்று இலங்கையிலும் பல நாடுகளிலும் நல்ல நிலைமைகளில் உள்ளார்கள். இந்நிலையத்தில் மாணவர்கள் மட்டுமின்றி திற




மையான ஆசிரியர்களும் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள்.

Intelligent Abacus Education இன் கிளைகள் நுகேகொடை , வத்தளை O.K.I பாடசாலை, Mount Lavinia, யாழ்ப்பாணம், நாவலப்பிட்டி, மருதானை, இரத்தினபுரி, கல்முனை, தெமட்டகொடை, பின்லாந்து, துபாய், சவூதி, போன்ற இடங்களிலும் , நாடுகளிலும் இயங்கிவருகின்றன. மேலும் இந்நிலையத்தின் கிளைகள் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளன.

இதுபற்றி திருமதி வீரப்பா அரசிளங்குமாரி கிருஷ்ணதாஸன் மேலும் கூறியதாவது,

எமது Intelligent Abacus மனக்கணித பாடத்திட்டம் 5 வயது தொடக்கம் 16 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு முழுமையான அறிவு விருத்தியை தரும். அபகஸ் என்னும் கருவியைக் கொண்டு மாணவர்களினால் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற செயற்பாடுகளை மனபாடமற்ற முறையில் இலகுவாக கற்றுக்கொள்ள முடியும். இப்பாடத்திட்டம் பாடசாலை கணித பாடத்திட்டத்தின் 75% ஐ உள்ளடக்கியுள்ளது. இது மற்றைய பாடங்களையும் வேகமாகவும் இலகுவாகவும் கற்றுக் கொள்ள உதவும். ஞாபகசக்தி, விவேகம், துள்ளியம், நுண்ணறிவு, படைக்கும் திறமை, தெரிந்துக்கொள்ளல், தன்னம்பிக்கை, photography memory, மனதை ஒருமுகப்படுத்தல் என்பன இப்பாடத்திட்டத்தினால் ஏற்படும், இது Abacus கற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு கிடைக்கும் மேலதிக நன்மைகள் ஆகும்.

கடந்த வருடங்களைப் போன்று இவ் வருடமும் வத்தளையிலுள்ள Intelligent Abacus Education நிலையத்தில் கற்று வரும் மாணவ மாணவிகள் சர்வதேச மனக் கணித போட்டியில் (Live Mental Math Competition) 54 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்களுடன் போட்டியிட்டு பதக்கங்களையும், சான்றிதழ்களையும் சுவீகரித்துத் துள்ளார்கள். இதற்கான சான்றிதழ் மற்றும் விருது வழங்கும் விழா எதிர்வரும் 21ம்












திகதி (ஒக்டோபர் மாதம்) வத்தளை O.K.I International பாடசாலையில் நடைபெறவுள்ளதுடன் , அதே தினம் வருட இறுதியின் மாபெரும் இலவச ஒருநாள் ஆசிரியர் பயிற்சி செயலமர்வு நடைபெறவுள்ளதாக, வத்தளை, Intelligent Abacus Education நிலையத்தின் பணிப்பாளரும் ஆசிரியர்களை உருவாக்க பயிற்சி வழங்கும் பயிற்சி வழங்குனரும் (Master Trainer) பிரதம பரீட்சகருமான (Chief Examiner) திருமதி வீரப்பா அரசிளங்குமாரி கிருஷ்ணதாஸன் மகிழ்ச்சியுடனும் பெருமையுடன் தெரிவித்தார். 0771070555 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது info.iaedulk@gmail.com என்ற email முகவரியுடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.




# கலையிலும் கல்வியிலும் சிறந்து விளங்கும் ஜொஹான் பிரவிந் சுப்ரமணியம்



குரு ஸ்ரீ அம்பலவாணர் ரகுநாதன் காலஞ்சென்ற மிருதங்க வித்துவான் அம்பலவாணரின் புதல்வர் ஆவர். இராமநாதன் அகாடமியில் "சங்கீத ரத்தினம்" பட்டம் பெற்ற இவர், 1980 இல் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் "Super Grade Artist" ஆனார். இந்திய கலைஞர்களாகிய மதுரை சோமசுந்தரம் M. L. வசந்தகுமாரி, Dr. N. ரமணி, O.S தியாகராஜன், சேஷகோபாலன் சுதா ரகுநாதன் உன்னிகிருஷ்ணன் ஆகியோருக்கு மிருதங்கம் மற்றும் கடம் வாசித்து அனைவரையும் பிரமிக்க வைத்த இவருக்கு சங்கீத ஆலாபனா சார்பில் "இசை செல்வர்" என்றும் மிருதங்க வித்துவான் வை வேனிலான் என்பவரால் லயநாதலயா என்னும் நிறுவனத்தின் சார்பில் "லய நாத சுரபி" எனும் பட்டமும் சூட்டப்பட்டது. அது மட்டும் இன்றி இலங்கையில் "வாழ்நாள் சாதனையாளர்" எனும் பட்டம் பெற்ற ஒரே தமிழ் வித்துவானுமாவார்.

செல்வன் ஜொஹான் பிரவிந் சுப்ரமணியம் சிறு வயதிலிருந்தே கலைகளின் மேல் கொண்ட அதீத பற்று காரணமாகவும் நந்தி வாத்தியத்தை கற்பதில் இருந்த ஆர்வத்தின் காரணமாகவும் தலைநகரில் தலை சிறந்த ஆசான் , மிருதங்க வித்துவான் ஸ்ரீ அம்பலவானார் ரகுநாதனிடம் 10 வயது முதல் மிருதங்கத்தை செவ்வனவே கற்று வருகின்றார்.

இக்கலைச்செல்வன் ஜொஹான் பிரவிந் சுப்ரமணியம் புகழ் பூத்த பரி.தோமாவின் கல்லூரியின் நன் மாணாக்கர். இவர் வைத்திய கலாநிதி நிரோஷ் சுப்ரமணியம் மற்றும் திருமதி நளினி நிரோஷின் சிரேஷ்ட புதல்வர் ஆவார்.

சிறு வயது முதலே வாய்ப்பாட்டு மற்றும் வயலின், கடம் போன்ற இசைக்கருவிகளை ஆர்வத்துடன் பயின்றதோடு பாடசாலையின் பல நிகழ்வுகள், போட்டிகளில் பங்குபற்றி குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றியுள்ளார். அதுமட்டுமன்றி பாடசாலை போட்டிகளிலும் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளிலும் பங்குபற்றி பல பரிசில்களும் வென்றுள்ளார். இவர் கலையில் மட்டுமல்லாது பாடசாலையில் கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகின்றார். பாடசாலையில் சதுரங்கம், டென்னிஸ் போன்ற இதர விளையாட்டு அம்சங்களிலும் சூழலியல் கழகம், வானூர்தி அறிவியல் கழகம் போன்ற இணைப்பாடச் செயற்பாடுகளிலும் ஈடுபாடு உடையவர்.



# நாங்க ரெண்டு பேருல யாராவது சாக போறோமா?

லியோ கேர்கடர் குறித்து இயக்குனர் லோகேஷ் கனகராஜ் பேசியுள்ளது சோஷியல் மீடியாவில் வைரலாகி வருகிறது. தமிழ் சினிமாவில் முன்னணி இயக்குனராக திகழும் லோகேஷ் கனகராஜின் பேட்டிகள் தான் இணையம் முழுவதையும் ஆக்கிரமித்து வருகின்றன. 'லியோ' பட ரிலீஸ் தேதி நெருங்கி வரும் நிலையில், படம் குறித்த பல தகவல்களை பேட்டிகளில் பகிர்ந்து வருகிறார். இந்நிலையில் லேட்டஸ்ட் இன்டர்வியூ ஒன்றில் திரிஷா, பிரியா ஆனந்த் குறித்து லோகேஷ் கனகராஜ் பேசியுள்ளது சோஷியல் மீடியாவில் வைரலாகி வருகிறது.

மாநகரம்' படத்தின் மூலமாக இயக்குனராக அறிமுகமான லோகேஷ் கனகராஜ் தொடர்ச்சியாக பல ஹிட் படங்களை கொடுத்து வருகிறார். கைதி, மாநகரம், விக்ரம் படங்களை தொடர்ந்து தற்போது பெரும் எதிர்பார்ப்புடன் 'லியோ' படத்தை இயக்கி முடித்துள்ளார். 'மாஸ்டர்' படத்தின் பிரம்மாண்ட வெற்றியை தொடர்ந்து இரண்டாவது முறையாக லியோவில் இணைந்துள்ளனர். கோலிவுட் திரையுலகினர் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை கிளப்பியுள்ள இந்தப்படத்தின் ரிலீஸ் திகதி நெருங்கி வருகிறது. இதனால் படம் குறித்த பல தகவல்களை தொடர்ச்சியாக பேட்டிகளில் பகிர்ந்து வருகிறார் லோகேஷ் கனகராஜ். அந்த வகையில் லேட்டஸ்ட் பேட்டி ஒன்றில் இணையத்தில் வைரலாகும் மீம்ஸ் குறித்து கேட்கப்பட்டது. அப்போது திரிஷா கேரக்டரை 'செல்லத்த உயிரோட விட்ரு அண்ணா' என வைரலாகும் மீம்சை காட்டி லோகேஷிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த லோகேஷ் கனகராஜ் படம் ஆரம்பித்ததில் இருந்து இதைத்தான் என்கிட்ட சொல்லிட்டு இருக்காங்க. காஷ்மீர் ஷூட்டிங்ல இருந்தப்ப திரிஷா, பிரியா ஆனந்தே என்கிட்ட இதை கேட்டாங்கன்னு நினைக்கிறேன். நாங்க ரெண்டு பேருல யாராவது சாக போறோமான்னு கேட்டாங்க. இப்ப வரைக்கும் எனக்கு அப்படி எந்த ஐடியாவும் இல்லை. ஆனால் ரசிகர்களோட எதிர்பார்ப்பை எல்லாம் பார்க்கும் போது ரெண்டு பேருல யாரையாவது ஒருத்தரை கொன்னாதான் கரெக்ட்டா இருக்கும் நினைக்கிறேன் என கூறியுள்ளார். அவரின் இந்த பதிலை கேட்ட ரசிகர்கள் அப்போ கண்டிப்பா படத்துல ரெண்டு பேருல ஒருத்தரை லோகேஷ் கனகராஜ் போட்டு தள்ளிருப்பாரு போல என கூறி வருகின்றனர்.

'லியோ' படத்தில் கிட்டத்தட்ட 14 ஆண்டுகளுக்கு பிறகு விஜய், திரிஷா இருவரும் இணைந்து நடித்துள்ளனர். இவர்கள் படத்தில் கணவன், மனைவியாக நடித்துள்ளது டிரெய்லரிலே கன்பார்ம் ஆகியுள்ளது. மேலும் இவர்கள் இருவர் பற்றியும் பேசிய லோகேஷ் கனகராஜ், ரெண்டு பேரையும் 40+ ஆக காட்டுவது தான் கஷ்டம். ரெண்டு பேருக்குமே வயசு ரிவர்ஸ்ல போகுது என தெரிவித்துள்ளார். லோகேஷ் கனகராஜின் இந்த பேட்டிகள் தற்போது சோஷியல் மீடியாவில் வைரலாகி வருகிறது. நாங்க ரெண்டு பேருல யாராவது சாக போறோமா.?: லோகேஷிடம் கேட்ட திரிஷா, பிரியா ஆனந்த்.!



# உனக்குலாம் யாருடா ரூ. 5 லட்சம் தருவாங்க?

## சிவகார்த்திகேயனிடம் கேட்ட அம்மா



சிவகார்த்திகேயனிடம் உனக்கு யாருடா ரூ. 5 லட்சம் தருவாங்க என்று அவரின் அம்மா கேட்டது குறித்து தற்போது பேசப்படுகிறது. சின்னத்திரையில் இருந்து பெரிய திரைக்கு வந்து இன்று முன்னணி நடிகர்களில் ஒருவராக இருக்கிறார் சிவகார்த்திகேயன். படம் ஒன்றுக்கு ரூ. 25 கோடிக்கு மேல் சம்பளம் வாங்குகிறார். அவர் சின்னத்திரையில் கலக்கப் போவது யாரு நிகழ்ச்சியில் வெற்றி பெற்றதும் செய்தது குறித்து ஒரு முறை தெரிவித்தார். அது பற்றி தற்போது ரசிகர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கலக்கப் போவது யாரு நிகழ்ச்சியில் வென்றதும் முதல் வேலையாக அம்மாவுக்கு போன் செய்து சொல்லியிருக்கிறார். அம்மா நான் ஜெயிச்சுட்டேன், எனக்கு பரிசுத் தொகையாக ரூ. 5 லட்சம் கிடைக்கிறது என்று கூறியிருக்கிறார்.

அதை கேட்ட அம்மாவோ, போடா உனக்கு யாரு ரூ. 5 லட்சம் கொடுக்கப் போகிறாங்க. அந்த எம்.பி.ஏ. படிப்பு என்னாச்சு, ஒழுங்கு மரியாதையா படிக்கிற வேலையை பாருடானு சொல்லி போனை வைத்துவிட்டாராம்.

ரூ. 5 லட்சம் சம்பளமே கிடைக்காது என்று நினைத்த நிலையில் இன்று பல கோடிகளில் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார் சிவகார்த்திகேயன். சின்னத்திரையில் இருந்து வந்தாலே இவர் டிவி நடிகர் தானே என்கிற பேச்சு இருக்கும். அதை எல்லாம் தாண்டி சாதிப்பது பெரிய விஷயம். அதை தான் செய்திருக்கிறார் சிவகார்த்திகேயன். ஒரு நடிகராக பெரிய திரைக்கு வந்த சிவகார்த்திகேயன் தற்போது தயாரிப்பாளர், பாடகர், பாடலாசிரியர் ஆவார். மேலும் சிவகார்த்திகேயனின் மகள் ஆராதனாவும் பாடகி ஆவார். அவர் பாடிய வாயாடி பெத்த புள்ள பாடல் சூப்பர் டூப்பர் ஹிட்டானது.

சிவகார்த்திகேயனின் ஸ்பெஷல் குணமே, தான் மட்டும் முன்னேறினால் போதும் என நினைக்காதது தான். தன்னை சுற்றி இருக்கும் நண்பர்களும் தன்னை போன்றே முன்னேற வேண்டும் என நினைக்கிறார்.அவர் தற்போது ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் நடித்து வருகிறார். உலக நாயகன் கமல் ஹாசன் தயாரிக்கும் அந்த எஸ்.கே. 21 படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக சாய் பல்லவி நடித்துக் கொண்டிருக்கிறார்.

ராஜ்குமார் பெரியசாமி படத்தில் நடிக்க சாய் பல்லவி ஒப்புக் கொண்டிருக்கிறார் என்றால் அவரின் கதாபாத்திரம் நிச்சயம் வெயிட்டானதாக தான் இருக்கும் என நம்பப்படுகிறது. இந்நிலையில் எஸ்.கே. 21 பட பூஜையின்போது ராஜ்குமார் பெரியசாமியும், சாய் பல்லவியும் மாலையும் கழுத்துமாக இருந்த புகைப்படம் அண்மையில் வைரலானது. அதாவது சாய் பல்லவிக்கும், ராஜ்குமார் பெரியசாமிக்கும் திருமணமாகிவிட்டதாக பேசப்பட்டது. அதை பார்த்த சாய் பல்லவியோ, இது வெறும் வதந்தி என எக்ஸ் தளத்தில் விளக்கம் அளித்தார். அடுத்தடுத்து அவர் புதுப்படங்களில் நடிக்க ஒப்புக் கொண்டு வரும் நேரத்தில் இப்படியொரு வதந்தி பரவியது.

இதற்கிடையே ராஜ்குமார் பெரியசாமிக்காக புது ஹேர்ஸ்டைல் வைத்திருக்கிறார் சிவகார்த்திகேயன். அது வெளியே தெரிந்துவிடக் கூடாது என்று தான் மாவீரன் பட நிகழ்ச்சிகளில் எல்லாம் குல்லா அணிந்து வந்தார்.மடோன் அஸ்வின் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான மாவீரன் படம் சூப்பர் ஹிட்டானது. தன் அபார நடிப்பால் படத்தை தன் தோள்களில் தாங்கினார் சிவகார்த்திகேயன் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரின் அயலான் படத்தை பார்க்க பெரியவர்களும், குட்டீஸ்களும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையே ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார் சிவகார்த்திகேயன். தற்போதைக்கு எஸ்.கே. 23 என அழைக்கப்படும் அந்த படம் மூலம் பாலிவுட் நடிகை மிருணாள் தாகூர் தமிழ் திரையுலகிற்கு வருகிறார்.

# மகள் இருப்பதை மறைத்த வித்யாபாலன்



பாலிவுட்டில் நன்றாக நடிக்கத் தெரிந்தவர் என பெயர் எடுத்தவர் வித்யா பாலன். தொடர்ந்து ஹீரோயினுக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளில் நடித்து வருகிறார். படத்திற்கு படம் வித்தியாசம் காட்டுவதற்கு பெயர் போனவர். பாலிவுட்டில் செட்டில் ஆகிவிட்ட வித்யா பாலனுக்கும், தயாரிப்பாளர் சித்தார்த் ராய் கபூருக்கும் கடந்த 2012ம் ஆண்டு திருமணம் நடந்தது. அந்த தம்பதிக்கு குழந்தை இல்லை. இந்நிலையில் விமான நிலையத்திற்கு ஒரு சிறுமியுடன் வந்திருந்தார் வித்யா பாலன்.அப்பொழுது எடுக்கப்பட்ட வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலானது. வித்யா பாலனுடன் இருக்கும் சிறுமி அவரின் மகள் தான் என பலரும் பேசத் துவங்கினார்கள். சோஷியல் மீடியா காலத்தில் ஒரு மகள் இருப்பதை இத்தனை ஆண்டுகளாக ரகசியமாக வைத்திருந்த வித்யா பாலனை பாராட்டியே ஆக வேண்டும் என்றார்கள் நெட்டிசன்கள். மகள் இருப்பதை சொல்லாமல் விட்டுட்டீங்களே வித்யா என ரசிகர்கள் தெரிவித்தனர். ஆளாளுக்கு தன்னை பற்றி பேசுவதை பார்த்த வித்யா பாலன் விளக்கம் அளித்துள்ளார். விமான நிலையத்தில் தன்னுடன் இருந்த சிறுமி தன் மகள் இல்லை என்றும், சகோதரியின் மகள் என்றும் தெரிவித்துள்ளார். வைரல் வீடியோ பற்றி வித்யா பாலன் கூறியிருப்பதாவது, அது என் சகோதரியின் மகள் ஐரா. என் சகோதரிக்கு இரட்டை பிள்ளைகள் இருக்கிறார்கள். மகனின் பெயர் ரூஹான், மகள் ஐரா என்றார்.

தன் சகோதரியின் இரட்டை பிள்ளைகள் மீது அதிக பாசம் வைத்திருக்கிறார் வித்யா பாலன். அப்படி இருக்கும் போது அவரை ஐராவுடன் பார்த்தவர்கள் வேறு மாதிரி பேசிவிட்டார்கள். கெரியரை பொறுத்தவரை நீயத் இந்தி படத்தில் துப்பறியும் நபராக நடித்திருந்தார் வித்யா பாலன். அது தான் அவர் நடிப்பில் கடைசியாக வெளியான படம். அடுத்ததாக வித்யா நடிப்பில் லவ்வர்ஸ் படம் வருகிறது. அந்த படத்தில் இலியானா, பிரதீக் காந்தி உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.தொடர்ந்து பாலிவுட் படங்களில் நடித்து வரும் வித்யா பாலன் அஜித் குமாரின் நேர்கொண்ட பார்வை படம் மூலம் தமிழ் திரையுலகிற்கு வந்தார். அநத் படத்தில் அஜித் குமாரின் மனைவியாக நடித்திருந்தார்.அஜித் குமார், வித்யா பாலன் இடையேயான கெமிஸ்ட்ரி தமிழ் ரசிகர்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அதனால் மீண்டும் அஜித் குமாருக்கு ஜோடியாக நடிக்குமாறு ரசிகர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் படத்தில் நடிக்க ஒப்பந்தமானார் வித்யா பாலன். படப்பிடிப்பு துவங்கிய பிறகு அவருக்கு நடிக்கத் தெரியவில்லை என நீக்கிவிட்டு வேறு ஒரு ஹீரோயினை நடிக்க வைத்தார்கள். அதன் பிறகு பாலிவுட் சென்றார் வித்யா.தன்னை தமிழ் படத்தில் இருந்து நீக்கியதை வித்யா பாலன் இன்னும் மறக்கவில்லை. இதற்கிடையே நடிகை சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கை வரலாற்று படமான தி டர்ட்டி பிக்சரில் நடித்து பட்டிதொட்டி எல்லாம் பிரபலமானார் வித்யா பாலன்.

# பாத்திமா விஜய் ஆண்டனியின் கண்கலங்கவைக்கும் பதிவு

தமிழ் சினிமாவில் அவருக்கென தனி ஸ்டைலோடு இசையமைப்பாளராக இருப்பவர்தான் விஜய் ஆண்டனி. இவர் படங்களிலும் நடிக்கிறார். இவரது பட தேர்வே வித்தியாசமாக இருக்கும். இவரை நடிகராகவும் மக்கள் ரசித்து வருகின்றனர். அதிலும், குறிப்பாக இவரது பிச்சைக்காரன் படத்திற்கு ரசிகர்கள் ஏராளம். சமீபத்தில் இவர் நடிப்பில் வெளியான ரத்தம் படமும் நல்ல விமர்சனத்தை பெற்று வருகிறது. இந்த படத்தில் இவருக்கு ஜோடியாக நடிகை மஹிமா நம்பியார் நடித்துள்ளார். விஜய் ஆண்டனிக்கு மீரா, லாரா என இரு மகள்கள் இருந்தார்கள். ஆனால், பன்னிரெண்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் போது விஜய் ஆண்டனியின் மூத்த மகளான லாரா ஆண்டனி அவரது அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். அவரது தற்கொலை திரை வட்டாரங்களில் மட்டுமல்லாது தமிழ் நாட்டையே பெரும் அளவில் உலுக்கியது. விஜய் ஆண்டனியின் தந்தையும் தற்கொலை செய்து தான் இறந்தார். அதேபோல, அவரது மகளும் தற்கொலை செய்து இறந்தது அவரது குடும்பத்திற்கு தாங்க முடியாத பாரத்தை கொடுத்திருக்கிறது. மீரா ஆண்டனி கடந்த செப்டம்பர் 19ஆம் திகதி உயிரிழந்தார். அவர் இறந்த பத்தாவது நாளில் ரத்தம் படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பிற்கு அவரது இளைய மகள் லாராவுடன் சென்றார் விஜய் ஆண்டனி.



விஜய் ஆண்டனியின் மனைவி X தளத்தில் ஒரு கண்கலங்கவைக்கும் பதிவை பகிர்ந்திருக்கிறார். அந்த பதிவில், " நீ பதினாறு வருஷம்தான் இருந்திருப்பாய் என தெரிந்திருந்தால் உன்னை என்னிடமே வைத்திருந்திருப்பேன். சூரியனுக்கும் நிலவிற்கும் கூட காட்டியிருக்கமாட்டேன்.. உன் நினைவுகளால் நான் சோகத்தில் மூழ்கியிருக்கிறேன்.. நீ இல்லாமல் எங்களால் இருக்க முடியவில்லை. சீக்கிரம் அப்பா மற்றும் அம்மாவிடம் திரும்பி வந்துவிடு, லாரா உனக்காக காத்துக்கொண்டே இருக்கிறாள்.. லவ் யூ தங்கம் " என பதிவிட்டிருக்கிறார்.

பாத்திமா விஜய் ஆண்டனியின் இந்த பதிவு பார்ப்போரின் நெஞ்சை மிகுந்த வேதனைக்கு உள்ளாக்குகிறது. தற்கொலை செய்துகொள்வது எந்த ஒரு விஷயத்திற்கும் தீர்வாகாது என பேசியிருக்கிறார் விஜய் ஆண்டனி, ஆனால் அவரது மகளே இறந்திருப்பது அவரின் குடும்பத்திற்கு எவ்வளவு வேதனையை கொடுத்திருக்கும் என உணரமுடிகிறது. பாத்திமாவின் பதிவிற்கு எந்த ஆறுதலும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை..

# பலரையும் கவர்ந்துள்ள நடிகர் விஷாலின் செயல்

நடிகர் விஷால், மார்க் ஆண்டனி படத்தை தொடர்ந்து தற்போது அவரது 34வது படத்தில் நடித்து வருகிறார். அந்த வகையில், கிராம மக்கள் கேட்ட கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறார் நடிகர். 2004ல் செல்லமே என்னும் படத்தில் நடித்து ஹீரோவாக அறிமுகமானார் நடிகர் விஷால். தொடர்ந்து பல படங்களில் நடித்து வருகிறார். சமீபத்தில் இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் விஷால் மற்றும் SJ சூர்யா இணைந்து நடித்த மார்க் ஆண்டனி திரைப்படம் நல்ல வரவேற்பை கொடுத்தது. அதுமட்டுமில்லாமல், கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



# குழந்தைகளை திட்டுவது சரியா

குழந்தைகளை திட்டுவது சரியா "என்னோட பிள்ளையை நான் திட்றதே இல்லை! எது கேட்டாலும் உடனே வீட்ல யாராவது வாங்கி கொடுத்திடுவோம்" பல குடும்பங்களின் பெருமையாக சொல்லும் ஓர் விடயமாக இது உள்ளது. காரணம் இன்று அநேகமாக ஒன்று இரண்டு குழந்தைகளை பெற்று வளர்ப்பதே காரணமாகும். இதனால் கேட்பதையும், கேட்காததையும் வாங்கிக் கொடுத்து அவர்களை வளர்கிறார்கள். இதனால் தவறுகள் செய்யும் போதோ பிடிவாதம் பிடிக்கும் நேரங்களிலோ குழந்தைகளை திட்டுவது சரியா என்று பெற்றோர்கள் மத்தியில் ஓர் ஆழ்ந்த சிந்தனை தோன்றுகிறது. தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையை விட சிறப்பான வாழ்க்கையை பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும் என்று பெற்றோர் நினைத்து எல்லா ஆடம்பர விடயங்களையும் அறிமுகம் செய்து தகுதிக்கு மீறி வளர்க்கின்றனர். ஓர் சொல் சொல்லாமல் , திட்டாமல் அடிக்காமல் மற்றவர்களையும் திட்ட விடாமல் "அப்பப்பா!!! நான் என் பிள்ளையை நேர்த்தியாக வளர்க்கிறேன்" என்று வளர்த்து வரும் பெற்றோரே பின் விளைவை சிந்தித்தீர்களா! செல்லமாக வளர்க்கும் குழந்தைகளை திட்ட முன்னெடுக்கும் போது பிள்ளைகள் உடைந்து போகிறார்கள். இதனால் எதையும் தாங்கும் இதயம் அவர்களுக்கு இல்லை. மனச்சோர்வு அடைந்து மேற்கொண்டு தாங்கள் இயங்கும் நிலையில் தளம்பல் அடைகிறார்கள். கொஞ்சி கொஞ்சி வளரும் பிள்ளை பள்ளியில் புள்ளிகள் குறையும் போது அல்லது நண்பர்களுடன் சேர்ந்து குறும்புகள் செய்யும் போது கண்டிக்கும் வேளையில் அவர்கள் அதை புதிதாய் எதிர்கொள்ளும் விடயமாக கருத்துகிறார்கள். இப்படித் திட்டி வளர்க்கப்படாத பிள்ளைகள்தான், 'டீச்சர் திட்டினார்', 'அம்மா முறைத்தாள்', 'அப்பா அடிக்க கையை ஓங்கினார்' எனச் சின்னச் சின்ன காரணங்களுக்காகத் தற்கொலை வரை செல்கிறார்கள். பொருளாதார நிலையில் சிக்கல் வரும் நேரம், திட்டும் நேரங்களில், தான் நினைத்தது கிடைக்க வில்லை என்கிற நிலையில் அந்தக் குழந்தையால் தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலையை நாடுகிறது. எதற் கு தற்கொலை முயற்சியை மேற்றக்கொள்ள வேண்டும் என்கிற காரணங்களைக் கேட்டால் திகைக்க வைக்கிறது சிரிக்க தோணுகிறது. பெறுமதியில்லா விடயம்களுக்கெல்லாம் கோபம் , ஆத்திரம், அதற்க்கு தீர்வாக போதைப்பொருள் பாவனைகள் என்பன அவர்களின் வாழ்க்கையை சீரழித்து விடுகிறது. பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் திட்டு வாங்கும் குழந்தைகள், தோல்விகளிலிருந்து தங்களை வேகமாக மீட்டெடுத்துக் கொள்வார்கள் தவறு செய்கிற குழந்தைகளைப் பெற்றோர் திட்டித் திருத்துவது இயல்பான விஷயம். இதை ஆரம்பம் முதலே அளவோடு பிள்ளைகளுக்கு பழக்கி விட அவர்கள் சிறு சிறு திட்டுக்கும் கோபக்காரரர்களாக மாறுகிறார்கள். அதனால் குழந்தைகளை வசவுகளுக்குப் பழக்குங்கள் இன்றைய குழந்தைகளுக்கு அறிவுத்திறனும் நினைவுத்திறனும் அபாரமாக இருக்கின்றன. அவர்களைக் கொண்டாடவேண்டிய இடங்களில் கொண்டாடி, குட்டவேண்டிய இடத்தில் குட்டி வளர்த்தால், மிகப்பெரிய சாதனைகளுக்குச் சொந்தக்காரரர்கள் ஆவார்கள். அதை விடுத்து, 'நான்தான் என் பெற்றோரிடம் வசவும் அடியும் வாங்கி வளர்ந்தேன். என் பிள்ளைக்கு அதெல்லாம் கூடாது' என நினைத்து மன தைரியம் இல்லா குழந்தையாக மாற்றிவிட வேண்டாம். வீடே முதல் கல்விச் சாலை, பெற்றோரே ஆசான்கள். உங்களிடம் இருந்தே ஆரம்பிக்கட்டும் மன தைரியம் வளர்க்கும் வித்தை. இதனால் தங்கள் தவறுகளினால் கிடைக்கும் தோல்விகளிலிருந்து சீக்கிரமே மீண்டு வருவார்கள். அப்போதுதான் எந்தச் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு தங்களை நடத்திக் கொள்ள அவர்களே கற்றுக்கொள்வார்கள். குழந்தைகளைத் தண்ணீர்போல வளர்க்க வேண்டும். தெளிவான, பிரச்சினை தரும் வடிவங்களுக்கு வளைந்து கொடுக்கும் தன்மையுடன் வளர்வார்கள். திட்டுங்கள் என்பதற்காக மனம் ஒடியும் அளவுக்கு தகாத வார்த்தைகளால் திட்டி விடாதீர்கள். கொஞ்சம் மென்மையாக, நாகரீகமாக திட்டுங்கள். அதுவும் பொது இடங்களில் மற்றவர்கள் முன்பாக திட்டுவதை தவிருங்கள். சாப்பிடும் போதும், உறங்கும் போதும், காலையில் விழிக்கும் போதும் திட்டுவதை தவிருங்கள். திட்டியப் பின் அவர்களுக்கு விருப்பமான ஒன்றை நேரம் கடந்து செய்து கொடுங்கள். அல்லது வெளியில் அழைத்து செல்லுங்கள். அப்படி பிடித்த ஒரு விடயத்தை செய்யும் போது எதற்காக திட்டினீர்கள் என்பதையும் எடுத்து சொல்லுங்கள். இனி இவ்வாறான தவறுகளை செய்யக் கூடாது. செய்தால் அதன் பாதிப்பு என்ன என்பதை அழகாக எடுத்துக்கூறுங்கள். குழந்தைகள் தண்ணீரைப் போன்றவர்கள். சுத்தமாகவும், பாத்திரத்திற்கு ஏற்றபடி உருவம் கொடுக்கும் நீரைப் போலவும் அவர்களை நாம் நல் வழியில் கையாள வேண்டும். மனநலம் ஆரோக்கியத்தை சின்ன சின்ன திட்டுக்கள் வளர்க்கும். குழந்தைகளை திட்டுங்கள். செல்ல திட்டுக்கள் செல்லக் குழந்தைகளை திருத்தும்.






கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# வெள்ளி அணிகலன்களும் அறிவியலும்

நமது முன்னோர்கள் பல விஷயங்களை அறிவியல் காரணத்துடன் கூறியிருக்கின்றனர். உடலில் வெள்ளி மற்றும் தங்கம் போன்ற ஆபரணங்கள் அணிவது சம்பிரதாயம் மட்டுமல்ல அறிவியல் பூர்வமாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் நாம் கலாச்சார மாற்றம் என்று அனைத்தையும் தவிர்த்து வருகிறோம். இப்பொழுது வெள்ளியில் மெட்டி மற்றும் கொலுசு அணிவதற்கான காரணத்தை பாப்போம். வெள்ளியின் நன்மைகள்

நகைகள் என்பது நமது பாரம்பரியத்தில் முக்கியமாக கருதப்படுகிறது. இது உடல் சூட்டையும் குறைத்து நமது உடலில் முக்கிய புள்ளிகளை தூண்டி ஒவ்வொரு உறுப்பையும் பராமரிக்கிறது. முக்கியமாக வெள்ளிகளை நமது கால்களில் கொலுசாகவும், மெட்டியாகவும் அணிகிறோம்.





இதற்கு சில பின்னணி காரணங்களும் உண்டு.தங்கத்தில் மஹாலக்ஷ்மி இருப்பதால் அதனை காலில் அணியக்கூடாது என கூறுவார்.

மேலும் கொலுசை காலில் அணிவதால் உடல் சூடு கட்டுப்படுகிறது. இந்த வெள்ளி நமது உடலை தொட்டுக் கொண்டே இருப்பதால் நாளடைவில் நமது உடலின் அழகாக மாறிவிடுகிறது. ஆண்களை விட பெண்களுக்கே உணர்ச்சிகள் அதிகம் எனவே இந்த கொலுசை அணுவதால் குதிங்கால் நரம்பை தொட்டு மூளைக்கு செல்லும் உணர்ச்சியை கட்டுப்படுத்துகிறது. இந்த வெள்ளி கொலுசுகள் வர்ம புள்ளிகளை தொடுவதால் அதனை தூண்டி விட்டு உடல் உறுப்புகளை பாதுகாக்கும்.

பெண்களுக்கு உடல் சூடு சற்று அதிகமாகவே இருக்கும். எனவே தான் பெண்கள் கொலுசு அணிகின்றனர். மேலும் பெண்களின் கொலுசில் ஏற்படும் தூண்டுதல் இடுப்பை வலுவாக்கும்.

பெண்கள் இரண்டாவது விரலில் மெட்டி அணிவதால் கர்ப்பப்பை பலமாகிறது. மேலும் இரத்த ஓட்டமும் சீராகிறது. இதனால் கற்பகாலத்தில் எந்த பிரச்சினையும் ஏற்படாமல் பாதுகாக்கிறது.

# முடி வளர்ச்சிக்கு



இந்த ஹேர் பேக் தயாரிப்பதற்கு ஒரு பவுலில் முல்தானி மெட்டி, ஆரஞ்சு பழ தோல் பொடி, 2 டீஸ்பூன் கற்றாழை ஜெல் ஆகியவற்றை சேர்த்து கொள்ளவும்.



மேலும் அதோடு முட்டையின் வெள்ளை கருவை மட்டும் இதில் ஊற்றி கொள்ளவும்.

மேலும் இதில் சிறிதளவு தண்ணீர் விட்டு நன்றாக மிக்ஸ் செய்து கொள்ளவும். பின்னர் நாம் ரெடி செய்து வைத்திருக்கும் இந்த ஹேர் பேக்கை நம் தலை முடி முழுவதும் அப்ளை செய்து கொள்ளவும்.

மேலும் ஒரு 20 நிமிடங்கள் கழித்து மைல்டான ஷாம்பு யூஸ் செய்து ஹேரை வாஷ் செய்து கொள்ளவும்.

இவ்வாறு இந்த பேக்கை மாதத்தில் ஒரு ஒரு முறை பாலோவ் செய்து வருவதன் மூலம் நம் தலை முடி வளர்ச்சி அதிகரிப்பதை நம்மால் உணர முடியும்.

# கலைச்சுடர் ஸ்ரீமதி அனுஷா மொரயஸின் 'சப்த ஸ்வர லய இசை விழா 2023'










நாடறிந்த இசைக் கலைஞரும் சிறந்த ஒலிப்பதிவாளரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அறிவிப்பாளருமான கலைச்சுடர் ஸ்ரீமதி அனுஷா மொரயஸின் 'சப்த ஸ்வர லய இசை விழா 2023', தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையுடன் மருதானை டவர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

படங்கள் : எம். நசார்

# கலைக்கமலின் மீலாத் கீத் ராத் நிகழ்வு









கலைக்கமலின் மீலாத் கீத் ராத் நிகழ்வு கவிக் கமலின் இசையுடன் ஜெயவர்த்தன மண்டபத்தில் அஹமட் முனவ்வர் ஏற்பாட்டில் சிறப்பாக இடம் பெற்றது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வெளிநாட்டு அமைச்சின் மேலதிகச் செயலாளர் அமீர் அஜ்வாது கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக சிங்கப்பூர் சமூக நீதி செயற்பாட்டாளர், உதவும் கரங்கள் நிறுவனத் தலைவர் புதிய நிலா மு. ஜஹாங்கீர், கொழும்பு மாநகரசபை பிரதி மேயர் I.M.இக்பால், ஊடகவியலாளர்கள், கலை ஆர்வலர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது கலைக்கமல், மொய்னா பேகம் ஆகியோருடன் சிங்கப்பூரின் பிரபல பாடகர் பரீதுல்லாவும் மிக அழகான கருத்தாழமுள்ள இஸ்லாமிய கீதங்களை வழங்கினர். குறிப்பாக கலைக்கமல் அவரின் தந்தை பாடிய மாஷா அல்லாஹ் என்ற அறபு பாடலையும் பாடி அரங்கத்தை மெருகூட்டினார்.

இதன்போது கௌரவ அதிதியாக கலந்து கொண்ட பதிய நிலா நிறுவுனர் மு.ஜஹாங்கிர் மேடையில் பாடகர்களை உற்சாகப்படுத்தியதுடன் ஒரு வேண்டுகோளையும் விடுத்தார். அதாவது இனிவரும் காலங்களில் சிங்கள மொழியிலும் இஸ்லாமிய கீத பாடல்களை இயற்றி பாட வேண்டும் என்றார். இதன்போது பிரதம அதிதியும் நல்ல பல கருத்துக்களைத் தெரிவித்தார்.

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)


## நிறம் தீட்டுங்கள்




## வழிகாட்டுங்கள்




## தொடர்புபடுத்துங்கள்





## Fill in the Missing Numbers




## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்







# முஸ்லிம்களின் ஒலிக்கலைகள் மற்றும் பாடல் மரபுகளை ஆராயும் மினாரத் ஆவணப்படத்திற்கு பெருவரவேற்பு



இலங்கை முஸ்லிம்களின் ஒலிக்கலைகள் மற்றும் பாடல் மரபுகளை ஆராயும் “மினாரத்“ ஆவணப்படம் அண்மையில் திரையிடப்பட்டு பெருவரவேற்பைப் பெற்றது. இதன் தயாரிப்பாளர் இளம் திரைப்படத் தயாரிப்பாளரும் ஆய்வாளருமான நாத்யா பிமானி பெரேரா . இவரது ஆவணப் படங்கள் மற்றும் புனைகதைகள் உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் திரைப்பட விழாக்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நெதர்லாந்து சமூகக் கற்கைகளுக்கான சர்வதேச நிறுவனத்தில் எம்.ஏ பட்டம் பெற்றுள்ள நாத்யா இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்துடன் இணைந்து இந்த முழு நீள ஆவணப் படத்தை தயாரித்துள்ளார். அவரை செந்தூரத்திற்காக நேர்கண்ட போது,



**கே: நீங்கள் இயக்கிய படங்களைப் பற்றி சொல்லுங்கள்?**

பல குறும்படங்கள் மற்றும் ஆவணப் படங்களை இயக்கியுள்ளேன். ரிசானா நபீக்கின் கொல்லப்பட்ட ஆண்டில் நான் தயாரித்த 'பெப்ரவரி 4' என்ற சிறு ஆவணப்படம், அவருக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலை பற்றியும், வீட்டு வேலைக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் இலங்கைத் தொழிலாளர்களைப் பற்றியும் பேசுகிறது. எனக்கென்றால் கேட்டது ("While You Slept") என்ற கற்பனைக் குறும்படம், சமீபத்தில் இலங்கைக்கு வந்த சீனத் தொழிலாளிகள் மற்றும் அவர்களுக்கு பாலியல் உழைப்பை வழங்கும் இலங்கைப் பெண் தொழிலாளியின் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டது. நான் இயக்கிய இந்த குறும் படத்தின் இணை திரைக்கதை எழுத்தாளராக பூபதி நளின் செயற்பட்டார். அந்த படம் 2017ல் லோகார்னோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிட அழைப்பு விடுக்கப்பட்டது. 2019 இல், நான் இயக்கிய Work at Your Own Risk என்ற ஆவணப்படம், கொழும்பு மற்றும் கட்டுநாயக்காவைச் சுற்றியுள்ள முறைசாரா தொழிலாளர் சந்தையில் சமூகத்திற்கு பல இன்றியமையாத சேவைகளை வழங்கும் மற்றும் அன்றாடம் பல ஆபத்துக்களை எதிர்கொள்ளும்பெண் தொழிலாளர்கள் குழுவைப் பற்றி பேசுகிறது. அடுத்து 'மினாரட்ஸ்' ஆவணப்படம். நான் ஒரு நீளமான ஆவணப் படத்தை உருவாக்குவது இதுவே முதல் முறை.

**கே: இனத்தாலும் மொழியாலும் கலாசார பாரம்பரியங்களினாலும் வேறுபட்ட ஒரு பரந்த விடயத்தை ஆவணப்படமாக இயக்கும் ஆர்வம் எப்படி உங்களுக்கு ஏற்பட்டது?**

நான் ஒரு போதும் இவ்வாறான ஒரு விடயத்தை ஆவணப் படமாகத் தயாரிக்க எதிர்பார்த்திருக்கவில்லை. எதிர்பாராத விதத்தில் இந்தப் படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. சர்வதேச இனத்துவக் கற்கை மையத்தில் பணியாற்றிய நதீன் வன்னியசிங்கம், 'இலங்கை முஸ்லிம்களின் இசையும் பாடல் மரபுகளும்: ஒரு கண்ணோட்டம்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதனை மையமாகக் கொண்டு ஆவணப்படம் ஒன்றை இயக்க அந் நிறுவனம் எனக்கு அழைப்பு விடுத்தது. அது சவாலான விடயம் என்றாலும் அதனை ஏற்றுக் கொண்டேன்.

**கே: இலங்கை முஸ்லிம் சமூகத்தின் இசை மரபுகளை ஆராயும் இந்த முயற்சியில் எத்தகைய சவால்களை எதிர்கொண்டீர்கள்?**

முஸ்லிம் சமூகத்துடன் தொடர்பு கொள்வதிலும், படப்பிடிப்பு நடக்கும் இடங்களை அணுகுவதிலும் நான் குறிப்பிடும்படியான சவால்களை சந்திக்கவில்லை. பல சந்தர்ப்பங்களில் எனக்கு நிறைய ஆதரவும் வழிகாட்டலும் கிடைத்தன. மத வழிபாட்டுத் தலங்களுக்கு செல்லும் போது மட்டுமே ஒரு வித்தியாசமான சூழ்நிலையை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. ஆண்கள் தொழுகையில் ஈடுபட்டிருக்கையில் நான் வெளியில் இருந்தே தேவையான தொடர்பாடல்களை மேற்கொண்டு படப்பிடிப்பு செய்தேன். இது எனக்கு புதிய அனுபவமாக இருந்தது. மற்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும், நான் வழக்கம் போல் அந்த இடங்களில் பணியாற்றினேன். பெரும்பாலான இடங்களில் நான் தனியொரு பெண்ணாக இருந்தாலும் பணியாற்ற எந்த தடையும் ஏற்படவில்லை. கொவிட்,எரிபொருள் பிரச்சினை என்பன பணிகளுக்கு தடையாக இருந்தாலும் அவற்றை சமாளித்து எமது முயற்சியை திருப்திகரமாக நிறைவு செய்ய முடிந்தது.




**கே: பரந்த ஒரு விடயப் பரப்பை எப்படி கையாள முடிந்தது?**

உண்மையில் இந்த ஆவணப்படத்தை இயக்குவதில் எனக்கிருந்த மிகப் பெரிய சவால் இத்தகைய ஒரு பரந்த விடயப்பரப்பிபு சார்ந்த விடயங்களை எவ்வாறு சேகரிப்பது என்பது தான். எங்கிருந்து ஆரம்பிப்பது யாரிடம் கதைப்பது என்று கூட தெரிந்திருக்கவில்லை.

அது மாத்திரமன்றி இஸ்லாமிய கலாச்சாரப் பாரம்பரியம், உலகளாவிய ரீதியில் மிகவும் பரந்த, மிகவும் வளமான, மேம்பட்ட வரலாற்றைக் கொண்டது. இலங்கையில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட ஏற்படுகின்ற மாற்றங்களை உலகளவிலும் பிராந்திய அளவிலும் காணப்படுகின்ற போக்கிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

ஆனால் ஒரு ஆவணப்படம் தேவையான விடயங்களை தேடுவது இலவாக இருக்கவில்லை. வெலிகம,மாத்தறை,காலி. கிழக்கு மாகாணம் என பல இடங்களுக்குச் சென்று தேவையான தகவல்களையும் படப்பிடிப்புகளையும் மேற்கொண்டோம். இது முழுமையானது என்று கூற மாட்டேன். விடுபட்டவைகள் இருக்கலாம். இத்திரைப்படத்தை பார்க்கும் ஒருவர் விடுபட்ட விடயங்களைச் சேர்த்து ஓர் ஆவணப்படம் தயாரிக்க முன்வரலாம்.






**கே: மினாரத் ஆவணப்படத்திற்கு எவ்வாறான வரவேற்பு கிடைத்தது?**

ஆவணப் படங்களை திரையரங்குகளில் காண்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. பிரசன்ன விதாண போன்றவர்களின் ஆவணப் படங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. எனது மினாரத் ஆவணப்படத்தை திரையிட அவகாசம் கிடைத்தது. முதலில் மூன்று நாட்களே திரையிட கால அவகாசம் கிடைத்தது. முதல் நாளில் பெரியளவு வரவேற்பு இருக்காவிட்டாலும் அடுத்து வந்த நாட்களில் நல்ல வரவேற்பு கிடைத்தது. திரைப்படத் தயாரிப்பாளர்கள்,கவிஞர்கள்,எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆர்வலளர்கள் என பலதரப்பினரும் இதனை பார்வையிட்டு தமது வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். மூன்று நாள் மேலும் நீடிக்கப்பட்டடு ஒரு வாரத்திற்கும் மேல் ஆவணப்படம் காண்பிக்கப்பட்டது. இது எனக்கு பெரும் திருப்தியை தருகிறது. எனது படத்திற்குக் கிடைத்த அங்கீகாரமும் கூட. இது என்னை மேலும் ஊக்கப் படுத்தியது.

இப்படத்தை இன்னும் பலருக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டியுள்ளது. இது தொடர்பான உரையாடலை மேம்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. கலை நிறுவனங்களுக்கு அப்பாலும் கொழும்பிற்கு வெளியே உள்ள பகுதிகளிலும் காட்சிப்படுத்த தயாராக இருக்கிறோம்.

முடிந்தவரை பார்வையாளர்களை சென்றடைய முயற்சி செய்து வருறோம். பல்கலைக்கழகங்கள், சிறு குழுக்கள் எங்களை தொடர்பு கொண்டால், நாங்கள் அவர்களுக்கு ஆதரவளிக்க தயாராக இருக்கிறோம்.

நேர்காணல்:
**சம்ஸ் பாஹிம்**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

# புதுநானூறு 08



ஈழத்துக்கவிதையில் முனைவுற்று நிற்கும் பெயர் சி.சிவசேகரம். கவிதை, கட்டுரை, விமர்சனம், மொழிபெயர்ப்பென பரந்து சென்ற மொழியின் இன்னொரு பரிமாணம் கவிஞர் சி.சிவசேகரம் . 1942இல் திருகோணமலையில் பிறந்த இவரது எழுத்தின் விசை எல்லாத்திசையும் உந்திநின்றது. பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர், எந்திரவியல் துறையின் தலைவரென கல்விப்புலத்தை நிரப்பம் செய்த இவர்தேசிய கலை இலக்காயப்பேரவையூடாக தன் கலை, இலக்கிய அரசியலை முன்னெடுத்தவர்; தாயகம் இதழின் ஆசிரியர் குழாத்தில் இயங்கியவர். எழுத்தை எதிர்ப்பாயுதமாகக் கைக்கொண்ட சி.சிவசேகரம் கவிதைகள் தமிழ்க்கவிதைக்கு ஒரு சேகரம்தான்.

எழுத்து முறையிலும், எழுத்துப்பொருளிலும் புதுமையொளி பாய்ச்சியவர்;கவிதையின் நடையில் தனித்துவ அடையாளத்தைப் பொறித்தார். இவரது கவிதைகளின் பிரதிகளை ஒருசேர வாசிக்கும்போது இந்தத் தனித்துவத்தை ருசிக்க முடியும். நதிக்கரை மூங்கில்(1983) தொடங்கி சிவசேகரம் கவிதைகள் (2022)வரை நீட்சியான கவிதைத் தடம் இவருடையது.

மொழிபெயர்ப்புக்கவிதையிலும் தன்மொழியைப் பாய்ச்சி தனது இலக்கிய அரசியலை நிரூபித்திருக்கிறார். மாஓசேதுங் கவிதைகள் (1976) அபராதி நானல்ல (2021) வரை மொழிபெயர்ப்பின் ஆளுமையை முன்னகர்த்தியவர் கவிஞர் சி.சிவசேகரம். கவிதை என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் குரலென ஒலித்த குரல் சிவசேகரம்.

'ஒன்றைப்பற்றி மட்டுமே சொல்வது தொடர்பாக' என்ற இவரது நீண்ட கவிதை உலகளாவிய போரின் கொடூரத்துள் சிக்கிய தேசங்களின் நிலைமையை உணர்வுபூர்வமாகப் பேசுகிறது. சக மனிதத்துயர்/ சக தேசத்துயர், இதனை விட எதனைப் பேசுவது.

எனவே ஒன்றைப்பற்றி மட்டுமே பேசுவதாக கவிதை விரிகிறது. "நான் ஒன்றைப் பற்றிப் பேசும் போது இன்னொ ன்றைப் பற்றிப் பேசுவது போல இருக்கிறது என்கிறாய். மெய்தான்.......... எனத்தொடங்கும் கவிதை எழுப்பும் கேள்வி ஒன்றுதான்' இந்த நாளில் ஒன்றை விலக்கி. இன்னொன்றைக் காணுவது இயலாத காரியந்தான். ஒன்றைப் பற்றி மட்டுமே சொல்வது தொடர்பாக நான் ஒன்றைப் பற்றிப் பேசும்போது இன்னொன்றைப் பற்றிப் பேசுவதுபோல இருக்கிறது என்கிறாய்.

மெய்தான்

இந்த நாளில் ஒன்றை விலக்கி இன்னொன்றைக் காணுவது இயலாத காரியந்தான். மன்னாரிலிருந்து வெளிக்கிட்ட தற்கொலைப் போராளியின் உடல் ஜெருசலேம் நகரில் வெடித்துச் சிதறுகிறது. மட்டக்களப்புக்குப் போகையில் மறிக்கப்படுவோனது அடையாள அட்டை இஸ்ரேலியப் படையினனிடம் ஒரு பலஸ்தீனியனால் நீட்டப்படுகின்றன. திருகோணமலை முற்றவெளியில் பொலிஸ் தேடும் சந்தேக நபர் ஸ்ரீநகரில் இந்தியப்படையினரால் கொண்டு செல்லப்படுகிறார்.

பினோஷேயின் சிலேயில் காணாமல் போனவர்கள் சூரியகந்தவவிலும் செம்மணியிலும் புதையுண்டார்கள்.

கொழும்புச் சோதனைச்சாவடியில் சிக்குண்ட பெண்ணைத் தமிழகத்துக் காவல் நாய்கள் தடுப்பு மறியலில் கடித்துக் குதறுகின்றன. வட இலங்கையிலிருந்து விரட்டப்பட்ட இஸ்லாமியன் அவுஸ்திரேலிய அரசால் அனுமதி மறுக்கப்படுகிறான்.

எல்லா அகதி முகாம்களையும் சூழுகிற வேலி ஒரே முட்கம்பிச் சுருளால் ஆக்கப்பட்டிருக்கிறது. எல்லாச் சிறைக் கூடத்துச் சுவர்களும் ஒரே சூளையின் அரிகற்களால் எழுப்பப்பட்டுள்ளன.

உலகின் எல்லாத் தடுப்பு முகாங்களிலும் உள்ளவர்கள் ஒரே மொழியில்தான் இரவில் அலறுகிறார்கள். துருக்கியில் குர்தியனுக்கு மறுக்கப்பட்ட மொழியை இலங்கையில் தமிழன் இழந்து கொண்டிருக்கிறான். யாழ்ப்பாண நூலகத்தைச் சூழ்ந்தயிலல்லவா பாபர் மசூதியை இடித்த கடப்பாறைகள் வடிக்கப்பட்டன.

சாவகச்சேரியைத் தரைமட்டமாக்கிய குண்டுகள் பூஸா நகரத்தின் மீது விழுந்து கொண்டிருக்கின்றன. கிளிநொச்சியில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் பாமியன் புத்தர் சிலைகளை முடமாக்கிச் சரிக்கின்றன.

கியூபா மீதான அமெரிக்க வணிகத்தடை வன்னிக்கு எரிபொருள் போகாமற் தடுக்கிறது. புலம்பெயர்ந்த உயர்சாதித் தமிழனின் முகம் கூக்ளுக்ஸ்க்ளான் முகமூடிக்குள் ஒளிகிறது. இலங்கையில் விதிக்கப்படும் செய்தித் தணிக்கை


அமெரிக்காவிலும் செல்லுபடியாகிறது. காஷ்மீர் விடுதலைப் போராளியின் உயிர்த்தியாகம் இலங்கைத் தமிழனுக்காக வழங்கப்படுகிறது. நேபாளத்தின் கெரில்லாப் போராளி மலையகத் தமிழ்த் தொழிலாளிக்காகப் போராடுகிறான்.

கொலம்பியாவில் விரிகின்ற விடுதலைப் போர் இலங்கை விவசாயிகளின் விமோனசத்துக்கானது.

இலங்கைத் தமிழரது இடையறாத போராட்டம் பலஸ்தீனப் போராளிகட்கு உற்சாகமூட்டுகிறது. ஒரு நியாயத்தை ஆதரிக்கிற சொற்கள் இன்னொரு நியாயத்தையும் ஆதரிக்கின்றன. ஒரு கொடுமையை ஏற்கும் சொற்கள் எல்லாக் கொடுமைகளையும் நியாயப்படுத்துகின்றன.

எனவே நான் எதைப் பற்றிச் சொன்னாலும் நீ எதைப் பற்றிச் சொன்னாலும் எல்லாவற்றைப் பற்றியும் சொன்னது போலத் தான்.

# சிறுவர்களைக் கொண்டாடுதல்



சிறுவர்களைக் கொண்டாடுவது பெற்றோர்கள் மற்றும் பாடசாலையினரின் மகிழ்வூட்டும் பணியுமாகும். சிறுவர்கள் அரிய பொக்கிஷங்கள். அவர்களுட் பொதிந்து கிடக்கும் மன ஆற்றல்களுக்கு மதிப்பளிப்பதுவும், அவற்றை வெளிக் கொணர்வதுவும் கூட அவசியமானது எனலாம். எனவே தான் குழந்தை நேய பாடசாலைகளென அழைக்கப்படுகிறது; வீடுகளும் மின்மினிகள் நிறைந்த அலங்காரக் கூடங்களாகக் குழந்தைகளால் கோலமிடப்படுகிறது.

குழந்தைகளின் மகிழ்வு வெளிப்படுமிடமாக சிறுவர் நாடகங்களும் அமைந்து விடுகின்றன.

சிறுவர்களை நாடக விளையாட்டை நோக்கி ஆற்றுப்படுத்துவதனூடாக அவர்களது ஆளுமையை மட்டுமன்றி நல்லொழுக்கப் பண்புகளை மேம்படுத்தவும் முடியும். நாடகம் என்பது வெறும் பொழுது போக்கம்சம் அல்ல; அது சமூக விழிப்புடர்வுக்கான களம். இன்னொரு வகையில் கற்றலின் இன்னொரு வடிவம்.

எனவே மாணவர்களை நாடக இணைப்பாட விதானத் தினூடாக ஆற்றுப்படுத்துவதன் மூலம் நற்திறனை ளர்க்கவும் முடியும். பாடசாலைகள் இச் செயலாக்கத்தின் மீது ஒழுங்குபடுத்தப்பட்ட தொடர்ந்தேர்ச்சியான கவனம் செலுத்தவும் வேண்டும்.

கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றம் வருடாந்த நாடகப் போட்டிகளை சிறுவர் தினத்தை முன்னிறுத்தி நடாத்தி வருகிறது. இதன் மூலம் நாடக ஊக்கலை மாணவரிடமும் பெற்றோரிடமும் வளர்த்துவிட முயல்கிறது.

றோயல் பெற்றோர் நாடக ஆற்றுகைக்குழுக்களாக மாறி தம் பிள்ளைகளை மேடையேற்றி நாடகச் செய்தியைப் பரப்பும் முயற்சியை மேற்கொள்கிறார்கள்.

குறிப்பாக ஆரம்ப பிரிவு பிள்ளைகளின் விளையாட்டுணர்வு, நாடிச் செயலாக்கத்தை நோக்கி வழிப்படுத்தப்படுவதனால் அவர்கள் முன்னெழும் திறன், பங்குபற்றும் திறன்,குழுவாதல் திறன்,தலைமையேற்கும் திறன், பேச்சுத்திறன், நடிப்புத் திறனென ஒன்று கூட்டப்பட்ட ஆற்றல்களை வந்தடை கிறார்கள்.

நாடகம் எனும் கலை கற்றல் கருவியாகத் தொழிற்படும் இவ் இடம் கல்விப்புலத்தில் மிகவும் அவசியமானதாகும்.

சிறுவர் தினத்தை கலைகளால் கொண்டாடுதலும் மகிழ்வு தான்.

"எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள்."

மல்லிகை
முல்லை முஸ்ரிபா


# வரலாற்று வரைவியலாளர்:
# கலாநிதி எம்.ஏ.எம் சுக்ரி

ஜாமிஆ நளீமியாவின் பொன்விழாவை முன்வைத்து நளீம் ஹாஜியார் நினைவுப்பேருரை மன்றம் ஏற்பாடு செய்திருந்த கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி வாழ்வும் பணியும் நினைவுப்பேருரை அரங்குற்றது.

'கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி வாழ்வும் பணியும்' குறித்து ஜாமிஆவின் முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸி.அகார் முஹம்மத் மிகக் கச்சிதமான உரைவழங்கினார். அழகு தமிழ்,இனிய சொல்லொழுங்கு, கவரும் குரல் வளம், ஆற்றொழுங்கான அனுபவ முன்வைப்பென நாற்பத்தைந்து நிமிட உரை எல்லார் காதுகளிலும் கலாநிதி சுக்ரியின் வாழ்வியலை நிறைத்தது. அவரது வாழ்வும் அதனிடையான பணிகளும் அவற்றின் பயன்களும் ஆழச்சிந்தனைக்குரியன.

'கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி அறிவுசார் பங்களிப்புகள்' குறித்து ஜாமிஆவின் அரபுத்துறைத் தலைவர் கலாநிதி ஏ.பி.எம். அப்பாஸ் விஷேட உரையாற்றினார். கலாநிதி சுக்ரியின் அறிவுசார் பங்களிப்புக்களை பட்டியலிட்டது அவரது உரை. தொடரறா அழகு சொல்முறையொன்றை அவர் தமிழ் வழி ஊடுபரவினார். கலாநிதி சுக்ரியின் ஆய்வறிவுத்துறையின் விசாலம் அவ்வுரையில் தொனித்தது.

கலாநிதி 'எம்.ஏ.எம்.சுக்ரி அறிவுத்துறைப் பங்களிப்பும் ஆய்வுப் பணிகளும்'நூல் வெளியீடு சிறப்புற்றது. யாகூத் நளீம் பிரதி பெற்றுக் கௌரவித்தார்.




கல்விமான்கள், அறிஞர்கள், கலைஞர்கள், நளீமியாவின் வாரிசுகள், ராபிதத்துன் நளீமியா உறுப்பினர்களென அறிவுப்புலத்தினர் கலந்து சிறப்பித்தனர்.

# வைரவிழா காணும் நம்நாட்டுக் கலைஞர் ஜீ.ஜே.ராஜுக்கு சங்கவி பிலிம்ஸின் ஆளுமை விருது

கலையுலகில் கால் பதித்து 60 ஆண்டுகள் நிறைவையடுத்து வைரவிழாவைக் கொண்டாடும் ஒரு கலைஞர் விஸ்வாசம் திவ்வியநாயகம் போல்ராஜ். இவரை எல்லோரும் ஜீ.ஜே. ராஜ் என்று தான் அழைப்பார்கள். இவரது தந்தை R.m.விசுவாசம், தாய் A.மரியம்மாள். மலையகமான பொகவந்தலாவையை பிறப்பிடமாகக் கொண்ட இவர், கல்வி கற்றது பொகவந்தலாவை Holy Rosary பாடசாலையிலாகும். இவர் இதுபற்றி கூறிய கருத்துக்கள் வருமாறு,

ஆரம்பம் முதல் G.C.E. o/L வரை எனது செயற்பாடுகளுக்கு நான் படித்த பாடசாலையும் Holy Rosary Churchம் உந்துக்தியாக இருநதது.

நான் 1960ம் ஆண்டு 5 ம் ஆண்டு கல்வி கற்கும் பொழுது பாடசாலை நிகழ்வுகளில் பங்கு கொள்வதில்லை என்ற காரணத்திற்காக பொறுப்பாசிரியர் . ஆசீவாதம் என்பவரால் கடுமையாக கண்டிக்கப்பட்டேன். அந்த சம்பவம் தான் இன்று இந்த நிலைக்குக் காரணம்.

1962ம்ஆண்டு தேவ மாதாவின் அற்புதம் என்ற முதல் நாடகத்தில் நடித்தேன். அன்று முதல் இன்று வரை நடித்துக் கொண்டிருக்கிறேன்.

எனக்கு நாடகம், பொப் பாடல், இலக்கிய நிகழ்வுகள், வானொலி, தொலைகாட்சி நாடகம், திரைப் படம், குறுந்திரைப் படம் போன்றவற்றில் ஈடுபாடுண்டு. எனது கலைத்துறைக்கு வழிகாட்டியவர் மரியசூசை சர்பினா மாஸ்டர் என்பது குறிப்பிடத்தக்கது என்றார்.

இவருக்கு 2009ஆம் ஆண்டு கலாபூசணம் விருது வழங்கப்பட்டது. இவருக்கு 2009ல் துணை நடிகர் விருதும் 2019ல் கலைமாமணி விருதும் 2018ல் சாகத்திய விருதும் குறுந்திரைப்பட விருதும்

தினகரன் THINAKARAN தினகரன் | தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

2015ல் வாழ்நாள் சாதனையாளர் விருதும் 2015ல் கலைமாமணி (கிருஷ்ண கலாலயம்) விருதும் கலை நட்சத்திரம் (சங்கவி பிலிம்ஸ்) விருதும் கலைஞானி 2010 (அகில இன நல்லுறவு ஒன்றியம்) விருதும் 2019ல் பல்கலை பூஷணம் விருதும் வழங்கப்பட்டது. இவ்வாறு மேலும் பல விருதுகள் வழங்கப்பட்டன.

இவர் 1976ல் மகே ரன் புத்தா என்ற சிங்களத் திரைப்படத்திலும் 1978ல் ஹதத்தக்க வேதனா என்ற சிங்களத் திரைப்படத்திலும் நடித்துள்ளார். இதுதவிர 1980ல் பைலட் பிரேம்நாத் திரைப்படத்திலும் வேட்டை, நிஜத்தின்நிழல் ஆகிய தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்துள்ளார். இவர், மாற்றம், உயில், நெஞ்சக்குள் முள், அம்மா சோறு ஆகிய குறுந்திரைப்படங்களிலும் நடித்துள்ளார். இது தவிர இசை நிகழ்ச்சிகள், இலக்கிய நிகழ்வுகள், கலை கலாசார நிகழ்வுகள் ஆகியவற்றிலும் பங்கேற்றுள்ளார்.

இதோ! எந்தன் தெய்வம் முன்னாலே...! இவர் எழுதி இயக்கிய நாடகமாகும். இயக்குனர் கே. செல்வராஜனின் (சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்டேஜ்) அவள் ஒரு மெழுகுவர்த்தி, மோகம் முப்பது நாள், சங்கையின் நாதம், புதுப்பணக்காரன், இதற்குத் தானே ஆசைபட்டாய், இப்ப இதெல்லாம் சகஜங்க, வேலி, துள்ளுவதோ இளமை, ஒரு நாணயத்தின் இருபக்கங்கள், கலைசெல்வனின் சிரிக்கியும் பொரிக்கியும், சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம், லடீஸ் வீரமணியின் நெஞ்சுக்கு நீதி, திவ்வியராஜனின் அவசரகால சட்டம், மனிதன் நினைப்பதுண்டு, உதிர்ந்த ரோஜா, உனக்கு நான் சொந்தம், அழியாத உறவு, புவனா ஒரு கேள்விக்குறி, இலட்சிய தீபம், பைன் ஆர்ஸ்சின் எங்கே நிம்மதி, உறவுக்கு ஒருவன், அந்தனி ஜீவாவி அக்கினி பூக்கள், உழைக்கும் கரங்கள், பறவைகள் பாக்கியராஜாவின் எதிரொலி, மனமாற்றம், உடன்பிறப்பு, ஆயுள் தண்டனை, மாத்தளை சிவாவின் ராதையின் நெஞ்சமே, இதயத்தில் நீ, உன்னிடம் மயங்குகிறேன், சந்திசேகரின் அச்சாணி, ஆணிவேர், இடியேறு, மாத்தளை வடிவேலனின் கடலில் கலந்த கண்ணீர், கருவேப்பிலை ஆகிய நாடகங்களில் நடித்துள்ளார். பருவம் ஒரு பாடம், விதியின் விளையாட்டு திடல், திரிசூலம், புரக்டர் சங்கர் வட்டத்தின் தூரம், பாலைவனத்து பூக்கள், இரு துருவங்கள், ஆழ்கடலில் ஓர் சப்தம் ஆகிய நாடகங்களில் நடித்துள்ளார்.







**தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் மாதாந்தம் நடத்தும் மாதம் ஒரு ஆளுமையை கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வத்தளை நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் கௌரவிக்கப்படவுள்ள ஆளுமை வைரவிழா கலைஞர் ஜீ.ஜே.ராஜ்**

கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



துசாந்



Wattala Cultural Society



கலைத்தென்றல் செல்வராணி



Shankavi Director Thurairasa Suresh

# கலைச்சுடர் ஸ்ரீமதி அனுஷா மொரயஸின் 'சப்த ஸ்வர லய இசை விழா–2023'







நாடறிந்த இசைக் கலைஞரும் சிறந்த ஒலிப்பதிவாளரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அறிவிப்பாளருமான கலைச்சுடர் ஸ்ரீமதி அனுஷா மொரயஸின் 'சப்த ஸ்வர லய இசை விழா 2023', தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையுடன் மருதானை டவர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.